

# ஒரு தடையற்ற உருமாற்றம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

**ஆண்டறிக்கை 2024**

Civil Aviation Authority Sri Lanka

Safe and Efficient Skies for All

CAASL


இலங்கை சிவில் விமானப் போக்குவரத்த அதிகாரசபை

Safe and Efficient Skies for All

# ஆண்டறிக்கை - 2024

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

2022 இன் 34 அம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 15 இற்கமைய பாராளுமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.





# உள்ளடக்கம்


- மான்புமிகு போக்குவரத்து. நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது / 4
- தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் குறிக்கோள் / 5
- வான் போக்குவரத்து புள்ளிவிபரச் சிறப்பம்சங்கள் / 6
- தலைவரின் செய்தி / 12
- சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு / 16
- CAASL இன் சபை / 20
- சிரேஷ்ட முகாமைத்துவ அணி / 22
- CAASL இன் தோற்றுருவம் / 24
- பிரிவுகள் மற்றும் அலகுகளின் கண்ணோட்டம் / 27
- செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு - முகாமைத்துவப் பணியாட்கள் / 32
- CAASL இன் ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறல் / 34

செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

- பாதுகாப்பைப் பலப்படுத்துதல் / 39
- பாதுகாப்பு மற்றும் வசதியளித்தலை மேம்படுத்துதல் / 48
- செயற்திறனான மற்றும் பயனுறுதியான முகாமைத்துவம் / 54
- பசுமையான வான் போக்குவரத்து / 58
- வான்போக்குவரத்தின் வளர்ச்சி / 60
- கொள்திறன் அபிவிருத்தி / 66
- தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திகள் / 70
- பணியாட்களுக்கு வலுவளித்தல் / 72
- நிதியியல் சிறப்பம்சங்கள் / 74

நிதிக் கூற்றுக்கள் - ஆண்டு 2024

- விரிவான வருமானக் கூற்று / 80
- நிதி நிலைமைக் கூற்று / 81
- உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று / 82
- காசுப் பாய்ச்சல் கூற்று / 83
- நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் / 84
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024 / 109
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024 இற்கான பதில் / 120
- முறைமைப்படுத்தல் நோக்கெல்லை / 129
- CAASL இன் தொழில்நுட்பச் செயற்திறனின் பொழிப்பு / 131
- முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் / 133
- போக்குவரத்து விபரங்கள் / 139


**குறிப்பு:**

**இது ஆங்கில ஆண்டு அறிக்கையின் மொழிபெயர்ப்பாக இருப்பதால், திருத்தங்கள் அல்லது முரண்பாடுகளுக்கு ஆங்கில ஆண்டு அறிக்கையைப் பார்க்கவும்.**

# இணைப்பு 9 - வசதியளித்தல் ஆண்டு



# ஒரு தடையற்ற உருமாற்றம்

2024 ஆம் ஆண்டை "வசதியளித்தல் ஆண்டாக" ICAO சபையினால் மேற்கொள்ளப்பட்ட பிரகடனத்திற்கேற்ப (FAL2024), வான் போக்குவரத்தில் இலங்கை ஒரு உருமாற்றல் நகர்விற்கு உட்படுகின்றது. எல்லைக் கட்டுப்பாட்டு செயன்முறைகளை நெறிப்படுத்துதல் மற்றும் சர்வதேச பயணத்தின் செயற்திறனை மேம்படுத்துதல் என்பவற்றுக்கு வசதியளிப்பதில் செயலூக்கமான பங்கினை வகிப்பதன் மூலம், நாடானது அதன் வான் போக்குவரத்து அனுபவத்தினை மீள்வரையறை செய்கின்றது - பயணிகளுக்கான வாய்ப்பு, பாதுகாப்பு என்பவற்றுக்கு முன்னுரிமையளித்தல் மற்றும் அனைத்து பயணிகளுக்கும் விரைவான மற்றும் சிறந்த பயணங்களை வழங்குதல்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) இலத்திரணியல் கடவுச்சீட்டுகள், வாசல்கள், AI மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட செயன்முறைகளின் மூலம் இந்த உருமாற்றத்தை இயக்குகின்றது. நாட்டின் வான் பயணவியல் முறைமைப்படுத்துபவராக, CAASL பாதுகாப்பினை சமரசம் செய்யாது புத்தாக்கமானது செயற்திறனை மேம்படுத்துவதனை உறுதிசெய்கின்றது.

டிஜிட்டல் கட்டமைப்புகள் மற்றும் துறைசார் பங்காளிகளுடனான ஒத்துழைப்பினை பலப்படுத்துவதன் மூலம் பிரயாணயங்களின் எதிர்காலத்தினுள் நாம் தடையற்று உருமாறும்போது, அதன் வாக்குறுதியான பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான வானத்தை நிலைநிறுத்தும்வேளை, CAASL அறை ஏற்பிலிருந்து விமானம் ஏறும்வரை பயணத்தை சீர்படுத்துகின்றது.




**மான்புமிகு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சருக்கு முன்னிலைப்படுத்தப்படுகின்றது,**

ஆண்டறிக்கை - 2024, 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 15 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சட்டமன்றத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யும் விதமாக தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 01 ஜனவரி 2024 முதல் 31 டிசம்பர் 2024 வரையான காலப்பகுதியின்போது செயலாற்றிய பிரதான நடவடிக்கைகளின் பொழிப்பினையும் நிதியாண்டு 2024 இற்கான அதிகாரசபையின் நிதி நிலைமைக் கூற்றினையும் உள்ளடக்குகின்றது.

திரு. சுனில் ஜயாரத்ன
தலைவர்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
27 பெப்ரவரி 2025



## தொலைநோக்கு


அனைவருக்கும் பாதுகாப்பு மிகுந்த வான் வெளியினை உறுதிப்படுத்தி திறன்மிக்க மற்றும் நம்பகத்தன்மையான வான்பயணவியல் பாதுகாப்பு முறைமைப்படுத்துனராதல்.

## செயற்பணி

சர்வதேச நியமங்கள், பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் தேசிய சட்டமன்ற தேவைப்பாடுகளுடன் இணங்கும் ஒரு பாதுகாப்பான, திறமையான, வழக்கமான மற்றும் சூழல் தோழமையான தேசிய சிவில் வான் பயணவியல் முறைமையின் செயற்பாட்டினை மூலோபாய திட்டமிடல் மற்றும் பயனுறுதியான முறைமைப்படுத்தலூடாக வசதியளிப்பதற்கு.


## குறிக்கோள்

‘அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் செயற்திறனான வான்வெளிகள்’




# வான் போக்குவரத்து புள்ளிவிபரச் சிறப்பம்சங்கள்


## வானூர்திகளின் செயற்பாடுகள்




## பயணிகளது செயற்பாடுகள்



## சரக்குச் செயற்பாடுகள்





‘அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் செயற்திறனான வான்வெளிகள்’




# வான் போக்குவரத்து புள்ளிவிபரச் சிறப்பம்சங்கள்

## மாதாந்த பயணிகள் செயற்பாடுகள் 2018-2024




வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு, ஒரு மாதாந்த அடிப்படையில், 2024 இன் எண்கள் தொற்றுக்கு முன்னர் காணப்பட்ட மட்டங்களை படிப்படியாக அணுகுகின்றன. அவை 2019 தரவுகளுடன் கிட்டத்தட்ட சீரமைக்கப்பட்டுள்ளதுடன், 2025 அளவில் அந்த மட்டங்களை விஞ்சும் என எதிர்வு கூறப்பட்டுள்ளன.

## 10 வருடங்களுக்கான மேல்பறத்தல் தரவுகள்



## முறைமைப்படுத்தல் அபிவிருத்திகள்

2024 இல் CAASL உட்கட்டமைப்பு மற்றும் வழிசெலுத்தலிலான முறைமைப்படுத்தல் மேற்பார்வைக்கு முன்னுரிமையளித்தவேளை வானூர்தித்தளங்கள் மற்றும் வான் வழிசெலுத்தல் சேவைகள் கூடிய கவனத்தைப் பெற்றன. ஏனைய துறைகள் சிறுமமான முறைமைப்படுத்தல் இற்றைப்படுத்தல்களை கண்டதுடன், இது செயற்பாட்டு பாதுகாப்பு மற்றும் நவீனமயப்படுத்தலுக்கான ஒரு இலக்குவைத்த அணுகுமுறையினை பிரதிபலிக்கின்றது.

**ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் அறிவித்தல்களின் தொகுப்பு - 2024**

- **9** வானூர்தித்தளம்
- **7** வான்வழி செலுத்தல் சேவைகள்
- **1** வான்மருத்துவச் சேவைகள்
- **1** வானூர்திச் செயற்பாடுகள்
- **1** வானூர்திப் பதிவீடு மற்றும் வான்தகைமை

## சான்றளிப்புகள் கண்ணோட்டம்

சான்றளித்தல் நடவடிக்கைகளில் உயர் எண்ணிக்கையிலான ஆளணி அங்கீகாரங்கள், குறிப்பாக வான்பயணவியல் பாதுகாப்பில், ஆதிக்கம் செலுத்தின. சிறப்பு வாய்ந்த பதவிகள் மற்றும் நிறுவனங்கள் நிலையான ஆனால் தெரிவான சான்றளித்தல் போக்குகளை அனுபவித்தன. இவை தொழில்நுட்ப களத்தில் பராமரிப்புத் தரம் மற்றும் இணக்கப்பாட்டிலான முன்னிறுத்தத்தினை குறிப்பிட்டன.

**நிறுவனங்கள் / ஆளணியினரின் சான்றளிப்புகள் / உரிமங்கள்**

- **1,117** வான்பயணவியல் பாதுகாப்புத் தடுப்பாளர்களின் சான்றளிப்பு மற்றும் மீள்சான்றளிப்பு
- **368** விமானிகள்
- **85** வானறைக் குழு அங்கத்தவர்கள்
- **33** வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள்
- **29** வானூர்தி பராமரிப்பு உரிமம் வைத்திருப்பவர்கள்
- **13** வான்பயணவியல் பாதுகாப்பு முகாமையாளர்களின் சான்றளிப்பும் மீள்சான்றளிப்பும்
- **11** தரைச்சேவை பயிற்றுவிப்பாளர்கள்
- **8** வகை மதிப்பீட்டு பயிற்றுவிப்பாளர்கள்
- **6** விமானப் பயிற்றுவிப்பாளர்கள் (மட்டுப்படுத்தப்பட்டது)
- **5** வானூர்தி பராமரிப்பு நிறுவனங்கள் (வெளிநாடு)
- **5** செயற்கை விமானப் பயிற்றுவிப்பாளர்கள்
- **4** விமானப் பயிற்றுவிப்பாளர்கள்
- **5** வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர் சான்றிதழ்கள்
- **2** தொடர்ச்சியான பறத்தகுதி முகாமைத்துவ நிறுவனங்கள் (CAMO)
- **1** விமானச் செயற்பாட்டு அதிகாரிகள் (விமான அனுப்புனர்கள்)
- **1** அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள் (AMTO)
- **1** வகை மதிப்பீட்டு பயிற்றுவிப்பாளர்கள் (மட்டுப்படுத்தப்பட்டது)
- **1** அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு நிறுவனங்கள் (AMO)
- **1** வகை மதிப்பீட்டு பயிற்றுவிப்பாளர்கள்



# வான் போக்குவரத்து புள்ளிவிபரச் சிறப்பம்சங்கள்

### கண்காணிப்பும் சோதனையிடல்களும்

பாதுகாப்பு, வானூர்தித்தளம் மற்றும் வான்தகைமை பரிசீலனைகளில் உயர்வான நடவடிகைகளுடன் CAASL வான்பயணவியல் செயற்பாடுகள் முழுவதும் திடமான கண்காணிப்பினை பராமரித்தது. மேற்பார்வை மூலோபாயமானது தனித்துவமான பிரிவுகளில் முன்னிறுத்தமான மதிப்பிடல்களுடன் பரவலான பாதுகாப்பு கண்காணிப்பினை சமநிலைப்படுத்தியது.

## கண்காணிப்பு மற்றும் சோதனையிடல் நடவடிக்கைகள் - 2024

- **11** சரிவுப்பாதை சோதனையிடல்கள் - செயற்பாடுகள்
- **3** பாவனையாக்கி சோதனையிடல்கள்
- **11** பயணவழி சோதனையிடல்கள்
- **10** ஆபத்தான பொருட்கள் சோதனையிடல்கள்
- **8** நிலைய வசதி சோதனையிடல்கள் - செயற்பாடுகள்
- **4** பிரதான தள சோதனையிடல்கள் / பயிற்றுவிப்பாளர் அவதானிப்புகள்
- **1** நியமிக்கப்பட்ட சோதனை விமானிகள் (DCP கண்காணிப்பு)
- **11** சரிவுப்பாதை சோதனையிடல்கள் -வான்தகைமை
- **49** வானூர்தியின் வான்தகைமைக்கான சான்றிதழ் (C of A)
- **21** வானூர்தி பராமரிப்பு நிறுவனச் சோதனையிடல்கள்
- **5** அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவனங்களது சோதனையிடல்கள்
- **16** தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ நிறுவனங்களது (CAMO) சோதனையிடல்கள்
- **4** எரிபொருள் வசதி சோதனையிடல்கள் / கணக்காய்வுகள்
- **17** அங்கீகரிக்கப்பட்ட பறத்தல் பயிற்சி நிறுவனங்கள் சோதனையிடல்கள்
- **5** உரிமங்களின் கண்காணிப்பு
- **43** வானூர்தித்தள சோதனையிடல்கள்
- **40** ATM சோதனையிடல்கள்
- **6** AIM சோதனையிடல்கள்
- **15** SMS சோதனையிடல்கள்
- **31** CNS சோதனையிடல்கள்
- **7** MET சோதனையிடல்கள்
- **3** வரைபடங்கள் மற்றும் அட்டவணைகளின் சோதனையிடல்கள்
- **6** PANS-OPS சோதனையிடல்கள்
- **6** Non-SKED விமானச் சோதனையிடல்கள்
- **97** வான்பயணவியல் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளது நடத்தை (சோதனையிடல்கள், கணக்காய்வுகள், புலனாய்வுகள், பரிசீலனைகள்)
- **5** நியமிக்கப்பட்ட மருத்துவமனை - சோதனையிடல்கள்
- **2** வசதியளித்தல் - சோதனையிடல்கள்

### வழங்கப்பட்ட அங்கீகாரங்கள்

2024 இலான அங்கீகார பருமன்கள் பிராந்திய வான்வெளி முகாமைத்துவத்தில் இலங்கை மூலோபாய முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது. நடவடிக்கைகளில் பெரும்பகுதி செயற்பாட்டு அனுமதிகளாகக் காணப்பட்டவேளை, CAASL உட்கட்டமைப்பு, அட்டவணைப்படுத்தல் மற்றும் சிறப்பு வான்பயணவியல் செயற்பாடுகளிடையே இலக்குவைத்த அங்கீகாரங்களை வழங்கியது.

## CAASL இனால் வழங்கப்பட்ட அங்கீகாரங்கள் – 2024

**40,511** கொழும்பின் மேலாகப் பறந்த வானூர்திகளின் எண்ணிக்கைFIR

**185** அங்கீகரிக்கப்பட்ட வானலை வாங்கி பணிகள்

**781** வழங்கப்பட்ட தரையிறக்க அனுமதிகள்

**1,429** வழங்கப்பட்ட மேல் பறப்பதற்கான அனுமதிகள்

**2,210** அட்டவணைப் படுத்தப்படாத விமானங்களின் அங்கீகாரங்கள்

**348** NOTAM வழங்கல்களுக்கான அங்கீகாரங்கள்

**115** உயரமான கட்டமைப்புகளின் கட்டுமானத்திற்கான அங்கீகாரங்கள்

**142** கோபுர அங்கீகாரங்களின் எண்ணிக்கை


**61** சரக்குத் தொட்டியில் ஆயுத ஊர்திகள்

**48** உள்ளூர் விமான அட்டவணை அங்கீகாரங்கள்

**526** சர்வதேச விமான அட்டவணை அங்கீகாரங்கள்

**11** பயிற்றுவிப்பாளர் அங்கீகாரங்கள்

**3** விசேட செயற்பாடுகள் (விசேட விமான அங்கீகாரங்கள்)



# தலைவரின் செய்தி



> " ICAO வினால் நடாத்தப்படும் எதிர்வரும் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வுத் திட்டம் - தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறைக்கு (USOAP CMA) தீவிரமாக தயாராகின்றோம். உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்த கணக்காய்வானது தேசிய பாதுகாப்பு மேற்பார்வை முறைமைகளின் பயனுறுதித்தன்மையினை மதிப்பிடுவதுடன் ஒரு நாட்டின் வான்பயணவியல் ஆளுகைக்கான ஒரு முக்கிய அளவீடாக செயலாற்றுகின்றது. எமது விரிவான மற்றும் முன்னிறுத்தமான அணுகுமுறையானது பாதுகாப்பு மேற்பார்வையில் ICAO இன் முக்கிய கூறுகளுடன் கணிசமான மற்றும் நிலைபேறுடைய இணக்கப்பாட்டினை இலங்கை வெளிக்காட்டுவதனை உறுதிசெய்யும் நோக்கினைக் கொண்டுள்ளதுடன், ஒரு பொறுப்புமிக்க வான்பயணவியல் தேசமாக எமது சர்வதேச நிலைப்பாட்டினை வலியுறுத்துகின்றது. "

மகத்தான பெருமையுடனும் ஆழ்ந்த தேசிய பொறுப்புணர்வுடனும் 2024 ஆம் ஆண்டிற்கான தலைவரின் மீளாய்வினை நான் முன்னிலைப்படுத்துகின்றேன் - இவ்வாண்டானது இலங்கையின் வான்பயணவியல் துறைக்கு மீளெழுச்சி, மூலோபாய மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்த நம்பிக்கை ஆகியவற்றின் ஒரு முக்கிய கட்டத்தை குறிப்பிடுகின்றது. சிக்கலான உலகளாவிய நிலத்தோற்றத்தின் பின்னணிக்கு எதிராக, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL) நாட்டில் சிவில் விமானப் போக்குவரத்தின் முறைமைப்படுத்தல் காப்பாளான அதன் பொறுப்பாணையினை நிறைவேற்றுவதில் தலைமைத்துவம், விரைவூக்கம் மற்றும் முன்நோக்கினை தொடர்ந்தும் வெளிக்காட்டுகின்றது.

வளர்ந்து வரும் சவால்களுக்கு மத்தியில், எமது கூட்டு முன்னிறுத்தமானது தேசிய அபிவிருத்தியில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கும் ஒரு துறையின் நிலைபேறுடைய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தல், வான்பயணவியல் பாதுகாப்பினை மீளுறுதிசெய்தல் மற்றும் முறைமைப்படுத்தல் கட்டமைப்புகளை நவீனமயப்படுத்தல் என்பவற்றில் தங்கியிருந்தது. 2024 இல் எமது முன்னேற்றமானது எமது அர்ப்பணிப்புடைய அணிகளின் அயரா முயற்சிகள், வலுவான பங்காளிகள் பங்குடைமைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் அசைக்கவியலாத உறுதுணை ஆகியவற்றுக்கான ஒரு சான்றாகும்.

### துறையின் மீட்பு மற்றும் செயற்திறன் சிறப்பம்சங்கள்

மீளாய்வாண்டானது உலகளாவிய வான்பயணவியலின் தொற்றின் பின்னரான மீட்டலில் தொடர்ச்சியான உத்வேகத்தினைக் கண்டது. சர்வதேச சுற்றுலாத்துறையிலான மீட்டெழுச்சி மற்றும் உலகளாவிய பிரயாணங்களிலான புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை என்பவற்றால் துணையளிக்கப்பட்டு இலங்கையில் பயணிகள் போக்குவரத்தானது திடமாக வளர்ச்சியடைந்தது. பயணக் கட்டுப்பாடுகளின் தளர்வு மற்றும் நுகர்வோர் நம்பிக்கையிலான படிப்படியான முன்னேற்றம் என்பன வான் பிரயாணத்தில் ஒரு நேரடியான மற்றும் சாத்தியமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் பயணிகள் பருமனளவுகள் இரண்டும் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை பதிவுசெய்தன.

வான் சரக்குச் சேவைகளுக்கான தொடர்ச்சியான உலகளாவிய கேள்வியினால் இயக்கப்பட்டு, குறிப்பாக இ-வர்த்தகம், சுகாதாரம் மற்றும் உற்பத்தி போன்ற துறைகளில், சரக்குச் செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினை அனுபவித்தது. இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் செயலாற்றும் விமான நிறுவனங்கள் உயர்வடையும் கேள்வியினைச் சந்திப்பதற்காக அவற்றின் சரக்குக் கொள்திறனை அதிகரித்தன. இந்து சமுத்திரத்தில் ஒரு முக்கிய ஏற்பாட்டியல் மற்றும் பிராந்தியத்திற்கான கலம் மாற்றிச் சரக்கேற்றல் மையமாக நாட்டின் மூலோபாயமான அமைவிடமும் இதற்கு வசதியளித்தது.

இலங்கையின் பூகோளவியல் நன்மையானது எமது பலமான சொத்துக்களுள் ஒன்றாகக் காணப்படுவதுடன், இது கிழக்கு மற்றும் மேற்கிற்கிடையே எம்மை ஒரு நுழைவாயிலாக நிலைப்படுத்தியுள்ளது. வான்பயணவியல் துறையானது சுற்றுலாத்துறை, வர்த்தகம் மற்றும் இணைப்புநிலை என்பவற்றுக்கு துணையளிப்பதில் மையமாக இருப்பதுடன், 2024 இல் உட்கட்டமைப்பிலான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முதலீடுகள், கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் விமான நிலைய நவீனமயப்படுத்தல் என்பன எமது வான்பயணவியல் சூழலமைப்பினை பலப்படுத்துவதில் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றது.

### பாதுகாப்பு, இணக்கப்பாடு மற்றும் முறைமைப்படுத்தல் மேற்பார்வையினை மேம்படுத்துதல்

CAASL இல் வான்பயணவியல் பாதுகாப்பு மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டில் உயர்ந்த நியமங்களை நிலைநிறுத்துவதற்கான எமது கடப்பாட்டில் நாம் அசைக்கவியலாது உள்ளோம். 2024 இல் நாம் வளர்ந்து வரும் சர்வதேச விதிமுறைகளுக்கு சீராக எமது நிறுவன மற்றும் தொழில்நுட்ப ஆற்றலை பலப்படுத்துவதற்காக பல மூலோபாய முன்னெடுப்புகளை பொறுப்பேற்றோம். இவ்வாண்டிற்கான ஒரு முக்கிய முன்னுரிமையாக எமது முறைமைப்படுத்தல் முறைமைகளை சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்பு (ICAO) நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கான (SARPs) மிகவும் சமீபத்தைய திருத்தங்களுடன் சீரமைப்பதாகும்.

எமது முறைமைப்படுத்தல் செயற்பாடுகள் வழக்கமாக பாதுகாப்பு கணக்காய்வுகள், இடர் அடிப்படையிலான சோதனையிடல்கள், இலக்கு வைத்த கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் மேம்பட்ட கொள்திறன் கட்டியெழுப்புதல் திட்டங்களினூடாக வலுவூட்டப்பட்டன. இந்த முயற்சிகள் நாடு முழுவதிலுமான வான்பயணவியல் செயற்பாடுகள் கடுமையான பாதுகாப்பு அளவுகோல்களை சந்திப்பதையும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முறைமைப்படுத்தல் எதிர்பார்ப்புகளுடன் இணக்கப்பாடு காண்பதையும் உறுதிசெய்கின்றன.

ICAO வினால் நடாத்தப்படும் எதிர்வரும் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வுத் திட்டம் - தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறைக்கு (USOAP CMA) தீவிரமாக தயாராகின்றோம். உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்த கணக்காய்வானது தேசிய பாதுகாப்பு மேற்பார்வை முறைமைகளின்

# *தலைவரின் செய்தி*

பயனுறுதித்தன்மையினை மதிப்பிடுவதுடன் ஒரு நாட்டின் வான்பயணவியல் ஆளுகைக்கான ஒரு முக்கிய அளவீடாக செயலாற்றுகின்றது. எமது விரிவான மற்றும் முன்னிறுத்தமான அணுகுமுறையானது பாதுகாப்பு மேற்பார்வையில் ICAO இன் முக்கிய கூறுகளுடன் கணிசமான மற்றும் நிலைபேறுடைய இணக்கப்பாட்டினை இலங்கை வெளிக்காட்டுவதனை உறுதிசெய்யும் நோக்கினைக் கொண்டுள்ளதுடன், ஒரு பொறுப்புமிக்க வான்பயணவியல் தேசமாக எமது சர்வதேச நிலைப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

## சூழல் பாரபத்தியம் மற்றும் நிலைபேறுடைமையினை இயக்குதல்

உலகளாவிய முன்னுரிமைகளுக்கு சீரமைவாக, எமது நீண்டகால மூலோபாய தொலைநோக்கத்தின் ஒரு ஒருங்கிணைந்த கூறாக நிலைபேறுடைமை காணப்படுகின்றது. உலகம் முழுவதும் வான்பயணவியல் துறையானது அதன் சூழல் அடிச்சுவட்டினை விளித்துரைப்பதில் வளர்ச்சியடையும் அழுத்தத்தின் கீழ் காணப்படுவதுடன், சூழல் பொறுப்புள்ள வான்பயணவியல் நடைமுறைகளை ஊக்குவிக்கும் ஒரு தொடரான கொள்கை மற்றும் முறைமைப்படுத்தல் வழிமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் CAASL முன்முயற்சியுடன் பதிலளித்துள்ளது.

2024 இல் நாம் நிலைபேறுடைய வான்பயணவியல் எரிபொருள் பயன்பாட்டினை செயலூக்கமாக ஊக்கமளித்ததுடன், வலு சிக்கனமான விமான தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதில் விமான நிறுவனங்களுக்கு துணையளிக்கின்றோம். புதுப்பிக்கப்பட்ட வலு முறைமைகள், நுண்ணறிவான உட்கட்டமைப்பு மற்றும் பசுமை கட்டிட நடைமுறைகளது பயன்பாட்டினூடாக விமான நிலையச் செயற்பாடுகளது கரிம அடிச்சுவட்டினை குறைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், செயற்பாட்டாளர்களுக்கு கரிம ஈடுகட்டல் முன்னெடுப்புகளை நாம் ஊக்குவித்ததுடன், இலங்கையின் வான்வெளியினுள் சூழல் உணர்வுடைய விமானநிறுவன செயற்பாடுகளுக்கான வழிகாட்டிகள் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குகின்றது.

சர்வதேச சூழல் அமைப்புகள், துறைசார் சங்கங்கள் மற்றும் விமானநிறுவன பங்காளிகளுடனான நெருங்கிய ஒத்துழைப்பினூடாக CAASL பொருளாதார வளர்ச்சியினை சுற்றுச்சூழல் பொறுப்புடன் சமநிலைப்படுத்தும் நிலைபேறுடைய வான்பயணவியல் கட்டமைப்புகளை தொடர்ந்தும் ஊக்குவிக்கின்றது. நீண்டகால துறைசார் வெற்றியானது, ஐக்கிய நாடுகள் நிலைபேறுடைய அபிவிருத்தி குறிக்கோள்களுடன் (SDGs) வான்பயணவியல் அபிவிருத்தியினை சீரமைப்பதில் தங்கியுள்ளது என நாம் நம்புகின்றோம்.

## பொருளாதார பங்களிப்பு மற்றும் துறைசார் அபிவிருத்தி

இலங்கையின் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய தூணாக வான்பயணவியல் காணப்படுகின்றது - இது சுற்றுலாத்துறை, வர்த்தகம், வேலைவாய்ப்பு மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பிற்கான ஒரு செயல்படுத்துபவராக சேவையாற்றுகின்றது. 2024 இல் அதிகரித்த விமான நிறுவனச் செயற்பாடுகள். பாதை வலையமைப்புகளின் விரிவாக்கம் மற்றும் உலகளாவிய வானூர்திகளுடனான மூலோபாய பங்குடைமைகள் என்பன சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் ஏற்றுமதியினால் இயக்கப்பட்ட வளர்ச்சி என்பவற்றுக்கு பங்களிப்பு செய்தன.

இவ்வாண்டானது உள்ளூர் வான்பயணவியலின் அபிவிருத்தியில் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் கண்டது. இது பிராந்திய விமான நிறுவனங்களுக்கிடையேயான மேம்பட்ட இணைப்பு, அதிகரித்த தனியார் துறை பங்கேற்றல் மற்றும் சாட்டர் செயற்பாடுகளில் அதிகரித்த ஆர்வம் போன்றவற்றிலாகும். முறைமைப்படுத்தல் செயன்முறைகளை சீரமைத்தல், பொது வான்பயணவியலிலான முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் நியாயமான மற்றும் வெளிப்படையான உரிமமளித்தல் செயன்முறைகளை உறுதிசெய்தல் என்பவற்றின் மூலம் CAASL இந்த வளர்ச்சிக்கு வசதியளித்தது.

இவ்வாண்டின்போதான ஒரு முக்கிய முன்னிறுத்தப் பிரிவாக இலங்கையின் வான்பயணவியல் தொழிற்சேனையினை பலப்படுத்துதல் காணப்பட்டது. திறன்மிக்க மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான ஒரு திறமை தேக்கத்தின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு, CAASL பயிற்சித் திட்டங்கள், சான்றளிப்பு பாடநெறிகள், மற்றும் சர்வதேச பரிமாற்றல் வாய்ப்புக்கள் என்பவற்றின் விரிவாக்கத்திற்கு துணையளித்தது. உலகளாவிய வான்பயணவியல் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் கல்விக் கழகங்களுடனான எமது பங்குடைமைகள் இலங்கையின் வான்பயணவியல் தொழில்வல்லுனர்கள் துறைசார் அறிவு, முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் செயற்பாட்டு சிறந்த நடைமுறைகள் என்பவற்றில் முன்னிலையில் இருப்பதனை உறுதிசெய்கின்றது.

## நிதி நிலைமை

31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதி நிலைமையினைப் பொறுத்தளவில், அதிகாரசபையானது மொத்தச் சொத்துக்களில் கணிசமான அதிகரிப்பினை அறிக்கையிட்டது. 2023 இல் காணப்பட்ட ரூபா 10.89 பில்லியன் மொத்த சொத்துக்கள் 2024 இல் ரூபா 41.37 பில்லியனாக அதிகரித்தது. இந்த வளர்ச்சியானது பெருமளவில் நடைமுறைச் சொத்துக்களிலான கடும் அதிகரிப்பினால் இயக்கப்பட்டது. நடைமுறைச் சொத்துக்கள், குறிப்பாக உயர்ந்த வர்த்தக வருமதிகள் மற்றும் காசு மீதிகள், முன்னைய ஆண்டின் ரூபா 8.06 பில்லியனிலிருந்து ரூபா 38.67 பில்லியனாக விரிவடைந்தது. நடைமுறையல்லா சொத்துக்கள் ரூபா 2.70 பில்லியனாகக் காணப்பட்டவேளை இது 2023 இல் காணப்பட்ட ரூபா 2.82 பில்லியனுடன் ஒப்பிடும்போது சிறிதளவு வீழ்ச்சியினை பிரதிபலித்தது. இவற்றுள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆதிக்கம் செலுத்தியதுடன், இவை ரூபா 2.67 பில்லியனாகக் காணப்பட்டன. உரித்துவமானது ரூபா 6.91 பில்லியனிலிருந்து ரூபா 7.27 பில்லியன் ஆக பலப்படுத்தப்பட்டதுடன், இதற்கு நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்களும் உயர் மீள்மதிப்பீட்டு மிகைகளும் துணையளித்தன. நடைமுறையல்லா பொறுப்புக்கள் மிதமாக ரூபா 478 மில்லியனாக அதிகரித்தவேளை நடைமுறைப் பொறுப்புக்கள், பிரதானமாக உயர் வர்த்தக சென்மதிகள், 2023 இல் காணப்பட்ட ரூபா 3.58 பில்லியனிலிருந்து ரூபா 33.62 பில்லியனாக உயர்வடைந்தது. ஒட்டுமொத்தத்தில், அதிகாரசபையானது அதன் ஐந்தொகையிலான ஒரு குறிப்பிடத்தக்க விரிவாக்கத்துடன் ஒரு திடமான உரித்துவ தளத்தினை பராமரித்தது. இது செயற்பாட்டுச் சவால்கள் மற்றும் இவ்வாண்டின்போதான அதன் நிதியியல் கட்டமைப்பிற்கான செம்மையாக்கல்களையும் பிரதிபலித்தது.

## சவால்களை சமாளித்து எதிர்காலத்தினை வடிவமைத்தல்

2024 ஆம் ஆண்டு பல சாதனைகளை கொண்டுவந்தவேளை, பல நீடித்த சவால்களையும் சுட்டிக் காட்டின - உயர்வடையும் எரிபொருள் விலைகள், தளம்பலடையும் செயற்பாட்டுச் செலவினங்கள், புவிசார் அரசியல் உறுதியின்மைகள் மற்றும் பிராந்திய மையங்களிடையே அதிகரித்த போட்டித்தன்மை. இந்தக் காரணிகள் துறைசார் விடுமிகையிலும் பங்காளிகள் மீளெழுச்சியிலும் தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகித்தன.

இதற்குப் பதிலளிக்கும்விதமாக, CAASL மூலோபாயத் திட்டமிடல், சான்று அடிப்படையிலான கொள்கை உருவாக்கல் மற்றும் செயலூக்கமான பங்காளிகள் ஊடாட்டம் என்பவற்றில் நிலைநாட்டப்பட்ட முன்னோக்கிய அணுகுமுறையினை கடைப்பிடித்தது. எதிர்வரும் வருடங்களுக்கான முக்கிய முன்னெடுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- துறையின் நீண்டகால அபிவிருத்தியினை வழிகாட்டுவதற்கு தேசிய வான்பயணவியல் பெருந்திட்டத்தை அமுலாக்குதல்
- சந்தை அணுக்கத்தை மேம்படுத்துவதற்கு இருதரப்பு மற்றும் பலதரப்பு வான் சேவை உடன்படிக்கைகளை விரிவாக்குதல்

- விமான நிலைய சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பில் அரச தனியார் துறை பங்குடைமைகளை ஊக்குவித்தல்
- ஆளில்லா வான்கலங்கள் (UAVs), டிஜிட்டல் வான் போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் சைபர் பாதுகாப்பு நெறிமுறை போன்ற வெளிவருகின்ற வான்பயணவியல் தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தல்
- கொள்கை சீராக்கம் மற்றும் அறிவு பரிமாற்றத்தை உறுதிசெய்வதற்காக ICAO, IATA, மற்றும் ஏனைய உலகளாவிய வான்பயணவியல் அங்கங்களுடனான பிராந்திய ஒத்துழைப்பினை பலப்படுத்துதல்

## ஏற்பளிப்புகள்

2024 இல் அடைந்த முன்னேற்றமானது பல்வேறு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடப்பாடின்றி சாத்தியமாயிருக்காது. நான் CAASL இன் முகாமைத்துவம் மற்றும் பணியாட்களுக்கு அவர்களது அசைக்கவியலாத தொழில்முறைத்தன்மை மற்றும் தனிச்சிறப்பிற்கான ஆர்வம் என்பவற்றுக்கு நான் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன். உங்களது பணி எமது வான்பயணவியல் துறையின் நம்பகத்தன்மையினை தொடர்ந்தும் பாதுகாப்பதுடன் தேசிய அபிவிருத்திக்கு அர்த்தமுள்ளவிதத்தில் பங்களிப்பு செய்கின்றது.


விமான நிலையத் துறையில், விமானநிலைய அதிகாரசபைகளில், தரைக் கையாளுதல் சேவைகள் மற்றும் வான்பயணவியல் பயிற்சி வழங்குனர்கள் ஆகிய எமது பங்காளிகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சிற்கு விசேட நன்றிகள் உரித்தாகட்டும். அவர்களது தொடர்ச்சியான உறுதுணைகள் எமது கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திசையினை வடிவமைப்பதில் மதிப்பிடவியலா பங்களிப்பு பாராட்டத்தக்கதாகும்.

பயணிக்கும் பொதுமக்களுக்கு - இலங்கையின் வான்பயணவியல் உட்கட்டமைப்பிலான உங்களது நம்பிக்கை தொடர்ச்சியாக தரமுயர்த்துவதற்கு எம்மை ஊக்குவிக்கின்றது. உங்களது பாதுகாப்பு மற்றும் திருப்தி எமது பணிநோக்கின் மையமாகக் காணப்படுகின்றது.

## முடிவுரை

முன்னோக்கிய பாதையில் நாம் பயணிக்கும்போது, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL) ஒரு பாதுகாப்பான, உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மையான வான்பயணவியல் துறையினை உறுதிசெய்வதற்கு பூரண கடப்பாட்டுடன் உள்ளது. தடையற்ற பயண அனுபவங்கள் மற்றும் அனைத்து செயற்பாடுகளிலும் நிலைபேறுடைமையின் ஒருங்கிணைப்பு என்பவற்றுக்கு வசதியளிப்பதனூடாக, நாம் ஒரு மீளெழுச்சியான மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான துறையினை வடிவமைக்கின்றோம். சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்பினால் (ICAO) நிறுவப்பட்ட நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை (SARPs) நிலைநிறுத்துவதன் மூலம் நாம் பிராந்தியத்தினுள் ஒரு முன்னுரிமையான வான்பயணவியல் மையமாக இலங்கையின் நிலையினை உயர்த்துவதற்கு எண்ணியுள்ளோம்.

கூட்டாக நாம் தொடர்ந்தும் புதிய உச்சங்கள் நோக்கி மேலெழுவோம் - இலங்கையின் ஆகாயவெளிகள் திறந்திருத்தல், நன்கு இணைந்திருத்தல் மற்றும் அவற்றைக் கடந்துசெல்லும் அனைவருக்கும் செழிப்பான வாய்ப்பினையும் உறுதிசெய்கின்றோம்.



**திரு. சுனில் ஜயாரத்ன**
*தலைவர்*

# சிவில் விமானப்போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு



> **“இவ்வாண்டின் ஒரு பாரிய சிறப்பம்சமாக மூலோபாய அபிவிருத்தி மற்றும் மீள்கட்டமைப்பு முன்னெடுப்பின் ஆரம்பம் காணப்பட்டது. ஒரு தொடரான ஆழ்ந்த கலந்தாலோசனைகள் மற்றும் உள்ளக மீளாய்வுகளைத் தொடர்ந்து, நடைமுறையிலுள்ள கட்டமைப்பு இடைவெளிகளை விளித்துரைப்பதற்கும் மற்றும் ஒட்டுமொத்த செயற்பாட்டின் பயனுறுதித்தன்மையினை மேம்படுத்துவதற்கும் CAASL நிறுவன மீள்கட்டமைப்பு செயல்முறையினை முன்னெடுத்தது. இந்த கலந்துரையாடல்கள் வளர்ந்துவரும் உலகளாவிய வான்பயணவியல் தேவைப்பாடுகளுடன் சீரமைவாக CAASL இனை மீள்நிலைப்படுத்துவதனையும் அதன் மையமான முறைமைப்படுத்தல் செயற்பாடுகளை பலப்படுத்தும் நோக்கையும் கொண்டிருந்தன.”**

சிவில விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (CAASL) பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், கருத்திலெடுக்கப்படும் ஆண்டின் மீளாய்வினை கௌரவமாகவும் ஆழ்ந்த பொறுப்புணர்வுடனும் நான் முன்னிலைப்படுத்துகின்றேன். வான்பயணவியல் துறையானது ஒரு விரைவான வேகத்தில் தொடர்ச்சியாக வளர்ந்து வருவதுடன், தேசிய வான்பயணவியல் முறைமைப்படுத்துபவராக எமது பங்கானது பின்வருமாறு காணப்படுகின்றது. பாதுகாப்பில் உயர்ந்த நியமங்களை நிலைநிறுத்துதல், புத்தாக்கத்தினை வளர்த்தல், தடையற்ற பயண அனுபவத்திற்கு வசதியளித்தல் மற்றும் துறையில் நிலைபேறுடைய வளர்ச்சியினை ஊக்குவித்தல் என்பனவாகும். கடந்த ஆண்டானது CAASL இற்கு குறிப்பிடத்தக்க உருமாற்றமாகக் காணப்பட்டது. இது நாம் எமது நிறுவன கட்டமைப்பினைப் பலப்படுத்துவதற்கான முக்கிய முன்னெடுப்புகள், சேவை விநியோகத்தின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்பினால் (ICAO) நிறுவப்பட்ட நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுடன் (SARPs) செயற்பாடுகளை சீரமைத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இந்த முயற்சிகள் முறைமைப்படுத்தல் தனிச்சிறப்பு, ICAO இணக்கப்பாடு மற்றும் இலங்கையின் வான்பயணவியல் துறையில் நிலைபேறுடைய வளர்ச்சி என்பவற்றை உறுதிசெய்வதற்கான CAASL இன் திடமான கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது.

## மீள்கட்டமைப்பு மற்றும் திட்டமிடலூடாக மூலோபாயத் திசையினை பலப்படுத்துதல்

இவ்வாண்டின் ஒரு பாரிய சிறப்பம்சமாக மூலோபாய அபிவிருத்தி மற்றும் மீள்கட்டமைப்பு முன்னெடுப்பின் ஆரம்பம் காணப்பட்டது. ஒரு தொடரான ஆழ்ந்த கலந்தாலோசனைகள் மற்றும் உள்ளக மீளாய்வுகளை தொடர்ந்து, நடைமுறையிலுள்ள கட்டமைப்பு இடைவெளிகளை விளித்துரைப்பதற்கும் மற்றும் ஒட்டுமொத்த செயற்பாட்டின் பயனுறுதித்தன்மையினை மேம்படுத்துவதற்கும் CAASL நிறுவன மீள்கட்டமைப்பு செயல்முறையினை முன்னெடுத்தது. இந்த கலந்துரையாடல்கள் வளர்ந்துவரும் உலகளாவிய வான்பயணவியல் தேவைப்பாடுகளுடன் சீரமைவாக CAASL இனை மீள்நிலைப்படுத்துவதனையும் அதன் மையமான முறைமைப்படுத்தல் செயற்பாடுகளை பலப்படுத்தும் நோக்கையும் கொண்டிருந்தன.

முன்மொழியப்பட்ட மீள்கட்டமைப்பு செயன்முறையானது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்பின் (ICAO) நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுடன் (SARPs) சீரமைத்தல், மேற்பார்வை கொள்திறன்களை பலப்படுத்துதல் மற்றும் பங்காளிகள் சேவை விநியோகத்தினை மேம்படுத்துதல் என்பவற்றில் விசேட வலியுறுத்தலை இட்டது. இந்த அடித்தள வேலையானது ஒரு விரிவான மூலோபாய அபிவிருத்தித் திட்டத்தை வரைவதற்கு இட்டுச்சென்றது. இது CAASL ஒரு நவீன, விரைவூக்கமான மற்றும் பிராந்திய ரீதியில் மதிப்புமிக்க சிவில் விமானப் போக்குவரத்து முறைமைப்படுத்துபவராக வளர்ந்துவருவதற்கான ஒரு வழிகாட்டல் கட்டமைப்பாக சேவையாற்றுகின்றது.

## எமது மக்களில் முதலீடு செய்தல்: மனித வள அபிவிருத்தி

முறைமைப்படுத்தல் தனிச்சிறப்பின் மையமாக மனித வளம் காணப்படுவதனை இனங்கண்டு, அதிகாரசபையானது இவ்வாண்டின்போது மனித வள முகாமைத்துவத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகள் உள்ளடங்கலான பத்து முக்கிய வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செயன்முறையினை நாம் வெற்றிகரமாக நிறைவு செய்தோம். இது எமது உள்ளக தலைமைத்துவக் கொள்திறனை கணிசமானளவு பலப்படுத்தி கொள்கை அமுலாக்கத்தினை விரைவாக்குவதற்கு எம்மை இயலுமையாக்கியுள்ளது.

மேலும், அனைத்து பணியாட்கள் பிரிவுகளுக்கும் தொழில்நுட்ப மற்றும் பெருநிறுவன படிகள் கட்டமைப்பினை மீளாய்வு மற்றும் பகுத்தறிவு செய்வதற்காக ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நிறுவப்பட்டது. உள்ளகத்தேயான பயிற்சி, குறிப்பாக செய்முறைப் பயிற்சி மற்றும் பணி சார்ந்த திட்டங்களின் மீள் தொடக்கத்துடன் தொடர்ச்சியான பயிலுதல் மற்றும் அபிவிருத்திக்கான எமது கடப்பாடானது வலியுறுத்தப்பட்டது. மேலாக, பணியாட்களிடையே உலகளாவிய திறன்களை கட்டியெழுப்புவதற்காக தொழில்நுட்பம் மற்றும் முறைமைப்படுத்தல் தளங்களில் முன்னிறுத்தம் செய்து இலக்குவைத்த வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன.

## அடுத்த சந்ததி வான்பயணவியல் தொழில்வல்லுனர்களை தயார்படுத்துதல்

இலங்கையின் எதிர்கால வான்பயணவியல் துறையினை அடைவதற்கு CAASL அடுத்த சந்ததி வான்பயணவியல் தொழில்வல்லுனர்கள் (NGAP) முன்னெடுப்பினை ஆரம்பிப்பதன் மூலம் ஒரு மூலோபாயமான முன்னோக்கிய அடியை எடுத்துவைத்துள்ளது. கல்வி அமைச்சுடனான ஒத்துழைப்புடன் தேசிய கல்விப் பாடத்திட்டத்தினுள் வான்பயணவியல் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த குறிப்பிடத்தக்க முன்னெடுப்பானது விழிப்புணர்வினை எழுப்பி வான்பயணவியலில் தொழில்களை தொடர்வதற்கு இளம் மனங்களை ஊக்குவிக்கும் நோக்கினைக் கொண்டதாகும்.

# சிவில் விமானப்போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலுள்ள மாணவர்களுக்காக மாதாந்த விமானநிலைய கல்விச் செயலமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இவை செயல்சார் பயிலுதல் மற்றும் துறைசார் ஈடுபாட்டினை ஊக்குவிக்கும் குறிக்கோளைக் கொண்டிருந்தன. இலங்கையின் முக்கிய விமான நிலையங்களில் நடாத்தப்பட்ட இந்த செயலமர்வுகள் வான்பயணவில் செயற்பாடுகள் மற்றும் முறைமைப்படுத்தல் கட்டமைப்பில் ஆழ்ந்த அனுபவத்தை வழங்குவதுடன் எதிர்கால துறைசார் தொழில்வல்லுனர்களுக்கான அடித்தளத்தையும் இடுகின்றது.

## விமானநிலைய உட்கட்டமைப்பு மற்றும் உள்ளூர் வான்பயணவியல் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்

இவ்வாண்டின்போது, CAASL இங்குராக்கொட விமான நிலையத்தின் அபிவிருத்திக்கு அதன் முறைமைப்படுத்தல் உறுதுணையினை நீட்டியது. இது முக்கியமான கட்டுமான நடவடிக்கைகளில், குறிப்பாக ஓடுபாதைக்காகும் என்பதுடன், இது தற்போது செயலூக்கமாக நடைபெற்றுக்கொண்டுள்ளது. இந்த அபிவிருத்தியானது பிராந்திய வான்பயணவியல் கொள்திறனை விரிவாக்குவதற்கும் உள்ளூர் வான்பயணவியல் வலையமைப்பினை பலப்படுத்துவதற்கும் ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

அதற்குச் சமாந்திரமாக, சர்வதேச வான்பயணவியல் ஒழுங்குவிதிகளிலிருந்து வேறாக உள்ளூர் வான்பயணவியலின் தனித்துவமான தேவைகளை விளித்துரைப்பதற்காக பொது வான்பயணவியல் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. விரிவான பங்காளிகள் கலந்தாராய்வுகள் இடம்பெற்று நிலுவையிலுள்ள அனைத்து சிக்கல்களும் வெற்றிகரமாக தீர்த்துவைக்கப்பட்டன. விருத்திசெய்யப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய முறைமைப்படுத்தல் கட்டமைப்பானது உள்ளூர் வான்பயணவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களுக்கு மிகவும் அவசியமான தெளிவு மற்றும் வினைத்திறனை வழங்கும்.

## நிதிச் செயற்திறன் மற்றும் நிதி நிலைமை

31 டிசம்பர் 2024 இல் நிறைவடைந்த நிதியாண்டானது அதிகாரசபையின் நிதியியல் நிலத்தோற்றத்தில் சவால்களையும் மூலோபாய மாற்றங்களையும் பிரதிபலித்தது. மொத்த வருமானமானது 2023 இல் காணப்பட்ட ரூபா 5.53 பில்லியனிலிருந்து ரூபா 2.39 பில்லியனாக கடுமையான வீழ்ச்சியினை கண்டது. இது பிரதானமாக செயற்பாட்டு மற்றும் செயற்பாடு சாராத வருமானத்திலான வீழ்ச்சியினாலாகும். செயற்பாட்டு வருமானமானது ரூபா 1.68 பில்லியனாக (2023: ரூபா 4.27 பில்லியன்) வீழ்ச்சியடைந்தவேளை, செயற்பாடு சாராத வருமானமானது ரூபா 707.8 மில்லியனாக (2023: 1.26 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது. செலவினத்தைப் பொறுத்தளவில், செலவுகள் ஒப்பீட்டளவில் கட்டுப்படுத்தப்பட்டதுடன், 2023 இல் காணப்பட்ட ரூபா 973.44 மில்லியனிலிருந்து ரூபா 1.01 பில்லியனாக சற்று உயர்வடைந்தது. இது பணியாட்கள் செலவினங்கள் மற்றும் நிதிச் செலவினங்களிலான அதிகரிப்பின் காரணத்தினாலாகும். பெறுமானத்தேய்வானது ரூபா 193.73 மில்லியனாக உயர்வடைந்து இது சொத்துக்களில் தொடர்ச்சியான முதலீட்டினை பிரதிபலிக்கின்றது. இதன் விளைவாக வரிக்கு முந்திய இலாபமானது முன்னைய ஆண்டின் ரூபா 4.56 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 1.38 பிலியனாக கணிசமாக சுருக்கமடைந்து வரிக்கு பிந்திய இலாபமாக ரூபா 1.17 பில்லியன் (2023: ரூபா 4.35 பில்லியன்) பதிவுசெய்யப்பட்டது. மொத்த விரிவான வருமானமானது இந்த கீழ்நோக்கிய போக்கினை பிரதிபலித்து 2023 இல் காணப்பட்ட ரூபா 4.4 பில்லியனிலிருந்து ரூபா 1.18 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. இதற்கான பிரதான காரணியாக ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகளிலான உயர்ந்த மீள் அளவீட்டு நட்டங்களும் குறைவான மீள்மதிப்பீட்டு மிகையும் காணப்பட்டன.

ஐந்தொகையினை நோக்கும்போது, 2024 இல் மொத்தச் சொத்துக்கள் ரூபா 41.37 பில்லியனாக கணிசமானளவு உயர்வடைந்தது. இது முன்னைய ஆண்டின் ரூபா 10.89 பில்லியனுடன் ஒப்பிடும்போது நான்குமடங்கு அதிகரிப்பாகும். இவை பெருமளவில் நடைமுறைச் சொத்துக்களிலான அதிகரிப்பினால் இயக்கப்பட்டன - குறிப்பாக வர்த்தக வருமதிகள், இவை ரூபா 29.80 பில்லியனாக விரிவடைந்தன (2023: ரூபா 356 மில்லியன்), அத்துடன் திடமான காசு மீதியானது ரூபா 4.26 பில்லியன் (2023: ரூபா 3.45 பில்லியன்) ஆக அதிகரித்து. நடைமுறையல்லா சொத்துக்கள் பெருமளவில் திடமாக ரூபா 2.70 பில்லியனாகக் காணப்பட்டன. உரித்துவமானது மிதமான ரூபா 7.27 பில்லியனாக பலமடைந்தது (2023: ரூபா 6.91 பில்லியன்). இதற்கு நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்களும் அதிகரித்த மீள்மதிப்பீட்டு மிகைகளும் துணையளித்தன. எவ்வாறாயினும், பொறுப்புக்கள் ஒரு குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினைக் கண்டன. நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 33.62 பில்லியனாக கடுமையாக உயர்வடைந்ததுடன் (2023: ரூபா 3.58 பில்லியன்) இவை முழுவதும் வர்த்தக சென்மதிகளினால் இயக்கப்பட்டன. நடைமுறையல்லா பொறுப்புக்கள் மிதமாக அதிகரித்து ரூபா 478 மில்லியனாகக் காணப்பட்டது.

காசுப் பாய்ச்சல் செயற்திறனானது குறைவான செயற்பாட்டு காசுப் பாய்ச்சலினை எடுத்துக்காட்டியதுடன், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் 2023 இல் காணப்பட்ட ரூபா 4.00 பில்லியனிலிருந்து ரூபா 1.28 பில்லியனாக குறைவடைந்தது. இது வருமதிகளிலான அழுத்தங்களைப் பிரதிபலித்தது. முதலீட்டு நடவடிக்கைகள் ரூபா 271 மில்லியன் காசைப் பயன்படுத்தின, இது பிரதானமாக சொத்துக்களை கையகப்படுத்துவதற்காகும். நிதியியல் வெளிப்பாய்ச்சல்கள் ரூபா 750 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இதற்கு பிரதான காரணியாக திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு காணப்பட்டது. இந்த அசைவுகள் இருந்தபோதிலும், வருட இறுதியில் காசும் காசுக்குச் சமனானவைகள் 2023 இல் காணப்பட்ட ரூபா 3.45 பில்லியனிலிருந்து ரூபா 4.26 பில்லியனாக அதிகரித்து நிறைவடைந்தது. ஒட்டுமொத்தத்தில், இலாபகரத்தன்மை கடுமையாக சுருங்கியவேளை, அதிகாரசபையானது ஒரு ஆரோக்கியமான திரவத்தன்மை நிலையினையும் திடமான சொத்துத் தளத்தையும் பராமரித்தது. பொறுப்புக்களில் கணிசமான உயர்வு காணப்பட்டபோதிலும், முன்னோக்கிச் செல்லும்போது விவேகமான நிதியியல் முகாமைத்துவத்தின் முக்கியமானது வலியுறுத்தப்படுகின்றது.

## கணக்காய்வு தயார்நிலை மற்றும் முறைமைப்படுத்தலை பலப்படுத்துதல்

இவ்வாண்டின் போதான மற்றுமோர் முன்னிறுத்தப் பிரிவாக ICAO இனால் கணக்காய்வு செய்யப்படும் எதிர்வரும் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வுத் திட்டம் தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறைக்கான அதிகாரசபையின் தயார்படுத்தல் காணப்பட்டது. கணக்காய்வு தயார்நிலை மற்றும் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக, தேசிய தொடர்ச்சியான கண்காணிப்பு குழுவானது (NCMC) நியமிக்கப்பட்டது. அமுலாக்கல், கவனஞ்செலுத்தவேண்டிய பிரிவுகளை இனங்காணுதல், மற்றும் இணக்கப்பாட்டு இடைவெளிகளது முன்முயற்சியான தீர்மானத்தினை உறுதிசெய்தல் என்பவற்றை கண்காணிப்பதற்காக வழக்கமான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன.

அதேநேரத்தில், ஆளில்லா வான்கலங்களுக்கான (UAVs) விதிகள் மற்றும் நியமங்களை விருத்திசெய்தில் கணிசமான முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. UAV ஒழுங்குவிதிகளை உலகளாவிய நடைமுறைகளுடன் சீரமைப்பதற்காக முக்கிய பங்காளிகளுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டவேளை, தேசிய பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் வான்வெளி முகாமைத்துவ சிந்தனைகளும் விளித்துரைக்கப்பட்டன.

## UHKDU உடனான ஒத்துழைப்புடன் வான்மருத்துவ சேவைகளை மேம்படுத்துதல்

வான்பயணவியல் சமூகத்திற்கான ஒரு முக்கிய சுகாதார மைல்கல்லாக, பல்கலைக்கழக மருத்துவமனையில் வான்மருத்துவ சேவைகளை (AMS) நிறுவுவதற்காக CAASL கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பல்கலைக மருத்துவமனையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இந்த ஒத்துழைப்பானது தற்போது உள்ளூரில் சான்றளிக்கப்பட்ட வான்மருத்துவ பரிசோதனைகள் நடாத்தப்படுவதனை இயலுமையாக்கியுள்ளதுடன்,

வெளிவாரி பரிந்துரைத்தல்களுக்கான தேவையினை அகற்றி வான்பயணவியல் ஆளணியினருக்கான அணுக்கத்தினை சீரமைக்கின்றது.

## நிறுவனம் முழுவதும் பொறுப்புக்கூறல் மற்றும் தரத்தை உட்பொதித்தல்

செயற்திறனால் இயக்கப்படும் ஒரு நிறுவனமாக வருகின்ற எமது குறிக்கோளுக்கமைய, CAASL பிரிவு வாரியான அலகுகளின் தலைமைகளை உள்ளடக்கிய மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களுக்கு ஒரு கட்டமைக்கப்பட்ட செயன்முறையினை அமுலாக்கியுள்ளது. இப் பொறிமுறையானது வெளிப்படையான மதிப்பீடு, பொறுப்புக்கூறல் மற்றும் அதிகாரசபையின் பரந்த மூலோபாய இலக்குகளுடன் சீரமைத்தல் என்பவற்றை உறுதிசெய்கின்றது.

செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் சேவை நியமங்களை மேம்படுத்துவதற்காக, CAASL ISO9001:2015 அடிப்படையிலான தர முகாமைத்துவ முறைமையினை (QMS) அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முன்னெடுப்பானது தொடர்ச்சியான தர மேம்பாடு மற்றும் நிறுவனத் தனிச்சிறப்பு நோக்கிய கணிசமான நகர்வினைக் குறிப்பிடுகின்றது. QMS திணைக்களங்களிடையே படிப்படியாக அமுல்படுத்தப்படுவதுடன், தரப்படுத்தல், வாடிக்கையாளர் நோக்குநிலை, மற்றும் நிலைபேறான முன்னேற்றம் போன்ற ஒரு கலாச்சாரத்தினை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பிராந்திய மற்றும் உலகளாவிய ஈடுபாட்டினை பலப்படுத்துதல்

சர்வதேச வான்பயணவியல் சமூகத்தின் ஒரு செயலூக்கமான அங்கத்தவராக CAASL பல குறிப்பிடத்தக்க மன்றங்களில் இலங்கையினை பிரதிநிதித்துவம் செய்தது. COSCAP - தெற்காசியா வழிநடத்தல் குழுவின் தலைவராக செயலாற்றும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. இங்கு எமது ஆய்வாளர்களுக்கான பெறுமதிமிக்க பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களை அடையக்கூடியதாய் இருந்தது. மேலும், எமது தூதுக்குழு புது டெல்லியில் சிவில் விமானப் போக்குவரத்தில் 2ஆவது ஆசிய பசிபிப் அமைச்சுக்கள் கருத்தரங்கில் பங்கேற்றது. இங்கு நாம் பாதுகாப்பு, வசதியளித்தல், கொள்திறன் கட்டியெழுப்புதல் மற்றும் சூழல் பாதுகாப்பு உள்ளடங்கலான பிராந்திய முன்னுரிமைகளில் டெல்லி பிரகடனத்தை வடிவமைப்பதில் பங்களிப்பு செய்தோம்.

## பொழுதுபோக்கு வான்பயணவியலின் வெளித்தோன்றும் பிரிவுகளை முறைமைப்படுத்துதல்

வர்த்தகமில்லா பறத்தலிலான வளர்ச்சியடையும் பிரபல்யத்தை ஏற்றுக்கொண்டு CAASL இலங்கையில் பொழுதுபோக்கு வான்பயணவியல் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக ஒரு தனிப்பயனான திட்டத்தை நாம் முன்னெடுத்தோம். இது பொழுதுபோக்கு பயன்பாட்டிற்காக குறிப்பிட்ட வான்வெளி வலயங்களை நியமிக்கும்வேளை, பாதுகாப்பானது எப்போதும் சமரசம் காணப்படாது இருப்பதனை உறுதிசெய்கின்றது. இந்த புதிய முறைமைப்படுத்தல் அணுகுமுறையானது பயனாளர்கள் தேவைகள் மற்றும் தேசிய வான்வெளி முகாமைத்துவக் கொள்கைகளுக்கு சீரமைவாக விருத்திசெய்யப்பட்டுள்ளன.

## முன்னோக்கிய பார்வை

கடந்த ஆண்டானது CAASL இனை ஒரு எதிர்காலத்திற்கு தயாரான, பதிலளிக்கக்கூடிய மற்றும் உலகளாவிய ரீதியில் சீரமைவான சிவில் வான்பயணவியல் முறைமைப்படுத்துபவராக உருமாற்றுவதற்கு ஒரு திடமான அடித்தளத்தை இட்டுள்ளது. இக்காலத்தின்போது ஆரம்பிக்கப்பட்ட சீர்திருத்தங்கள் மற்றும் முன்னெடுப்புகள் நீண்டகால மீளெழுச்சி, நிறுவனத் தனிச்சிறப்பு மற்றும் மேம்பட்ட பங்காளிகள் நம்பகத்தன்மை நோக்கியவையாகும். முன்னோக்கிப் பார்க்கும்போது எமது முன்னுரிமையானது தொடர்ந்தும் எமது முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை பலப்படுத்துதல், எமது மக்களில் முதலீடு செய்தல் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச பங்காளிகளுடனான ஒத்துழைப்பினை ஆழமாக்குதல் என்பவற்றை உள்ளடக்கும்.

இலங்கையில் ஒரு பாதுகாப்பான, மிகவும் செயற்திறனான மற்றும் நிலைபேறுடைய வான்பயணவியல் துறை நோக்கிய பங்களிப்பு மற்றும் அசைக்கவியலாத உறுதுணைக்காக நான் பணிப்பாளர்கள் சபை, CAASL முகாமைத்துவம் மற்றும் பணியாட்கள், எமது அமைச்சு மற்றும் அனைத்து துறைசார் பங்காளிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

கூட்டாக நாம் மாற்றத்தை மாத்திரம் சமாளிக்காது பிராந்தியத்தில் சிவில் விமானப் போக்குவரத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கின்றோம்.



**(AVM) சாகர கொட்டகதெனிய (Retd.)**
சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி

# CAASL இன் பணிப்பாளர்கள் சபை





## அதிகாரசபையின் அங்கத்தவர்கள் - CAASL இன் 15ஆவது சபை

*அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்)*

**சுனில் ஜயாரத்ன**
*தலைவர்*
*CAASL இன் அங்கத்தவர் - நியமிக்கப்பட்டவர்*

**(AVM) H.M.S.K.B கொட்டகதெனிய (Retd.)**
*சிவில் விமானப்போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் CAASL இன் பிரதம நிறைவேற்று அதிகாரி அங்கத்தவர் - பதவிவழி அங்கத்தவர்*

*நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)*

**K.G. குமாரசிங்க**
*CAASL இன் அங்கத்தவர் - நியமிக்கப்பட்டவர்*

**(AVM) சம்பத் துயகொந்தா**
*CAASL இன் பாதுகாப்பு அங்கத்தவர் தலைப்பிற்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் - பதவிவழி அங்கத்தவர்*

**ஷமீய்ரா பிரியங்கரகே**
*CAASL இன் அங்கத்தவர் - நியமிக்கப்பட்டவர்*

**C. W. K. தா்மசேன**
*நிதி தலைப்பிற்கு பொறுப்பான அமைச்சுக்கான பிரதிநிதி, அமைச்சரினால் பெயரிடப்பட்டவர். CAASL இன் அங்கத்தவர் - பதவிவழி அங்கத்தவர்*

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி



*(இடமிருந்து வலம்)*

நிற்பவர்கள்

**M.A.K. பிரசன்ன** - *பிரதி பணிப்பாளர் நாயகம் (வானூர்தியல் சேவைகள் முறைமைப்படுத்தல்)*
**திலின வர்ணசிங்க** - *பணிப்பாளர் (வான்வழி செலுத்தல் சேவைகள்)*
**கெப்டன். தமிந்த ரம்புக்வெல்ல** - *பிரதி பணிப்பாளர் நாயகம் (விமானப் பாதுகாப்பு முறைமைப்படுத்தல்)*
**சம்பிக்க விதானபத்திரண** - *பதிலாள் பணிப்பாளர் (பயிற்சி நிறுவனம் மற்றும் தனிநபர் உரிமமளித்தல்), சிரேஷ்ட சிவில் விமானப் போக்குவரத்து சோதனையாளர் (தனிநபர் உரிமமளித்தல் - விமானப் பணியாட்கள்)*
**(AVM) H.N. அபேசிங்க** *(Retd.) பணிப்பாளர் (வான்பயணவியல் பாதுகாப்பு)*

அமர்ந்திருப்போர்

**J. M. D. கருணாரத்ன** - *பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் ஆதன முகாமைத்துவம்)*
**(AVM) H.M.S.K.B கொட்டகதெனிய (Retd.)** - *சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி*
**திரு. சுனில் ஜயாரத்ன** - *தலைவர்*



*(இடமிருந்து வலம்)*

நிற்பவர்கள்
**ரயான் வன்னியப்பா** - *பிரதி பணிப்பாளர் நாயகம் வான் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு முறைமைப்படுத்தல் /பதிலாள். பிரதிப் பணிப்பாளர் பொது பெருநிறுவன முகாமைத்துவம்*
**நிரோஷ் குணவர்தன** - *பணிப்பாளர் (சூழல், ஆய்வு மற்றும் திட்டங்கள்)*
**மஹிலால் துஷ்யந்த ரத்நாயக்க** - *பணிப்பாளர் (வானூர்தி பதிவீடு மற்றும் வான்தகைமை)*
**ரங்கன சமன்பிரிய** - *பணிப்பாளர் (வானூர்தித் தளங்கள்)*

அமர்ந்திருப்போர்
**அசங்க லியனாராச்சி** - *பணிப்பாளர் (வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார முறைமைப்படுத்தல்)*
**ரமேஷா டி சில்வா** - *பணிப்பாளர் ( நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவம்)*
**லலித் பிரேமசிறி** - *பதிலாள் பணிப்பாளர் ( தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு), முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு தர மதிப்பாய்வு)*

# CAASL இன் தோற்றுருவம்

### CAASL இன் சுருக்கமான அறிமுகம்

2022 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் இலங்கை சிவில் விமானப் போக்கவரத்து அதிகாரசபையானது 27 டிசம்பர் 2002 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 இன் கீழ் கணக்குகளை கணக்காய்வு செய்யும் நோக்கில் இது ஒரு பொது நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

2022 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம் மற்றும் 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம் ஆகியவற்றின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் உள்ளூர் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினை முறைமைப்படுத்துவதும், நாட்டின் பிரஜைகளது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக தேசிய பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்யும் துறையின் பாதுகாப்பு, வினைத்திறன், முறைமைப்படுத்தல் மற்றும் சூழல் பதிலளிப்பில் உயர் செயற்திறனை நோக்காகக் கொண்டு சர்வதேச வான்பயணவியல் ஒழுங்கமைப்பினால் (ICAO) கடைப்பிடிக்கப்படும் பொருத்தமான சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய செயற்படுவது CAASL இன் பிரதான தொழிற்பாடாகும்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது எட்டு (08) சபை அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளதுடன், இவர்களுள் ஐந்து (05) பேர் சிவில் விமானப் போக்குவரத்து தலைப்பிற்கு பொறுப்பான மான்புமிகு அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள். செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, நிதி தலைப்பிற்கு பொறுப்பான மான்புமிகு அமைச்சின் பிரதிநிதி மற்றும் சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் CAASL இன் ஏனைய மூன்று பதவிவழி அங்கத்தவர்களாவார்கள். CAASL இன் தலைவர் மற்றும் பிரதித் தலைவர் ஆகியோர் சிவில் விமானப் போக்குவரத்து தலைப்பிற்கு பொறுப்பான மான்புமிகு அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள். அமைச்சரவை அமைச்சர்களினால் நியமிக்கப்படும் சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் சட்டரீதியாக CAASL இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார்.

நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் பதவிக்காலம் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களாகும்.

அதிகாரசபையானது சிவில் விமானப் போக்குவரத்து தலைப்பிற்கு பொறுப்பான மான்புமிகு அமைச்சரின் பொதுவான பணிப்புரை மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகும்.

## CAASL உடனடியான இலக்குகள்

- வர்த்தக வான்பயணவியல் துறையில் மரண விபத்துக்களை தவிர்ப்பதற்கு பாதுகாப்பு வழிமுறைகளை மேம்படுத்துதல்.
- சிவில் வான்பயணவியலில் விமானக் கடத்தல் சட்டவிரோதமான தலையீடுகளை தவிர்ப்பதற்கு வலுவான பாதுகாப்பு நெறிமுறைகளை அமுலாக்குதல்.
- பொதுவான வான்பயணவியல் விபத்துக்களை குறைப்பதற்கு தடுப்பு வழிமுறைகளை அமுலாக்குதல்.
- விமான நிலையங்களில் தரையில் வான்பயணவியல் தொடர்பான மரண விபத்துக்களை தவிர்ப்பதற்கு பாதுகாப்பு வழிமுறைகளை அமுலாக்குதல்.
- பொறியியல் / பணிமனைகளில் விபத்துக்களை குறைப்பதற்கு பாதுகாப்பு நெறிமுறைகளை மேம்படுத்துதல்.
- முன்முயற்சியான வழிமுறைகளூடாக பாதகமான வான்பயணவியல் நிகழ்வுகளை சிறுமமாக்குதல்.
- நேரத்திலான புறப்பாடுகளில் தாமதங்களை சிறுமமாக்குவதற்கு வினைத்திறனை மேம்படுத்துதல்.
- வான் பிரயாண அனுபவத்தை மேம்படுத்துவதற்கு சேவைத் தரத்தினை மேம்படுத்துதல்.
- விமான நிலையங்களில் பாதுகாப்பினை பராமரிக்கும்வேளை நெரிசல்களை குறைத்து பயணிகள் செயலாக்கத்தினை விரைவுபடுத்துவதற்கான வழிமுறைகளை அமுலாக்குதல்.
- வான்போக்குவரத்தில் விரயங்களைக் குறைத்து செயற்பாட்டுச் செலவினங்களை சிறுமமாக்குவதற்கான மூலோபாயங்களை அமுலாக்குதல்.
- வான்பயணவியலின் பாதகமான சூழல் விளைவுகளை சிறுமமாக்குவதற்கு வழிமுறைகளை அமுலாக்குதல்.
- சிவில் விமானப் போக்குவரத்தின் நன்மைகள் பற்றி பாடசாலை பிள்ளைகளுக்கு அறிவிப்பதற்கு கல்வித் திட்டங்களை நடாத்துதல்.
- அடுத்த சந்ததி வான்பயணவியல் தொழில்வல்லுனர்களை வழகாட்டுவதற்கு மற்றும் பயிற்றுவிப்பதற்கு திட்டங்களை அபிவிருத்திசெய்தல்.

## நிலைப்பாடு

எமக்கு மேலுள்ள வான்வெளியானது சமூக-பொருளாதார அபிவிருத்திக்கான பரந்த ஆற்றலைக் கொண்ட ஒரு பொது சொத்தாகும் என்பதுடன், இது நாட்டின் முன்னேற்றம் மற்றும் செழிப்பிற்காகவும் தேசத்தின் சந்ததிக்காகவும் முகாமைப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

## குறிக்கோள்கள்

- பாதுகாப்பு விளைவு இலக்குகளை விஞ்சுதல்.
- போதுமையான வளங்கனை உறுதிசெய்தல்.
- தொழில்முறை மற்றும் திறனைப் பராமரித்தல்.
- பரந்த நம்பகத்தன்மை மற்றும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.
- சாதனைகளை தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.
- அனைத்து நடவடிக்கைகளிலும் ஆக்கத்திறனை பெருமமாக்குதல்.
- சர்வதேச நியமங்களுடன் உயர் இணக்கப்பாட்டினை நிலைநிறுத்துதல்.
- சிவில் வான்பயணவியல் மற்றும் அபிவிருத்திக்கான ஒரு முன்னணி வசதியளிப்பவராக சேவையாற்றுதல்.

## எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

- சிவில் விமானப் போக்குவரத்தில் சர்வதேச கடப்பாடுகள் தேசத்தினால் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்தல், உயர்ந்த மட்டத்திலான வினைத்திறனான SARPS அமுலாக்கலினை அடைவதற்கு சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை கடுமையாக அமுல்படுத்தி வலியுறுத்துதல்.
- இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து முறைமைக்கு சர்வதேச அங்கீகாரத்தினை அடைதல், தடையாணைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்திரத்தை பராமரித்தல் மற்றும் ICAO இனால் எழுப்பப்படும் ஏதேனும் பாதுகாப்பு அக்கறைகளை செயலூக்கமாக விளித்துரைத்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்து செயற்பாடுகளில் பாதுகாப்பு, முறைமைப்படுத்தல் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல், வான் போக்குவரத்துத் துறையில் பொதுமக்களது நம்பிக்கையினை வளர்த்தல்.
- வான்பயணவியல் துறையினுள் வாடிக்கையாளர் திருப்தி மட்டங்களை உயர்த்துதல்.
- மூலோபாய மேம்பாடுகளூடாக அதிகாரசபையின் நிதியியல் செயற்திறனை மேம்படுத்துதல்.

## மூலோபாயங்கள்

- சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக சட்டரீதியான செயற்பாடுகள் மற்றும் சமூக பொறுப்புக்களது மேம்பட்ட மற்றும் சீரான அமுலாக்கல்.
- குறிப்பிடத்தக்க வான்பயணவியல் சிக்கல்களுக்கான தீர்வுகளது இனங்காணல் மற்றும் அமுலாக்கல்.
- குறிப்பிடத்தக்க கலாச்சார மாற்ற முன்னெடுப்புகளது அறிமுகம்.
- வான்பயணவியல் துறையுடன் ஒத்துழைப்பு மற்றும் பங்குடைமையுடன் செயலாற்றல்.
- வெளிப்படையான மற்றும் சீரான விதத்தில் செயற்படுதல் மற்றும் வெளிவாரியாகவும் உள்வாரியாகவும் வினைத்திறனாக தொடர்பாடுதல்.
- அனைத்து ஆவணங்கள், பொருட்கள் மற்றும் உள்ளக செயன்முறைகளது பயனுறுதித்தன்மை மற்றும் ஒவ்வுமையினை பராமரித்தல்.

## விழுமியங்கள்

- வான்பயணவியல் பாதுகாப்பிற்கு எல்லாவற்றிற்கும் மேலாக முன்னுரிமையளித்து ஒரு பாதுகாப்புக் கலாச்சாரத்தை வளர்த்தல்.
- எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளிலும் தனிச்சிறப்பிற்கு முயற்சித்தல்.
- பொறுப்பேற்கப்பட்ட ஒவ்வொரு பணியிலும் ‘செய்ய இயலும்’ என்ற ஒரு முன்முயற்சியான மன்பான்மையினை கடைப்பிடித்தல்.
- எமது செயற்பாடுகளில் நம்பகத்தன்மை, யதார்த்தம் மற்றும் ஒவ்வுமையினை வெளிக்காட்டுதல்.
- தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு ஒரு வழிமுறையாக மாற்றத்தினை கடைப்பிடித்தல்.
- வெற்றியை அடைவதற்கும் சவால்களை வெற்றிகொள்வதற்கும் ஒரு அணியாக ஒத்துழைத்தல்
- திறந்த, நேர்மையான மற்றும் வெளிப்படையான தொடர்பாடலை பராமரித்தல்.
- அனைத்து நடவடிக்கைகளிலும் வினைத்திறன், ஆக்கத்திறன் மற்றும் ஒழுங்குமுறையினை ஊக்குவித்தல்.
- சக பணியாட்களிடையெ நம்பிக்கை, மரியாதை மற்றும் கூட்டுப்பணியினை வளர்த்தல்.
- ஒவ்வொருவரதும் பங்களிப்புகளை அங்கீகரித்து மதிப்பளித்தல்.
- சமூக பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்றுதல்.
- எமது பணியில் மகிழ்ச்சி மற்றும் திருப்தியினை காணுதல்.
- ஒரு தொழில்முறையான அணுகுமுறையினை பராமரிப்பதில் பெருமையடைதல்.
- வீடு மற்றும் வேலை சூழலை சமநிலைப்படுத்துவதற்கு முயற்சித்தல்.





# மக்களுக்கு முன்னுரிமையளித்தல்



# பிரிவுகள் மற்றும் அலகுகளின் கண்ணோட்டம்

## விமானத்தளப் பிரிவு

இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து உட்கட்டமைப்பின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் அபிவிருத்தியினை உறுதிப்படுத்துவதில் விமானத்தளப் பிரிவு ஒரு முக்கிய பங்கிளை வகிக்கின்றது. அவர்கள் கையாளும் பொறுப்புக்கள் விமான நிலையங்களின் பாதுகாப்பிற்கு மாத்திரமன்றி வான்பயணவியல் துறையின் வளர்ச்சி மற்றும் முறைமைப்படுத்தலுக்கு முக்கியமானதாகும். பிரதான நடவடிக்கைகளின் பிரிப்பு பின்வருமாறு:

**1. சிவில் விமானத்தளங்களின் முறைமைப்படுத்தல் மேற்பார்வை:**

- விமானத்தளப் பிரிவானது சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு (DGCA) உறுதுணையினை வழங்குவதுடன், சிவில் விமானத்தளங்கள் பாதுகாப்பாகவும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியும் செயற்படுவதனை உறுதிசெய்தல்.
- சட்டரீதியான சேவை வழங்குநரினால் அவர்களது நியாயாதிக்கத்தின் கீழ் ஐந்து சிவில் விமானத்தளங்கள் செயலாற்றப்படுகின்றன, இவற்றுள் நான்கு சர்வதேச தரம் வாய்ந்தவை என்பதுடன் இவை பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டிற்கான உலகளாவிய நியமங்களை சந்திக்கின்றன.

**2. நீர் விமானத்தளச் செயற்பாடுகள்:**

- இலங்கையின் நீர் விமானத்தளங்கள் சுற்றுலாப் பயணிகளை கவர்வதில், குறிப்பாக மிதக்கும் விமானச் செயற்பாடுகளில் ஒரு தனித்துவமான பங்கினை வகிக்கின்றன.
- செயற்பாடுகள் பாதுகாப்பாகவும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டுடன் உள்ளதையும் உறுதிசெய்வதற்காக வழமையான கண்காணிப்பினூடாக ஏழு நீர் விமானத்தளங்கள் கண்காணிக்கப்படுகின்றன.

**3. புறப்பரப்பில் தடைகளை வரையறை செய்தல்:**

- வானூர்தியின் பாதுகாப்பிற்கு இடையூறு விளைவிக்கக்கூடிய கட்டுமானம் அல்லது தடைகளை தவிர்ப்பதற்கு வான்வெளி மற்றும் விமானத்தளத்தைச் சுற்றியுள்ள நிலப் பயன்பாட்டின் முகாமைத்துவத்தைக் குறிப்பிடுகின்றது.
- விமானத்தளப் பிரிவின் ஈடுபாடானது உட்கட்டமைப்பு அபிவிருத்தி வானூர்திச் செயற்பாடுகளுக்கு ஒரு ஆபத்தை உருவாக்காதிருப்பதை உறுதிசெய்தல், பாதுகாப்பான விமானப் பாதைகளுக்கு வசதியளித்தல் மற்றும் விமானத் தளங்களின் பயன்பாட்டினை உகப்பாக்குதல்.

*பிரிவுகள் மற்றும் அலகுகளின் கண்ணோட்டம்*

**4. ஒழுங்குவிதி மற்றும் நியமங்கள்**
அபிவிருத்தி:

- இப்பிரிவானது ஒழுங்குவிதிகள், நியமங்கள் மற்றும் வழிகாட்டல் ஆவணங்களை சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்பு (ICAO) பிரசுரங்கள் மற்றும் தேசிய தேவைப்பாடுகளுடன் சீரமைவாக உருவாக்குகின்றது.
- இவ்வாறு செய்வதன் மூலம், அது செயற்பாடுகளின் பாதுகாப்பினை மாத்திரம் உறுதிசெய்யாது இலங்கையில் ஒட்டுமொத்த வான்பயணவியல் துறையின் மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்கின்றது.

### வான் வழிகாட்டல் சேவைப்பிரிவு

ANS பிரிவானது கொழும்பு விமானத் தகவல் பிராந்தியத்திற்குள் (கொழும்பு FIR) வான் வழிகாட்டல் சேவைகளை பாதுகாப்பாக, செயற்திறனாக மற்றும் வினைத்திறனாக முகாமைப்படுத்துவதனை உறுதிசெய்யும் முக்கியமான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்பின் (ICAO) நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுடன் (SARPs) சீரமைவாக விரிவான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் உருவாக்குவதனை உள்ளடக்குகின்றது. இந்த நியமங்கள் உலகம் முழுவதிலுமான சிவில் விமானப் போக்குவரத்து செயற்பாடுகளில் ஒருமைப்பாடு, பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களாகும்.

இந்த சர்வதேச நியமங்களை உள்ளூர் சூழலில் கடைப்பிடிப்பதில் ANS பிரிவானது ஒரு முக்கிய பங்கினை வகிப்பதுடன், அவை இலங்கையின் வான்வெளி முகாமைத்துவக் கட்டமைப்பில் வினைத்திறனாக அமுலாக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது. இது வான் போக்குவரத்து முகாமைத்துவம், தொடர்பாடல், வழிகாட்டல், கண்காணிப்பு, வான்வழி காலநிலை மற்றும் வான்வழித் தகவல் சேவைகள் என்பவற்றுக்கான செயன்முறைகள் நிறுவப்படுவதனை உள்ளடக்குகின்றது. மேலும், இப்பிரிவானது இந்த ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காண்பதை உறுதிசெய்வதற்காக இலங்கை வான்வழிகாட்டல் சேவை வழங்குநராக நியமிக்கப்பட்டவரின் செயற்திறனை கண்காணித்து கணக்காய்வு செய்கின்றது.

இந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம், ANS பிரிவானது உயர் தரத்திலான வான்பயணவியல் பாதுகாப்பினை பராமரிப்பதற்கும், சர்வதேச வான் போக்குவரத்திற்கு துணையளிப்பதற்கும் மற்றும் இலங்கையின் வான் பயணவியல் துறையின் நிலைபேறுடைய அபிவிருத்தியினை வளர்ப்பதற்கும் பங்களிப்பு செய்கின்றது. கொழும்பு FIR இனுள் தடையற்ற மற்றும் பாதுகாப்பான வான்போக்குவரத்து செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதில் அதன் பணியானது ஒருங்கிணைந்ததாகும். இது உலகளாவிய வான்பயணவியல் வலையமைப்புகளில் ஒரு நெருக்கடியான கட்டமாக செயலாற்றுகின்றது.

### வானூர்திப் பதிவீடு மற்றும் வான்தகைமைப் பிரிவு

சிக்காகோ மாநாட்டின் ஒரு கையொப்பதாரியாக, இலங்கை வான்பயணவியல் துறை தொடர்பாக சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நியமங்களை கடைப்பிடிப்பதற்கு கடப்பாட்டுடன் உள்ளது. வானூர்திப் பதிவீடு மற்றும் வான்தகைமைப் பிரிவிற்கு முக்கியமான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் தனித்துவமான செயற்பாட்டு தேவைகளை விளித்துரைக்கும்வேளை உலகளாவிய நியமங்களுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்தல் வேண்டும். இவை ICAO இணைப்புகள் 1, 6, 7, 8, 16 மற்றும் 19 இல் உள்ளடக்கப்பட்டுள்ள பொருத்தமான நோக்கெல்லை தொடர்பானவையாகும்.

இப்பிரிவானது ஒழுங்குவிதிகளில் காலாகால மீளாய்வினை செயலாற்றி, வான்பயணவியல் துறையானது வானூர்தியின் வான்தகைமை தொடர்பான அனைத்து முக்கிய விடயங்களிலும் நேரகாலத்தில் பணிப்புரைகள்/ சுற்றறிக்கைகள் மற்றும் / அல்லது வான்பயணவியல் பாதுகாப்பு அறிவித்தல்கள் அறிவிக்கப்படுவதனை உறுதிசெய்தல்.

மேலும், பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகைமையினை உறுதிசெய்வதிலான முக்கிய நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன, இலங்கைக்கு முதற் தடவையாக வானூர்தி கொண்டுவரப்படும்போது, அதன் ஒப்புதல் மற்றும் பதிவீடு, இலங்கையில் பதிவீடு செய்யப்பட்டுள்ள அனைத்து வானூர்திகளது வான்தகைமையினை மதிப்பீடு செய்து சான்றுகளை வழங்குதல், அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு நிறுவனங்கள் (AMOs), அங்கீகரிப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள் (AMTOs) ஆகியவற்றை மதிப்பீடு செய்து அங்கீகாரத்தினை வழங்குதல் மற்றும் தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ நிறுவனங்களும் (CAMOs) வானூர்திப் பதிவீடு மற்றும் வான்தகைமைப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகாரத்திற்கு மேலாக, குறிப்பிடப்பட்ட செயன்முறைகள், நியமங்கள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் AMOs, AMTOs மற்றும் CAMOs போன்ற அனைத்து செயற்பாட்டாளர்களினால் கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்காக தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இப்பிரிவானது செயற்பாட்டாளரின் செல்வழி நிலையங்களது வசதிகள் மற்றும் இலங்கையில் பதிவீடு செய்யப்பட்டுள்ள வானூர்திகளுக்கு பாரிய கூறுகளது பழுதுபார்த்தல் / பிரித்து சீராக்கல் சேவைகளை வழங்குபவர்களில் பரிசீலனைகளை நடாத்துவதுடன், துறை பூராவும் உயர்ந்த பாதுகாப்ப நியமங்கள் பராமரிக்கப்படுவதற்கான பிரிவின் கடப்பாடானது உத்தரவாதமளிக்கப்படுகின்றது.

மேலாக, இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய தொடர்ச்சியான பணிகளுள் சில பின்வருவனவாகும். வானூர்தி எரிபொருள் பண்ணைகள் மற்றும் எரிபொருள் நிரப்புதல் வசதிகளை சோதனையிடல், திருத்தங்களை (பாரிய/சிறிய) கண்காணித்து அங்கீகாரம் வழங்குதல், வானூர்தி பராமரிப்பு திட்டங்கள் (AMPs), வானூர்தி பராமரிப்பு நிறுவனங்களின் வெளிப்பாடுகள் (MOEs), தொடர்ச்சியான வான்தகைமைப் பராமரிப்பு நிறுவனங்களின வெளிப்பாடுகள் (CAMEs), பராமரிப்பு பயிற்சி நிறுவனங்களின வெளிப்பாடுகள் (MTOEs) என்பவையாகும்.

வானூர்தியின் தேசிய இனம், பதிவீட்டு குறிகள், வான்தகைமை மற்றும் வானூர்தியின் சத்தம் மற்றும் உமிழ்வுகள் தொடர்பான சட்டத் தேவைப்பாடுகளது அமுலாக்கம் மற்றும்/அல்லது வலியுறுத்தல் என்பன இலங்கையிலுள்ள அனைத்து வானூர்திகள் மற்றும் இலங்கையில் பதிவீடளிக்கப்பட்ட வானூர்திகள், அவை எங்கிருந்தாலும், இந்தப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இப்பிரிவானது வானூர்தி பராமரிப்பு உரிமமளித்தல் செயன்முறைக்கும் பங்களிப்பு செய்கின்றது. இவை பின்வருனவற்றை உள்ளடக்குகின்றன. விண்ணப்பங்களை மீளாய்வு செய்தல் மற்றும் வானூர்தி பராமரிப்பு பொறியியலாளர்களுக்கு அடிப்படை பரீட்சைகள் மற்றும் வகை தரப்படுத்தப்பட்ட பரீட்சைகளை நடாத்துவதற்கு அவசியமான வினாப் பத்திரங்களை தயார்செய்தல், வானூர்தி பராமரிப்பு உரிமத்திற்கான விண்ணப்பதாரிகளது பராமரிப்பு அனுபவத்தினை மீளாய்வு செய்தல் என்பனவாகும்.

### பயிற்சி நிறுவன மற்றும் தனிநபர் உரிமளித்தல் பிரிவு

பயிற்சி நிறுவன மற்றும் தனிநபர் உரிமமளித்தல் பிரிவானது (TOPL), சிவில் விமானப்போக்குவரத்து தொடர்பான பாதுகாப்பு உணர்திறனான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பயிற்சி

நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களது சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பிற்கான சட்டவாக்கம், ஒழுங்குவிதிகள் மற்றும் செயன்முறைகளை இற்றைப்படுத்தி விருத்திசெய்வதற்கு பொறுப்பாயுள்ளது. இவை பொருத்தமான சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் பிரகாரமாகும்.

TOPL பிரிவானது, பொருத்தமான சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கமைவாக உள்ளூர் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் பறத்தல், வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் மற்றும் விமானம் அனுப்புபவர்களுக்கான பயிற்சி நிறுவனங்களின் சான்றளிப்பு மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு தொடர்பான அனைத்து பணிகளையும் செயலாற்றுகின்றது. மேலும், இப்பிரிவானது விமானப் பணியாட்கள், வானூர்தி பராமரிப்பு ஆட்கள், வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள், வான்வழிப்போக்கு நிலையச் செயற்பாட்டாளர்கள், விமான செயற்பாட்டு அதிகாரிகள் மற்றும் வானறை பணியாள் அங்கத்தவர்கள் போன்ற நபர்களுக்கான உரிமங்களது வழங்கல், மீள்செல்லுபடியாக்கம் மற்றும் புதுப்பிப்பு என்பவற்றையும் கையாளுகின்றது. விமானப் பணியாள் உரிமங்கள், வானூர்திப் பராமரிப்பு உரிமங்கள் மற்றும் விமானம் அனுப்புபவர் உரிமங்கள் என்பவற்றின் வழங்கலுக்கான அறிவுப் பரீட்சைகளை இப்பிரிவானது நடாத்துகின்றது. இதற்கும் மேலாக, TOPL பிரிவானது தேவையானபோது, ஒரு விபத்து அல்லது ஒரு நிகழ்வினது புலனாய்வில் ஒத்துழைப்பதற்கு அல்லது உதவி செய்வதற்கு அழைக்கப்படலாம்.

## வானூர்திச் செயற்பாட்டுப் பிரிவு

விமானப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் பிரிவின் கீழ் வருகின்ற வானூர்திச் செயற்பாட்டுப் பிரிவானது பின்வரும் பல்வேறு முக்கிய செயற்பாடுகளுக்கு பொறுப்பாயுள்ளது. விமானச் செயற்பாடுகள், தரைச் செயற்பாடுகள் மற்றும் வான் மூலம் ஆபத்தான பொருட்களின் போக்குவரத்து, வானறைப் பாதுகாப்பு மற்றும் ஆளில்லா வானூர்தி முறைமைகள் (UAS) என்பவற்றை உள்ளடக்குகின்றது. இப்பிரிவானது, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்பின் (ICAO), நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) சீரமைவாக உள்ளூர் ஒழுங்குவிதிகளை விருத்திசெய்தல், நியமங்கள், பணிப்புரைகள் மற்றும் செயன்முறைகளை அமுலாக்குதல் என்பவற்றில் முன்னிறுத்தம் செய்கின்றது. இந்த முயற்சிகள் செயற்பாட்டாளர்களின் வினைத்திறனான பாதுகாப்பு மேற்பார்வையினை உறுதிசெய்வதுடன், பின்வரும் செயற்பாட்டு அங்கீகாரங்களது வழங்கல் மற்றும் புதுப்பிப்புகளுக்கு வசதியளிக்கின்றது. இவை பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அமுல்படுத்தப்பட்ட நியமங்கள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டி கையேடுகள் என்பவற்றுக்கு அமைவாகும்;

- வான் செயற்பாட்டாளர் சான்றிதழ் (AOC)
- வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர் சான்றிதழ் (FAOC)
- ஆபத்தான பொருட்கள் அனுமதிப்பத்திரம்
- தரை கையாளுதல் உரிமங்கள்
- உணவகச்சேவை உரிமங்கள்
- தரை துணைச் சேவைகள் அனுமதிப்பத்திரம்
- வானறைப் பணியாள் அங்கத்தவர் சான்றிதழ்கள் (CMC)
- ஆளில்லா வானூர்தி செயற்பாட்டாளர் அங்கீகாரங்கள் (UAS).

## வான்பயணவியல் பாதுகாப்புப் பிரிவு

வான்பயணவியல் பாதுகாப்புப் பிரிவின் பிரதான குறிக்கோள், இலங்கையில் சிவில் விமானப் போக்குவரத்திற்கு பொருத்தமான அதிகாரியான சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகத்தின் (DGCA) சார்பில் நாட்டிலுள்ள சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் வான்பயணவியல் பாதுகாப்பு செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதாகும். அதேவேளை, இப்பிரிவானது தரையில் அல்லது விமானத்தில் சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்படும் தலையீட்டுச் செயல்களுக்கு எதிராக பயணிகள், பணியாட்கள், தரைச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், வானூர்தி மற்றும் வசதிகளது பாதுகாப்பினை உறுதிசெய்கின்றது.

ICAO இன் ஒரு அங்கத்துவ நாடாக, இது நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் (SARPs) பிரகாரம் சர்வதேச, தேசிய மற்றும் விமானநிலைய மட்டங்களில் பல்வேறு மனித மற்றும் பொருண்மையான வளங்களது வழிமுறைகள் மற்றும் வரிசைப்படுத்தல் கலவையினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், இப்பிரிவானது 2024 ஆம் ஆண்டில் அடைந்த பின்வரும் குறிப்பிடத்தக்க சாதனைகளைத் தொடர்ந்து ICAO இணைப்பு 17 - பாதுகாப்பு இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கையில் தேசிய சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்புத் திட்டத்தினை (NCASP) விருத்தி செய்தல், அமுலாக்குதல், பராமரித்தல் மற்றும் மீளாய்வு செய்யும் பொறுப்பும் இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார முறைமைப்படுத்தல் பிரிவு

வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார முறைமைப்படுத்தல் பிரிவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வான் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு முறைமைப்படுத்தல் பிரிவினுள் அதன் நிலையினூடாக நாட்டின் வான்பயணவியல் துறைக்கு சேவையாற்றுகின்றது. ஆளுகைப் பிரிவானது வான் போக்குவரத்தில் கட்டமைப்பு தனிச்சிறப்பு மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை அடைவதில் அதன் அர்ப்பணிப்பினை பராமரிக்கும்வேளை, இணக்கப்பாட்டு முகாமைத்துவம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு வழிமுறைகளுடனான துறைசார் விரிவாக்கத்தினை நிலைநிறுத்துகின்றது.

இப்பிரிவானது அதன் தொலைநோக்கினை ஒரு போட்டித்தன்மையான மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட வான்பயணவியல் துறையாக பலப்படுத்தியதன் காரணமாக, வினைத்திறனான வான் போக்குவரத்து வழங்கல் மற்றும் பொருளாதார விடயங்கள் முறைமைப்படுத்தலில் முன்னிறுத்தமாக 2024 இற்கான மூலோபாய குறிக்கோளினை நிறுவியது. இந்த குறிக்கோளானது, இலங்கையின் வான்பயணவியல் துறையின் அபிவிருத்தியினை மேம்படுத்திய பன்முகமான முறைமைப்படுத்தல் பணிகள் மற்றும் வசதியளித்தல் வழிமுறைகளை நிறைவேற்றுவதற்கு நிறுவனத்தை வழிநடத்தியது. வான் சேவைகள் பேரம்பேசல்கள் மற்றும் உடன்படிக்கைகள் இப்பிரிவின் முதன்மை முன்னிறுத்தமாக காணப்பட்டது, ஏனெனில் இது உலகளாவிய பங்குடைமைகளை பலப்படுத்தும்வேளை இலங்கையின் வான் இணைப்புகளை அதிகரிக்கக்கூடிய இருதரப்பு மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகளை நிறுவுவதற்கு செயலாற்றியது. இந்த உடன்படிக்கைகளினூடாக நிறுவனமானது பயணிகள் அணுக்கத்தை அதிகரித்து வர்த்தக மற்றும் சுற்றுலாத் துறைகளினுள் துறைசார் விரிவாக்கத்தினை வளர்ப்பதற்கு துணைபுரிந்தது.

விமான அட்டவணைகள் இப்பிரிவிலிருந்து அங்கீகாரங்களைப் பெறவேண்டியுள்ளதுடன், விமான நிலைய கொள்திறனை உகப்பாக்குவதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச முறைமைப்படுத்தல் வழிகாட்டல்களுடன் விமான நிறுவனங்கள் அமைவுறுவதனையும் உறுதிசெய்கின்றது. இப்பிரிவானது துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கக்கூடிய விமான நிறுவனங்களது சொந்த தொழில்வல்லுனர்களை பணிக்கமர்த்துவதில் விமான நிறுவனங்களுக்கு துணைபுரிவதற்காக வெளிநாட்டவர் வீசா பரிந்துரைகளை இயலுமையாக்கியது.

# பிரிவுகள் மற்றும் அலகுகளின் கண்ணோட்டம்

இப்பிரிவானது விமான நிறுவனங்களுக்கும் வான் போக்குவரத்து சேவை வழங்குனர்களுக்கும் அவசியமான உரிமமளித்தல் செயற்பாடுகளை நடாத்தியதுடன், இவை அனைத்து செயற்பாட்டாளர்களும் தேவையான பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு மற்றும் பொருளாதார இயலுதிறன் வரன்முறைகளை திருப்திப்படுத்துவதனை உறுதிசெய்கின்றது. இப்பிரிவானது, கடுமையான மேற்பார்வையினை நடாத்துவதனூடாக வான்பயணவியல் நியமங்களைப் பாதுகாத்து ஒரு போட்டித்தன்மையான சந்தையினை ஊக்குவித்து சந்தை ஸ்திரத்தன்மையினை அடைந்தது. நுகர்வோர் பாதுகாப்பானது ஒரு முக்கியமான முன்னுரிமை நிலையாக நிறுத்திவைக்கப்பட்டதுடன், இங்கு நடவடிக்கைகள் வான்பயணவியல் துறையில் சேவை தரத் தேவைப்பாடுகள் மற்றும் நியாய வணிக நியமங்களது வலியுறுத்தலினூடாக பயணிகள் உரிமைகள் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டிருந்தன.

வான் போக்குவரத்து பொருளாதார முறைமைப்படுத்தல் பிரிவானது சர்வதேச நியமங்களின் பிரகாரம் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் இலங்கையின் வான்பயணவியல் துறையின் உயிர்ச்சக்தியினை பராமரிக்கின்றது. அதன் பரந்த முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளிடையே, இப்பிரிவானது வாடிக்கையாளர்களுக்கு நலன் பயக்கும் மற்றும் பொருளாதார இணைப்பு குறிக்கோள்களை மேம்படுத்தும் ஒரு நிலைபேறுடைய வான்பயணவியல் துறையினை உருவாக்குவதற்கு அதன் அர்ப்பணிப்பினை பராமரிக்கின்றது.

## மனித வளங்கள் மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு

மனிதவள மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவானது (HRPM) கடமைகளை நிறைவேற்றுவதற்கு CAASL இல் சரியான நபர்கள் பணிக்கமர்த்தப்படுவதனை உறுதிசெய்கின்றது. மேலும், இது தனிநபர்கள் மற்றும் பணியாட்கள் குழுவினர் CAASL இல் அவர்களை செயற்திறனை வளர்த்து மேம்படுவதற்காக வசதியளிப்பதற்கு மற்றும் ஊக்கப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. இப்பிரிவானது அதிகாரசபையின் ஆதனங்களது முகாமைத்தும் மற்றும் அலுவலக நிர்வாகத்திற்கும் பொறுப்பாளியாகும்.

மீளாய்வாண்டின்போது, HRPM பிரிவானது அதிகாரசபை அதன் மூலோபாய குறிக்கோள்களை அடைவதற்கு திரளான மனித வளக் கொள்கைகளுடன் தொடர்ச்சியாக துணையளித்துள்ளது. பணியாட்கள் விதிகள் மற்றும் நிர்வாகச் செயன்முறைக் கையேடு (SLCAP 5000) வழிகாட்டிகளை நிறுவப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக இக்கொள்கைகள் குறிக்கோள்கள், செயன்முறைகள், தகுதி, வரையறைகள் மற்றும் விலக்களிப்புகள் (ஏதும் இருப்பின்) ஒரு விரிவான விளக்கத்தைக் குறிப்பிடுகின்றது. HRPM பிரிவானது அதிகாரசபையினால் அதன் முன்னுரிமைகளை அடைவதற்காக நிறுவப்பட்ட இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் அடையப்படுவதனை உறுதிசெய்வதில் எந்நேரமும் சமரசமற்ற குரலை பராமரிக்கின்றது.

## நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவு

இப்பிரிவானது பின்வருவனவற்றிற்கு பொறுப்பாயுள்ளது, CAASL/அரசாங்கக் கொள்கைகள், விதிகள் மற்றும் செயன்முறைகளின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட நிதியியல் வளங்களை பயனுறுதியாகவும் வினைத்திறனாகவும் மற்றும் சிக்கனமாகவும் முகாமைப்படுத்தல் மற்றும் இலங்கையின் பொதுவாக எற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ICASL இனால் பிரசுரிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கமைய புத்தகங்களை பராமரித்தல் மற்றும் இவை நிதியியில் கணக்குகளின் மெய்யான மற்றும் நியாயமான நிலையினை வழங்குதல் என்பனவாகும்.

## சூழல், ஆய்வு மற்றும் செயற்திட்டப் பிரிவு

சூழல், ஆய்வு மற்றும் செயற்திட்டப் பிரிவானது சிவில் வான்பயணவியல் துறை, நிலைபேறுடைய வான்பயணவியல் அபிவிருத்தி புள்ளிவிபரத் திட்டங்களின் வினைத்திறனான முகாமைத்துவம், அறிக்கைகளது பிரசுரங்கள், CAASL கொள்முதல் செயன்முறைகள் என்பவை தொடர்பாக ஆய்வினை நடாத்துவதற்கும், CAASL நிகழ்வுகளை நடாத்துவதற்கும், இயற்பியல் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் ICAO இணைப்பு 9 - வசதியளித்தல் மற்றும் தேசிய சிவில் வான்பயணவியல் பெருந்திட்டத்தின் (CAMP) அமுலாக்கம் என்பவற்றுக்கும் பொறுப்பாயுள்ளது.

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) அலகு

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது CAASL இன் செயற்பாடுகளுக்கு துணையளிக்கும் டிஜிட்டல் முதுகெலும்பவினை வழங்குவதுடன், முறைமைகள் பாதகாப்பாகவும், நம்பகமாகவும் மற்றும் அளவிடக்கூடியதாகவும் இருப்பதனை உறுதிசெய்கின்றது. த.தொ. தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத அலகுகளுக்கான பாலமாக சேவையாற்றுதல், தன்னியக்கமாக்கல், தொடர்பாடல் தரவு நம்பகத்தன்மை என்பவற்றுக்கு வளதியளித்தல் என்பவற்றில் சேவையாற்றுகின்றது.

## சட்ட அலுவல்கள் மற்றும் வலியுறுத்தல் அலகு

சட்ட அலுவல்கள் மற்றும் வலியுறுத்தல் பிரிவின் (LA&E) பிரதான குறிக்கோளாகாகக் காணப்படுவது, CAASL இன் சட்டம் மற்றும் வலியுறுத்தல் தொடர்பான பணிகளை சீரமைப்பதாகும். LA&E அலகானது சர்வதேச சிவில் வான்பயணவியல் வழக்கங்களை ஏற்பளித்தல் / சேர்வடைதல், வான்பயணவியல் முதன்மை மற்றும் துணை சட்டவாக்கங்களை மீளாய்வுசெய்தல், இற்றைப்படுத்தல் மற்றும் விருத்திசெய்தல், CAASL இன் வலியுறுத்தல் கொள்கை மற்றும் கொள்திறன் மற்றும் CAASL இன் அக்கறைகள் மற்றும் உரிமங்களை பாதுகாத்தல் என்பவற்றுக்கு பிரதான பொறுப்பாளியாகும்.

## தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (CAASL) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது வான்பயணவியல் சட்டங்களுடன் இணக்கப்பாடு காண்பதை உறுதிசெய்தல், இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பிடுதல், செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துதல், மற்றும் நிதியியல் துல்லியத்தன்மை மற்றும் பாதுகாப்பு நியமங்களில் உறுதிமொழி வழங்குதல் போன்றவற்றை மேற்கொள்கின்றது. அத்துடன் அது முகாமைத்துவத்திற்கு ஆலோசனை வழங்குதல், முறைகேடுகளை புலனாய்வு செய்தல் மற்றும் ஆளுகை மற்றும் பொறுப்புக் கூறலில் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கு துணையளித்தல் என்பவற்றையும் மேற்கொள்கின்றது.

## வான்பயணவியல் பாதுகாப்பு கண்காணித்தல் அலகு

வான்பயணவியல் பாதுகாப்பு மற்றும் கண்காணித்தல் அலகானது வானூர்தி விபத்து மற்றும் சம்பவ புலனாய்வுகள் தொடர்பாக அரசாங்கத்தின் கடப்பாடுகளை உறுதிசெய்வதற்கும் பொறுப்பாளியாயுள்ளதுடன், ICAO இணைப்பு 13 மற்றும் 19 இல் உள்ளடக்கப்பட்டுள்ள சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக அரச பாதுகாப்பு திட்டங்கள் (SSP) அமுலாக்குவதற்கும் பொறுப்பாளியாயுள்ளதுடன் நாட்டினுள் ஆளில்லா வான் கலங்களின் செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்கும் பொறுப்பாளியாயுள்ளது.

### சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்பு மற்றும் ஊடக அலகு

நேரடி முகாமைத்துவத்தின் கீழ் வருகின்ற சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்பு அலகானது இலங்கையில் வான்பயணவியல் கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. இது நாட்டின் இளம் சந்ததி உள்ளடங்கலான பொது மக்களிடையே வான்பயணவியல் அறிவினை மேம்படுத்துவதன் மூலம், வான்பயணவியல் தொடர்பான நடைமுறை மற்றும் மிகவும் நம்பகத்தன்மையான செய்திகளை சமூகத்திற்கு தெரிவித்தல் மற்றும் அதன் நடவடிக்கைகளை CAASL இன் இலத்திரணியல், அச்சு ஊடகம், மற்றும் சமூக ஊடக மேடைகளூடாக ஊக்குவிப்பதுமாகும்.


### வான்மருத்துவ சேவைகள் அலகு


வான்மருத்துவ சேவைப் பிரிவானது, CAASL இன் உரிமம் வைத்திருப்பவர்களின் மருத்துவ மதிப்பீட்டிற்கான வசதிகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பிற முக்கிய சிறப்புத் துறைகளான வான்மருத்துவப் பயிற்சி, ஆய்வு, பணியாட்கள் மற்றும் பிற பங்காளிகளிடையே வான்மருத்துவ விழிப்புணர்வை உருவாக்குதல், நுழைவுப் பகுதிகளில் பொது சுகாதார சேவைகள், கண்காணிப்பு நடவடிக்கைகள், CAASL இன் மற்றும் பொருத்தமான பங்காளிகளது ஏனைய பிரிவுகளுக்கு வசதியளித்தல் நடவடிக்கைகள் மற்றும் CAASL இன் வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாட்களின் நல்வாழ்வினை உறுதிசெய்தல் என்பவற்றையும் வழங்குகின்றது. மேலும், வான்மருத்துவ சேவைகள் அலகானது அரசாங்கம் மற்றும் வான்பயணவியல் துறைக்கு வான்வெளி பாதுகாப்புத் தீர்வுகள் மற்றும் பொது சுகாதார பாதுகாப்பு தீர்வுகள் என்பவற்றை தொடர்ந்தும் வழங்குகின்றது. வான்மருத்துவ சேவைகள் அலகின் நடவடிக்கைகளின் அனைத்து அம்சங்களும் பிரதானமாக வான்வெளி பாதுகாப்பினை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டதாகும்.

### தொழில்நுட்ப நூலக அலகு

CAASL இன் பிரிவுகளுக்கு துணையளிப்பதனூடாக நடைமுறையிலுள்ள ஆவணப்படுத்தல் கட்டமைப்பினை பலப்படுத்துவது தொழில்நுட்ப நூலகப் பிரிவின் முக்கிய குறிக்கோளாகும். இது பிரிவுகளின் முறைமைப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் கையேடுகளை இற்றைப்படுத்துதல் மற்றும் CAALS இனுள் மற்றும் உள்ளூர் வான்பயணவியல் துறையினுள் ICAO மற்றும் ஏனைய பிரசுரங்களது வினைத்திறனான பரப்புதலூடாக CAASL இன் குறிக்கோள்களுக்கு துணையளிக்கின்றது. இவ்வலகானது வான்பயணவியல் துறை மற்றும் பொது மக்களுக்கு முக்கிய தகவல்களை வழங்குவதற்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளதுடன், இது நேரகாலத்துடனான இணையத்தள உள்ளடக்கங்களின் இற்றைப்படுத்தல் மற்றும் 2016 இன் 16 ஆம் இலக்க RTI சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு CAASL இற்கு அனுப்பப்படும் தகவல் அறிந்துகொள்வதற்கான உரிமை வினாக்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குகின்றது

# செயற்பாட்டு நிறுவன கட்டமைப்பு - முகாமைத்துவப் பணியாட்கள்






SCAI – சிரேஷ்ட சிவில் விமானப்போக்குவரத்து பரீட்சகர்
Mgr. – முகாமையாளர்
CAI – சிவில் விமானப்போக்குவரத்து பரீட்சகர்
AM - உதவி முகாமையாளர்

Rev 03 – 09/07/2023

# CAASL இன் ஆளுகையும் பொறுப்புக்கூறலும்

## அதிகாரசபையின் குழுக்கள்

### பணியாட்டொகுதிக் குழு

**நோக்கம்:**

CAASL இனுள் மனித வளங்கள், நிறுவன அபிவிருத்தி மற்றும் பணியாட்கள் நலன் தொடர்பான விடயங்களை மேற்பார்வை செய்வதற்கு பணியாட்டொகுதிக் குழு பொறுப்பாளியாகும்.

**தொகுப்பு :**

இக்குழுவானது திரு. G.S. விதானகே அவர்களால் தலைமை தாங்கப்படுவதுடன், (AVM) H.M.S.K.B. கொட்டகதெனிய (Retd.) மற்றும் திரு. D.W.S. நாரங்கொட ஆகியோர் அங்கத்தவர்களாக சேவையாற்றுகின்றார்கள்.

இவர்களது நியமனம் 27 செப்டம்பர் 2024 முதல் அமுலுக்குவந்தது.

**பொறுப்புக்கள் :**

பணியாட்டொகுதியின் பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: பணிச்சேனையின் சம்பளங்களை தீர்மானித்தல், பணியாட்கள் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு, ஒழுக்காற்று நடைமுறைகளை விருத்திசெய்தல், பயிற்சித் திட்டங்களை கண்காணித்தல், பணியாட்களுக்கு வெளிநாட்டு பயிற்சி மற்றும் கல்வி உதவித்தொகைகளை அங்கீகரித்தல் மற்றும் CAASL இன் பணியாட்களுக்கு சமூக மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களை விருத்திசெய்தல் என்பனவாகும்.

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

**நோக்கம்:**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு CAALS இனுள் நிதியியல் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள், மற்றும் கணக்காய்வுச் செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**தொகுப்பு :**

இக்குழுவானது திரு. A.K. செனவிரத்ன அவர்களால் தலைமை தாங்கப்படுவதுடன், கெப்டன். மிலிந்த ரத்நாயக்க மற்றும் திரு. மங்கள விஜேசிங்க ஆகியோர் அங்கத்தவர்களாக சேவையாற்றுகின்றார்கள்.

இவர்களது நியமனம் 27 செப்டம்பர் 2024 முதல் அமுலுக்கு வந்தது.

**பொறுப்புக்கள் :**

இக்குழுவின் பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மீளாய்வு செய்தல், செலவுச் சிக்கனத்தை உறுதிசெய்வதற்காக செயற்திறனை மதிப்பீடு செய்தல், வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் தொடர்புகொள்ளல், இணக்கப்பாட்டிற்காக நிதிக் கூற்றுக்களை மீளாய்வுசெய்தல், கணக்காய்வு அறிக்கைகளிலுள்ள பரிந்துரைகளை அமுலாக்குதல் மற்றும் ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்காக அறிக்கைகளை தயாரித்தல் என்பனவாகும்.

### திட்டமிடல் குழு

**நோக்கம்:**

திட்டமிடல் குழுவானது மூலோபாயத் திட்டமிடல், கொள்கை அபிவிருத்தி மற்றும் இலங்கையில் சிவில் விமானப் போக்குவரத்து திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை கண்காணித்தல் என்பவற்றில் முன்னிறுத்தம் செய்கின்றது.

**தொகுப்பு :**

இக்குழுவானது (AVM) H.M.S.K.B. கொட்டகதெனிய (Retd.) அவர்களால் தலைமை தாங்கப்படுவதுடன், கெப்டன் மிலிந்த ரத்நாயக்க மற்றும் திரு. மங்கள விஜேசிங்க ஆகியோர் அங்கத்தவர்களாக சேவையாற்றுகின்றார்கள்.
இவர்களது நியமனம் 27 செப்டம்பர் 2024 முதல் அமுலுக்கு வந்தது.

**பொறுப்புக்கள் :**

திட்டமிடல் குழுவானது பின்வருவனவற்றிற்கு பொறுப்பாயுள்ளது: தேசிய சிவில் விமானப்போக்குவரத்து திட்டம் மற்றும் அபிவிருத்தித் திட்டத்தை விருத்திசெய்தல், சிவில் விமானப்போக்குவரத்து தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்தல், வான் பயணவியல் பாதுகாப்பு மற்றும் வான் போக்குவரத்து வசதியளித்தல் திட்டங்களது அமுலாக்கத்தினை கண்காணித்தல், சிவில்-இராணுவ நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், வான் சேவைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் வான்வழிச் சேவை வழங்குனர்களை கண்காணித்தல் என்பனவாகும்.

### அதிகாரசபையின் பங்கு

அதிகாரசபையின் பிரதான பங்கு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது, ஆனால் இவற்றுக்கு மாத்திரம் வரையறை செய்யப்படவில்லை.

- சிவில் விமானப் போக்குவரத்து தலைப்பிற்கு பொறுப்பாயுள்ள மான்புமிகு அமைச்சர் மற்றும் ஏனைய அரசாங்கப் பங்காளிகளுடன், நாட்டின் சிவில் விமானப்போக்குவரத்துத் துறையின் திட்டமிடலில் அவர்களது கருத்துக்கள் பிரதிபலிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்காக தொடர்புகொள்ளுதல்.

- சிவில் விமானப்போக்குவரத்து துறையில் கொள்கைகள் மற்றும் குறிக்கோள்களை நிறுவுதல் மற்றும் CAASL இன் குறிக்கோள்களை அடைதல் நோக்கி நிறுவனத்தின் செயற்திறனை கண்காணித்தல் மற்றும் பொருத்தமானவாறு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் அரசாங்கத்தின் குறிக்கோள்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்காக CAASL இன் பெருநிறுவனத் திட்டங்களை இற்றைப்படுத்துதல்.

- CAASL இன் பதவிவழி பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிவில் விமானப் போக்கவரத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களது குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்கான பொறுப்பினை பகிர்ந்தளித்தல்.

- CAASL இன் செயற்பாடுகள் மற்றும் கடமைகளை செயலாற்றக்கூடிய தகைமை மற்றும் திறனுடைய ஆளணியினரை பணிக்கமர்த்தி வேதனம் உள்ளடங்கலான அவர்களது நியதிகள் மற்றும் நிபந்தனைகளை தீர்மானித்தல்.

- சிவில் விமானப் போக்குவரத்து தலைப்பிற்கு பொறுப்பான மான்புமிகு அமைச்சருக்கு CAASL இன் பெருநிறுவனத் திட்டத்தின் அமுலாக்கல் நோக்கிய திட்டங்கள் மற்றும் முன்னேற்றத்திற்கு பொறுப்புக்கூறல்.

### சபையின் அங்கத்தவர்கள்

2002 இன் 34 ஆம் இலக்க CAASL சட்டத்தின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து மான்புமிகு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் சபைக்கான அங்கத்தவர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

### பணிப்பாளர்கள் சபையும் ஆளுகையும்

CAASL இன் பணிப்பாளர்கள் சபையானது வணிகம், நிர்வாகம், நிதி, சட்டம் மற்றும் வான்பயணவில் துறையில் விரிவான அனுபவமுடைய தொழில்வல்லுனர்களை உள்ளடக்குகின்றது. இந்த திறன்களின் கலவையானது சிவில் வான்பயணவியல் தொடர்பான கொள்கை சிக்கல்களுக்கான ஒரு விரிவான அணுகுமுறையினை உறுதிசெய்கின்றது.

நியமிக்கப்பட்டதன் பின்னர் சபையின் அங்கத்தவர்கள் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார்கள். இங்கு கூட்டு தீர்மானம் மேற்கொள்வதன் முக்கியத்துவமும் சபைக்கு வெளியே தனிப்பட்ட அங்கத்தவர்கள் சுயாதீன ஆளுகை அதிகாரத்தை கொண்டிருப்பதில்லை என்பவை வலியுறுத்தப்படுகின்றன.

வினைத்திறனான கொள்கைகள் மற்றும் செயன்முறைகளது அமுலாக்கத்தினூடாக CAASL இன் குறிக்கோள்களை அடைவதற்கு அவசியமான அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் அதிகாரசபையானது பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு வலுவளிக்கின்றது. வருடத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட மூலோபாயத் திசையானது மூன்றாண்டு பெருநிறுவனத் திட்டத்தில் தெளிவாக்கப்படுவதுடன், இது வருடாந்த செயற்திட்டம், பயிற்சித் திட்டம், கொள்முதல் திட்டம், பாதீட்டுத் திட்டம் மற்றும் கணக்காய்வுத் திட்டம் என்பவற்றினூடாக கண்காணிக்கப்படுகின்றது. நடைமுறையிலுள்ள ஏற்பாடுகளில் உள்ளடக்கப்படாத விடயங்களுக்கான சபையின் தீர்மானங்களினூடாக பி.நி.அ. இக்கு அதிகாரசபை பணிப்புரைகளையும் வழங்குகின்றது. இந்த தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு பி.நி.அ. பொறுப்பாயுள்ளார்.

### அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரங்கள்

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் அமைச்சரவை அமைச்சர்கள் சிவில் விமானப்போக்குவரத்திற்கான பணிப்பாளர் நாயகத்தினை நியமிப்பதற்கு பொறுப்பாயுள்ளார்கள். இவர் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியினையும் வகிக்கின்றார். பணிப்பாளர்கள் நாயகத்தின் பணிக்கமர்த்தலுக்கான நியதிகளும் நிபந்தனைகளும் அமைச்சரவை அமைச்சர்களினால் நிறுவப்படுகின்றன. இந்தப் பதவியில், பணிப்பாளர் நாயகம் அவர்கள் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான எழுத்துமூலச் சட்டத்தினால் குறிப்பிட்டுள்ளவாறான அனைத்து கடமைகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பணிக்கப்பட்டுள்ளார். இது அதிகாரசபையின் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தினை உள்ளடக்குகின்றது.

சட்டத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் நாயகம் சுயாதீனமாக சட்டரீதியான செயற்பாடுகளை செயலாற்றுவதற்கான அவசியத்தினை அதிகாரசபை ஏற்றுக்கொள்கின்றது. இருந்தபோதிலும், இந்த கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றும்வேளை, பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு CAASL இன் வளங்களைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய பயன்பாடானது அங்கீகரிக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் வழிகாட்டிகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும். இந்த ஏற்பாடானது பணிப்பாளர் நாயகம் அவர்கள் அதிகாரசபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக முகாமைப்படுத்தக்கூடிய வேளை சட்டரீதியான தேவைப்பாடுகள் மற்றும் நிலைநாட்டப்பட்ட நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதனையும் உறுதிசெய்கின்றது.

### பங்காளிகளுடனான உறவுமுறை

அதிகாரசபையானது அதன் பங்காளிகளுடன் தொடர்ச்சியான மற்றும் முன்முயற்சியான ஈடுபாட்டினை பராமரிப்பதற்கான அதன் முக்கிய பொறுப்பினை இனங்கண்டுள்ளது. இந்தக் கடப்பாடானது சிவில் விமானப் போக்குவரத்திற்கு பொறுப்பான மான்புமிகு அமைச்சரினால் நிறுவப்பட்டுள்ள மூலோபாய இலக்குகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாகளுடன் சீரமைவாக இருப்பதனை உறுதிசெய்கின்றது.

### அதிகாரசபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பொறுப்பு

சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வினைத்திறனான செயற்பாடுகளுக்கான முக்கிய காரணியாக அதிகாரசபையின் பங்கிற்கும் பி.நி.அ. இனால் தலைமை தாங்கப்படும் முகாமைத்துவத்திற்கும் இடையே தெளிவான எல்லை நிர்ணயம் காணப்படுவதாகும்.

அதிகாரசபையானது உயர் மட்டத்திலான கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை நிறுவுவதில் கவனஞ்செலுத்துவதுடன், குறிக்கோள்கள் சந்திக்கப்படுதல் நோக்கிய முன்னேற்றங்களை கண்காணிக்கின்றது. மேலும் அதன் நடைமுறை கொள்கைகள், செயன்முறைகள் அல்லது நெறிமுறைகளில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் காணப்படாத விடயங்களில் வழிமுறைகளை வழங்குகின்றது.

பிரதம நிறைவேற்று அதிகாரியினால் தலைமை தாங்கப்படும் சிரேஷ்ட முகாமைத்துவமானது இந்த உயர் மட்ட கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை அமுலாக்குவதற்கு பொறுப்பாயுள்ளது.

2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து சட்டத்தின் கீழ் அல்லது ஏனைய எழுத்துமூல சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட

# CAASL இன் ஆளுகையும் பொறுப்புக்கூறலும்

வான் வழிச்செல்லல் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகத்தில் விசேடமாக ஒப்படைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட முறைமைப்படுத்தல் கடப்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்பிலிருந்து அதிகார சபை விலகியிருப்பதுடன் அதில் பங்கேற்காது.

எவ்வாறாயினும், அதிகாரசபையானது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்ற ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறை செய்யாத, அவசியமான அனைத்து வளங்கள் மற்றும் உறுதுணையினை வழங்கும். உபகரணங்கள், சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அவர்மேல் மற்றும் அரசாங்கத்தின் மேல் ஒப்படைக்கப்பட்ட முறைமைப்படுத்தல் கடப்பாடுகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றத் தேவையான வசதிகள் மற்றும் சேவைகள்.

சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் CAASL இன் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் சுருக்கமாகவும் பூரணமாகவும் இருப்பதனை உறுதிசெய்வதன் மூலம் அதிகாரசபையானது அந்தப் பதவிகளை தெளிவாக எடுத்துகாட்டுகின்றது.

## பொறுப்புக்கூறல்

அதிகாரசபை மற்றும் அதன் குழுக்கள் அதன் மூலோபாய குறிக்கோள்கள் நோக்கிய முன்னேற்றத்தினை கண்காணிப்பதற்காக அடிக்கடி கூட்டங்களை நடாத்துகின்றது. இது சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அலுவல்கள் அதன் பெருநிறுவனத் திட்டத்தில் குறிப்பிடப்படப்பட்டுள்ள அதிகாரசபையின் கொள்கைகள், மூலோபாயத் திசைகள் மற்றும் எதிர்பார்ப்புகளின் பிரகாரம் முகாமைப்படுத்தப்படல், நடாத்தப்படல், கணக்கிலெடுத்துக்கொள்ளப்படுதல் மற்றும் கண்காணிக்கப்படல் என்பவற்றை உறுதிசெய்வதற்காகும்.

## முரண்பாட்டு அக்கறை

அதிகாரசபையானது ஒரு அக்கறை இடாப்பினை பராமரிப்பதுடன் அதிகாரசபையின் அங்கத்தவர்கள் அக்கறைகளை பிரகடனப்படுத்துவதற்கான அவர்களது கடப்பாடுகள் குறித்து விழிப்புணர்வினை கொண்டிருப்பதனை உறுதிசெய்கின்றது. இந்த அணுகுமுறையானது CAASL சபையின் அங்கத்தவர்கள் மற்றும் அனைத்து பணியாட்களுக்காகவும் பராமரிக்கப்படுகின்ற முரண்பாட்டு அக்கறை இடாப்பின் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றது.

## தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு


அதிகாரசபையின் பல செயற்பாடுகள் மற்றும் கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்வேளை, நிறுவனத்தின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையில் பயனுறுதியான முறைமைகள் பராமரிப்பதற்காக ஒட்டுமொத்த இறுதிப் பொறுப்பானது அதிகாரசபையுடன் உள்ளது.

அதிகாரசபையின் குறிப்பிட்ட குறிக்கோள்கள் அடையப்படுவதனை உறுதிசெய்வதற்காக நிறுவப்பட்டுள்ள கொள்கை முறைமைகள் மற்றும் செயன்முறைகளை உள்ளகக் கட்டுப்பாடுகள் உள்ளடக்குகின்றன. அதிகாரசபையும் சிரேஷ்ட முகாமைத்துவமும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் கூற்றில் கையொப்பமிட்டதன் மூலம் அவர்களது பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றன.

CAASL இன் ஒவ்வொரு பிரிவிலும் உள்ளகக் கட்டுப்பாடுகளது விரிவான நுண்ணாய்வு மற்றும் கண்காணித்தல் முறைமைகளுக்கு பொறுப்பான தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு பிரிவினை அதிகாரசபை கொண்டுள்ளது. தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது CAASL இனால் வழங்கப்படுகின்ற ஒட்டுமொத்த கடமைகள், செயற்பாடுகள் மற்றும் சேவைகளின் தரத்தை பராமரிப்பதற்கு பொறுப்பாளியாயுள்ளதுடன், நிறுவப்பட்டுள்ள நெறிமுறைகளின் பிரகாரம் அதிகாரசபையின் தலைவர் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு நேரடியாக அறிக்கையிடப்படும் நிதியியல் மற்றும் ஏனைய தகவல்களின் நம்பகத்தன்மைக்கு பொறுப்பாளியாயுள்ளது.

உள்ளகக் கணக்காய்வானது சிரேஷ்ட முகாமைத்துவத்திலிருந்து சுயாதீனமான செயற்படுவதுடன், நிறுவப்பட்டுள்ள நெறிமுறையின் பிரகாரம் அதன் கண்டுபிடிப்புகளை நேரடியாக CAASL இன் பி.நி.அ. ஆகவும் செயலாற்றுகின்ற CAASL இன் பணிப்பாளர் நாயகத்திற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கும் அறிக்கையிடுகின்றது.

### ஆண்டின்போது செயலாற்றப்பட்ட தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்




## சட்ட இணக்கப்பாடு

நிறுவனம் அனைத்து சட்டங்களுடனும் இணங்குவதை உறுதிசெய்வதற்கு அதிகாரசபை அதன் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றது. அதிகாரசபையானது முறையான இணக்கப்பாட்டு சிக்கல்களை இனங்காண்பதற்கு ஒரு திட்டத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டிற்கான பொறுப்பினை சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு ஒப்படைத்துள்ளதுடன், அனைத்து பணியாட்களும் குறிப்பாக அவர்களுக்கு பொருத்தமான சட்டத் தேவைப்பாடுகள் குறித்து அறிந்திருப்பதனையும் உறுதிசெய்கின்றது.

ஒவ்வொரு விடயத்தின் அடிப்படையில் அதிகாரசபைக்கு அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பொது அல்லது குறிப்பிட்ட சுற்றறிக்கைகள் மற்றும் / அல்லது பணிப்புரைகளின் பிரயோகத்தில் அதிகாரசபையானது தீர்மானம் மேற்கொள்கின்றது. எனவே, ஒரு அரசாங்கத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஒவ்வொரு சுற்றறிக்கையும் பின்வருவன காணப்பட்டாலொழிய CAASL இன் முகாமைப்படுத்தலில் தானாகவே பிரயோகிக்கப்படமாட்டாது, அதிகாரசபையின் சட்டரீதியான அதிகாரங்கள், செயற்பாடுகள், கடமைகளில் வினைத்திறனான செயற்பாடு மற்றும் நிறைவேற்றலில் அத்தகைய சுற்றறிக்கைகளது உள்ளடக்கத்தின் விளைவினை அதிகாரசபை பரிசோதனை செய்து அத்தகைய பிரயோகங்களின் தன்மை மற்றும் நோக்கத்தினைத் தீர்மானிக்கும்.

CAASL இன் பெருநிறுவன அலுவல்கள் மற்றும் பொருளாதார முறைமைப்படுத்தல் பிரிவானது, CAASL இன் செயற்பாட்டிற்கு அரசாங்க சுற்றறிக்கைகளின் பிரயோகத்தினை நீடித்தல் தொடர்பாக ஒரு இற்றைப்படுத்தப்பட்ட ஒத்திசைவுப் பட்டியலைப் பராமரிப்பதற்கு பொறுப்பாளியாகும்.

## இவ்வாண்டின்போது செயலாற்றப்பட்ட சட்ட அலுவல்கள் மற்றும் வலியுறுத்தல் நடவடிக்கைகள்

### முதன்மை வான்பயணவியல் சட்டங்கள்

2024 ஆம் ஆண்டின்போது LA&E அலகானது சட்ட வரைஞர் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு (4) வரைவுச் சட்ட மூலங்களை மீளாய்வு செய்யக்கூடியதாய் இருந்தது.

- மொபைல் உபகரணச் சட்டமூலத்தில் (கேப் டவுன் மாநாடு) சர்வதேச அக்கறைகள்
- சர்வதேச சிவில் வான்போக்குவரத்து சட்டமூலம் தொடர்பான சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளை ஒடுக்குதல்
- வானூர்திகளுக்கு எதிரான தவறுகள் (திருத்தச்) சட்டமூலம்
- வானூர்தி விபத்து புலனாய்வுப் பணியகச் சட்டமூலம்

மேற்குறிப்பிட்ட சட்டமூலங்கள் சட்டமயமாக்கப்பட்டதன் பின்னர், இலங்கை பின்வரும் சர்வதேச சிவில் வான்பயணவியல் வழக்கமுறைகள் மற்றும் நெறிமுறைகளுக்கு ஒரு அரச தரப்பாக கருதப்படுவதுடன், சர்வதேச சிவில் வான்பயணவியலில் வழக்கமுறையின் இணைப்பு 13 உடன் இணக்கப்பாடு காணுதல் வேண்டும்;

1. சர்வதேச சிவில் வான்பயணவியல் தொடர்பான சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளின் ஒடுக்கத்தின் வழக்கமுறை (பீஜிங் மாநாடு 2010)
2. வானூர்தி உபகரணம் தொடர்பான மொபைல் உபகரணங்களில் சர்வதேச அக்கறைகளிலான கேப்டவுன் மாநாடு மற்றும் மொபைல் உபகரணங்களில் சர்வதேச அக்கறைகளிலான கேப்டவுன் மாநாட்டிற்கான நெறிமுறை - 2001
3. வானூர்தியுள்ளான தவறுகள் மற்றும் சில செயற்பாடுகளில் வழக்கமுறைகளை திருத்துவதற்கான ஒழுங்குமுறை (மொன்ரியல் ஒழுங்குமுறை 2014)
4. இலங்கையில் ஒரு வானூர்தி விபத்து மற்றும் சம்பவ புலனாய்வுப் பணியகத்தினை நிறுவுவதற்கு சர்வதேச சிவில் வான்பயணவியலில் வழக்கமுறைகளுக்கான இணைப்பு 13

### துணை வான்பயணவியல் சட்டங்கள்

LA&E அலகானது ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலான இருபத்து நான்கு (24) துணை சட்டங்களை மீளாய்வு செய்யக்கூடியதாகவும், CAASL இனால் வழங்கப்படவுள்ள நியமங்கள், பணிப்புரைகள், வழிகாட்டல்களது அமுலாக்கலையும் மீளாய்வு செய்யக் கூடியதாயிருந்தது.

- 2018 இன் 29 ஆம் இலக்க வான்மூலம் சுமை கொண்டுசெல்லல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கட்டளை (27.12.2024 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமான இலக்கம் 2416/13) இக்கட்டளையானது வான்மூலம் கொண்டுசெல்லப்படும் சர்வதேச சுமை தொடர்பான பொறுப்பு வரையறைகளை திருத்துவதற்காக வழங்கப்பட்டதாகும்.

### ஒழுக்கவியல்

ஒரு ஒழுக்கவியல் கோவையினை விருத்திசெய்துள்ள அதிகாரசபையானது அனைத்து பணியாட்களும் ஒழுக்கவியல் நடத்தையில் உயர்ந்த நியமங்களைப் பராமரிக்கின்றார்களா மற்றும் 'சிறந்த பெருநிறுவன ஆளுகைக் கொள்கைகளை' கடைப்பிடிக்கின்றார்களா என்பதை வழக்கமாக கண்காணிக்கின்றது. ஒழுக்கவியல் நியமங்களுடனான இணக்கப்பாட்டின் கண்காணிப்பானது பின்வருவற்றினூடாக அமுலாக்கப்படுகின்றது. முறைப்பாடுகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளிலான போக்குகள், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் அல்லது ஒழுக்கவியல் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கைகளுடன் இணக்கப்பாடின்மையினை காட்டும் ஏனைய அறிக்கைகள் அல்லது குறிகாட்டிகள் போன்றவற்றை கண்காணிக்கின்றது.

சிறந்த பெருநிறுவன குடியுரிமையானது அதிகாரசபை அதன் பணியாட்கள் உள்ளடங்கலாக பின்வருவனவற்றை ஏற்றுக்கொள்வதனை உள்ளடக்குகின்றது. அதற்கு வெளியே மற்றும் அது மேற்பார்வை செய்யும் துறைக்கு வெளியே உள்ள பல சமூகங்களில் அது ஒரு அங்கத்தவர், மற்றும் அந்த சமூகங்களின் அனைத்து பிரஜைகளதும் ஒழுக்கம் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புக்களுடன் வெளிப்படையான, சீரான, சுயாதீனமான மற்றும் பொறுப்பான விதத்தில் செயற்படுவதற்கான ஒரு கடப்பாட்டினை மேற்கொள்ளுதல் என்பனவாகும்.




# அறை ஏற்பிலிருந்து புறப்பாடு வரை

# செயற்பாட்டுச் சிறம்பம்சங்கள்

## பாதுகாப்பினை பலப்படுத்துதல்

2024 ஆம் ஆண்டானது வான்பயணவியல் துறைக்கு ஒரு முக்கியமான காலமாகும், இதன்போது பாதுகாப்பு, முறைமைப்படுத்தல் மேற்பார்வை மற்றும் மருத்துவ மீளெழுச்சி என்பவற்றை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. ஒரு வலுவான பாதுகாப்பு கலாச்சாரத்தினை வளர்த்தல் மற்றும் வான்பயணவியல் ஆளணியினரின் பௌதீக மற்றும் உளரீதியான நல்வாழ்விற்கு முன்னுரிமையளிப்பதில் முன்னிறுத்தம் செய்யும் உலகளாவிய வான்பயணவியல் துறைக்கு சீரமைவாக, இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) அதன் மருத்துவப் பிரிவினுள் (AMS) ஒரு தொடரான மூலோபாய முன்னெடுப்புகள் சாதனைகளூடாக முன்மாதிரியான தலைமைத்துவத்தினை வெளிக்காட்டியது.

இந்த மைல்கற்கள் வான்பயணவியல் மருத்துவத்திற்கான உள்ளூர் கட்டமைப்பினை பலப்படுத்தியது மாத்திரமன்றி சர்தேச அரங்கில் இலங்கையின் நிலையினை உயர்த்தியது. 2024 இல் பொறுப்பேற்கப்பட்ட பணியானது வான்பயணவியல் ஆரோக்கியம், மற்றும் முறைமைப்படுத்தல் தனிச்சிறப்பிற்கான ஒரு முன்னோக்கிய, ஒத்துழைப்பான அணுகுமுறையினைப் பிரதிபலித்ததுடன், வளர்ந்துவரும் உலகளாவிய கேள்விகளுக்கு கடுமையான மற்றும் பதிலளிக்கும் விதமாக மருத்துவ மேற்பார்வை காணப்படுவதை உறுதிசெய்கின்றது.

### செயற்பாடுகள் பிரிவு

இலங்கை சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரசபையின் வானூர்திப் பிரிவானது 2024 இல் பல்வேறு முறைமைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு களங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. இது இலங்கையின் வான்பயணவியல் நிலத்தோற்றத்தில் பாதுகாப்பு, இணக்கப்பாடு மற்றும் வினைத்திறனில் உயர்ந்த நியமங்களை உறுதிசெய்வதற்கான அதன் கடப்பாட்டினை வலியுறுத்தியது. எதிர்கால முன்னிறுத்தத்துடனான அணுகுமுறையுடன் இப்பிரிவானது சர்வதேச அளவுகோல்களுடன் அதன் சீரமைவினை மேம்படுத்தியது மாத்திரமன்றி, ஆளில்லா வான்பயணவியல் மற்றும் ஆபத்தான பொருட்களின் போக்குவரத்து உள்ளடங்கலான வான் செயற்பாடுகளின் பாரம்பரிய மற்றும் வளர்ந்துவருகின்ற பிரிவுகளின் மேற்பார்வையினை பலப்படுத்தியது.

### ஐரோப்பிய யூனியன் வான்பயணவியல் பாதுகாப்பு முகவரமைப்பின் (EASA) நியமங்களுக்கு சீரமைவாக செயற்பாடுகள் ஒழுங்குவிதிகளை விருத்திசெய்தல்

இவ்வாண்டிற்கான மிகவும் குறிப்பிடத்தக்க மைல்கற்களாக ஐரோப்பிய யூனியன் வான்பயணவியல் பாதுகாப்பு முகவரமைப்பின் (EASA) செயற்பாட்டு விதிகளுடன் சீரமைவாக செயற்பாட்டு ஒழுங்குவிதிகளின் தொடர்ச்சியான அபிவிருத்தியாகும். 2024 இன் இறுதியில், கட்டமைப்பு அபிவிருத்தியின் 90% அண்ணளவாக நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், இது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளுடன் இலங்கையின் முறைமைப்படுத்தல் சூழலை ஒத்திசைவாக்குதல் நோக்கிய ஒரு பாரிய செயற்பாடாகும்.

EASA கொள்கைகளுடனான இந்த சீரமைப்பானது ஒரு இடர் அடிப்படையிலான முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை நிறுவுவதற்கு துணையளிப்பதுடன், துறையானது சிறந்த முன்கணிப்புத்தன்மை, பாதுகாப்பு உறுதிமொழி மற்றும் செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மையுடன் செயலாற்றுவதனை இயலுமையாக்குகின்றது. இந்த முன்னெடுப்பானது இலங்கையின் வான்பயணயவில் முறைமைப்படுத்தல் நியமங்களை உலகத்துக்கு ஒத்ததாக உயர்த்தும் CAASL இன் நீண்டகால மூலோபாயத்தின் மூலைக்கல்லாகும்.

### வான் செயற்பாட்டாளர் சான்றளிப்பு மற்றும் மேற்பார்வை

#### வான் செயற்பாட்டாளர் சான்றளித்தல் செயன்முறைகளின் ஆரம்பம்

2024 இல், CAASL இரண்டு வான் செயற்பாட்டாளர் விண்ணப்பதாரிகளுக்கான சான்றளித்தல் செயன்முறைகளை ஆரம்பித்தது:

- **எயார் சய்லாவ** (Air Ceilao) – அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச வான் போக்குவரத்திற்காக A 320 வானூர்தியினை செயற்படுத்துவதற்கு எண்ணியுள்ள ஒரு சாத்தியமான சர்வசே விமான நிறுவனமாகும்.
- ஹவுரா ஏவியேசன் (Aura Aviation) – இலங்கையினுள் உலங்குவானூர்தி அடிப்படையிலான சேவைகளை முன்மொழியும் ஒரு உள்ளூர் செயற்பாட்டளராகும்.

இந்த அபிவிருத்திகள் தேசிய வான்பயணவியல் சந்தையின் தொடர்ச்சியான வளர்ச்சியினை எடுத்துக்காட்டுவதுடன் கடுமையான சான்றளிப்பு நெறிமுறைகளின் கீழ் புதிய உள்நுழைபவர்களை வளர்ப்பதில் CAASL இனால் மேற்கொள்ளப்படும் முன்முயற்சியான பங்கினையும் எடுத்துக்காட்டுகின்றது. இதன்மூலம், துறையின் விரிவாக்கத்திற்கு துணையளிக்கும்வேளை செயற்பாட்டு நம்பிக்கையையும் பாதுகாக்கின்றது.

### நடைமுறையிலுள்ள வான் செயற்பாட்டாளர் சான்றிதழ்களை (AOCs) புதுப்பித்தல்

வானூர்திச் செயற்பாடுகள் பிரிவானது, இரண்டு சர்வதேச வானூர்திகள் உள்ளடங்கலாக ஐந்து நடைமுறையிலுள்ள வான் போக்குவரத்து செயற்பாட்டாளர்களின் வான் செயற்பாட்டாளர் சான்றிதழ்களை வெற்றிகரமாக புதுப்பித்தது. இவை சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பின் நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் (ICAO SARPs) மற்றும் இலங்கையின் சிவில் வான்பயணவியல் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன. இந்த புதுப்பிப்புகள் சான்றளிப்பு வாழ்நாள்சுற்று முழுவதும் செயற்பாட்டு மற்றும் பாதுகாப்பு அளவுகோல்களுடன் சான்றளிக்கப்பட்ட செயற்பாட்டாளர்கள் முழுவதுமான இணக்கப்பாட்டினை பராமரிப்பதனை உறுதிசெய்வதற்கான தொடர்ச்சியான மேற்பார்வையினை பிரதிபலிக்கின்றது.

### தரைக் கையாளுகை உரிமமளித்தல்

2010 இன் 14 ஆம் இலக்க சிவில் வான்பயணவியல் சட்டத்தின் பிரிவு 31 (k) இற்கமைய ஸ்ரீலங்கன் எயார்லைன்சுக்கு வழங்கப்பட்ட தரை கையாளுகை சேவைகள் உரிமமானது 2024 இல் வெற்றிகரமாக புதுப்பிக்கப்பட்டது. இந்த உரிமத்தின் புதுப்பித்தலானது தரை கையாளுதல் செயற்பாடுகளை வழங்குவதில் குறிப்பிடப்பட்ட சேவை மற்றும் பாதுகாப்பு நியமங்கள் தொடர்ச்சியாக கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது. - இது தடையற்ற மற்றும் பாதுகாப்பான விமானநிலைய செயற்பாடுகளுக்கான ஒரு அத்தியாவசியக் கூறாகும்.

# செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

### சான்றளிக்கப்பட்ட செயற்பாட்டாளர்களின் மேம்பட்ட பாதுகாப்பு மேற்பார்வை

செயற்பாட்டாளர் தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு தேவைப்பாடுகளுடன் இணங்கியருப்பதனை உறுதிசெய்வது 2024 இல் இப்பிரிவின் செயற்பாடுகளின் ஒரு மத்திய தூணாகக் காணப்பட்டது.

- ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் விட்ஸ் ஏவியேசன் உள்ளடங்கலான பாரிய செயற்பாட்டாளர்களினால் முறைமைப்படுத்தல் கணக்காய்வுகள் நடாத்தப்பட்டன. இவை ICAO SARPs மற்றும் உள்ளூர் செயற்பாட்டு வழிகாட்டிகளுடனான இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதற்காகும். இந்த கணக்காய்வுகள் முறைமைகள், ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு செயற்திறன் அளவீடுகளில் ஒரு விரிவான மதிப்பீட்டினை உள்ளடக்கியிருந்தன.
- விமானம், வானறை மற்றும் தரைச் செயற்பாடுகள் வரை பரந்துகாணப்பட்ட மொத்தமாக 67 சோதனையிடல்கள் இவ்வாண்டின்போது மேற்கொள்ளப்பட்டன. இந்த சோதனையிடல்கள் மெய்நேர இணக்கப்பாடு மற்றும் தயார்நிலையினை கண்காணிப்பதற்கு முக்கிய தொடுபுள்ளிகளாக செயலாற்றுவதுடன், ஒரு வலுவான வான்பயணவியல் பாதுகாப்பு முகாமைத்துவ சூழலமைப்பினை பராமரிப்பதற்கு உதவுகின்றது.

### வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர் சான்றிதழ்கள் (FAOCs)

ஒரு பிராந்திய வான்பயணவியல் மையமாக இலங்கையின் அதிகரிக்கும் முக்கியத்துவமானது வெளிநாட்டு விமான நிறுவனங்களது செயற்பாடுகளது வசதியளிப்பதற்கு வானூர்தி செயற்பாடுகள் பிரிவினால் மேலும் துணையளிக்கப்பட்டது:

- 2024 இல் பின்வரும் சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு ஐந்து புதிய FAOCs வழங்கப்பட்டன:
  - BBN எயார்லைன்ஸ் இந்தோனேஷியா
  - ஈரான் எயார் டுவர் எயார்லைன்ஸ்
  - ஜெட்ஸ்டார்
  - ஆர்க்கியா இஸ்ராயலி எயார்லைன்ஸ் லிமிட்டட்
  - ஸ்மார்ட்விங்ஸ் ஹங்கேரி

- இதற்கும் மேலாக 32 FAOC க்கள் புதுப்பிக்கப்பட்டதுடன், இது, நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்பாடுகளது முறைமைப்படுத்தல் மேற்பார்வை தொடர்வதனை உறுதிசெய்கின்றது.

2024 இன் இறுதியில் 45 வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர்கள் இலங்கைக்கும் இலங்கையிலிருந்தும் அட்டவணைப்படுத்தப்பட்ட அல்லது அட்டவணைப்படுப்படாத செயற்பாடுகளை செல்லுபடியாகும் மற்றும் செயலூக்கமாக கண்காணிக்கப்படும் FAOC க்களின் கீழ் நடாத்தினார்கள். இது இலங்கையின் முறைமைப்படுத்தல் சூழலில் நிலைபேறுடைய ஆர்வம் மற்றும் நம்பிக்கையினை பிரதிபலிக்கின்றது.

### வான் மூலமான ஆபத்தான பொருட்களின் போக்குவரத்து

ஆபத்தான பொருட்களின் பாதுகாப்பான மற்றும் இணக்கப்பாடான போக்குவரத்து முறைமைப்படுத்தல் முன்னிறுத்தத்தின் முன்னுரிமைப் பிரிவாக காணப்படுகின்றது:

- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு AOC வைத்திருப்பவர்கள் உள்ளடங்கலாக 18 செயற்பாட்டாளர்களுக்கு ஆபத்தான பொருட்களை இலங்கைக்கு உள்ளே, வெளியே, மேலாக அல்லது இலங்கையினுள் கொண்டுசெல்வதற்கு 2024 இல் அவர்களது அனுமதிப்பத்திரங்களுக்கு புதுப்பித்தல்கள் வழங்கப்பட்டன.
- மேலாக, இவ்வாண்டின்போது ஒரு புதிய பயிற்சித் திட்டமானது அங்கீகரிக்கப்பட்டது. இது ஆபத்தான பொருட்களை விநியோகிப்பதில் பயிற்சித் திட்டங்கள் பாடநெறி உள்ளடக்கம் மற்றும் அறிவுறுத்தல் ஆளணியினர் ஆகிய இரண்டிற்கும் முழு சான்றளிப்பு வழங்கப்பட்டது. இந்த முன்னெடுப்பானது சான்றளிக்கப்பட்ட பயிற்சித் தெரிவுகளின் விரிவாக்கத்திற்கு துணையளிப்பதுடன், ICAO தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் மற்றும் CAASL தேவைப்பாடுகளுடன் இணங்க ஆபத்தான பொருட்களை முகாமைப்படுத்துவதற்கான துறையின் கொள்திறனை மேம்படுத்துகின்றது.

### வானறை பாதுகாப்பு மேற்பார்வை மற்றும் சான்றளிப்பு

வானறைப் பணியாட்களின் சாமர்த்தியத்தை நிலைநிறுத்துவதற்கும் விமானத்தினுள்ளான பாதுகாப்பில் உயர்ந்த நியமங்களை உறுதிசெய்வதற்கும் CAASL 2024 இன்போது மொத்தமாக 1,176 பணியாள் அங்கத்தவர் சான்றிதழ்களை வழங்கின. ஒட்டுமொத்த வான்பயணவியல் பாதுகாப்பு கட்டமைப்பின் ஒரு முக்கிய பிரிவாக கருதப்படுகின்ற இந்த சான்றளிப்புகள் பயிற்சி இணக்கப்பாடு, மருத்துவ தகுதி மற்றும் செயற்பாட்டு தயார்நிலை என்பவற்றை சரிபார்த்ததன் பின்னர் வழங்கப்படுகின்றன.

### ஆளில்லா வானூர்தி முறைமைகளின் முறைமைப்படுத்தல் (UAS)

ஆளில்லா வான்பயணவியல் மற்றும் அதன் சாத்தியமான பிரயோகங்களை இனங்கண்டு CAASL ஆளில்லா வானூர்தி முறைமைகளுக்கான (UAS) முறைமைப்படுத்தல் சூழலினை பலப்படுத்துவதில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது:

- SLCAP 4610 இன் பிரசுரிப்பானது ஆளில்லா வானூர்தி விமான உரிமத்தினை பெறுவதற்கான தெளிவான வழிகாட்டிகளை அறிமுகப்படுத்துகின்றது. இதன்மூலம், UAS சூழலமைப்பினுள் விமானிகள் பயிற்சி மற்றும் உரிமமளித்தல் ஒழுங்குமுறையாக்கப்பட்டுள்ளது.
- மேலாக, UAS பயிற்சி நிறுவனங்களுக்கான அங்கீகரித்தல் செயன்முறையானது ஆரம்பிக்கப்பட்டதுடன், இது இந்த விரைவாக வளர்ச்சியடையும் துறையில் கட்டமைக்கப்பட்ட நிறுவன மேற்பார்வையின் ஆரம்பத்தினை குறிப்பிடுகின்றது. இந்த முன்னெடுப்புகள் கூட்டாக செயற்பாட்டு பாதுகாப்பினை மேம்படுத்துவதுடன், வர்த்தக மற்றும் பொழுதுபோக்கு தளங்களில் ட்ரோன்களின் பயன்பாட்டின் விரிவாக்கத்திற்கு வழி வகுக்கின்றது.

### திருத்தியமைக்கப்பட்ட நியமங்களின் அமுலாக்கம்

செயற்பாட்டு நடைமுறைகளில் நிலைத்தன்மை மற்றும் தெளிவினை ஊக்குவிப்பதற்காக, SLCAIS 053 இன் இரண்டாம் பதிப்பானது - ஒரு முக்கிய அமுலாக்கல் நியமம் - முடிவுறுத்தப்பட்டு உரிய பங்காளிகளிடையே பரப்பப்பட்டது. இந்த திருத்தியமைக்கப்பட்ட பதிப்பானது சமீபத்தைய முறைமைப்படுத்தல் இற்றைப்படுத்தல்கள் மற்றும் செயற்பாட்டு பின்னூட்டம் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன், உள்ளூர் முன்னுரிமைகள் மற்றும் சர்வதேச கடப்பாடுகளுடன் சீரமைவான தெளிவான மற்றும் நடைமுறையான வழிகாட்டல்களின் கீழ் வான்பயணவியல் சமூகம் செயலாற்றுவதனை உறுதிசெய்கின்றது.

வானூர்திப் செயற்பாடுகள் பிரிவிற்கு 2024 ஆம் ஆண்டானது விரைவாக்கப்பட்ட முன்னேற்றம் மற்றும் மூலோபாய தொலைநோக்கிற்கான காலமாக குறிப்பிடப்படுகின்றது. முறைமைப்படுத்தல் சீரமைவு, செயற்பாட்டாளர் மேற்பார்வை, சான்றளிப்பு விரிவாக்கம் மற்றும் வளர்ந்துவரும் வான்பயணவியல் தொழில்நுட்பங்களில் முன்னிறுத்தமான முயற்சியுடன் இப்பிரிவானது வான்பயணவியலின் எதிர்காலத்தை தழுவும்வேளை இலங்கையின் ஆகாயவெளியினை பாதுகாப்பதற்கான அதன் கடப்பாட்டினை மீளுறுதிசெய்கின்றது. இந்த சாதனைகள் முதிர்வடைந்த மற்றும் மீளெழுச்சியான முறைமைப்படுத்தல் உட்கட்டமைப்பினை பிரதிபலிப்பது மாத்திரமன்றி உலக அரங்கில் இலங்கையினை ஒரு முன்னோக்கிப் பார்க்கும் வான்பயணவியல் தேசமாக நிலைப்படுத்தும்.

## வானூர்தி பதிவீட்டு மற்றும் வான்தகைமைப் பிரிவு

2024 இல், வானூர்தி பதிவீட்டு மற்றும் வான்தகைமைப் பிரிவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (CAASL) மிகைப்படியான பாதுகாப்பு மேற்பார்வை கட்டமைப்பின் ஒரு முக்கிய தூணாக தொடர்ந்தும் சேவையாற்றுகின்றது. அதன் விரிவான பாதுகாப்பு மேற்பார்வை திட்டத்தின் வெற்றிகரமான நிறைவேற்றலூடாக இப்பிரிவானது சிவில் வான்பயணவியல் துறை முழுவதும் செயற்பாட்டு பாதுகாப்பு மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டின் உயர்ந்த நியமங்களை நிலைநிறுத்துவதற்கான அதன் அசைக்கவியலா கடப்பாட்டினை மீளுறுதிசெய்கின்றது.

### கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உறுதிமொழி நடவடிக்கைகள்

இவ்வருடம் முழுவதும், இப்பிரிவானது அனைத்து அட்டவணைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை துல்லியமாக மேற்கொண்டது. இவை வான்தகைமை தொடர்பான பரந்த அலைநிரலினை உள்ளடக்கியிருந்தன. முக்கிய சாதனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- தேசிய விமானங்களுக்கான வான்தகைமைச் சான்றிதழ்களின் வழங்கல் மற்றும் புதுப்பிப்பானது இலங்கையின் வான்வெளியினுள் செயற்படுகின்றன வானூர்திகள் தொடர்ந்தும் கடுமையான வான்தகைமை நியமங்களை சந்திப்பதனை உறுதிசெய்கின்றது.

- பின்வருவன உள்ளடங்கலாக முக்கிய வான்பயணவியல் நிறுவனங்களின் பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வுகள்:
  - அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு நிறுவனங்கள் (AMOs)
  - தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ நிறுவனங்கள் (CAMOs)
  - அங்கிகரிக்கப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள் (AMTOs)

இந்த மேற்பார்வை நடவடிக்கைகள் வானூர்தியின் செயற்பாட்டு நேர்மையினை பராமரிப்பதற்கு காரணியாய் இருப்பதுடன், பராமரிப்பு மற்றும் பயிற்சி செயற்பாடுகள் முழுவதும் ஒரு பாதுகாப்பு கலாச்சாரத்தினை வலியுறுத்துகின்றது.

### பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை (SMS) கணக்காய்வுகளின் ஆரம்பம்

பாதுகாப்பு மேற்பார்வையினை மேலும் உயர்த்துவதற்காக இப்பிரிவானது 2024 இல் ஒரு புதிய வழி முறைமைப்படுத்தல் ஈடுபாட்டினை ஆரம்பித்தது. இது சான்றளிக்கப்பட்ட செயற்பாட்டாளர்களிடையே பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளில் (SMS) கணக்காய்வுகளை ஆரம்பிப்பதன் மூலமாகும். அத்தகைய முதலாவது கணக்காய்வானது விட்ஸ் எயார் (பிரைவேட்) லிமிட்டட்டில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தலைப்பு விடயத்திலான நிபுணரின் வழிகாட்டலின் கீழ் EASA-SARI திட்டத்தினூடாக வசதியளிக்கப்பட்டது. இந்த கூட்டுமுயற்சி அணுகுமுறையானது கணக்காய்வு செயன்முறையானது நவீன சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கெதிராக அளவுகோலிடப்படுவதுடன், செயற்பாட்டாளர்கள் அவர்களது பாதுகாப்பு கட்டமைப்புகளை ICAO இணைப்பு 19 ஏற்பாடுகள் மற்றும் SLCAIS 070 தேவைப்பாடுகளுடன் சீரமைப்பதற்கு துணைபுரிந்தது.

SMS கணக்காய்வுகளின் அறிமுகமானது CAASL இன் முறைமைப்படுத்தல் மேற்பார்வை மாதிரியில் ஒரு முக்கியமான பரிணாமத்தைக் குறிப்பிடுவதுடன், இது வெறுமனே இணக்கப்பாடு அடிப்படையிலான கண்காணிப்பிலிருந்து மிகவும் செயற்திறன் அடிப்படையிலான முன்முயற்சியான பாதுகாப்பு முகாமைத்துவ நடப்பாட்சிக்கு நகர்கின்றது.

### சர்வதேச வான்பயணவியல் பங்குடைமைகளை பலப்படுத்துதல்

வானூர்தி பதவீட்ளித்தல் மற்றும் வான்தகைமைப் பிரிவும் ஐரோப்பிய யூனியன் தெற்காசிய பங்குடைமைத் திட்டத்தில் (EU-SA APP) செயலூக்கமாக பங்குபற்றியதன் மூலம் பிராந்திய மற்றும் சர்வதேச வான்பயணவியல் இணைப்புகளை பலப்படுத்துவதற்கு கணிசமானளவு பங்களிப்பு செய்துள்ளது. இந்த முன்னெடுப்பிலான ஈடுபாடானது CAASL ஆளணியினருக்கு மதிப்புமிக்க கொள்திறன் கட்டியெழுப்புதல் வாய்ப்புக்களை வழங்கியதுடன், இவர்கள் வான்பயணவியல் பாதுகாப்பு, வெளித்தோன்றும் இடர் பிரிவுகள் மற்றும் ஒத்துழைப்பான பாதுகாப்பு மேம்பாட்டு மூலோபாயங்களில் சர்வதேச முன்னோக்குகளுக்கான வெளிப்பாடுகளிலிருந்து நன்மையடைந்தார்கள்.

EU-SA APP இலான பங்குபற்றலானது நிறுவன அறிவினை ஆழமாக்கியது மாத்திரமன்றி வான்பயணவியல் பாதுகாப்பில் சிறந்த பிராந்திய ஒத்துழைப்பினை வளர்க்கின்றது, இது இலங்கையினை பரவலான தெற்காசிய ஐரோப்பிய பாதுகாப்பு முன்னுரிமைகள் மற்றும் மூலோபாய குறிக்கோள்களுடன் சீரமைக்கின்றது.

## வானூர்தித்தளப் பிரிவு

வானூர்தித்தளப் பிரிவானது செயற்பாட்டு நியமங்களை பாதுகாப்பதிலும் சர்வதேச மற்றும் உள்ளூர் விமானநிலையங்களிடையே உட்கட்டமைப்பு நேர்மையினை உறுதிசெய்வதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஒரு கடுமையான கணக்காய்வுகள் திட்டம், முறைமைப்படுத்தல் இற்றைப்படுத்தல்கள், மற்றும் இலக்குவைத்த புதுப்பித்தல்களூடாக இப்பிரிவானது நாட்டில் வான்தளச் செயற்பாடுகளுக்கான அளவுகோலினை உயர்த்துவதற்கு துணைபுரிகின்றது.

### 1. சான்றளித்தல் மற்றும் உரிமம் புதுப்பித்தல் கணக்காய்வுகள்

2024 இல் ஒரு முக்கிய சாதனையாக இலங்கையின் பாரிய சர்வதேச வாயில்களான - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் (BIA), கொழும்பு சர்வதேச விமான நிலையம் இரத்மலானை (CIAR) மற்றும் யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையம் என்பவற்றுக்கான சான்றளிப்பு புதுப்பித்தல் கணக்காய்வுகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. ICAO வழிகாட்டிகளின் பிரகாரம் கடுமையாக இந்தக் கணக்காய்வுகள் நடாத்தப்பட்டதுடன், இந்த வசதிகளின் தொடர்ச்சியான இணக்கப்பாட்டினை சர்வதேச பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு நியமங்களுடன் ஏற்புடையாக்கப்பட்டதுடன், ஒரு மேலதிக இரண்டு ஆண்டு காலத்திற்கான சான்றளிப்பு நிலையினை பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கும்.

மேலாக, மட்டக்களப்பு விமானநிலையத்திற்கான ஒரு உரிமம் புதுப்பித்தல் கணக்காய்வு நிறைவேற்றப்பட்டதுடன், உள்ளூர் வான்பயணவியல் மட்டத்திலும் கூட வலுவான பாதுகாப்பு இணக்கப்பாட்டினை பராமரிப்பதில் அதிகாரசபையின் முன்னிறுத்தத்தினை வலியுறுத்துகின்றது. இந்த முன்னெடுப்புகள் CAASL இன் முன்முயற்சியான முறைமைப்படுத்தல் தோரணையினை வலியுறுத்துவதுடன் அனைத்து சான்றளிக்கப்பட்ட வானூர்தித்தளங்களின் வான்பக்க பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டுத்தன்மையினை உறுதிசெய்வதில் அதன் திடமான கடப்பாட்டினையும் வலியுறுத்துகின்றது.

### 2. நீர் வானூர்தித்தள ஒழுங்குவிதிகளின் அறிமுகம்

மிதக்கும் விமானச் செயற்பாடுகளில் வளர்ந்துவரும் ஆர்வத்தினை வசதியளிப்பதற்கு மற்றும் முறைமைப்படுத்துவதற்கான ஒரு மூலோபாய நகர்வாக, CAASL நீர் வானூர்தித்தளங்களுக்கு புதிய முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளை வழங்கியது. இந்த அபிவிருத்தியானது தேசிய வான்பயணவியல் கட்டமைப்பினுள் கடல்விமான செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பில் ஒரு முக்கிய மைல்கல்லினை குறிப்பிடுகின்றது.

முறைமைப்படுத்தல் மீளாய்வு மற்றும் எதிர்கால கணக்காய்வுக்கான விரிவான செயற்பாட்டு கையேடுகளை தயாரித்து சமர்ப்பிக்குமாறு செயற்பாட்டாளர்கள் அறிக்கப்படுகின்றார்கள். இந்த ஒழுங்குவிதிகளின் அறிமுகமானது பாதுகாப்பான உரிமமளித்தல் மற்றும் நீர் வானூர்தித்தளங்களின் மேற்பார்வைக்கான ஒரு தெளிவான பாதையினை நிறுவும்வேளை உலகளாவிய போக்குகளுக்கு சீரமைவாக இலங்கையின்

# செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

உள்ளூர் வான்பயணவியல் வலையமைப்பிற்கான நோக்கெல்லையினை விரிவாக்குகின்றது.

### 3. தடைவரம்பு மேற்பரப்பின் (OLS) மேற்பார்வை

வானூர்தித்தளப் பிரிவானது சான்றளிக்கப்பட்ட வானூர்தித் தளங்களைச் சுற்றியுள்ள தடைவரம்பு மேற்பரப்பினை தொடர்ந்தும் செயலூக்கமாக முகாமைப்படுத்தி கண்காணிக்கின்றது. இது அனைத்து வானூர்தி செயற்பாடுகளுக்கான அணுகுமுறை மற்றும் புறப்பாடு பாதைகளின் பாதுகாப்பினை உறுதிசெய்கின்றது. OLS வரைகூறுகளின் வழக்கமான சோதனையிடல்கள் மற்றும் வலியுறுத்தல்கள் ஒரு முக்கிய முன்னுரிமையாகக் காணப்படுவதுடன், இது வானூர்தித்தள சுற்றுவட்டாரத்தில் காணப்படுகின்ற ஆபத்துக்களை பயனுறுதியாக தணிப்பதுடன் கட்டுப்படுத்தப்பட்ட வான்வெளியின் நம்பகத்தன்மையினை பாதகாக்கின்றது. இந்த முன்னெடுப்பானது CAASL இன் அனைத்து வானூர்தித்தள உட்கட்டமைப்பைச் சுற்றி ஒரு பாதுகாப்பான செயற்பாட்டுச் சூழல் பராமரிக்கப்படுவதற்கான விழிப்புள்ள அணுகுமுறையினை எடுத்துக்காட்டுகின்றது.

### 4. கொழும்பு சர்வதேச விமானநிலையம் இரத்மலானையில் (CIAR) ஓடுபாதையின் மறுசீரமைப்பு

2024 இல் பொறுப்பேற்கப்பட்ட மிகவும் முக்கியமான உட்கட்டமைப்பு திட்டங்களுள் ஒன்றாக CIAR இல் ஓடுபாதை மறுசீரமைப்பு காணப்பட்டது. இந்த முன்னெடுப்பானது மேற்பரப்பு விரிசல் மற்றும் சீர்குலைவு உள்ளடங்கலான சீர்குலைந்த ஓடுபாதை மேற்பரப்புகளை விளித்துரைத்தது. இவை வானூர்திகளுக்கு புறப்படும்போதும் தரையிறங்கும்போதும் செயற்பாட்டு இடர்களை தோற்றுவிக்கின்றன.

வானூர்தித்தளப் பிரிவானது இத்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கு வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமானநிலையம் மற்றும் வானூர்திச் சேவைகள் (AASL) உடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயலாற்றியது. இது தொழில்நுட்ப விவரக்குறிப்புகளுடன் இணங்கியும் வழக்கமான செயற்பாடுகளுக்கு இடையூறுகளை சிறுமமாக்குவதையும் உறுதிசெய்தது. இந்த மறுசீரமைப்புத் திட்டமானது CAASL இன் முன்முயற்சியான உட்கட்டமைப்பு முகாமைத்துவ மூலோபாயத்தினை வலியுறுத்துவதுடன் முக்கிய தேசிய வானூர்தித் தளங்களில் இடையூறு காணப்படாத பாதுகாப்பான செயற்பாடுகளை உறுதிசெய்வதில் அதன் பங்கினையும் வலியுறுத்துகின்றது.

## வான் வழிசெலுத்தல் சேவைகள் பிரிவு

CAASL இன் வான் வழிசெலுத்தல் சேவைகள் பிரிவானது கணிசமான முறைமைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு முன்னேற்றகரமான ஆண்டினைப் பதிவுசெய்தது, குறிப்பாக மேற்பார்வையினை மேம்படுத்துதல், நீண்டகால குறைபாடுகளை தீர்த்துவைத்தல் மற்றும் மேம்பட்ட வானிலையியல் முறைமைகளை கடைப்பிடித்தல் என்பனவாகும். இந்த முன்னேற்றங்கள் வான் வழிசெலுத்தல் பாதுகாப்பு மற்றும் சேவை விநியோகத்தைப் பொறுத்தளவில் இலங்கையினை ஒரு உறுதியான அடித்தளத்தில் இட்டுள்ளது.



### 1. COSCAP-SA இனால் USOAP இற்கு முன்னதான கணக்காய்வின் வெற்றிகரமான நிறைவேற்றம்

ஏப்ரல் 2024 இல் ANS பிரிவானது உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வு முன் திட்டத்தின் (USAOP) தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறை (CMA) கணக்காய்வுக்கு உட்பட்டதுடன், இது தெற்காசியாவின் செயற்பாட்டு பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகைமை திட்டத்தின் கூட்டுறவு அபிவிருத்தியினால் (COSCAP-SA) இனால் நடாத்தப்பட்டது.

கணக்காய்வானது ஒரு பயனுறுதியான அமுலாக்கல் (EI) புள்ளியான 81.14% உடன் நிறைவடைந்ததுடன், இது வான் வழிசெலுத்தல் பாதுகாப்பு மேற்பார்வையில் (ICAO) நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடனான இலங்கையின் திடமான ஒட்டியொழுகலை பிரதிபலிக்கும் ஒரு குறிப்பிடத்தக்க விளைவாகும். இந்த சாதனையானது ANS முறைமைப்படுத்தல் கட்டமைப்பின் முதிர்வு மற்றும் தயார்நிலையினை எடுத்துக்காட்டுவதுடன் உலகளாவிய வான்பயணவியல் பாதுகாப்பு அளவுகோல்களுக்கு சீரமைவாக நிலைபேறுடைய உயர் செயற்திறன் நியமங்களுக்கான CAASL இன் நிறுவன கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

### 2. இலங்கைக்கு எதிரான வான் வழிசெலுத்தல் குறைபாடுகளை அகற்றுதல்

ஆசிய பசிபிக் வான் வழிசெலுத்தல் திட்ட அமுலாக்கல் மற்றும் மீளாய்வு குழுவின் (APANPIRG/35) நவம்பர் 2024 இல் இடம்பெற்ற 35ஆவது கூட்டத்தில், நீண்டகாலமாக - ஆரம்பம் 2016 - இலங்கைக்கு எதிரான வான் வழிசெலுத்தல் குறைபாடானது உத்தியோகபூர்வமாக அகற்றப்பட்டது. இக்குறைபாடானது வானூர்திப் போக்குவரத்து தகவல் சேவை (AIS) வழங்கலுக்கான ISO 9000 சான்றளிக்கப்பட்ட தர முகாமைத்துவ முறைமை (QMS) குறைபாடு தொடர்பானதாகும்.

இந்த முக்கிய மைல்கல்லானது CAASL இனால் மேற்கொள்ளப்பட்ட நிலைபேறுடைய முறைமைப்படுத்தல் தலையீடுகளின் விளைவினாலாகும், இவை அடிக்கடியான கணக்காய்வுகள், திருத்தச் செயற்பாட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்ச்சியான செயன்முறை மேம்பாட்டு மேற்பார்வை என்பவற்றை உள்ளடக்குகின்றன. இக்குறைப்பாட்டின் நீக்கலானது உலகளாவிய வான் வழிசெலுத்தல் நியமங்களுடன் இலங்கையின் சீரமைவினை உறுதிசெய்வதுடன், பாதுகாப்பான, வினைத்திறனான மற்றும் வழமையான வான்வெளிச் செயற்பாடுகளுக்கான தேசத்தின் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றன.

### 3. பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் AWOS மற்றும் ATIS இன் செயற்படுத்தல்

தன்னியக்கமாக்கல் மற்றும் வினைத்திறன் நோக்கிய ஒரு பாரிய முன்னேற்றமாக CAASL 2024 இல் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) தானியங்கி காலநிலை அவதானிப்பு முறைமை (AWOS) மற்றும் தானியங்கி முனையத் தகவல் சேவையின் (ATIS) செயற்பாட்டினை அங்கீகரித்தது.

இந்த முறைமைகள் வானிலை தரவு முகாமைத்துவம் மற்றும் விமானி விளக்க வினைத்திறனில் ஒரு முன்மாதிரியான மாற்றத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றன. AWOS தொடர்ச்சியான, விமானத்தின் பாதுகாப்பிற்கு முக்கியமான காலநிலை தகவல்களை மெய்நேரத்தில் பெற்றுக்கொள்ளும்வேளை, ATIS உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் வானூர்திகளுக்கு செயற்பாட்டு மற்றும் காலநிலை இற்றைப்படுத்தல்களின் தன்னியக்க அலைபரப்பினை வழங்குகின்றது.

இவ்விரு முறைமைகளின் ஒருங்கிணைப்பானது விமானியின் சூழ்நிலை விழிப்புணர்வு, தீர்மானம் மேற்கொள்வதின் துல்லியத்தன்மை மற்றும் செயற்பாட்டுப் பாய்மையினை மேம்படுத்தும்வேளை இலங்கையின் முதன்மையான சர்வதேச நுழைவாயிலை நவீன உலகளாவிய வான்பயணவியல் நடைமுறைகளுடன் சீரமைக்கின்றது. அங்கீகரித்தல், கண்காணித்தல் மற்றும் இந்த தொழில்நுட்பத்தின் பயன்பாட்டிற்கு வசதியளிப்பதில் CAASL பங்கானது, வான்பயணவியல் வழிசெலுத்தல் சேவைகளில் புத்தாக்கம் மற்றும் செயற்பாட்டு தனிச்சிறப்பிற்கான அதன் கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது.

### வான்பயணவியல் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான ஒரு ஒருங்கிணைந்த கடப்பாடு

2024 ஆம் ஆண்டானது CAASL இன் வானூர்தித் தளம் மற்றும் ANS பிரிவுகளிலிருந்தான ஒரு ஒருங்கிணைந்த முயற்சியினை குறிப்பிடுகின்றது. இது செயற்பாட்டு உட்கட்டமைப்பினை பலப்படுத்துவதற்கும், முறைமைப்படுத்தல் செயற்திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் உலகளாவிய வான்பயணவியல் பாதுகாப்பு முன்னுரிமைகளுடன் சீரமைவதற்கும் ஆகும். கடுமையான கணக்காய்வுகள், மூலோபாயமான உட்கட்டமைப்புத் திட்டங்கள், சர்வதேச அங்கீகாரம் மற்றும் நவீன முறைமைகளின் பயன்பாடு என்பவற்றினூடாக CAASL ஆனது ஒரு முன்னோக்கிய சிந்தனையுடைய வான்பயணவியல் அதிகாரசபையாக அதன் நிலைப்பாட்டினை வலியுறுத்தியுள்ளது.

துறையானது ஒரு சிக்கலான மற்றும் வளர்ந்துவரும் நிலத்தோற்றத்தினை தொடர்ந்தும் சமாளிக்கும்போது, இந்த சாதனைகள் இலங்கையில் மிகவும் மீளெழுச்சியான, வினைத்திறனான மற்றும் உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட வான்பயணவியல் துறை நோக்கிய ஒரு முக்கியமான கட்டுமானவியலாகும்.

### வான்பயணவியல் பாதுகாப்பு கண்காணித்தல் அலகு

வான்பயணவியல் பாதுகாப்பு கண்காணிப்பு (ASM) அலகானது, தேசிய சட்டம் மற்றும் ICAO இணைப்பு 13 இன் பிரகாரம் விபத்து மற்றும் சம்பவ புலனாய்வுகளை மேற்பார்வை செய்வதற்கு அதன் முக்கியமான பொறுப்பாணையினை பராமரித்தது. அதன் முக்கிய பொறுப்புக்கள் பின்வருனவற்றை உள்ளடக்குகின்றன:

- காரணக் காரணிகளை இனங்காணப்பதற்காக வானூர்தி விபத்துக்கள் மற்றும் பாரதூரமான சம்பவங்களினுள் சுயாதீனமான புலனாய்வுகளை நடாத்துதல் மற்றும் அவற்றின் மீள்நிகழ்வினை தடுப்பதற்கு பாதுகாப்பு பரிந்துரைகளை வழங்குதல்.
- ICAO இணைப்பு 19 இனைத் தொடர்ந்து அரச பாதுகாப்பு திட்டத்தின் (SSP) அமுலாக்கலுக்கு துணையளித்தல். இது அனைத்து வான்பயணவியல் தளங்களிலும் ஒரு ஒருங்கிணைவான, இடர் அடிப்படையிலான கட்டமைப்புடனான பாதுகாப்பு மேற்பார்வை பொறுப்புக்களை ஒருங்கிணைப்பதற்கு முனைகின்றது.

இந்த முயற்சிகள் உள்ளூர் பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச நம்பகத்தன்மைக்கு அவசியமான வெளிப்படையான மற்றும் வினைத்திறனான புலனாய்வு ஆற்றலை இலங்கை பராமரிப்பதனை உறுதிசெய்யும்.

### முறைமைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நிறுவன பலப்படுத்தல்

2024 இல் காணப்பட்ட ஒரு பாரிய மைல்கல்லாக வான்பயணவியல் விபத்து புலனாய்விற்கான சட்டக் கட்டமைப்பின் மேம்படுத்தல் காணப்பட்டது. வானூர்தி விபத்து புலனாய்வு பணியகத்தின் (AAIB) இறுதி வரைவுச் சட்டமூலமானது ICAO இணைப்பு 13 இல் நவீன நியமங்கள் மற்றும் பரிந்தரைக்கப்பட்ட நடைமுறைகள் (SARPSs) பிரதிபலிக்கப்படுவதற்காக இற்றைப்படுத்தப்பட்டு இறுதி சட்டவாக்கச் செயன்முறைக்காக சட்டவரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வரைவானது EU-SA APP II தொழில்நுட்ப தூதுக்கழுவின் கீழ் தலைப்பு விடயத்தில் ஒரு நிபுணரிடமிருந்தான தொழில்நுட்ப உள்ளீடுகளுடன் விருத்திசெய்யப்பட்டது. முன்மொழியப்படும் சட்டமானது உலகளாவிய ரீதியில் சீரமைவானதாகவும் செயற்பாட்டு ரீதியில் உள்ளூர் அமுலாக்கலுக்கு நடைமுறையானதாகவும் காணப்படுவதனை உறுதிசெய்கின்றது.

இதற்கு ஒத்தாற்போல் இப்பிரிவானது விபத்து புலனாய்விற்கு பொருத்தமான ICAO USOAP தொடர்ச்சியான கண்காணித்தல் அணுகுமுறை (CMA) ஒழுங்குமுறை வினாக்களின் மீளாய்வினை பொறுப்பேற்றது. இந்த புதுப்பிப்பானது நவீன ICAO கணக்காய்வு எதிர்பார்ப்புக்களுக்கு எதிராக இலங்கையின் இணக்கப்பாட்டு அளவீடுகள் மற்றும் செயற்திறன் குறிகாட்டிகள் காணப்படுவதனை உறுதிசெய்கின்றது.

### வழிகாட்டல் ஆவணங்களின் அபிவிருத்தியும் மீளாய்வும்


வான் செயற்பாட்டாளர்களினால் சமர்பிக்கப்பட்ட SMS கையேடுகளை மீளாய்வு செய்வதன் மூலம் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளின் அமுலாக்கத்தில் நிலைத்தன்மை மற்றும் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதில் இப்பிரிவானது பங்களிப்பு செய்துள்ளது. ஒவ்வொரு கையேடும் SLCAIS 070 – SMS கட்டமைப்பிலான நியமங்களை அமுலாக்குதலுடனான இணக்கப்பாட்டிற்காக கடுமையான மதிப்பீட்டிற்குட்பட்டது. இது உரிய செயற்பாட்டு பிரிவுகளினால் ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த மீளாய்வுகள் ஒரு தர உறுதிப்பாட்டு வழிமுறையாக செயலாற்றுவதுடன், செயற்பாட்டாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து பாதுகாப்பு ஆவணங்களும் செயற்பாட்டு யதார்த்தத்தை பிரதிபலிப்பதனையும் முறைமைப்படுத்தல் எதிர்பார்ப்புக்கள் சந்திக்கப்படுவதனையும் உறுதிசெய்கின்றது.

### சான்றளித்தல் நடவடிக்கைகள்

2024 இல் உள்ளவாறு வான்பயணவியல் பாதுகாப்பு கண்காணித்தல் அலகானது சான்றளித்தல் நடவடிக்கைகளுக்கு நேரடியாக பொறுப்பாளியல்ல. எவ்வாறாயினும், விபத்து புலனாய்வுகள் மற்றும் பாதுகாப்பு செயற்திறன் கண்காணித்தலில் அதன் நிரப்பியல் பங்கானது தேசிய மட்டத்தில் சான்றளித்தல் மற்றும் செயற்பாட்டு பாதுகாப்பு கொள்கைகளை வடிவமைப்பதில் தொடர்ந்தும் அவசியமானதாக உள்ளது.

*செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்*

## இலங்கையில் பதிவுசெய்ப்பட்ட வானூர்திகள் மற்றும் இலங்கைப் பிரதேசத்தினுள் வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட வானூர்திகளிடமிருந்து அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் - 2024




| சுருக்கங்கள் | |
|---|---|
| ADRM | வானூர்தித் தளம் |
| AMAN | திடீர் நழுவியக்கம் |
| ARC | அசாதாரணமான ஓடுபாதை தொடுகை |
| ATM | ATM/CNS |
| BIRD | பறவை மோதல்கள் |
| CABIN | வானறை பாதுகாப்பு நிகழ்வுகள |
| CFIT | நிலப்பரப்பினுள் அல்லது நோக்கிய கட்டுப்படுத்தப்பட்ட விமானம் |
| CTOL | புறப்பாடு மற்றும் தரையிறங்கும் போது தடைகளுடனான மோதல்கள் |
| F-NI | தீ /புகை (தாக்கவிளைவற்றவை) |
| FUEL | எரிபொருள் தொடர்பானவை |
| MAC | பாதுகாப்பு சமரசம் / வான்வழி மோதல் தவிர்ப்பு எச்சரிக்கை / வேறுபடுத்தல் இழப்பு /(நெருங்கிய) நடுவான மோதல்கள் |
| MED | மருத்துவ |
| NAV | வழிசெலுத்தல் தவறு |
| OTHR | ஏனையவை |
| RAMP | தரை கையாளுதல் |
| SCF-NP | முறைமை / கூறு தவறுகை அல்லது செயலிழப்பு (மின் திறன் நிலையம் அல்லாதவை) |
| SEC | பாதுகாப்பு தொடர்பானவை |
| TURB | கொந்தளிப்பு எதிர்கொள்ளல் |
| WSTRW | காற்றுவெட்டு அல்லது இடியுடன்கூடிய புயல் |

*இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்திகள் மற்றும் இலங்கைப் பிரதேசத்தில் வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட வானூர்திகளிடமிருந்து அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் - 2024*

### வான்பயணவியல் நிகழ்வுகள் மற்றும் புலனாய்வுகள் - 2024

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) 2024 இல் வான்பயணவியல் பாதகாப்பு கணக்காணிப்பிற்கு ஒரு வலுவான மற்றும் முன்முயற்சியான அணுகுமுறையினை தொடர்ந்தும் நிலைநிறுத்தியது. அறிக்கையிடுதல், மதிப்பிடுதல் மற்றும் வான்பயணவியல் நிகழ்வுகளின் புலனாய்வு என்பன சாத்தியமான ஆபத்துக்களை இனங்காண்பதில், முறைமை நலிவுறுநிலையினை சரிசெய்தல் மற்றும் எதிர்கால நிகழ்வுகளை தடைசெய்தல் என்பவற்றில் ஒரு முக்கிய பங்கினை ஆற்றின.

## நிகழ்வுகள் அறிக்கையிடல் கண்ணோட்டம்

2024 இல் மொத்தமாக 310 வான்பயணவியல் நிகழ்வுகள் CAASL இற்கு அறிக்கையிடப்பட்டன. இந்த நிகழ்வுகள் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்திகள் மற்றும் இலங்கையின் வான்வெளியினுள் செயலாற்றும் வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட வானூர்திகளையும் உள்ளடக்குகின்றது. அனைத்து நிகழ்வுகளும் விமானத்தின் நோக்கத்துடன் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற வானூர்திகளுடன் இணைந்ததாகும்.

அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளில், அடிக்கடி அறிக்கையிடப்பட்ட பிரிவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

### ➔ பறவை மோதல்கள்

மொத்தமாக 85 பறவை மோதல்கள் அறிக்கையிடப்பட்டதுடன், இது வருடத்தில் இடம்பெற்ற மிகவும் பொதுவான நிகழ்வுப் பிரிவாவும். இந்த நிகழ்வுகள் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் வெளிநாட்டு வானூர்திகள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளாகும் என்பதுடன், இவை நாட்டிலுள்ள பல்வேறு விமானநிலையங்களிடையே ஏற்றபட்டவையாகும்.

- 50 பறவை மோதல்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் (BIA) கட்டுநாயக்காவில் பதிவுசெய்யப்பட்டன.
- 4 நிகழ்வுகள் கொழும்பு சர்வதேச விமானநிலையம், இரத்மலானையில் இடம்பெற்றன.
- 1 நிகழ்வு மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் (MRIA)அறிக்கையிடப்பட்டது.

பறவை மோதல்களின் உயர் அதிர்வெண்ணானது தொடர்ச்சியான பறவை ஆபத்து முகாமைத்துவம் மற்றும் ஓடுபாதை பாதுகாப்பு திட்டங்களுக்கான அவசியத்தினை வலியுறுத்துகின்றது.

### ➔ முறைமை மற்றும் கூறுகளின் செயலிழப்புகள்

மொத்தமாக 61 அறிக்கைகள் முறைமை செயலிழப்புகள் அல்லது கூறுகளின் செயலிழப்புகளுடன் இணைந்ததாகும். இவை செயற்பாட்டாளர்கள் மற்றும் பராமரிப்பு நிறுவனங்களின் மூலம் உடனடி அல்லது பின்தொடர்வு திருத்த நடவடிக்கை தேவைப்படும் விமானத்தினுள்ளும் தரை அடிப்படையிலான இயந்திரவியல் சிக்கல்களையும் உள்ளடக்குகின்றன.

### வான் போக்குவரத்து முகாமைத்துவம் ATM மற்றும் தொடர்பாடல் சிக்கல்கள்

34 நிகழ்வுகள் வான் போக்குவரத்து முகாமைத்துவம் (ATM) அல்லது தொடர்பாடல்கள் ஒழுங்கின்மைகளுடன் தொடர்புபட்டவையாகும், இவற்றுள் பெரும்பாலானவை வானூர்திக்கும் வானூர்தி போக்குவரத்து சேவைகள் (ATS) அலகுகளுக்கும் இடையேயான தொடர்பின் தற்காலிக இழப்பினை உள்ளடக்கியவையாகும். எந்தவொரு நிகழ்வும் மோதல்கள் அல்லது பாரதூரமான விளைவுகளை விளைவிக்காத போதிலும், அவை வலுவான எதிர்பாரா நிகழ்வு நெறிமுறைகள் மற்றும் பயனுறுதியான தொடர்பாடல் முறைமைகளுக்கான முக்கியமான தேவையினை எடுத்துக்காட்டுகின்றது.

### 2024 இல் நடாத்தப்பட்ட புலனாய்வுகள்

ICAO இணைப்பு 13 இன் கீழான அரசின் பொறுப்பிற்கு சீரமைவாக, CAASL வானூர்தி நிகழ்வுகள் மற்றும் பாரதூரமான நிகழ்வுகளினுள் நேரகாலத்துடனான மற்றும் முழுமையான புலனாய்வுகளை நடாத்துவதற்கான அதன் கடப்பாட்டினை தொடர்ந்தது. பின்வருவன இவ்வாண்டின்போது நிறைவுசெய்த அல்லது ஆரம்பிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க புலனாய்வுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது:

1. **வேறாக்கல் முறிவு - எமிரேட்ஸ் விமானங்கள் UAE 359 மற்றும் UAE 5CL**

   31 மே 2023 இல் ஒரு வேறாக்கல் இழப்பானது எமிரேட்ஸ் விமானம் UAE 359 (போயிங் 77W, A6-EGI) மற்றும் UAE 5CL (எயார்பஸ் A380, A6-EVG) இடையே கொழும்பு சமுத்திரக் கட்டுப்பாட்டுப் பிரிவினுள் ஏற்பட்டது. புலனாய்வானது 2024 இல் முடிவுறுத்தப்பட்டு இறுதி அறிக்கையானது CAASL இன் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டது. ஒத்துழைத்தல் செயன்முறைகளை பலப்படுத்துவதற்கும் மற்றும் மீள்நிகழ்வதை தடுப்பதற்கும் இலங்கையின் வான் வழிசெலுத்தல் சேவை வழங்குனருக்கு பாதுகாப்பு பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

2. **SID இணக்கப்பாடின்மை - விலய் டுபாய் விமானம் FDB1026**

   BIA இலிருந்து மாலைதீவிற்கு செயலாற்றும் 9 ஜனவரி 2024 இல் விலய் டுபாய் விமானம் FDB1026 முறையான அனுமதி மற்றும் மறுவாசிப்பு இருந்தபோதிலும் நிலையியற் சாதன புறப்பாட்டில் (SID) செங்குத்து கட்டுப்பாடுகளுடன் இணங்குவதற்கு தவறியது. இது சென்னையிலிருந்து உள்வருகின்றன ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL122 இலிருந்தான வேறாக்கல் குறைப்பினை விளைவித்தது. இந்நிகழ்வானது ஒரு பாரதூரமான நிகழ்வாக வகைப்படுத்தப்பட்டது. புலனாய்வானது முடிவுறுத்தப்பட்டு, திருத்தச் செயற்பாடுகள் ATC மற்றும் விமானப் பணியாட்கள் செயன்முறை கடைப்பிடிப்பு ஆகிய இரண்டிற்கும் பரிந்துரைக்கப்பட்டது.

3. **புகை மற்றும் நாற்றம் நிகழ்வு - ஸ்ரீலங்கன் எயார்லைன் விமானம் UL605 (4R-ALQ)**

   12 பெப்ரவரி 2024 இல், மெல்பர்னிலிருந்து கொழும்பிற்கு செயற்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் A330-300 (4R-ALQ) வான்பயணத்தின்போது ஒரு எரியும் வாசனை மற்றும் புலப்படக்கூடிய புகையினை அனுபவித்தது. இந்நிகழ்வானது முழுமையான புலனாய்வு செய்யப்பட்டு இறுதி அறிக்கையானது ICAO மற்றும் பொருத்தமான நாடுகளுக்கு பரப்புதல் செய்யப்பட்டது. புலனாய்வின்போது இனங்காணப்பட்ட மூல காரணங்களை விளித்துரைக்குமாறு பாதுகாப்பு பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

4. **கடினமான தரையிறக்கம் - செஸ்னா 152 (4R-ACV), ஏசியன் ஏவியேசன் சென்ரர்**

   8 ஜுன் 2024 இல் ஏசியன் ஏவியேசன் சென்ரரினால் நடத்தப்பட்ட ஒரு பயிற்சி உழிஞையானது கொழும்பு சர்வதேச விமானநிலையம் இரத்மலானையில் கடின தரையிறக்கத்தில் நிறைவுற்றது. இதனுடன் தொடர்புடைய வானூர்தி செஸ்னா 152 (4R-ACV) ஆகும். புலனாய்வானது விமானி கையாளுதல் தொழில்நுட்பங்கள் மற்றும் பயிற்சி மேற்பார்வை மேம்படுத்தல்களிலான வலியுறுத்தலுடன் நிறைவடைந்தது.

5. **ஓடுபாதை சுற்றுலா - ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் A330-200 (4R-ALS)**

   8 ஜுலை 2024 இல் BIA இற்கான இறுதி அணுக்கத்தின்போது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் A330-200 (4R-ALS) ஓடுபாதை 22 இன் மத்தியவரிசையிலிருந்து நகர்ந்து கீழிறங்கும்போது இடதுபக்கம் திசைமாறியதுடன், நான்கு பிரதான தரையிறங்கல் கருவி சக்கரங்களையும் நான்கு ஓடுபாதை ஓரத்திலுள்ள ஒளிவிளக்குகளையும் சேதப்படுத்தியது. ஒரு பாரதூரமான நிகழ்வாக வகைப்படுத்தப்பட்டு புலனாய்வானது முடிவுறுத்தப்பட்டு கண்டுபிடிப்புகள் ICAO மற்றும் தொடர்புடைய நாடுகளுடன் பகிரப்பட்டன. பரிந்துரைத்தல்கள் குருக்குக்காற்று தரையிறக்கல் செயற்பாடுகள் மற்றும் ஓடுபாதை மேற்பரப்பு மதிப்பீடுகளில் முன்னிறுத்தம் செய்தது.

6. **தவறான ஓடுபாதை சீரமைப்பு - ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL153 (4R-ALN)**

   15 ஜுலை 2024 இல், கொழும்பிலிருந்து லாஹோருக்கு வழிநடத்தப்பட்ட UL153 விமானம் ஹல்லாமா இக்பால் சர்வதேச விமானநிலையம், பாக்கிஷ்தானில் சுற்றிச் செல்வதற்கு முன்னர் தவறான ஓடுபாதையுடன் சீரமைவானது. வானூர்தியானது ஓடுபாதை 36R இல் அதன்பின்னர் பாதுகாப்பாக தரையிறங்கியது. புலனாய்வானது சீர்திருத்த பணியாள் பயிற்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட சூழ்நிலை விழிப்புணர்வு செயன்முறைகளுக்கான பரிந்துரைகளுடன் முடிவுறுத்தப்பட்டது.

7. **விமானியறை அணுக்கம் மறுப்பு - ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL607 (4R-ALR)**

   சிட்னியிலிருந்து கொழும்பிற்கு செயற்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL607 தொடர்பாக ஒரு கட்டாய நிகழ்வு அறிக்கையானது 2 ஒக்டோபர் 2024 இல் தாக்கல் செய்யப்பட்டது. கட்டளையிலிருந்த விமானி விமானியறைக்கான அணுக்கத்திற்கு மறுப்பு தெரிவித்துள்ளதுடன், இது விமான தளப் பாதுகாப்பு நெறிமுறையின் கீழ் அக்கறைகளை எழுப்பியது. இந்நிகழ்வானது முழுவதுமாக புலனாய்வு செய்யப்பட்டு பணியாள் நடத்தை, பாதுகாப்புச் செயன்முறைகளை மீளாய்வு செய்வதற்கும் நடத்தை இணக்கப்பாட்டு நியமங்களை விளித்துரைப்பதற்கும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

## வான்மருத்துவச் சேவை அலகு

2024 இல் அடைந்த முன்னேற்றங்கள் CAASL மற்றும் அதன் வான்மருத்துவச் சேவைகள் அலகினை வான்பயணவியல் சுகாதார ஆளுமையில் பிராந்திய தலைவராக திடமாக நிலைப்படுத்தியுள்ளது. உலகளாவிய பங்குடைமைகளில் முதலீடு செய்வதன் மூலம், வான்மருத்துவ சேவைகளுக்கான அணுக்கத்தினை மேம்படுத்துதல், மேம்பட்ட பயிற்சியினூடாக தொழில்வல்லுனர்களுக்கு வலுவளித்தல், மற்றும் விழிப்புணர்வு மற்றும் இணக்கப்பாட்டு கலாச்சாரத்தினை வளர்த்தல் என்பவற்றுடன் மிகவும் மீளெழுச்சியான, பாதுகாப்பான மற்றும் சுகாதார உணர்வுள்ள வான்பயணவியல் சூழலமைப்பிற்கான வழிக்கு CAASL வசதியளிக்கின்றது.

சிக்கலான சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் முறைமைப்படுத்தல் சவால்களுக்கு மத்தியில் வான்பயணவியல் துறையானது தொடர்ந்தும் பரிணமிக்கின்றபோது CAASL வான்பயணவியல் மருத்துவத்தில் உயர்ந்த நியமங்களை நிலைநிறுத்தும் அதன் பணிநோக்கில் உறுதியாய் உள்ளது — ஒவ்வொரு பயணமும் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் ICAO சிறந்த நடைமுறைகளில் ஒரு திடமான முன்னிறுத்தத்திற்கான உறுதிமொழியுடன் ஆரம்பிக்கப்படுவதை உறுதிசெய்கின்றது.

# செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

## 1. ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் AMS ஒரு முன்மாதிரி வான்பயணவியல் மருத்துவப் பிரிவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2024 இன் உச்ச சாதனையாக CAASL இன் வான்பயணவியல் மருத்துவப் பிரிவானது (AMS) ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் ஒரு முன்மாதிரி வான்பயணவியல் மருத்துவப் பிரிவாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டமை காணப்படுகின்றது. இந்த மேன்மையானது செயற்திறன் அளவுகோல்கள், முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் செயற்பாட்டு தனிச்சிறப்பு என்பவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்டதுடன், வான்பயணவியல் மருத்துவ நடைமுறையில் உயர் நியமங்களை நிலைநிறுத்துவதற்கான AMS இன் அசைக்கவியலா கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

இதற்குச் சமாந்திரமாக, AMS இன் தலைமையானது ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான ஒரு சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பு (ICAO) வான்பயணயவியல் மருத்துவ நிபுணராக நியமிக்கப்பட்டார் - இது உலக அரங்கில் தனிநபர் மற்றும் நிறுவன நம்பகத்தன்மையினை குறிப்பிடுகின்ற ஒரு புகழ்மிக்க பதவியாகும். இந்த அங்கீகாரமானது இலங்கையின் புலப்படும்தன்மையினை சர்வதேச வான்பயணவியல் மருத்துவ வட்டாரங்களில் மேம்படுத்தியது மாத்திரமன்றி, பிராந்திய வான்பயணவியல் சுகாதாரக் கொள்கை மற்றும் பயிற்சி நியமங்களை தலைமைதாங்கி செல்வாக்கு செலுத்தக்கூடிய CAASL இன் கொள்திறனையும் வலியுறுத்துகின்றது.

இந்த அங்கீகாரத்தினை பயன்படுத்தி AMS இன் தலைமையானது இவ்வாண்டின்போது மூன்று பிரதான பிராந்திய வான்பயணவியல் மருத்துவப் பயிற்சித் திட்டங்களை வெற்றிகரமாக ஒழுங்குசெய்து நடாத்தியது. இந்த முன்னெடுப்புகள் பிராந்தியம் முழுவதிலுமுள்ள வான்பயணவியல் மருத்துவ பரிசோதகர்கள் மற்றும் மருத்துவ மதிப்பீட்டாளர்களுக்காக துல்லியமாக வடிவமைக்கப்பட்டதாகும். இது முறைமைப்படுத்தல் நடைமுறைகள், வெளிவரும் மருத்துவ நுட்பங்கள் மற்றும் மருத்துவ சான்றளித்தல் செயன்முறைகளில் நிலைத்தன்மையினை உறுதிசெய்தல் என்பவற்றை ஒருங்கிணைப்பதில் முன்னிறுத்தம் செய்கின்றது. இந்த முயற்சிகளினூடாக ஆசிய பசிபிக் முழுவதும் வான்பயணவியல் மருத்துவ கொள்திறன் கட்டியெழுப்புவதற்கு ஒரு செல்வாக்குமிக்க பங்களிப்பாளராக CAASL வந்துள்ளது.





## 2. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனைக்கு வான்மருத்துவ சேவைகளின் விரிவாக்கம்

சேவை விநியோகத்திற்கான அணுக்கத்தை மேம்படுத்தும் அதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, CAASL கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக (KDU) மருத்துவமனையில் ஒரு தனிப்பயனாக்கப்பட்ட அலகினை நிறுவுவதன் மூலம் அதன் வான்பயணவியல் மருத்துவச் செயற்பாடுகளை விரிவாக்குகின்றது. இந்த மூலோபாயமான விரிவாக்கலானது கொழும்பு மற்றும் சுற்றியுள்ள புறநகர்களில் அமைந்துள்ள உரிமம் வைத்திருப்பவர்களுக்கான அணுகும் தன்மையினை எளிதாக்கும் நோக்கினைக் கொண்டதாகும். இது வான்மருத்துவ பரிசோதனைகளுக்கு CAASL இன் தலைமைக் காரியாலயத்திற்கு பயணம் செய்வதற்கான அவசியத்தினை கணிசமாக குறைக்கின்றது.

KDU மருத்துவமனை கிளையானது ICAO நியமங்களின் பிரகாரம் அனைத்து முக்கிய வான் மருத்துவ மதிப்பீடுகளையும் செயலாற்றுவதற்கான வசதிகளைக் கொண்டுள்ளதுடன், மருத்துவ பரிசோதனை செயன்முறையின் மருத்துவ ரீதியான நேர்மை அல்லது முறைமைப்படுத்தல் மேற்பார்வையினை சமரசம் செய்யாது சௌகரியத்தினை வழங்குகின்றது. இந்த பரவலாக்கல் முன்னெடுப்பானது CAASL இன் பங்காளிகள் தேவைகளுக்கும் அதன் நீண்டகால தொலைநோக்கான மிகவும் அணுகத்தக்க, வினைத்திறனான மற்றும் வாடிக்கையாளர் மையமான முறைமைப்படுத்தல் சூழலுக்கான பொறுப்புணர்ச்சியினை பிரதிபலிக்கின்றது.

## 3. விரிவான வான்பயணவியல் மருத்துவ புத்தாக்கல் பயிற்சித் திட்டங்களின் விநியோகம்

தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்கான அதன் கடப்பாட்டிற்கு சீரமைவாக CAASL இவ்வாண்டின்போது வான்பயணவியல் மருத்துவ வல்லுனர்கள், பரிசோதகர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களை இலக்கு வைத்து ஒரு தொடரான வான்பயணவியல் மருத்துவ புத்தாக்கல் பயிற்சித் திட்டங்களை விநியோகித்தது. இந்த திட்டங்கள் மருத்துவ தகுதி நியமங்களது பிரயோகம், பரிணமிக்கின்ற சுகாதார இடர்களை விளித்துரைத்தல் மற்றும் நடைமுறையிலுள்ள ICAO வழிகாட்டிகளுக்கு சீரமைவாக மருத்துவம்சார் தீர்மானம் மேற்கொள்வதனை ஊக்குவிப்பதில் திறமைகளை பலப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டன.

பரிணமிக்கின்ற மருத்துவ தொழில்நுட்பங்கள், உளவியல் நல்வாழ்வு, மனிதச் செயற்திறன் காரணிகள் மற்றும் தொற்றுக்கான தயார்நிலை என்பவற்றில் விசேட வலியுறுத்தல் இடப்பட்டதுடன் பயிற்சியானது சமகாலத்திற்கு மற்றும் எதிர்பார்ப்பு ஆகிய இரண்டினையும் உறுதிசெய்கின்றது. வானூர்தி மருத்துவ தொழில்வல்லுனர்களின் தரமுயர்த்தலில் முதலீடு செய்வதன் மூலம் வான்பயணவியல் செயற்பாடுகளில் மருத்துவம்சார் தனிச்சிறப்பு, முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் முன்முயற்சியான சுகாதாரக் கண்காணிப்புக் கலாச்சாரத்தினை CAASL செயலூக்கமாக வளர்க்கின்றது.

### 4. வான்பயணவியல் மருத்துவ மற்றும் பொதுச் சுகாதாரத்தில் விழிப்புணர்வுத் திட்டங்களை பரவலாக்குதல்

கல்வி மற்றும் பொது ஈடுபாட்டின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு 2024 இல் CAASL அதன் வெளிக்கள முயற்சிகளை ஒரு தொடராக விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் பயிற்சி செயலமர்வுகளூடாக விரிவாக்கியது. இந்த முன்னெடுப்புகள் வான்பயணவியல் ஆளணியினரை மாத்திரம் இலக்குவைக்காது பரந்த வான்பயணவியல் சூழலமைப்பிலுள்ள தரைப் பணியாட்கள், முறைமைப்படுத்துனர்கள் மற்றும் செயற்பாட்டு ஆளணியினர் உள்ளடங்கலான பங்காளிகளை இலக்குவைத்தள்ளது.

விழிப்புணர்வுத் திட்டங்கள் பின்வரும் அமர்வுகளை உள்ளடக்கின:

- சுகாதார நெறிமுறைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் பங்காளிகளை பழக்கமாக்குவதற்காக பொது வான்பயணவியல் மருத்துவ விழிப்புணர்வானது வடிவமைக்கப்பட்டது.
- மருத்துவ உளவியல் மற்றும் மனநல ஆரோக்கியம் என்பன உளவியல் சவால்களை களங்கப்படுத்தாதிருப்பதனையும் வான்பயணவியல் தொழில் வல்லுனர்களிடையே மனநல ஆரோக்கியத்தினை ஊக்குவிப்பதனையும் நோக்காகக் கொண்டுள்ளது.
- பரிணமிக்கின்ற நோய்களில் பொது சுகாதார விழிப்புணர்வு, சுகாதார அமைச்சுடனான ஒத்துழைப்புடனான "mpox" வைரஸ் இல் ஒரு முன்னிறுத்தமான பிரச்சாரத்தையும் இது உள்ளடக்குகின்றது.

இந்த முயற்சிகள் நேரிலான கருத்தரங்குகள், டிஜிட்டல் தொடர்பாடல் மேடைகள் மற்றும் முகவர்களிடையேயான ஒத்துழைப்பு என்பவற்றால் துணையளிக்கப்பட்டு வான்பயணவியல் துறையில் செயற்பாட்டுத் தயார்நிலை மற்றும் பாதுகாப்பினை பராமரிப்பதில் சுகாதார விழிப்புணர்வின் முக்கிய பங்கினை வலியுறுத்துகின்றது.

### 5. வான்பயணவியல் மருத்துவத்தில் முறைமைப்படுத்தல் நியமங்களின் திருத்தம் மற்றும் மேம்பாடு

2024 இல் ஒரு முக்கிய மூலோபாய சாதனையாக வான்பயணவியல் மருத்துவத்தினை ஆளுகை செய்யும் முறைமைப்படுத்தல் நியமங்களது விரிவான திருத்தம் காணப்பட்டது. தொழில்நுட்ப மேம்பாடுகள், உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மற்றும் பரிணமிக்கின்ற மருத்துவ அறிவு என்பவற்றுக்கு பதிலளிக்கும் விதமாக CAASL அதன் வான்பயணயில் மருத்துவக் கட்டமைப்பினை நவீனமயப்படுத்தும் நோக்குடன் ஒரு பரந்தளவிலான முறைமைப்படுத்தல் மறுசீரமைப்பு முன்னெடுப்பினை பொறுப்பேற்றது.

இந்த செயன்முறையானது உள்ளூர் மருத்துவ நிபுணர்கள் மற்றும் சர்வதேச முறைமைப்படுத்தல் அங்கங்களுடனான நெருங்கிய ஒத்துழைப்பினை உள்ளடக்கியதுடன், ICAO இணைப்பு 1 ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொருத்தமான உலகளாவிய நியமங்களுடனான சீரமைவினை உறுதிசெய்கின்றது. இந்த திருத்தியமைக்கப்பட்ட கட்டமைப்பானது மருத்துவ சான்றளிப்புக்கான இற்றைப்படுத்தப்பட்ட நெறிமுறைகளையும், மேம்படுத்தப்பட்ட ஆவணப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டு வழிகாட்டிகளை உள்ளடக்குவதுடன், தொடர்ச்சியான மீளாய்வுகள் மற்றும் தர உறுதிப்பாட்டிற்கான பொறிமுறைகளை பலப்படுத்துகின்றது.

இந்த மறுசீரமைப்புகள் முன்முயற்சியான முறைமைப்படுத்தலுக்கான CAASL இன் கடப்பாட்டினை வலியுறுத்துவதுடன் விரைவாக பரிணமிக்கின்ற உலகளாவிய சூழமைவில் இலங்கையின் வான்பயணவியல் மருத்துவ ஆளுகையானது நோக்கத்திற்கு பொருத்தமானதாக இருப்பதனை உறுதிசெய்கின்றது.

# பாதுகாப்பு மற்றும் வசதியளித்தலை மேம்படுத்துதல்

2024 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) பரிணமிக்கின்ற உலகளாவிய நியமங்கள் மற்றும் தேசிய முன்னுரிமைகளுடன் சீரமைவாக நாட்டின் வான்பயணவியல் பாதுகாப்பு மற்றும் வசதியளித்தல் கட்டமைப்பினை தொடர்ந்தும் பலப்படுத்துகின்றது. பாதுகாப்பான, தடையற்ற மற்றும் பயனுறுதியான வான் போக்குவரத்தினை உறுதிப்படுத்துவது அதன் பொறுப்பாணையின் முன்னணியில் உள்ளது. இது முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டினை வலியுறுத்துதல், பாணமிக்கின்ற அச்சுறுத்தல்களை தணித்தல் மற்றும் பயணிகள் அனுபவத்தை மேம்படுத்துதல் என்பவற்றுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டானது கண்காணிப்பு மற்றும் சான்றளிப்பு நடவடிக்கைகள், சைபர்பாதுகாப்பு மேற்பார்வைகள், வான்பயணவியல் பாதுகாப்பு தேவைப்பாடுகளிலான வலியுறுத்தலில் கணிசமான முன்னேற்றத்தை குறிப்பிடுவதுடன், அதன் வான்பயணவியல் வலையமைப்பு பூராவும் வலுவான பாதுகாப்பு வழிமுறைகளைப் பராமரிபபதற்கான இலங்கையின் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது. அதேநேரம், 2024 இனை 'வசதியளித்தல் ஆண்டாக' சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பின் பிரகடனத்தை அங்கீகரிப்பதில் CAASL அதன் வசதியளித்தல் நிகழ்ச்சிநிரலை மேம்படுத்தியது. ஒருங்கிணைக்கப்பட்ட பங்காளி ஈடுபாடு, கொள்கை சீரமைவு மற்றும் தரையிலான முன்னெடுப்புகள் ஊடாக இலங்கையானது எல்லை செயன்முறைகளை சீரமைத்தல், செயற்பாட்டு தயார்நிலையினை மேம்படுத்தல் மற்றும் ICAO இணைப்பு 9 இனை தேசிய நடைமுறைகளுடன் சீரமைக்கின்றது.

கூட்டாக இந்த முயற்சிகள் CAASL இன் இரட்டை முன்னிறுத்தத்தினை பிரதிபலிக்கின்றது: தேசிய வான்வெளியினை பாதுகாக்கும்வேளை பயணிகள், சரக்கு மற்றும் சேவைகளின் பயனுறுதியான ஓட்டத்தினை இயலுமையாக்குகின்றது. பாதுகாப்பு மற்றும் வசதியளித்தல் இரண்டையும் அதன் மேற்பார்வை செயற்பாட்டின் தூண்களாக இணைப்பதன் மூலம் CAASL தேசிய அபிவிருத்திக்கு துணையளிக்கும் மற்றும் உலகளாவிய வான்பயணவியலில் ஒரு நம்பிக்கையான மற்றும் பதலளிப்பவராக இலங்கையின் பங்கானது பலப்படுத்தப்படுகின்றது.

## பாதுகாப்பு மற்றும் வசதியளித்தலை மேம்படுத்துதல்

### 1. கண்காணிப்பு முன்னெடுப்புகள்

2024 இல் வான்பயணவியல் அதிகாரசபை ஆய்வாளர் அலுவலகமானது சர்வதேச நியமங்களின் பிரகாரம் இலங்கையின் வான்பயணவியல் பாதுகாப்பு மேற்பார்வை முறைமையினை நிலைநிறுத்துவதற்கான அதன் பொறுப்பாணையினை நிறைவேற்றுவதில் நிலையாக உள்ளது. கணக்காய்வுகள், பரிசோதனைகள், மற்றும் பாதுகாப்பு பரிசீலனைகள் உள்ளடங்கலான கண்காணிப்பு நடவடிக்கைகள் DGCA அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு அட்டவணையுடன் சீரமைவாக நடாத்தப்பட்டதுடன் அனைத்து வான்பயணவியல் பாதுகாப்பு சேவை வழங்குனர்களை உள்ளடக்குகின்றது.

அட்டவணைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு மேலாக, பரிசோதனைகள் இலங்கையிலிருந்து மற்றும் இலங்கைக்கு அட்டவணைப்படுத்தப்படாத வானூர்தி செயற்பாடுகளுக்கும் நீடிக்கப்பட்டது. ஆய்வாளர் அலுவலகமானது ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் வான்பயணவியல் பாதுகாப்பு சான்றளித்தல் கணக்காய்வில் பங்குபற்றியதுடன், தரை கையாளுதல் ஏற்பாடுகள், வசதிகள் தொடர்பான உரிமம் வழங்கலுக்கு மற்றும் வானூர்திக்கான சேவைகளுக்கு பங்களிப்பு செய்கின்றது.

### 1.1 வானூர்திச் சேவை வழங்குனர் உரிமம் வழங்கல் (வான்பயணயில் பாதுகாப்பு)

2024 இல் வான்பயணவியல் பாதுகாப்பிற்கான வானூர்திச் சேவை வழங்குனர் உரிமமானது பெயரிடப்பட்ட சட்டரீதியான சேவை வழங்குனராக பெயரிடப்பட்ட வரையறுக்கப்பட்ட எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் (பிரைவேட்) இற்கு மீள்வழங்கப்பட்டது. தகுதிச் சான்றிதழுடன் இணைக்கப்பட்ட இந்த மீள்வழங்கலானது தேசிய முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடான முறைமைப்படுத்தல் வான்பயணவியல் பாதுகாப்புச் செயற்பாடுகளை நடாத்துவதற்கான உத்தியோகபூர்வ அங்கீகாரத்தினை குறிப்பிடுகின்றது.

22 ஜூலை முதல் 25 ஜூலை 2025 வரை நடாத்தப்பட்ட வான்பயணவியல் பாதுகாப்பு கணக்காய்வினைத் தொடர்ந்து ஆய்வாளர் அலுவலகமானது கணக்காய்வு கண்டுபிடிப்புகளை விளித்துரைப்பதற்காக உரிமமளிக்கப்பட்டவரினால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் செயற்பாட்டினை மீளாய்வு செய்து ஏற்றுக்கொண்டது. இந்த முயற்சிகள் சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வான்பயணவியல் பாதுகாப்பு நியமங்களுக்கான தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் ஒத்திசைவிற்காக நடந்துகொண்டிருக்கும் கடப்பாட்டினை வெளிக்காட்டுகின்றது.

### 2. சைபர்பாதுகாப்பு அமுலாக்கத்தின் மேற்பார்வை

சிவில் வான்பயணவியல் துறையில் அதிகரிக்கின்ற டிஜிட்டல்மயமாக்கலுக்காக வான்பயணவியல் பாதகாப்புப் பிரிவானது 2024 இல் அதன் சைபர்பாதுகாப்பு மேற்பார்வை செயற்பாடுகளை கடுமையாக்கியது. டிஜிட்டல் உருமாற்றமானது செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் கொள்திறனை துரிதப்படுத்தியவேளை அது அனைத்து பங்காளிகள் தளங்களிலும் சிக்கலான சைபர் இடர்களை அறிமுகப்படுத்தியது.

பரிணமிக்கின்ற இந்த அச்சுறுத்தல்களை தணிப்பதற்காக வான்பயணவியல் பாதுகாப்புப் பிரிவானது வான்பயணவியல் சேவை வழங்குனர்களிடையே சைபர்பாதுகாப்பு அமுலாக்கத்தின் பயனுறுதித்தன்மையினை மதிப்பிடுவதற்காக இலக்குவைத்த கண்காணிப்பு நடவடிக்கைகளை நடாத்தியது. இந்த மேற்பார்வை நடவடிக்கைகள், நிதியியில் நேர்மை, சேவைத் தொடர்ச்சி மற்றும் வான்பயணவியல் செயற்பாடுகளின் பாதுகாப்பு என்பவற்றை சமரசம் செய்யக்கூடிய சாத்தியமான சைபர் தாக்குதல்களுக்கு எதிரான மீளெழுச்சியினை உறுதிசெய்வதற்காக வடிவமைக்கப்பட்டன.

### 3. வலியுறுத்தல் செயற்பாடுகள்

வான்பயணவியல் பாதுகாப்புப் பிரிவானது பொருத்தமான வான்பயணவியல் பாதுகாப்பு தேவைப்பாடுகளை மீறியதாக கண்டுபிடிக்கப்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டினை தொடர்ந்தும் உறுதிசெய்கின்றது. திருத்தச் செயற்பாடுகளது அமுலாக்கத்தினை கண்காணிப்பதற்காக பின்னூட்டமான பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. இதன்மூலம் வான்பயணவியல் சூழலமைப்பு பூராவும் பொறுப்புக்கூறல் மற்றும் முறைமைப்படுத்தல் ஒத்திசைவுக் கலாச்சாரமானது வலியுறுத்தப்படுகின்றது.

### 4. சான்றளித்தல் நடவடிக்கைகள்

### 4.1 வானூர்தித்தள சான்றளிப்பு

ஆய்வாளர் அலுவலகமானது 2024 இல் மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையத்தின் வானூர்தித்தள சான்றளிப்பின் புதுப்பித்தலுக்கு துணையளித்தது. இது வானூர்தித்தள செயற்பாட்டாளர் அனைத்து பொருத்தமான வான்பயணவியல் பாதுகாப்பு முறைமைப்படுத்தல் நியமங்களுடன் (AVSEC)இணக்கப்பாட்டுடன் இருப்பதனை உறுதிசெய்கின்றது.

### 4.2 வான் செயற்பாட்டாளர் சான்றளிப்பு

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வானூர்தி செயற்பாட்டாளர்களுக்கான பாதுகாப்பு திட்ட மீளாய்வுகள் மற்றும் செயற்பாட்டு மதிப்பீடுகள்

நடாத்தப்பட்டன. இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் வான் செயற்பாட்டாளர் சான்றிதழ்கள் மற்றும் வெளிநாட் வான் செயற்பாட்டாளர் சான்றிதழ்களின் ஆரம்ப வழங்கல் மற்றும் புதுப்பித்தல்களுக்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் பாதுகாப்பான செயற்பாட்டு நடைமுறைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

### 4.3 வான்பயணவியல் பாதுகாப்பு ஆளணியினர் சான்றளித்தல்

வருடம் முழுவதும் வான்பயணவியல் பாதுகாப்பு ஆளணியானது சான்றளித்தல் மற்றும் மீள்சான்றித்தலை தொடர்ந்தது. வான்பயணவியல் பாதுகாப்பு முகாமையாளர், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உள்ளடங்கலான ஆளணியினர் ஒரு விரிவான மதிப்பீட்டு முறையினூடாக சான்றளிக்கப்பட்டார்கள். இது பாதுகாப்பு சல்லடையிடல் மற்றும் செயற்பாட்டு மேற்பார்வையில் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது.

### 4.4 வான்பயணவியல் பாதுகாப்பு சல்லடையிடல் உபகரண சான்றளிப்பு

2024 இல் வான்பயணவியல் பாதுகாப்பு ஆய்வாளர் அலுவலகம், எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் (ஸ்ரீலங்கா) லிமிட்டட் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் என்பவற்றால் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு சல்லடையிடல் உபகரணங்களில் சான்றளிப்பு மற்றும் மீள்சான்றளிப்பினை நடாத்தியது. இந்த மதிப்பீடுகள் இலங்கையின் விமான நிலையங்களில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்களின் செயற்பாட்டு நம்பகத்தன்மை மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டினை உறுதிசெய்தன.

### 5. தேசிய சிவில் வான்பயணவியல் பாதுகாப்பு குழுவின் (NCASC) ஒருங்கிணைப்பு

சிவில் வான்பயணவியல் பாதுகாப்பிற்கு பொறுப்பான தேசிய பங்காளிகளிடையே வினைத்திறனான ஒருங்கிணைப்பினை உறுதிசெய்வதற்காக தேசிய சிவில் வான்பயணவியல் பாதுகாப்பு குழுவானது (NCASC) 2024 இல் காலமுறையாக கூடியது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் தலைமை தாங்கப்படும் குழுவானது அரசாங்க முகவரமைப்புகள், விமானநிலைய மற்றும் வானூர்தி செயற்பாட்டாளர்கள், வான் போக்குவரத்து சேவை வழங்குனர்கள் மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனங்களிடையேயான ஒத்துழைப்பிற்கு வசதியளித்தது. இந்த கூட்டங்கள் தேசிய வான்பயணவியல் பாதுகாப்புக் கொள்கையினை அமுலாக்குவதற்கும் மூலோபாயத் தீர்மானம் மேற்கொள்வதற்கும் ஒரு மேடையாக சேவையாற்றியது.

### 6. விமானம் மூலம் ஆயுதங்களை ஏற்றிச்செல்வதற்கான அங்கீகாரம்

தேசிய பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைவாக இலங்கையின் வான்வெளியிலும் அதன் விமான நிலையங்களூடாகவும் ஆயுதங்களை ஏற்றிச்செல்வதற்கான அங்கீகாரம் வழங்குவதனை DGCA தொடர்ந்தார். அரசாங்க மற்றும் தனியார்துறை நிறுவனங்களினால் வேண்டப்பட்ட இந்த அங்கீகாரங்கள் வானூர்தி சரக்கு தொட்டியில் ஆயுதங்களின் பாதுகாப்பான போக்குவரத்து, பொருத்தமானவிடத்து, கடுமையான மதிப்பிட்டு செயன்முறைகளைத் தொடர்ந்து விமானத்தினுள்ளான எடுத்துச்செல்லல் ஆகியவற்றை உள்ளடக்கின.

### 7. நீதித்துறை மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள பயணிகளின் வான் போக்குவரத்திற்கான அங்கீகாரம்

கட்டமைக்கப்பட்ட இடர் மதிப்பீடுகளது விளைவுகளின் அடிப்படையில் இலங்கையிலிருந்தும் இலங்கைக்கும் நீதித்துறை மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள பயணிகளின் வான் போக்குவரத்திற்கான அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. இந்த மதிப்பீடுகள் வான்பயணவியல் பாதுகாப்புப் பிரிவினால் நடாத்தப்படுவதுடன், அத்தகைய விடயங்கள் பாதுகாப்பாக கையாளப்படுவதனை உறுதிசெய்வதற்காக பொருத்தமான சட்ட வலியுறுத்தல் மற்றும் முறைமைப்படுத்தல் முகவரமைப்புகளினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் மற்றும் அவதானிப்புகள் கவனத்திலெடுக்கப்படுகின்றன.

### 8. சிவில் வான்பயணவில் அச்சுறுத்தல் மதிப்பீட்டுக் குழு

இலங்கையின் சிவில் வான்பயணவியல் துறைக்கான சாத்தியமான அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதற்காக 2024 முழுவதும் சிவில் வான்பயணவியல் அச்சுறுத்தல் மதிப்பீட்டுக் குழுவானது கூடியது. குழுவின் பங்கானது தொடர்ச்சியான அச்சுறுத்தல் பகுப்பாய்வு மற்றும் தேசிய உளவுத்துறையின் தலைமைக்கு (CNI) அறிக்கைகளின் சமர்ப்பிப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது. இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் DGCA நிலவுகின்ற அச்சுறுத்தல் மட்டங்களில் நேரத்திற்கேற்ற ஆலோசனைகளை பெறுவதுடன், தேசிய மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு சீரமைவாக விகிதாசார மற்றும் வினைத்திறனான வான்பயணவியல் பாதுகாப்பு வழிமுறைகளின் அமுலாக்கத்தினை இயலுமையாக்குகின்றது.

## ICAO இணைப்பு 9 இன் அமுலாக்கம் - 2024 இல் வசதியளித்தல் மூலோபாயங்கள்

ICAO இணைப்பு 9 – வசதியளிப்பின் 75 ஆவது ஆண்டுவிழாவினை அங்கீகரிப்பதில் வசதியளிப்பதற்காக சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பானது (ICAO) 2024 ஆம் ஆண்டினை 'வசதியளித்தல் ஆண்டாக' (FAL2024) பிரகடனம் செய்தது. இதற்கு பதிலளிக்கும் விதமாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை உலகளாவிய நியமங்களுக்கு சீரமைவாக தேசிய வசதியளித்தல் ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்கில் ஒரு தொடரான முன்னெடுப்புகளை ஆரம்பித்தது. இந்த முயற்சிகள் பாதுகாப்பு மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டினை பராமரிக்கும்வேளை பயணிகள், பணியாட்கள், சரக்கு மற்றும் வானூர்தியின் வினைத்திறனான நகர்வினை உறுதிசெய்வதில் வசதியளிப்பின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது.

வசதியளித்தல் என்பது சர்வதேச சிவில் வான்பயணவியலின் ஒரு முக்கியமான கூறாகும் - எல்லைக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் விமான நிலையச் செயற்பாடுகளின் பயனுறுதியான முகாமைப்படுத்தலின் தடையற்ற செயற்பாட்டிற்கு முழுமையானதாகும். CAASL அதன் 2024 திட்டங்களினூடாக, ICAO இன் உலகளாவிய குறிக்கோள்களுடனான சீரமைவினை உறுதிசெய்து இலங்கையின் வான்பயணவியல் வசதியளித்தல் கட்டமைப்பினை பலப்படுத்துவதற்கான அதன் கடப்பாட்டினை வலியுறுத்தியது.

### 1. ICAO இணைப்பு 9 இனை ஒருங்கிணைத்தல் - தேசிய வசதியளித்தல் வழிமுறைகளை பலப்படுத்துதல்

FAL2024 உடன் சீரமைவாக தேசிய வான்பயணவியல் சூழலமைப்பு பூராவும் ICAO இணைப்பு 9 இன் ஏற்பாடுகளை ஒருங்கிணைத்து வலியுறுத்துவதற்காக CAASL விரிவான நடவடிக்கைகளை செயலூக்கமாக பொறுப்பேற்றது. இந்த முன்னெடுப்புகள் முறையான முகாமைத்துவம் மற்றும் இணைப்பு 9 இற்கான புதுப்பிப்புகளது அமுலாக்கத்தினை உள்ளடக்கியதுடன், ICAO வழிகாட்டலின் பிரகாரம் அனைத்து திருத்தங்கள் மற்றும் மேம்பாடுகள் வினைத்திறனாக பிரயோகிப்பதனை உறுதிசெய்தது.

ICAO இன் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வு திட்டத்தின் - தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறை (USOAP CMA) கீழான வித்தியாசங்களது இலத்திரனியல் கோப்பிடுதலின் (EFOD) துல்லியமான மற்றும் உரியநேரத்திலான சமர்ப்பிப்பு ஒரு முக்கிய முன்னிறுத்தப் பிரிவாக காணப்பட்டது. இந்த செயன்முறையானது உலகளாவிய வெளிப்படைத்தன்மைக்கு துணையளிப்பதுடன், முழுவதும் இணக்கப்பாடான

## செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

மற்றும் சர்வதேச ரீதியில் மதிப்புமிக்க வான்பயணவியல் மேற்பார்வை முறைமையினை பராமரிப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கின்றது.

ICAO முறைமைப்படுத்தல் கடிதத்தொடர்பினை மீளாய்வு செய்து அதற்கு பதிலளிப்பதில் CAASL ஒரு முக்கிய பங்கினை வகித்ததுடன், உலகளாவிய வசதியளித்தல் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தும் பிராந்திய மற்றும் சர்வதேச கலந்துரையாடல்களில் பங்கேற்றது. ஒரு முறைமைப்படுத்துபவராகவும் ஒரு துறைசார் துணையளிப்பவராகவும் ஈடுபடுவதன் மூலம் CAASL சர்வதேச சிவில் வான்பயணவியல் நியமங்களது அபிவிருத்தி மற்றும் பிரயோகத்திற்கு அர்த்தமுள்ள விதத்தில் பங்களிப்பு செய்வதற்காக அதன் கொள்திறனை பலப்படுத்தியுள்ளது.

இதற்கு இணையாக, CAASL குடிவரவு, சுங்கம் மற்றும் ஏனைய பொருத்தமான அதிகாரிகளுடன் தொடர்ந்தும் நெருக்கமாக செயலாற்றுகின்றது. இது எல்லைக் கட்டுப்பாட்டுச் செயன்முறைகளை சீரமைத்தல், பயணிகள் செயலாக்கல் முறைமைகளை மேம்படுத்துதல் மற்றும் வான் பயணிகளின் வினைத்திறனான நகர்வினையும் உறுதிசெய்கின்றது. இந்த ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகள் பாதுகாப்பினை நிலைநிறுத்தி, பயணிகள் அனுபவத்தினை மேம்படுத்தி இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளைச் சந்தித்தல் என்பவற்றுக்காக வடிவமைக்கப்பட்டதாகும்.

கூட்டாக, இந்த முன்னெடுப்புகள் உலகளாவிய போக்குகள் மற்றும் சவால்களுக்கு பதிலளிக்கும் ஒரு பாதுகாப்பான, வினைத்திறனான மற்றும் வசதியளித்தல் மையமான வான்பயணவியல் சூழலை வளர்ப்பதற்கான தேசிய கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றன.

### 2. 8ஆவது தேசிய வான் போக்குவரத்து வசதியளித்தல் குழுவினை (NATFC) கூட்டுதல் - கூட்டு ஆளுகையினை மேம்படுத்துதல்

14 ஆகஸ்ட் 2024 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தேசிய வான் போக்குவரத்து வசதியளித்தல் குழுவின் 8ஆவது கூட்டத்தினை கோகில அரங்கத்தில் விருந்தோம்பியது. இக்கூட்டமானது துறைமுகம், கப்பல் மற்றும் வான்பயணவியல் அமைச்சின் செயலாளர் திரு. ருவன்சந்திர அவர்களால் தலைமை தாங்கப்பட்டதுடன், அரசாங்கம், திணைக்களங்கள், வான்பயணவியல் அதிகாரசபைகள் மற்றும் சேவை வழங்குனர்களில் இருந்து பரவலான பங்காளிகளை ஒன்றுதிரட்டியது.




தேசிய வான் போக்குவரத்து வசதியளித்தல் திட்டத்தின் கீழ் கொள்கை அமைத்தல் மற்றும் தீர்மானம் அமுலாக்கத்திற்கு ஒரு மத்திய ஒருங்கிணைப்பு மேடையாக NATFC சேவையாற்றுகின்றது. இது செயற்பாட்டு நெரிசல்களை தீர்ப்பதற்கும், வசதியளித்தல் செயன்முறைகளை தரப்படுத்துவதற்கும், இலங்கையின் சர்வதேச நுழைவாயிலில் தடையற்ற வான் போக்குவரத்துக்கு துணையளிப்பதற்கும் முகவர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பினை இயலுமையாக்குவதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது.

வசதியளித்தலிலான முக்கியத்துவத்தில் ICAOஇன் வலியுறுத்தலுக்கு சீரமைவாக, கூட்டமானது பாதுகாப்பிற்கு சமாந்திரமாக சிவில் வான்பயணவியலில் ஒரு தூணாக அதன் பங்கினை எடுத்துக்காட்டியது. கோவிட்-19 தொற்றின்போது பிரயாணம் மற்றும் வர்த்தகத்தினை முகாமைப்படுத்திய அனுபவம் மற்றும் அதன்பின்னரான மீட்டல் கட்டமானது மீளெழுச்சி மற்றும் செயற்பாட்டு தொடர்ச்சியில் ஒத்திசைவான வசதியளித்தல் செயன்முறைகளின் முக்கியத்துவத்தினை வெளிக்காட்டியது.

வசதியளித்தலானது, ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் வினைத்திறனான மனிதப் பயன்பாடு, செயன்முறையான, மற்றும் பொருண்மையான வளங்களது பயன்பாடு என்பவற்றை உள்ளடக்குகின்றது. இது வானூர்தி, பயணிகள், பொதிகள், சரக்கு மற்றும் அஞ்சலில் தடையற்ற செயன்முறையாக்கத்தினை இயலுமையாக்குகின்றது.





NATFC இன் வசதியளித்தல் அங்கத்தவர்கள் வான் போக்குவரத்தின் வளர்ச்சிக்கு துணையளிப்பதற்கும், விமானநிலைய வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் தேசிய பாதுகாப்பினை காப்பதற்கும் ஒரு நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் தொடர்ச்சியான அமுலாக்கப்படும் வசதியளித்தல் திட்டமானது அடிப்படையானது என ஒப்புதலளிக்கின்றார்கள்.

8ஆவது NATFC கூட்டமானது மூலோபாய கலந்துரையாடலுக்கான ஒரு கருத்துக்களமாக மாத்திரம் சேவையாற்றாது, ஒருங்கிணைக்கப்பட்ட வசதியளித்தல் முயற்சிகளூடாக அதன் வான்பயணவியல் துறையினை பலப்படுத்துவதற்கான இலங்கையின் தொடர்ச்சியான கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது. ஒரு இயக்காற்றலான உலகளாவிய சூழலில் பரிணமிக்கின்ற வான்பயணவியல் சவால்களை விளித்துரைப்பதில் ஒத்துழைப்பு, பங்காளிகள் சீரமைவு மற்றும் இணக்கத்திறன் என்பவற்றின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது.



## மத்தள ராஜபக்ஷ சா்வதேச விமான நிலையம் (HRI/VCRI) மற்றும் யாழ்ப்பாண விமான நிலையத்தில் (JAF/VCCJ) விமானநிலைய வசதியளித்தல் சோதனையிடல் கூட்டங்கள்

2024 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL) மத்தள ராஜபக்ஷ சா்வதேச விமானநிலையம் (HRI/VCRI) மற்றும் யாழ்ப்பாண விமானநிலையத்தில் (JAF/VCCJ) முன்னிறுத்தமான வசதியளித்தல் சோதனையிடல் கூட்டங்களுக்கு வசதியளிப்பதனை பொறுப்பேற்றது. இது ICAO இணைப்பு 9 - வசதியளித்தல் நியமங்களுடனான இணக்கப்பாட்டினை கண்காணித்து மேம்படுத்தும் அதன் தேசிய மூலோபாயத்தில் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையிடல்கள் இலங்கையின் வான்பயணவியல் வசதியளித்தல் கட்டமைப்பினை உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு சீரமைவாக பலப்படுத்துவதற்கான பரந்த முன்னெடுப்பின் ஒரு முக்கிய கூறாக காணப்பட்டன.

இந்த சோதனையிடல்களின் பிரதான குறிக்கோள் எல்லைக் கட்டுப்பாட்டு செயன்முறைகள், பயணிகள் செயன்முறையாக்கல் பொறிமுறைகள், குடிவரவு பணிப்பாய்வுகள் மற்றும் ஒட்டுமொத்த விமான நிலைய வசதியளித்தல் சேவைகளது பயனுறுதித்தன்மை மற்றும் நிலைத்தன்மை என்பவற்றை மதிப்பிடுவதாகும். ICAO இனால் வரையறை செய்யப்பட்ட தேவைப்பாடுகளை சந்திப்பதற்கு இந்த சா்வதேச நுழைவாயில்களின் செயற்பாட்டு தயாா்நிலையினை மதிப்பிடுவதில் வலியுறுத்தப்பட்டது. இது குறிப்பாக, விரைவாக்கப்பட்ட பயணிகள் அனுமதி, வீசா மற்றும் சுங்க ஒருங்கிணைப்பு, அணுகத்தக்கமை ஏற்பாடுகள் மற்றும் விமான நிலைய முனையங்களூடாக ஆட்கள் மற்றும் பொருட்களின் வினைத்திறனான அசைவு போன்ற பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு விமான நிலையங்களிலும் சோதனையிடல் அணிகள் விமான நிலைய முகாமைத்துவம், குடிவரவு மற்றும் சுங்க அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு ஆளணியினா் உள்ளடங்கலான முக்கிய செயற்பாட்டு பங்காளிகளுடன் ஈடுபட்டது. இது தரையிலான நடத்தை மீளாய்வுகளை நடாத்துவதற்கு மற்றும் ஆலோசனைக் கூட்டங்களை நடாத்துவதற்கும் ஆகும். இந்த ஈடுபாடுகள் நாளாந்த வசதியளித்தல் நடைமுறைகளில் மதிப்புமிக்க நுண்ணறிவினை வழங்கியதுடன், செயன்முறைசாா்ந்த அல்லது தொழில்நுட்பவியல் மேம்பாட்டிற்கான பலத்தையும் வாய்ப்புக்கள் பிரிவுகளையும் எடுத்துக்காட்டியது.

இந்த மதிப்பீடுகளின் விளைவுகள் மத்தள ராஜபக்ஷ சா்வதேச விமான நிலையம் மற்றும் யாழ்ப்பாண விமான நிலையம் என்பன வசதியளிப்பதில் உயா்ந்த நியமங்களை பராமரிப்பதற்கான அவற்றின் கடப்பாட்டினை உறுதிசெய்தது. குறிப்பாக, இரண்டு விமான நிலையங்களும் எல்லை முகவரமைப்புகளிடையே கட்டமைக்கப்பட்ட ஒருங்கிணைப்பு, பயணிகளுக்கு வினைத்திறனான அடையாளங்கள் மற்றும் தகவல்களது பரப்புதல், மற்றும் சா்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு மற்றும் செயன்முறையாக்கல் ஒழுங்குமுறைகளுடன் ஒட்டியொழுகுதல் என்பவற்றை வெளிப்படுத்தின.

இந்த முன்முயற்சியான சோதனையிடல்கள் இணைப்பு 9 இன் ஏறுபாடுகளை உறுதிசெய்யும்வேளை தடையற்ற, பாதுகாப்பான வான்பயண கொள்கைகளை நிலைநாட்டுவதற்கான இலங்கையின் தொடா்ச்சியான முயற்சி வலியுறுத்தப்படுகின்றது. இவா்கள் விரைவாக பாணமிக்கின்ற வான்பயணவியல் நிலத்தோற்றத்தில் செயற்பாட்டு தனிச்சிறப்பு, பயணிகள் திருப்தி மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு என்பவை நோக்கிய பயணத்தில் விமான நிலைய செயற்பாட்டாளா்களுக்கு வழிகாட்டும் மற்றும் துணையளிக்கும் CAASL இன் பங்கினையும் வலியுறுத்துகின்றது.

அத்தகைய முன்னெடுப்புகளினூடாக இலங்கை தெற்காசியப் பிராந்தியத்தினுள் ஒரு பதிலளிக்கின்ற மற்றும் வசதியளித்தல் சாா்ந்த வான்போக்குவரத்துக்கான மையமாக அதன் நற்பெயரினை மேலும் பலப்படுத்துகின்றது.







## 4. இலங்கையின் வான்பயணவியல் துறையில் வசதியளித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்துதல்

சிவில் வான்போக்குவரத்தில் வசதியளித்தலை பலப்படுத்துவதற்கான அதன் தொடா்ச்சியான கடப்பாட்டிற்கு சீரமைவாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையனது (CAASL) 2024 முழுவதும் ஒரு பரவலான முறைமைப்படுத்தல், கொள்கை மற்றும் ஒத்துழைப்பு முன்னெடுப்புகளை செயலூக்கமாக தொடா்ந்துள்ளது. இந்த முன்னெடுப்புக்கள் ICAOஇணைப்பு 9 - வசதியளித்தலின் பரிணமிக்கின்ற ஏற்பாடுகளுடன் இலங்கையின் வான்பயணவியல் வசதியளித்தல் நடைமுறைகளை சீரமைப்பதற்காக வடிவமைக்கப்பட்டதுடன், நாட்டின் வான்பயணவியல் கட்டமைப்பு மற்றும் செயன்முறைகள் வினைத்திறனாகவும், பாதுகாப்பானதாகவும் மற்றும் பயணிகள் மையப்படுத்தியதாகவும் இருப்பதனை உறுதிசெய்கின்றது.

தேசிய வான்பயணவியல் முறைமைப்படுத்துபவராக CAASL இன் பங்கானது இணக்கப்பாட்டு மேற்பாா்வைக்கு அப்பால் நீடித்துள்ளது. அது மீளெழுச்சியான, மாற்றியமைத்துக்கொள்ளத்தக்க, மற்றும் உலகளாவிய ரீதியில் சீரமைவான ஒரு வசதியளித்தல் கட்டமைப்பினை கட்டியெழுப்புவதற்காக பன்முகமான அரசாங்க முகவா்கள் மற்றும் துறைசாா் பங்காளிளுடனான ஒத்துழைத்தல், தேசிய கொள்கையினை வடிவமைத்தல், குறுக்கு துறைசாா் குழுக்களுடன் ஈடுபடுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

### 4.1 முறைமைப்படுத்தல் மேற்பாா்வையினை பலப்படுத்துவதற்கு தேசிய வசதியளித்தல் குழுக்களில் பங்குபற்றுதல்

CAASLஇன் வசதியளித்தல் மூலோபாயத்தின் ஒரு மையமான அம்சமாக, வான்பயணவியல் தொடா்பான கொள்கையில் செல்வாக்கு செலுத்தி வடிவமைக்கும் தேசிய மட்டத்திலான குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப செயற்குழுக்களில் செயலூக்கமான பங்குபற்றலாகும். இந்த கருத்துக்களங்களிலான மூலோபாய பிரதிநிதித்துவத்தினூடாக ICAO இணைப்பு 9 இன் நியமங்களுடனான சீரமைவினை பாதுகாக்கும் வேளை சிவில் வான்பயணவியல் முன்னுரிமைகள் பரந்த தேசிய முன்னெடுப்புகளுடன் ஒருங்கிணைக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது.

பின்வரும் குழுக்கள் மற்றும் முகவரிடையேயான முன்னெடுப்புகளில் அதிகாரசபையின் பங்களிப்புகள் வான்பயணவியல் வசதியளிப்பினை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கினை வகித்துள்ளன:

- **இலவசமாக சுற்றுலா வீசாவினை வழங்குதல்** – வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் தலைமை தாங்கப்படுவதுடன்,

# செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

இந்த முன்னெடுப்பானது உள்நுழைவு தேவைப்பாடுகளை தளர்த்துவதன் மூலம் உள்வருகை சுற்றுலாத்துறையினை தூண்டுவதுடன் வான் பயணத்தை ஊக்குவிக்கின்றது.

- **இலங்கை தன்னியக்கமான எல்லைக் கட்டுப்பாட்டு (ABC) வாசல்களின் (e-Gates) அமுலாக்கம்** – குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் நடாத்தப்படும் இந்த முன்னெடுப்பானது எல்லை செயன்முறையாக்கல், செயற்திறனை மேம்படுத்தல் மற்றும் பயணிகள் அனுபவத்தினது டிஜிட்டல் உருமாற்றத்திற்கு துணையளிக்கின்றது.

- **USD 525,620 SITA கொடுப்பனவிலான குழு** – செலவு வெளிப்படைத்தன்மை மற்றும் சேவைத் தொடர்ச்சி என்பவற்றை உறுதிசெய்யும் வான்பயணவியல் முறைமைகளுக்கான சர்வதேச கொடுப்பனவு பொறிமுறைகளின் மேற்பார்வை.

- **கடவுச்சீட்டு பலப்படுத்தல் குழு (ஹென்லி கடவுச்சீட்டு சுட்டி)** – வீசா வசதியளித்தல் மற்றும் சுதந்திரமான பிரயாணத்தில் நேரான விளைவுடன் இலங்கையின் உலகளாவிய நகர்திறன் தரப்படுத்தலை மேம்படுத்துவதற்கான முயற்சிகள்.

- **பொது முக்கிய உட்கட்டமைப்பின் நிறுவுதல் (PKI)** - பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டமானது எல்லைக் கடவையின்போது டிஜிட்டல் அடையாள சரிபார்ப்பினை மேம்படுத்துகின்றது.

- **BIADP தொழில்நுட்பக் குழு (BIA இல் பயணிகள் முனைய அபிவிருத்தி)** – துறைமுகம், கப்பல் மற்றும் வான் போக்குவரத்து அமைச்சின் கீழான ஒரு முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சி.

- **BIA பெருந்திட்ட கொள்முதல் குழு** – வளர்ச்சியடையும் பயணிகள் எண்ணிக்கை மற்றும் சரக்கு பருமன்களுக்கு துணையளிப்பதற்காக விமானநிலைய உட்கட்டமைப்பின் மூலோபாய நீண்டகால திட்டமிடலை உறுதிசெய்கின்றது.

- **ஏற்றுமதி அபிவிருத்திச் சபை - வர்த்தக வசதியளித்தல் செயலணி** – வான்பயணவியல் சேவைகளை தேசிய ஏற்றுமதி மூலோபாயங்களுடன் சீரமைத்து செயற்திறனான சரக்கு நகர்வினை இயலுமையாக்குதல்.

- **BIA வசதியளித்தல் குழு** – செயற்பாட்டு மற்றும் பயணிகள் வசதியளித்தல் சிக்கல்களை விளித்துரைப்பதற்கு எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் (ஸ்ரீலங்கா) லிமிட்டட்டினால் ஒருங்கிணைக்கப்பட்டது.

- **சுற்றுலாத்துறை ஆலோசனைக் குழு** – இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையினால் தலைமை தாங்கப்படும் இக்குழுவின் நோக்கம் வான்பயணவியல் வசதியளிப்பினை நாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி குறிக்கோள்களுடன் சீரமைத்தல்.

இந்த ஈடுபாடுகள் ஒரு பரந்தளவிலான கொள்கைப் பிரிவுகளிடையே வசதியளித்தல் மேம்பாடுகளுக்கு துணையளிப்பதில் CAASL இன் தலைமைத்துவப் பங்கானது தேசிய அபிவிருத்தி மூலோபாயங்களுடன் வான்பயணவியல் அக்கறைகள் ஒருங்கிணைக்கப்படுவதனை உறுதிசெய்வதாகும்.

## 4.2 மூலோபாய கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டான முன்னெடுப்புகள்

குழு மட்டத்திலான ஈடுபாட்டிற்கும் மேலாக CAASL பன்முகமான மூலோபாய கொள்கை கலந்துரையாடல்கள், பங்காளிகள் கலந்துரையாடல்கள் மற்றும் குறுக்கு துறைசார் செயலமர்வுகள் என்பவற்றில் பங்குபற்றியுள்ளது. இந்த முன்னெடுப்புகள் வசதியளித்தலை மேம்படுத்துதல், பரிணமிக்கின்ற தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் வான் போக்குவரத்தின் எதிர்கால கேள்விகளுக்குத் தயாராதல் என்பவற்றில் முன்னோக்கமான கலந்துரையாடல்களுக்கான மேடைகளை உருவாக்கியுள்ளது.

முக்கிய ஈடுபாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- **போக்குவரத்துத் துறைக்கு காலநிலை நுண்ணறிவான, பசுமை வளர்ச்சி மூலோபாயத்தின் அபிவிருத்தி** – சுற்றாடல் அமைச்சினால் தலைமை தாங்கப்படும் இக்குழு வான்பயணவியல் அபிவிருத்தியினை நிலைபேறுடைய நடைமுறைகள் மற்றும் காலநிலை மீளெழுச்சியுடன் சீரமைப்பதிலான முன்னிறுத்தத்தைக் கொண்டுள்ளது.

- **ஸ்ட்ரட்லிங்க் இ-பயிலல் முறைமையின் அமுலாக்கம்** – இது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் முன்னெடுப்பு. மேம்பட்ட சரக்கு மற்றும் சுங்க வசதியளித்தலுக்கு பங்களிப்பு செய்யும் அனுமதிப் பத்திரம் வழங்கலை சீரமைத்தல்.

- **கடல் இடம்சார் திட்டமிடல் மற்றும் நீள முதலீட்டு சார்பிடல்** – UNDPஇன் ஒத்துழைப்புடன் நிதி அமைச்சினால் நடாத்தப்படும் இம்முயற்சி வான்பயணவியல் இடைவழியுடன் சீரமைவான பன்முக ஏற்பாட்டியல் மற்றும் பொருளாதார வலயமிடலுக்கு துணையளித்தல்.

- **தேசிய குடியகல்வு கொள்கை வழிநடத்தல் குழு (2023–2027)** – தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் முன்னெடுப்பான இது விமானநிலைய பயணிகள் வசதியளித்தலுக்கான விளைவுடன் தொழிலாளர் நகர்திறன் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பினை விளித்துரைத்தல்.

- **தொற்றும் நோய்க்கு எதிர்வினையாக எல்லைக் கட்டுப்பாட்டினை பலப்படுத்துதல்** – துறைமுக, கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சினால் ஒருங்கிணைக்கப்பட்டது. இது எல்லை சுகாதார மீளெழுச்சியினை கட்டியெழுப்புதல், குறிப்பாக தொற்றின் பின்னரான வான்பயணவியல் மீட்டல்.

- **கொழும்பு மற்றும் மேல் மாகாண பெருந்திட்ட ஆலோசனை** – நகர அபிவிருத்தி மற்றும் வீடமைத்தல் அமைச்சினால் உருவாக்கப்பட்டது. இது பிராந்திய அபிவிருத்தித் திட்டமிடலில் வான்பயணவியல் உட்கட்டமைப்பினை ஒருங்கிணைத்தல்.

- **24 ஆவது ஏற்றுமதியாளர்களது மன்றம்** – ஏற்றுமதியாளர்களினால் முகங்கொடுக்கப்படும் ஏற்பாட்டியல் மற்றும் வசதியளித்தல் சவால்களை விளித்துரைப்பதற்கான ஒரு வாய்ப்பு, இது வான்பயணவியல் சரக்குச் சேவைகள் தேசிய வர்த்தக முன்னுரிமைகளுக்கு எதிர்வினையாக இருத்தல்.

- **வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பில் இலங்கை-எகிப்து கூட்டு ஆணைக்குழு** – வர்த்தக வசதியளித்தல் மற்றும் வான் இணைப்பில் இருதரப்பு கலந்துரையாடல்களை ஊக்குவித்தது.

- **போக்குவரத்துத் துறை பசுமை முதலீடுகளில் முன்னிறுத்தக் குழு கலந்துரையாடல்கள்** – சுற்றாடல் அமைச்சினால் தலைமை தாங்கப்படுவதுடன், இது நிலைபேறுடைய வளர்ச்சிக்கு வான்பயணவியல் துறையின் தயார்நிலையினை மதிப்பிடுகின்றது.

இந்த குறுக்குவெட்டு முன்னெடுப்புகளினூடாக CAASL இணைப்பு 9 - வசதியளித்தல், உடனான சீரமைவினை மாத்திரம் ஊக்குவிக்காது, தேசிய மற்றும் சர்வதேச பங்காளிகளது தேவைகளைச் சந்திக்கும்விதமாக இலங்கையின் வான்பயணவியல் துறையானது விரைவூக்கமாகவும், உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மையாகவும் இருப்பதனை உறுதிசெய்கின்றது.

முறைமைப்படுத்தல் மற்றும் மூலோபாய மன்றங்களிலான CAASL இன் செயலூக்கமான பங்கானது 2024 இல் இலங்கையின் வசதியளித்தல் ஆற்றல்களை பலப்படுத்தியுள்ளது. முகவர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு, தேசிய அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் குறுக்கு துறைசார் ஒத்துழைப்புகளில் பங்குபற்றுவதன் மூலம் அதிகாரசபையானது அதன் கொள்கை மற்றும் நடைமுறையில் ICAO இணைப்பு 9 ஏற்பாடுகளை தொடர்ச்சியாக புகுத்தியுள்ளது.

இந்த கூட்டு முயற்சிகள் ஒரு தடையற்ற, பாதகாப்பான, மற்றும் பயணிகள் தோழமையான வான்பயணவியல் சூழலமைப்பிற்கு பங்களித்துள்ள வேளை உலகளாவிய வசதியளித்தல் குறிக்கோள்களுக்கு அர்ப்பணிப்புள்ள ஒரு பொறுப்புமிக்க ICAO அங்கத்தவராக இலங்கையின் நிலையானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வான்பயணவியல் இயக்கவியல்கள் தொடர்ச்சியாக பரிணமிக்கின்றபோது வினைத்திறன், முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் செயற்பாட்டு தனிச்சிறப்பினை சமநிலைப்படுத்துவதற்கான வசதியளித்தல் மறுசீரமைப்புகளை வழிநடத்துவதற்கு கடப்பாட்டுடன் உள்ளது.





## செயற்திறன் மற்றும் வினைத்திறனான முகாமைத்துவம்

2024 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL) அதன் செயற்பாடுகள் முழுவதும் வினைத்திறன், பொறுப்புக்கூறல் மற்றும் திடமான ஆளுகையினை தொடர்ந்தும் இயக்கியது. மேம்பட்ட மேற்பார்வை மற்றும் தர உறுதிமொழி முறைமைகளூடாக இணக்கப்பாட்டு கண்காணிப்பானது பலப்படுத்தப்பட்டது. இது ICAO இன் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வு திட்டம் - தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறையுடன் (USOAP-CMA) சீரமைவினை உறுதிசெய்கின்றது. இந்த மேம்பாடுகள் பாதுகாப்பு நியமங்களை வலியுறுத்தியது மாத்திரமன்றி செயற்பாட்டு வெளிப்படைத்தன்மையினையும் மேம்படுத்தியது.

இவ்வாண்டின்போதான ஒரு பாரிய சாதனையாக தேசிய சிவில் வான்பயணவியல் பெருந்திட்டத்தின் (NCAMP) அபிவிருத்தி காணப்பட்டது. இது நீண்டகால பொருளாதார குறிக்கோள்கள் மற்றும் ஐ.நா. நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளுடன் (SDGs) ஒருங்கிணைக்கும் ஒரு மூலோபாயக் கட்டமைப்பாகும். இத்திட்டமானது நிலைபேறுடைய துறை வளர்ச்சிக்கு தெளிவான திசையினை வழங்கும்வேளை எதிர்கால கொள்திறன் மற்றும் உட்கட்டமைப்பு தேவைகளையும் விளித்துரைக்கின்றது.

செயற்பாட்டுரீதியாக, வான்தகைமைப் பிரிவானது வளங்களது கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அதன் முறைமைப்படுத்தல் மேற்பார்வை இலக்குகளை சந்தித்துடன் மீளெழுச்சி மற்றும் பாதுகாப்பிற்கான கடப்பாட்டினை வெளிப்படுத்தியது. அதேவேளை, பெருநிறுவன அலுவல்கள் மற்றும் ஆதன முகாமைத்துவ அலகானது துறையின் நீண்டகால ஸ்திரத்தன்மைக்கு முக்கியமான வான்பயணவியல் சொத்துக்களை பாதுகாத்து முறைமைப்படுத்தல் செயன்முறையினை மேம்படுத்தியது. இந்த முயற்சிகளூடாக CAASL வினைத்திறனான முகாமைப்படுத்தல், நிலைபேறுடைய வளர்ச்சி மற்றும் இலங்கையின் வான்பயணவியல் துறையினை உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை உள்ளதாக நிலைப்படுத்துவதற்கான அதன் கடப்பாட்டினை வலியுறுத்தியது.

### இணக்கப்பாட்டு கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப உறுதுணை அலகு

2024 இல் இணக்கப்பாட்டு கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப உறுதுணை அலகானது சர்வதேச வான்பயணவியல் பாதுகாப்பு மற்றும் இணக்கப்பாட்டு கட்டமைப்புடன் இலங்கையின் சீரமைவினை பலப்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கினை தொடர்ந்தும் வகிக்கின்றது. குறிப்பாக சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பின் (ICAO) உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வுத் திட்டம் - தொடர்ச்சியான கண்காணித்தல் அணுகுமுறை (USOAP-CMA) என்பவற்றுடனாகும்.

மையமான USOAP கூறுகளுக்கு எதிராக பல்வேறு முறைமைப்படுத்தல் பிரிவுகள் மற்றும் செயற்பாட்டு அலகுகளினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தில் காலமுறையான கண்காணிப்பு மற்றும் மீளாய்வினை பொறுப்பேற்றது. இவை ஒழுங்குமுறை வினாக்கள் (PQs), திருத்தச் செயற்பாட்டுத் திட்டங்கள் (CAPs) , இணக்கப்பாட்டு சரிபார்ப்புப் பட்டியல் (CCs), அரச வான்பயணவியல் நடவடிக்கை வினாக்கொத்துக்கள் (SAAQs) மற்றும் வித்தியாசங்களின் இலத்திரணியல் கோப்பிடல்களை (EFODs) உள்ளடக்குகின்றது.

USOAP-CMA கட்டமைப்பின் கீழான 790 பொருத்தமான PQகளில் 738 பதிலளிப்புகள் வெற்றிகரமாக சேகரிக்கப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்டு அதிகாரசபையின் உள்ளக தர உறுதிமொழி மற்றும் பரிசோதனை செயன்முறைக்கு உட்பட்டதன் பின்னர் ICAO இற்கு சமர்ப்பிக்கப்பட்டது. CAP முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்காக பிரிவுவாரியான மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இவை துல்லியம், நிலைத்தன்மை மற்றும் சமர்ப்பிப்புகளின் பூரணத்தன்மை என்பவற்றை உறுதிசெய்வதற்கு தலைப்பு விடய நிபுணர்களின் செயலாக்கமான பங்களிப்புடன் இடம்பெற்றன. இந்த முயற்சிகள் முறைமைப்படுத்தல் மேற்பார்வை மற்றும் சர்வதேச இணக்கப்பாடு நோக்கிய அதிகாரசபையின் கட்டமைக்கப்பட்ட மற்றும் முன்முயற்சியான அணுகுமுறையினை பிரதிபலிக்கின்றது.

இணக்கப்பாட்டு தடங்காணுதலை மேலும் மேம்படுத்துவதற்காக ஒரு விதி பதிவு கண்காணிப்பு முறைமையானது அறிமுகப்படுத்தப்பட்டது. இது பொருத்தமான ICAO இணைப்புகளுடனான ஒத்திசைவினை மதிப்பிடுவதற்காகும். இந்த முறைமையானது மெய்நேர கண்காணித்தல் மற்றும் நிலை இற்றைப்படுத்தலை இயலுமையாக்குவதுடன், சர்வதேச வான்பயணவியல் பாதுகாப்பு நியமங்களை அமுலாக்குவதில் மேம்பட்ட பொறுப்புக்கூறல் மற்றும் பின்தொடர்வுக்கு வசதியளிக்கின்றது.

### தேசிய சிவில் வான்பயணவியல் பெருந்திட்டத்தின் அபிவிருத்தியும் அமுலாக்கலும் (NCAMP)

2024 இல் காணப்பட்ட மற்றுமோர் மைல்கல்லாக தேசிய சிவில் வான்பயணவியல் பெருந்திட்டத்தின் (NCAMP) தொடர்ச்சியான அபிவிருத்தி மற்றும் நிறுவனமயமாக்கல் காணப்பட்டது. இது அடுத்த தசாப்தத்தின் மீது இலங்கையின் சிவில் வான்பயணவியல் துறையினை வழிநடத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான, முன்னோக்கிய கட்டமைப்பாகும்.
The NCAMP ஒரு பரந்தளவிலான தேசியக் கொள்கைகள், பிரிவுவாரியான திட்டங்கள் மற்றும் இலங்கையின் வான் போக்குவரத்து முறைமையில் நிலைபேறுடைய மற்றும் மீளெழுச்சியான வளர்ச்சியினை உறுதிசெய்வதற்காக மூலோபாயத் திட்டங்களை ஒருங்கிணைக்கின்றது. இது நீண்டகால வான்பயணவியல் திட்டமிடலுக்கான ஒரு தனியான, அதிகாரமுடைய குறிப்புப் புள்ளியாக சேவையாற்றுகின்றது. இங்கு பிரிவுவாரியான குறிக்கோள்கள் தேசிய அபிவிருத்தி இலக்குகள், ICAO நியமங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகள் (SDGs) என்பவற்றுடன் ஒத்திசைவாக்குகின்றது.

வான்பயணவியல் குறிப்பான முன்னெடுப்புகளை தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் NCAMP சான்று அடிப்படையிலான தீர்மானம் மேற்கொள்ளலுக்கு வசதியளிப்பதுடன், வளங்களது ஒதுக்கீட்டினை உகப்பாக்கி முகவரிடையேயான மற்றும் அரச-தனியார்துறை ஒத்துழைப்பினை ஊக்குவிக்கின்றது. இக்கட்டமைப்பானது பரிணமிக்கின்ற போக்குகள், முறைமைப்படுத்தல் மாற்றங்கள், மற்றும் அதன் முதன்மையான குறிக்கோள்களிலிருந்து விலகாது எதிர்கால தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக நெகிழ்வுத்தன்மையினையும் ஒருங்கிணைக்கின்றது.
NCAMP பன்முகமான முன்னுரிமைப் பிரிவுகளிடையே பின்வருவன உள்ளடங்கலாக, மூலோபாய திசையினை வழங்குகின்றது:

- வான்பயணவியல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி
- வான் வழிசெலுத்தல் மற்றும் விமானநிலைய கொள்திறன் மேம்படுத்தல்
- பாதுகாப்பு மேம்பாடுகள்
- பயணிகள் மற்றும் சரக்கு வசதியளித்தல்
- சூழல் நிலைபேறுடைமை
- மனித மூலதன அபிவிருத்தி
- செயற்பாட்டு வினைத்திறனும் சேவை புத்தாக்கமும்

இந்த மூலோபாய மூலவரைபடமானது இலங்கையின் வான்பயணவியல் துறையினை பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம், சுற்றுலாத்துறை மற்றும் பிராந்திய இணைப்பு என்பவற்றின் ஒரு முக்கிய இயலுமையாளராக உருமாற்றும் நோக்கினைக் கொண்டதாகும்.

### 2024 இல் அடைந்த முக்கிய மைல்கற்கள்

மீளாய்வாண்டின்போது. பல முக்கியமான சாதனைகள் NCAMP முன்னெடுப்பின் கீழ் எய்தப்பெற்றன:

- தேசிய திட்டமிடல் கட்டமைப்புடனான ஒருங்கிணைப்பு: வான்பயணவியல் துறை குறிக்கோள்கள் மற்றும் திட்டங்கள் ஒருமைப்பாடு மற்றும் கொள்கை இணைதிறத்தை உறுதிசெய்வதற்காக இலங்கையின் பரவலான தேசிய அபிவிருத்தி மூலோபாயங்களுடன் சீரமைக்கப்பட்டன.
- ஐ.நா. நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளுடனான சீரமைவு (SDGs): NCAMP முன்னெடுப்புகள் பொருத்தமான SDG இலக்குகளுக்கு எதிராக மதிப்பிடப்பட்டு ஒப்பிடப்படுகின்றன, இது நிலைபேறுடைமை, உள்ளடக்கம் மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கம் என்பவற்றை உறுதிசெய்வதற்காகும்.
- விரிவான பங்காளிகள் ஈடுபாடு: அரசாங்க அங்கங்கள், விமான நிலையம் மற்றும் விமானநிறுவன செயற்பாட்டாளர்கள், தனியார்துறை பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச அபிவிருத்திப் பங்காளிகளுடன் உள்ளீடுகளைத் திரட்டுவதற்கும் பாதுகாப்பான கொள்வனவுக்காகவும் பன்முக பங்காளிகள் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.
- முன்னுரிமைத் திட்டங்களை இனங்காணுதல்: முக்கிய முன்னெடுப்புகள் - குறிப்பாக முக்கியமான உட்கட்டமைப்பு, பசுமை தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் உருமாற்றம் - என்பன உடனடியான அமுலாக்கலுக்காக குறிக்கப்பட்டது.
- NCAMP இன் முடிவுறுத்தல் மற்றும் சமர்ப்பிப்பு: விரிவான NCAMP ஆவணம் முடிவுறுத்தப்பட்டு இறுதி மீளாய்வு மற்றும் அங்கீகாரத்திற்காக அமைச்சர்களது அமைச்சரவைக்கு முறையாக சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகள் ஊடாக இணக்கப்பாட்டு கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப உறுதுணை அலகானது வான்பயணவியல் முறைமைப்படுத்தல், மூலோபாயத் திட்டமிடல் மற்றும் சர்வதேச சீரமைவில் தொடர்ச்சியாக தனிச்சிறப்பினை இயக்குகின்றது. USOAP-CMA நடவடிக்கைகள் மற்றும் NCAMP கட்டமைப்பின் அமுலாக்கலானது உலகளாவிய வான்பயணவியல் துறையில் ஒரு இணக்கப்பாடான, முன்னோக்கிய சிந்தனையுடைய, மற்றும் மீளெழுச்சியான இலங்கையின் நிலைமையினை கூட்டாக பலப்படுத்தியுள்ளது.

### வான்தகைமை மேற்பார்வை மற்றும் செயற்பாட்டு வினைத்திறன்

வரையறையான தகைமைபெற்ற வான்தகைமை பரிசோதகர்களின் தொடர்ச்சியான சவால்கள் காணப்பட்டபோதிலும், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (CAASL) வான்தகைமைப் பிரிவானது 2024 இற்கான அதன் வருடாந்த பாதுகாப்பு மேற்பார்வை கண்காணிப்புத் திட்டம் மற்றும் பணித் திட்டம் என்பன வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. இந்த சாதனையானது அணியின் அர்ப்பணிப்பு, ஒழுக்கமான வள முகாமைத்துவம் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச வான்பயணவியல் பாதுகாப்பு நியமங்களைப் பராமரிப்பதற்கான அசைக்கவியலா கடப்பாடு என்பவற்றின் நேரடி பிரதிபலிப்பாகும்.

அதன் கண்காணிப்பு இலக்குகளை சந்திக்கதற்கும் மேலாக இப்பிரிவானது உள்ளக செயன்முறைகள் பணிச் செயற்பாடுகளுக்கு மேம்பாடுகளை தொடர்ச்சியாக அமுல்படுத்தியது. செயற்பாடுகளை தரப்படுத்தும் மற்றும் முறைமைப்படுத்தல் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான இந்த தொடர்ச்சியான முயற்சிகள் மேற்பார்வை நடவடிக்கைகளில் சிறந்த நிலைத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு பங்களிப்பு செய்துள்ளன. ஆவணப்படுத்தலிலான மேம்படுத்தல்கள், துறைசார் பங்காளிகளுடனான ஒத்துழைப்பு, மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் இலக்குவைத்த பயன்பாடு என்பன சிவில் வான்பயணவியல் துறையின் இயக்காற்றலான கேள்விகளுக்கு பதிலளிக்கும் வான்தகைமைப் பிரிவின் ஆற்றலை மேலும் பலப்படுத்தியுள்ளது.

இத்தகைய மட்டத்திலான செயற்திறன் - மட்டுப்படுத்தப்பட்ட மனிதவள சூழலில் அடையப்பெற்றது - CAASL இன் செயற்பாட்டு மீளெழுச்சி மற்றும் ஒரு தேசிய கட்டாயமாக வான்பயணவியல் பாதுகாப்பின் அதன் தொடர்ச்சியான முன்னுரிமையளித்தலை வெளிக்காட்டுகின்றது.

### பெருநிறுவன அலுவல்கள் மற்றும் ஆதன முகாமைத்துவம்

மனித வளங்கள் மற்றும் ஆதன முகாமைத்துவ (HRPM) பிரிவின் கீழ் செயலாற்றுகின்ற பெருநிறுவன அலுவல்கள் மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவானது அதிகாரசபையின் செயற்பாடுகளுக்கு அவசியமான உட்கட்டமைப்பு மற்றும் நிர்வாக வசதிகளை பராமரிப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. இந்த அலகானது திணைக்களங்களிடையே ஒரு பரந்த நிரலான துணைச் சேவைகளை வழங்கியுள்ளதுடன் CAASL காரியாலயங்கள் மற்றும் விமான நிலைய இடங்களில் சீரான மற்றும் தடையற்ற பணிச் சூழலை உறுதிசெய்துள்ளது.

ஆதனங்களை வினைத்திறனாகவும் முன்முயற்சியுடனும் முகாமைப்படுத்துவதன் மூலம் அலகானது தேசிய வான்பயணவியல் அபிவிருத்தி குறிக்கோளுடன் மூலோபாயமான சீரமைவு அதிகாரசபையின் செயற்பாட்டு தொடர்ச்சிக்கு நேரடியாக பங்களிப்பு செய்துள்ளது.

### ஆதன நிர்வாகத்தில் விசேட சாதனைகள்

2016 இன் 1973/78 ஆம் இலக்க, 2017 இன் 2050/38 இலக்க மற்றும் 2019 இன் 2142/74 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு சீரமைவாக அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் முறையான நிர்வாக ஆவணப்படுத்தலை CAASL ஆரம்பித்துள்ளது. இந்த ஆதனங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம்
- மட்டக்களப்பு விமானநிலையம்
- இரத்மலானை விமானநிலையம்
- யாழ்ப்பாண விமானநிலையம்
- மதம்பெல்ல வானொலி வழிசெலுத்தல் ஆக்கம்
- சிவில் வான்போக்குவரத்து மத்தியநிலையம்
- அத்திடிய வானூர்தி ஒலிபரப்பு நிலையம் என்பன ஏனையவற்றுள் சிலவாகும்.



# செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்


அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் போதான ஒரு முக்கிய சாதனையாக, மாதம்பெல்ல வானொலி வழிசெலுத்தல் வழிகாட்டி, சிவில் வான்பயணவியல் பயிற்சி மத்தியநிலையம் மற்றும் அத்திடிய வானூர்தி ஒலிபரப்பு நிலையம் என்பவற்றின் எல்லைகளை முறையாக நிறுவும் ஒரு திருத்தியமைக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரம் காணப்பட்டது. இந்த அபிவிருத்தியானது CAASL இன் ஆதன முகாமைத்துவ மூலோபாயத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மேம்பாட்டினை பிரதிநிதித்துவம் செய்வதுடன், அதன் வரம்பின் கீழுள்ள ஏனைய ஆதனங்களில் ஒத்த வேலைக்கான முன்னேற்றத்திற்கு ஒரு மேற்கோள் கட்டமைப்பாகவும் சேவையாற்றுகின்றது.




இணையான மைல்கல்லாக, மாதம்பெல்ல வானொலி வழிசெலுத்தல் ஆக்க நிலத்திற்கான உரித்துறுதி அறிக்கையின் வெற்றிகரமான கையகப்படுத்தல் காணப்பட்டதுடன், இது CAASL இன் சட்ட உரித்துவத்தினை மேலும் வலியுறுத்துகின்றது. இது முக்கிய வான்பயணவியல் உட்கட்டமைப்புச் சொத்துக்களின் காப்பானாக அதிகாரசபையின் நிலையினை ஸ்திரப்படுத்துவதில் ஒரு முக்கிய படியாகும்.

மேலாக, 15 பெப்ரவரி 2013 திகதியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1797/27 இவ்வாண்டின்போது 2010 இன் 14 அம் இலக்க சிவில் வான்பயணவியல் சட்டத்தின் ஏற்பாடுகளை பிரதிபலிப்பதற்காக திருத்தியமைக்கப்பட்டது. இத்திருத்தமானது நடைமுறையிலுள்ள சட்ட பொறுப்பாணைகளுடன் நிலைத்தன்மையினை உறுதிசெய்வதுடன், அரச உடைமையான வான்பயணவியல் ஆதனங்களின் முகாமைத்துவம் மற்றும் பயன்பாட்டினை சுற்றியுள்ள முறைமைப்படுத்தல் ஆளுகையினை பலப்படுத்துகின்றது.

திருத்தியமைக்கப்பட்ட கூற்று: 3. நியதிச்சட்ட சேவை வழங்குநர் வான் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்காக அரசின் சார்பாக நம்பிக்கையில் வைத்திருக்கும் அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் முறையான பேணிக்காப்பு மற்றும் பராமரிப்பிற்கு பொறுப்பாளியாவார். நியதிச்சட்ட சேவை வழங்குநர், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் எழுத்துமூல முன் அங்கீகாரமின்றி மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு ஏதேனும் அசையா ஆதனத்தினை குத்தகை, மாற்றல் அல்லது இல்லையெனில் ஒப்படைக்கவோ ஆகாது.










CAASL ஆதனங்களின் அமைவிடங்கள்

### ஆதன முகாமைத்துவ நடவடிக்கைகளின் சுருக்கம் - 2024

அறிக்கையிடும் காலத்தின்போது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) அதன் ஆதனத் தேக்கத்தின் நிர்வாகம், சட்ட முறையாக்கல் மற்றும் மூலோபாய அபிவிருத்தி என்பவற்றில் கணிசமான முன்னேற்றத்தை மேற்கொண்டது. இந்த முயற்சிகள் தேசிய வான்பயணவியல் துறையின் முன்னேற்றத்திற்கு துணையளிப்பதற்கு அதன் பௌதீக உட்கட்டமைப்பினை பலப்படுத்தும் CAASL இன் நீண்டகால தொலைநோக்குடன் சீரமைவாக உள்ளது. பிரதான வான்பயணவியல் தொடர்பான ஆதனங்களிடையேயான முக்கிய அபிவிருத்திகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

### பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் (BIA)

CAASL இனது உரித்துடைமையின் கீழ் காணியினை பதிவுசெய்யும் செயன்முறையானது காணி தீர்ப்பனவு திணைக்களத்தினால் முறையாக முன்னெடுக்கப்பட்டது. இது மூன்று நிலஅளவையில் வரைபடங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் எல்லைகளது நிலஅளவீடு தற்போது நடந்தவண்ணமுள்ளதுடன், இது வளாகத்தின் சட்டரீதியான பாதுகாவலர் அந்தஸ்தினை CAASL முறையாக நிறுவுவதற்கு காரணியாயிருக்கும்.

### இரத்மலானை விமானநிலையம்

ஒரு தனிப்பட்ட நிலஅளவீட்டாளரூடாக ஒரு விரிவான நிலஅளவீட்டு அறிக்கையானது பெறப்பட்டுள்ளது. இது சிவில் வான்பயணவியல் திணைக்களத்தினால் வரலாற்று ரீதியாக கையகப்படுத்தப்பட்ட காணியினை எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் (ஸ்ரீலங்கா) லிமிட்டட் (AASL) மற்றும் இலங்கை வான்படையினால் (SLAF) தற்போது அமர்வுகொண்டுள்ள பகுதிகளுடன் ஒப்பீட்டுப் பார்ப்பதற்காகும். இந்த நடவடிக்கையானது சட்ட உறுதிகளை நடைமுறை பயன்பாட்டுடன் கணக்கிணக்கம் செய்வதற்கு முக்கியமாவதுடன் காணி ஒதுக்கீட்டில் இணக்கப்பாட்டினை உறுதிசெய்கின்றது.

### மட்டக்களப்பு விமானநிலையம்

விமான நிலையத்தின் சட்டரீதியான எல்லைகளை குறிப்பிடுகின்ற ஒரு திருத்தியமைக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலானது வெற்றிகரமாக பிரசுரிக்கப்பட்டது. CAASL இன் கீழான காணியின் முறையான பதிவீடானது நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன், அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவ நிகழ்ச்சிநிரலில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லினைக் குறிப்பிடுகின்றது.

### யாழ்ப்பாண விமானநிலையம்

பயன்படுத்தப்படாத காணியின் ஒரு பகுதியினை பொதுமக்களுக்கு திருப்பிக்கொடுக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தினைத் தொடர்ந்து விமான நிலையத்தின் எதிர்கால விரிவாக்கலுக்கு தேவையான பகுதிகளை இனங்கண்டு வைத்துக்கொள்வதற்காக CAASL பாதுகாப்பு அமைச்சுடன் ஒருங்கிணைந்தது. இதன் பிரகாரம் முன்மொழியப்பட்ட விரிவாக்கலுக்கான காணித் தேவைப்பாட்டினைக் குறிப்பிட்ட ஒரு முறையான வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### மாதம்பெல்ல வானொலி வழிசெலுத்தல் வழிகாட்டி

காணியின் எல்லைகளை உறுதிப்படுத்தும் திருத்தியமைக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலானது இவ்வாண்டின்போது பிரசுரிக்கப்பட்டது. அதிலிருந்த காணியானது CAASL இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், ஒரு உரித்து அறிக்கையானது வெற்றிகரமாக பெறப்பட்டதுடன், இதன் மூலம் இந்த முக்கியமான வழிசெலுத்தல் வசதியின் சட்ட உரித்துடைமை மற்றும் செயற்பாட்டு அதிகாரமானது ஸ்திரப்படுத்தப்பட்டது.

### கப்புங்கொட வானொலி வழிசெலுத்தல் வழிகாட்டி

தெளிவற்ற எல்லை வரையறைகளுக்கு பதிலளிக்கும் விதமாக நீர்கொழும்பு பிராந்திய செயலாளர் (DS) முறையான உறுதியினை வழங்குவதற்காக தொடர்புகொள்ளப்பட்டார். DS இன் வேண்டுதலின் பேரில் ஒரு தொழில்சார் காணி அளவையானது மேற்கொள்ளப்பட்டது. அளவீட்டுத் திட்டமானது தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அடுத்த நடவடிக்கையானது முறையான ஆவணப்படுத்தல் மற்றும் பதிவீட்டில் முன்னிறுத்தம் செய்யும்.

### வானூர்தி தொடர்பாடல் ஒலிபரப்பு நிலையம் - அத்திடிய

இந்த நிலையத்தின் காணி எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளதுடன், இரத்மலானை DS இனால் முறையாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. உரிய ஆவணங்கள் ஒரு இலவச மானியத்தை வழங்குவதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரு உறுதிச் சான்றிதழானது இரண்டு காணித்தொகுதியில் ஒன்றிற்கு பெறப்பட்டுள்ளதுடன், எஞ்சிய காணித்தொகுதியின் உரித்துடைமையினை வைத்துக்கொள்வதற்கு முயற்சிகள் தற்போது நடந்தவண்ணமுள்ளன.

### சிவில் வான்பயணவியல் பயிற்சி மத்தியநிலையம்- கந்தாவல

இரத்மலானை DS இனால் எல்லைகள் தெளிவாக நிறுவப்பட்டு சரிபார்க்கப்பட்டதுடன், வளாகத்தின் சட்ட எல்லைகளை பிரதிபலிப்பதற்கு ஒரு திருத்தியமைக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டது. பயிற்சி வசதியின் CAASL இனது முறையான உரித்துவத்தை உறுதிசெய்யும் ஒரு உறுதிச் சான்றிதழ் வெற்றிகரமாக பெறப்பட்டது.

### ரேடார் நிலையம் - பிதுருதலாகல மற்றும் விடுமுறை பங்களா

ரேடார் நிலையம் மற்றும் விடுமுறை பங்களா ஆகிய இரண்டிற்கும் ஒரு விரிவான அளவீட்டுத் திட்டம் பெறப்பட்டது. எல்லைகளை முறையாக்கி CAASL இன் கீழ் ஆதனத்தினை ஒப்படைக்கும் ஒரு வர்த்தமானி அறிவித்தலானது தயாரிக்கப்பட்டு பிரசுரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டது.

### CAASL சுற்றுலா பங்களாக்கள்

CAASL அதன் சேவை சார்பான முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக தொடர்ந்தும் மட்டக்களப்பு சுற்று பங்களாவினை செயலாற்றுவதுடன், இது தற்போது போட்டித்தன்மையான வீதங்களில் பொது மக்களுக்கு திறந்து விடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு விமானநிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பங்களாவானது விமானத்தளத்தின் பரந்தவெளிக் காட்சிகளுடன் தனித்துவமான அனுபவத்தை பார்வையாளர்களுக்கு வழங்குவதுடன் பிராந்திய சுற்றுலாத்துறை மற்றும் பங்காளிகள் ஈடுபாட்டிற்கும் மேலும் துணையளிக்கின்றது.





மேலும், அதன் சமீபத்தை புதுப்பித்தலைத் தொடர்ந்து வீரவில சுற்று பங்களாவானது பதிவீடுகளுக்கு தற்போது திறந்துள்ளதுடன், தரமுயர்த்தப்பட்ட வசதிகளையும் ஒரு புதுப்பிக்கப்பட்ட மற்றும் நவீன தோற்றத்தை வழங்குகின்றது. CAASL இன் பணியாட்கள் நலன்புரி முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக, பணியாட்கள் ஒரு சலுகையான வீதத்தில் இந்த மற்றும் ஏனைய சுற்று பங்களாக்களை பதிவு செய்வதற்கு தகுதியுடையவர்களாவார்கள். இது பொழுதுபோக்கு வாய்ப்புக்களை ஊக்குவித்து ஒட்டுமொத்த பணியாட்கள் நல்வாழ்வினை மேம்படுத்துகின்றது.

## பசுமை வான்பயணவியல்

2024 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) தேசிய வான்பயணவியல் கொள்கை மற்றும் செயற்பாடுகளில் சூழல் பொறுப்பினை பதிப்பதன் மூலம் நிலைபேறுடைமையான வான்பயணவியலுக்கான அதன் கடப்பாட்டினை மேலும் மேம்படுத்துகின்றது. காலநிலை மாற்றத்தின் அவசரநிலையினை அங்கீகரித்து அதிகாரசபையானது உலகளாவிய நிலைபேறுடைமை முன்னுரிமைகளுடன் அதன் முன்னெடுப்புகளை சீரமைத்தவேளை விமான நிறுவன செயற்பாட்டாளர்கள், விமானநிலைய முகாமைத்துவம் மற்றும் முறைமைப்படுத்தல் மேற்பார்வையிடையே உள்ளூர் அமுலாக்கத்தினை இயக்கியது.

இவ்வாண்டின்போதான ஒரு முக்கிய சாதனையாக ICAO இணைப்பு 16 இன் கீழ் சர்வதேச வான்பயணவியலுக்கான கார்பன் ஈடுகட்டல் மற்றும் குறைத்தல் திட்டத்தின் அமுலாக்கம் காணப்பட்டது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் விட்ஸ் ஏவியேசன் உடன் நெருக்கமாக பணிபுரியும் அதிகாரசபையானது இணக்கப்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மையினை உறுதிசெய்வதற்காக வலுவான கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் பொறிமுறையினை நிறுவியுள்ளதுடன், இது நீண்டகால உமிழ்வுக் குறைப்பிற்கு ஒரு திடமான அடித்தளத்தினை இடுகின்றது.

முறைமைப்படுத்தல் வழிமுறைகளுக்கு அப்பால் நிலைபேறுடைய வான்பயணவியலில் தேசிய கொள்கையினை உருவாக்குவதில் CAASL ஒரு முக்கிய பங்கினை வகித்தது. இது இத்துறையினை பசுமை வளர்ச்சி நோக்கி வழிநடத்தும். இக்கொள்கையானது எரிபொருள் சிக்கனம், கழிவு குறைத்தல், புதுப்பிக்கத்தக்க வலுவின் பாவனை மற்றும் நிலைபேறுடைய வான்பயணவியல் எரிபொருள்களின் படிப்படியான பின்பற்றுதலை குறிப்பிடுகின்றது. இதற்கு நிரப்பியாக அதிகாரசபையானது விமான நிறுவனங்கள், விமான நிலையங்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் ஒத்துழைப்புத் திட்டங்களை முன்னெடுத்தது. இது குறைவான கார்பன வான்பயணவியலுக்கான மாற்றத்தினை விரைவாக்குவதற்காக ஆய்வினால் வழிநடத்தப்படும் நுண்ணறிவினால் துணையளிக்கப்பட்டது. இந்த வழிமுறைகளூடாக CAASL உலகளாவிய கார்பன்நீக்கத்திற்கு இலங்கையின் வான்பயணவியலை ஒரு பொறுப்புமிக்க பங்களிப்பாளராக நிலைப்படுத்தும் அதன் தீர்மானத்தை வலியுறுத்தியவேளை நிலைபேறுடைய தேசிய அபிவிருத்திக்கும் துணையளிக்கின்றது.

### இலங்கையில் CORSIA இன் அமுலாக்கம்

வான்பயணவியல் துறையில் உலகளாவிய காலநிலை செயற்பாட்டுடன் சீரமைவதற்கான அதன் கடப்பாட்டின் ஒரு பகுதியாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL), சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பின் (ICAO) பதிப்பு IV, இணைப்பு 16 இன் பிரகாரம் சர்வதேச வான்பயணவியலுக்கான கார்பன் ஈடுகட்டல் மற்றும் குறைப்புத் திட்டத்தின் (CORSIA) அமுலாக்கம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

CORSIA என்பது 2020 மட்டங்களை விஞ்சிய $CO_2$ உமிழ்வுகளை செயற்பாட்டாளர்கள் கண்காணிப்பதற்கு, அறிக்கையிடுவதற்கு மற்றும் ஈடுகட்டுவதற்கான தேவைப்பாட்டின் மூலம் சர்வதேச வான்பயணவியலிலிருந்தான கார்பன் உமிழ்வுகளை ஸ்திரப்படுத்தும் நோக்கினைக் கொண்ட ஒரு மைல்கல் என்பதுடன் இது உலகளாவிய முன்னெடுப்பினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. இலங்கையில், இந்தத் திட்டமானது CAASL இனால் முன்னெடுக்கப்பட்ட ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் வெளிப்படையான கட்டமைப்பினூடாக செயற்படுத்தப்பட்டுள்ளது. இது நாட்டினுள் செயலாற்றும் சர்வதேச விமானநிறுவனங்களுடன் - குறிப்பாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் விட்ஸ் ஏவியேசன், நெருங்கிய ஒத்துழைப்பினை உள்ளடக்குகின்றது.

இந்த விமான நிறுவனங்கள் கடுமையான தரவு சேகரிப்பு, உமிழ்வு கண்காணித்தல் மற்றும் மூன்றாம் தரப்பு சரிபார்த்தல் செயன்முறைகளை பொறுப்பேற்பதன் மூலம் முன்னெடுப்பிற்கு செயலூக்கமாக பங்களித்துள்ளன. இந்த முயற்சிகளினூடாக, இலங்கை ICAO இன் அறிக்கையிடல் சரிபார்த்தல் நியமங்களுடன் முழு இணக்கப்பாட்டினை உறுதிசெய்துள்ளவேளை சூழல் ரீதியாக நிலைபேறுடைய வான்பயணவியல் நடைமுறைகளை ஊக்குவிக்கும் அதன் முன்முயற்சியான நிலைப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

CORSIA இன் அமுலாக்காலானது CAASL இன் முறைமைப்படுத்தல் பொறுப்பினை மாத்திரம் பிரதிபலிக்காது குறைவான கார்பன் வான்பயணவியல் பொருளாதாரம் நோக்கிய உலகளாவிய உருமாற்றத்திற்கு துணையளிப்பதற்கு வான் போக்குவரத்தின் சூழல் தாக்கத்தினை தணிப்பதற்கான இலங்கையின் பரந்த கடப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது.

### ஒரு நிலைபேறுடைய வான்பயணவியல் எதிர்காலத்திற்கான ஒத்துழைப்பினை வளர்த்தல்

காலநிலை மாற்றத்தின் அதிகரிக்கும் அவசரத்தினை இனங்கண்டு இலங்கை தேசிய வான்பயணவியல் துறையினுள் முக்கிய சூழல் நிலைபேறுடைமைக்கு தீர்மானமான நடவடிக்கைகளை எடுக்கின்றது. CAASL இன் தலைமைத்துவத்தின் கீழ் நிலைபேறுடைய வான்பயணவியலில் ஒரு விரிவான தேசிய கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதுடன், இது விமானநிலைய செயற்பாடுகள் மற்றும் வான்பயணவியல் உட்கட்டமைப்பின் அனைத்து அம்சங்களிலும் பசுமை நடைமுறைகளை ஒருங்கிணைக்கும் குறிக்கோளைக் கொண்டதாகும்.

இந்த கொள்கை கட்டமைப்பானது நிலைபேறுடைமைக்கு ஒரு முழுமையான அணுகுமுறையினை வலியுறுத்துவதுடன், பின்வரும் முக்கிய பிரிவுகளை உள்ளடக்குகின்றது:

- வானூர்தி பராமரிப்பு மற்றும் எரிபொருள் சிக்கன உகப்பாக்கம்
- சூழல் உணர்வுடைய கழிவு முகாமைத்துவ முறைமைகள்
- பசுமைஇல்ல வாயு உமிழ்வுகளின் குறைப்பு
- மாற்றீட்டு எரிபொருள் மற்றும் சுத்தமான வலு தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்தல்

முறைமைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு கட்டமைப்புகளுள் நிலைபேறுடைய கொள்கைகளை உட்பதிப்பதன் மூலம், கொள்கையானது இலங்கையின் வான்பயணவியல் துறையினை உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மற்றும் சூழல் அளவுகோல்களுடன் சீரமைக்கும் நோக்கினைக் கொண்டதாகும்.

இந்த குறிக்கோளுக்கு சீரமைவாக, கொள்கை ஆவணமானது முடிவுறுத்தப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. கடைப்பிடிக்கப்பட்டதன் பின்னர், அது நாடுபூராவும் பசுமை வான்பயணவியல் மூலோபாயங்களை மேம்படுத்துவதற்கான அடிப்படை திட்டமாக சேவையாற்றுகின்றது.

### பன்முகமான பங்காளி ஒத்துழைப்பு மற்றும் புத்தாக்கம்

வான்பயணவியலில் அர்த்தமுள்ள மற்றும் நீண்டகால நிலைபேறுடைமையினை அடைவதற்கு சூழலமைப்பு பூராவுமான அனைத்து பங்காளிகளின் செயலூக்கமான பங்குபற்றல் தேவைப்படுகின்றது என்பதை CAASL ஏற்றுக்கொள்கின்றது. இதன்பிரகாரம், ஒரு கூட்டு மேடையானது வளர்க்கப்படுகின்றது. இது விமான நிறுவனங்கள், விமானநிலைய செயற்பாட்டாளர்கள், முறைமைப்படுத்தல் அதிகாரசபைகள், அரசாங்க

அமைச்சுக்கள், சூழல் நிறுவனங்கள் மற்றும் சா்வதேச அபிவிருத்தி பங்காளிகளை ஒன்று திரட்டுகின்றது.

இந்த உள்ளடக்கமான அணுகுமுறையானது பின்வருவனவற்றை எதிர்பார்க்கின்றது:

- புத்தாக்கமான பசுமை தொழில்நுட்பங்களின் அமுலாக்கலை விரைவுபடுத்துகின்றது.
- சூழல் தரவு மற்றும் ஆய்வு நுண்ணறிவின் பகிர்வினை பலப்படுத்துதல்
- உள்ளூர் நடைமுறைகளை ICAO இன் நிலைபேறுடைய இலக்குகளுடனான ஒத்திசைவினை ஊக்குவித்தல்
- வான்பயணவியலில் காலநிலை உணர்வுடைய தீர்மானம் மேற்கொள்ளும் ஒரு தேசிய கலாச்சாரத்தினை ஏற்படுத்துதல்

கலந்தாலோசனை, கூட்டு முன்னெடுப்புகள் மற்றும் கொள்திறன் கட்டியெழுப்பல் திட்டங்களினூடாக, உலகளாவிய கார்பன்நீக்கல் முயற்சிகளுக்கு செயலூக்கமாக பங்களிப்பு செய்யும் ஒரு பொறுப்பான, முன்னோக்கிய சிந்தனையுடைய வான்பயணவியல் மையமாக இலங்கையினை நிலைப்படுத்துவதற்கு CAASL முனைகின்றது.

### ஆய்வு மற்றும் மூலோபாய சீரமைவு

சான்று அடிப்படையிலான கொள்கை மேற்கொள்ளல் மற்றும் இலக்குவைத்த செயற்பாட்டினை உறுதிசெய்வதற்கு, இலங்கையின் வான்பயணவியல் துறையின் சூழல் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு ஒரு தேசிய ஆய்வு முயற்சியினை முன்னெடுத்தது. இக்கற்கையானது தற்போதுள்ள வான்பயணவியல் செயற்பாடுகளின் சூழலியல் அடிச்சுவட்டினை பரிசீலித்து சா்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிலைபேறுடைமை நியமங்களுடன் அவற்றின் சீரமைவினை மதிப்பிடுகின்றது.

முக்கிய கண்டுபிடிப்புகள் பின்வருவன உள்ளடங்கலான உள்ளூர் ரீதியாக பொருத்தமான மூலோபாயங்களின் அபிவிருத்தியினை அறிவித்துள்ளது:

- பசுமையான செயற்பாடுகளை ஊக்கப்படுத்துவதற்கான கொள்கை மறுசீரமைப்புகள்
- பசுமை உட்கட்டமைப்பு மற்றும் கார்பன் குறைப்பு தொழில்நுட்பங்களில் முதலீடு செய்தல்
- இலங்கையின் சூழலுக்காக வடிவமைக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளை அமுலாக்குதல்

இந்த ஆய்வானது கொள்கையமைப்பாளர்கள், துறைசார் பங்காளிகள் மற்றும் கல்விமான்களுக்கான மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கியுள்ளதுடன், சூழல்சார் நேர்மையினை சமரசம் செய்யாது நிலைபேறுடைய பொருளாதார அபிவிருத்திக்கு துணையளிக்கும் மீளெழுச்சியான, குறை உமிழ்வான வான்பயணவியல் சூழலமைப்பிற்கு வழிவகுக்கின்றது.








# செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

## வான்பயணவியல் வளர்ச்சி

2024 இல் இலங்கையின் வான்பயணவியல் துறையானது உலகளாவிய புவிசார் அரசியல் முன்னேற்றத்தடுப்புகள் மற்றும் தொற்றின் பின்னரான மீட்பின் நீடித்த விளைவுகள் காணப்பட்டபோதிலும், திடமான முன்னேற்றத்தை வெளிக்காட்டியது. மீளுருவாக்கத்தின் வேகமானது சில பிராந்திய சந்தைகளுடன் ஒப்பிடும்போது மிகவும் அளவிடப்பட்டதாகவும், வளர்ச்சியடையும் சர்வதேச இணைப்புகளுடன் ஒரு தெளிவான உயர்நோக்கிய போக்கு பரிணமித்ததுடன், திடமான விமானநிறுவன பங்குபற்றல் மற்றும் புதுப்பிக்கப்பட்ட பயணிகள் நம்பகத்தன்மையும் காணப்பட்டது

இவ்வாண்டின்போது இலங்கையிலிருந்து இலங்கைக்கும் அண்ணளவாக 40 சர்வதேச விமான நிறுவனங்கள் செயலாற்றின, இது நாட்டின் வான்பயணவியல் சாத்தியத்தின் அதிகரித்த நம்பிக்கையினை பிரதிபலிக்கின்றது. தேசிய வானூர்திகளான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் விட்ஸ் எயார் என்பன ஒரு போட்டித்தன்மையான பிரசன்னத்தை பராமரித்தவேளை, குறிப்பாக பிராந்திய சந்தைகளிலாகும், முன்னணி முழுச் சேவை மற்றும் குறைவான கிரயத்திலான வெளிநாட்டு விமான நிறுவனங்கள் சேவைகளை விரிவாக்கி அவற்றின் சந்தை பங்களிப்பினை பலப்படுத்தின. முக்கிய விமானநிறுவனமான கெத்தே பெசிபிக் போன்றவற்றின் செயற்பாடுகளின் மீள்ஆரம்பம் மற்றும் ஜெட்ஸ்டார் எயார் உள்ளடங்கலான புதிய விமானநிறுவனங்களின் நுழைவானது பிராந்திய மையமாக இலங்கை வளர்ச்சியடையும் பொருந்துமையினை வலியுறுத்துகின்றது.

சரக்கு மற்றும் சாட்டர் செயற்பாடுகள் பாரிய சர்வதேச விமானநிறுவனங்கள் பருவகால அல்லது தற்காலிக கேள்விகளை விளித்துரைப்பதற்காக வழக்கமான சரக்கு சேவைகள் மற்றும் விசேட விமானங்களது நிலைபேறாக்கலுடன் மீளெழுச்சியினை மேலும் அதிகரித்தது. சாட்டர் மற்றும் உலங்கூர்தி சேவைகளுக்கு இன்னமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள உள்ளூர் வான்பயணவியலானது தொடர்ந்தும் வணிக மற்றும் சுற்றுலா தொடர்பான பயணத்திற்கு துணையளித்தன.

செயற்பாட்டு வளர்ச்சியுடன் சேர்ந்து இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது, உரிமமளித்தல், நுகர்வோர் பாதுகாப்பு பொறிமுறைகளை பலப்படுத்துதல் மற்றும் வான்பயணவியல் தொழில்வல்லுனர்கள் மற்றும் மாணவர்களுக்கான உறுதுணையினூடாக வசதியளித்தல் என்பவற்றை சீராக்குவதன் மூலம் அதன் முறைமைப்படுத்தல் பங்கினை மேம்படுத்தியது. சர்வதேச பங்காளிகளுடனான மூலோபாய பேரம்பேசல்கள் மற்றும் பொது வான்பயணவியலிலான சான்று அடிப்படையிலான ஆய்வுடன் இணைந்த எதிர்கால அபிவிருத்திக்கான அடித்தளத்தை வலியுறுத்துகின்றது.

### விமானநிறுவனச் செயற்பாடுகள்

உலகளாவிய புவிசார் அரசியல் சூழலானது 2024 இல் சர்வதேச வான் போக்குவரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க செல்வாக்கினை தொடர்ந்தும் பிரயோகித்தது. இது இலங்கையின் வான்பயணவியல் மீட்புக்கான மீட்டல் பாதைக்கான விளைவுடனாகும். கோவிட்-19 தொற்றினைத் தொடர்ந்து பயணிகள் போக்குவரத்தில் பல நாடுகள் ஒரு விரைவான மீளுருவாக்கத்தினை அனுபவித்தவேளை, இலங்கையின் மீட்டல் வேகமானது ஒப்பீட்டளவில் மந்தமாகக் காணப்பட்டது. இருந்தபோதிலும், 2024 இல் வான் போக்குவரத்து நடவடிக்கைகளிலான ஒரு கணிசமான அதிகரிப்புடன் 2024 இல் ஒரு சாத்தியமான போக்கு வெளித்தோன்றியது.

மீளாய்வாண்டின்போது, அண்ணளவாக 40 சர்வதேச விமானநிறுவனங்கள் இலங்கையிலிருந்தும் இலங்கைக்கும் விமானங்களை செயலாற்றியதுடன், இது நாட்டின் வான்பயணவியல் சந்தையில் நம்பகத்தன்மையினை பிரதிபலிக்கின்றது. தேசிய விமானநிறுவனங்களான, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் விட்ஸ்எயார் என்பன சர்வதேச வான்வெளியில் தொடர்ந்தும் இலங்கையினை பிரதிநிதித்துவம் செய்தன. வெளிநாட்டு விமானநிறுவனங்கள் பெருமளவிலான உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் பயணிகளை ஏற்றியபோதும் இரண்டு உள்ளூர் விமானநிறுவனங்களும், குறிப்பாக முக்கிய பிராந்திய வழிகளில், போட்டித்தன்மையாக காணப்பட்டன.

சர்வதேச செயற்பாட்டாளர்களிடையே குறிப்பிடத்தக்கவையாக முழுச்சேவை விமானநிறுவனங்களான, கட்டார் எயார்வேஸ், எமிரேட்ஸ், எத்தியாட் எயார்வேஸ், சிங்கப்பூர் எயார்லைன்ஸ் மற்றும் டெர்கிஸ்ச் எயார்லைன்ஸ் போன்றவை அவற்றின் சேவைகளை விரிவாக்கி வான்பயண அதிர்வெண்களை அதிகரித்தன. இதற்கு சமாந்திரமாக, குறைவான செலவு விமான நிறுவனங்களான, இந்திகோ, விலய்டுபாய், எயார்ஏசியா மற்றும் தாய் எயார் ஏசியா என்பன பயணிகள் பருமனளவினை இயக்குவதில், குறிப்பாக குறைந்த தூர வழிகளில், முக்கிய பங்கு வகித்தன. ஏரோவிலொட் பிரதானமாக ரஷ்யப் பயணிகளுக்கு நிலைபேறுடைய அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகளை தொடர்ந்தவேளை, ரெட் விங்ஸ் எயார்லைன்ஸ் மற்றும் அசூர் எயார்லைன்ஸ் என்பன ரஷ்யாவிலிருந்து பருவகால சாட்டர் விமானங்களை செயலாற்றியதுடன், ரெட் விங்ஸ் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கான (MRI) செயற்பாடுகளை மீள ஆரம்பித்தது.

தொற்றின்போதான அதன் இடைவெளியினைத் தொடர்ந்து, ஒரு முக்கிய கிழக்காசிய விமானநிறுவனமான கெத்தே பசிபிக் இன் செயற்பாடுகளது ஆரம்பமானது 2024 இல் இடம்பெற்ற ஒரு குறிப்பிட்ட மைல்கல்லாகும். மேலும் எயார் அஸ்ட்டானா மற்றும் சொங்கிங் விமான நிறுவனங்கள் என்பன இவ்வாண்டின்போது வரையறையான செயற்பாடுகளை மீளஆரம்பித்தன. எவ்வாறாயினும், ஈரான் எயார் டுவர் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையே சார்ட்டர் சேவைகளை ஆரம்பித்ததுடன், போதுமையற்ற கேள்வியின் காரணமாக அதன் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்தியது. வானூர்திகளது கட்டுப்பாட்டின் காரணமாக சொங்கிங் வான்பயணங்களை நிறுத்தியது.

சிங்கப்பூர் - இலங்கை துறையில் ஜெட்ஸ்டார் ஏசியாவின் உள்நுழைவுடன் போட்டித்தன்மையானது கடுமையாக்கப்பட்டது. இது சிங்கப்பூர் எயார்லைன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றின் முன்னைய ஆதிக்க நிலைக்கு சவாலாகக் காணப்பட்டது. மால்டீவியன் எயார்லைன்சும் அதன் சேவைகளை மீள் ஆரம்பித்தபோதிலும் பின்னர் இவை நிறுத்தப்பட்டன. விமான அதிர்வெண்ணைப் பொறுத்தளவில் இந்திகோ ஒரு முன்னணி நாளாந்த செயற்பாட்டாளராக பரிணமித்ததுடன், யாழ்ப்பாண விமான நிலையத்திற்கு (JAF) சேவைகளை செயற்படுத்திய எலாயன்ஸ் எயாருடன் நெருக்கமான போட்டியினை உருவாக்கியது.

தொற்றின் பின்னரான மீட்டல் காலத்தின்போது முன்னைய சவால்கள் காணப்பட்டபோதிலும், வான்பயணவியல் துறையானது தற்போது மீட்டெழுச்சிக்கான தெளிவான குறிகளைக் காண்பிக்கின்றது. பாரிய விமானநிறுவனங்களின் மீள்வருகையானது போட்டித்தன்மையினை அதிகரித்துடன், குறைவான செலவு செயற்பாட்டாளர்களின் வளர்ச்சியானது ஒரு வளமான எதிர்காலம் நோக்கி குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், தற்காலிக விமானநிறுவன இடைநிறுத்தல்கள் மற்றும் உட்கட்டமைப்பு வரையறைகள் போன்ற இடைவிடாத சவால்களுக்கு தொடர்ச்சியான கவனம் தேவைப்படுகின்றது.

### சரக்குச் செயற்பாடுகள்

2024 இல் இலங்கையின் வான் போக்குவரத்து கட்டமைப்பின் ஒரு முக்கிய கூறாக வான் சரக்கு காணப்பட்டது. கட்டார் எயார்வேஸ், எமிரேட்ஸ், எத்தியாட் எயார்வேஸ் மற்றும் டெர்கிஸ்ச் எயார்லைன்ஸ் உள்ளடங்கலான பாரிய விமான நிறுவனங்கள் வழமையான சரக்குச் சேவைகளை செயலாற்றுவதனை தொடர்ந்தன. அதேவேளை வேறு பலர் தளம்பலடையும் சந்தை கேள்வியினை சந்திப்பதற்காக தற்காலிக சாட்டர் சரக்கு விமானப் பயணங்களை நடாத்தினார்கள்.

இவ்வாண்டின்போதான ஒரு முக்கிய அபிவிருத்தியாக இந்தோனேஷியா அடிப்படையான BBN எயார்லைன்ஸ் இன் அதிகரித்த பங்கு காணப்பட்டது. இது மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையேயான சரக்கு போக்குவரத்துக்காக செவன்ந் விரீடம் ஒவ் எயார் இன் கீழ் செயலாற்றுகின்றது. இந்த செயற்பாடுகளின் அதிகரித்த பருமனளவானது CAASL இடமிருந்து முறைமைப்படுத்தல் மேற்பார்வையினை அதிகரிப்பதற்கு தூண்டியதுடன், குறிப்பாக வெளிநாட்டு முறைமைப்படுத்துனர்களை உள்ளடக்கிய பாதுகாப்பினை கருதி மற்றும் ஒத்துழைப்பு தேவைப்பாடுகளின் காரணத்தினாலாகும்.

## வாடகைக்கு அமர்த்தப்பட்ட குறிப்பிட்ட பயணத்திற்கான (சாட்டர்) விமானச் செயற்பாடுகள்

2024 இல் சாட்டர் செயற்பாடுகள் தொடர்ந்தும் இலங்கையின் வான்பயணவியல் நிலத்தோற்றத்தை பன்முகப்படுத்தின. ரெட் விங்ஸ் எயார்லைன்ஸ், அசுர் எயார்ா, ஸ்கைஅப் MTT, என்டர் எயார், ஈரான் எயார் மற்றும் எதியோப்பியன் எயார்லைன்ஸ் என்பன பயணிகள் மற்றும் விசேட தேவை சாட்டர் செயற்பாடுகளையும் வழங்கிய விமானநிறுவனங்களாகும். எதியோப்பியன் எயார்லைன்ஸ், குறிப்பாக, ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படைகளை ஏற்றிச்செல்வதில் ஒரு முக்கிய பங்கினை ஆற்றியதுடன், இது சாட்டர் வான் சேவைகளின் மூலோபாயமான முக்கியத்துவத்தினை குறிப்பிடுகின்றது.

## அட்டவணைப்படுத்தப்படாத வர்த்தக சாட்டர் செயற்பாடுகள்

2024 பூராவும் தற்காலிக சாட்டர் விமானசேவையில் ஒரு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன், இது உள்ளூர் மற்றும் பிராந்திய பிரயாணக் கேள்வியினால் உயர்வடைந்தது. யுரோப்பியன் எயார் சாட்டர், ஈரான் எயார் டுவர், பல்கேரியன் எயார், ஐஸ்லன்ட் எயார், மற்றும் BBN எயார்லைன்ஸ் உள்ளடங்கலான பரந்தளவிலான சர்வதேச சாட்டர் விமான நிறுவனங்கள் மத்தள மற்றும் கட்டுநாயக்காவிற்கு விமானப்பயணங்களை செயற்படுத்தின. இவை பயணிகள் மற்றும் சரக்கு ஆகிய இரண்டிற்கும் வசதியளித்தவேளை இலங்கையின் சர்வதேச இணைப்பினை மேம்படுத்தியது.

## உள்ளூர் வான்பயணவியல்

இலங்கையினுள் விட்ஸ் எயார் மற்றும் சினமன் எயார் என்பன வணிகப் பயணிகள் மற்றும் சுற்றுலா தொடர்புடைய போக்குவரத்துக்காக உள்ளூர் சாட்டர் சேவைகளை தொடர்ந்தும் செயற்படுத்தின. போதுமையற்ற கேள்வியின் காரணமாக வழக்கமாக அட்டவணைப்படுத்தப்பட்ட உள்ளூர் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளவேளை, வாடிக்கையாளர் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உலங்கு வானூர்தி செயற்பாட்டாளர்கள் தனியான சாட்டர் சேவைகளை பராமரித்தன.

## பயண முகமையக உரிமமளித்தல்

1992 இன் 55 ஆம் இலக்க வான் வழிசெலுத்தல் சட்டம் மற்றும் 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் வான்பயணவியல் சட்டத்தின் கீழ் CAASL வான் போக்குவரத்து (பயணிகள்) உரிமங்களை வழங்கியது. இவை வான்மூலம் பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள முகமையகங்களுக்கு கட்டாயமாகும். மூலதன பங்களிப்பின் அடிப்படையில் உரிமங்கள் பிரிவு A மற்றும் பிரிவு B என வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் வருடாந்தம் புதுப்பிக்கப்படுகின்றன.

2024 இல்:

- 88 புதிய உரிமங்கள் வழங்கப்பட்டன (பிரிவு A இல் 83, பிரிவு B இல் 5).
- 494 உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன (483 பிரிவு A இலாகும்).
- விண்ணப்பங்கள் மற்றும் புதுப்பிப்புகளை மீளாய்வு செய்வதற்கு 103 மெய்நிகர் மதிப்பீடுகள் இயங்கலை மேடைகளூடாக நடாத்தப்பட்டன.

உரிமமளித்தல் கட்டமைப்பானது இலங்கையினுள் செயலாற்றுகின்ற பயண முகமையங்களிடையே முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் தொழில்சார் நியமங்களை தொடர்ச்சியாக ஊக்குவிக்கின்றது.

## பயணிகள் முறைப்பாடுகளும் நுகர்வோர் பாதுகாப்பும்

பயணிகள் மனக்குறைகள் 2024 இல் ஒப்பீட்டளவில் திடமாக காணப்பட்டதுடன், 90% ஆன முறைப்பாடுகள் CAASL இன் மத்தியஸ்துடன் சுமூகமாக தீர்த்துவைக்கப்பட்டன. நுகர்வோர் உரிமைகள் மற்றும் பிணக்கு தீர்த்தல் செயல்முறைகளை மேலும் பலப்படுத்துவதற்காக CAASL வான்போக்குவரத்து மற்றும் பொருளாதார முறைமைப்படுத்தல் பிரிவில் ஒரு தனிப்பயனாக்கப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு பொறிமுறையோன்றினை நிறுவியது. இது பயணிகள் நலன் மற்றும் சேவை தரத்திற்கான அதன் கடப்பாட்டினை மீளுறுதி செய்கின்றது.

## வீசா பரிந்துரைத்தல்கள்

வான்போக்குவரத்து மற்றும் பொருளாதார முறைமைப்படுத்தல் பிரிவானது இலங்கையின் வான்பயணவியல் துறையில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டவர்கள் மற்றும் சர்வதேச மாணவர்களுக்கான வீசா பரிந்துரைத்தல்களை வழங்குவதன் மூலம் வான்பயணவியல் தொழிற்சேனைக்கு துணையளிப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகித்தது.

2024 இல்:

- வான்பயணவியல் பயிற்சி நிறுவனங்களில் இணைந்துள்ள வெளிநாட்டு மாணவர்களுக்காக 198 வீசா பரிந்துரைத்தல்கள் வழங்கப்பட்டன.
- தொழில்நுட்ப மற்றும் நிர்வாக தொழில்வல்லுனர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்கள் உள்ளடங்கலான 121 வெளிநாட்டவர்கள் வீசா ஒப்புதல்களை பெற்றதுடன், இவை துறையில் முக்கியமான திறன் உட்பாய்ச்சல் மற்றும் திறன் அபிவிருத்தியினை இயலுமையாக்குகின்றது.

## வான் சேவைகள் பேரம்பேசல்கள்

2024 இல் எந்தவொரு புதிய இருதரப்பு வான் சேவை ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படாதவேளை, இவ்வாண்டானது நெதர்லாந்து மற்றும் தாய்லாந்து உள்ளடங்கலான முன்னர் தாமதிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் மீள் கைச்சாத்திடப்படுவதில் முன்னேற்றங்களைக் கண்டது. இந்த முன்னேற்றங்கள் சர்வதேச வான்பயணவியல் ஒத்துழைப்பினை விரிவாக்கி வான்பயணவியல் தளத்தில் இராஜதந்திர இணைப்புகளை பலப்படுத்துவதற்கான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளை குறிப்பிடுகின்றன.

## ஆய்வு: இலங்கையில் பொதுவான வான்பயணவியல்

எதிர்காலத்திற்கு தயாரான வான்பயணவியல் திட்டமிடல் நோக்கிய ஒரு முன்முயற்சியான நடவடிக்கையாக CAASL இன் சூழல், ஆய்வு மற்றும் திட்டங்கள் பிரிவானது பின்வரும் தலைப்பில் ஒரு விரிவான கற்கையினை நிறைவுசெய்தது:

"இலங்கையில் பொது வான்பயணவியலின் சவால்களை விளித்துரைத்தல் மற்றும் எதிர்கால அபிலாஷைகளை இனங்காணுதல்."

இக்கற்கையானது பொது வான்பயணவியல் துறையின் தற்போதைய நிலை மற்றும் பயன்படுத்தப்படாத சாத்தியங்களை மதிப்பிட்டதுடன், இவை தனியார் வான்பயணவியல், விமானப்பயண பயிற்சி, வான்வழி வேலை மற்றும் பராகிளைடிங் மற்றும் பெலூனிங் போன்ற பொழுதுபோக்கு பறத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அதன் வளர்ச்சி சாத்தியம் காணப்பட்டபோதிலும், துறையானது பின்வரும் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றது:

- போதுமையற்ற உட்கட்டமைப்பு
- சிக்கலான முறைமைப்படுத்தல் கட்டமைப்புகள்
- நீண்ட பாதுகாப்பு செயன்முறைகள்
- உயர் செயற்பாட்டுச் செலவினங்கள் மற்றும் வரையறையான நிதியியல் ஊக்குவிப்புகள்
- திறன் பற்றாக்குறைகள் மற்றும் சூழல் நிலைபேறுடைமை அக்கறைகள்

ஆய்வு முறையானது பங்காளிகள் கலந்துரையாடல்கள், தரவு பகுப்பாய்வு மற்றும் உலகளாவிய அளவுகோல் மீளாய்வுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் பின்வருவனவற்றில் நடைமுறையான பரிந்தரைகளை அறிக்கையானது வழங்குகின்றது:

- உட்கட்டமைப்பு விரிவாக்கம்
- முறைமைப்படுத்தல் எளிமையாக்கல்
- பாதுகாப்பு மேம்பாடு
- ஊக்குவிப்புத் திட்டங்களும் திறன் அபிவிருத்தியும்
- சூழல் நிலைபேறுடைமையினை ஊக்குவித்தல்

இந்த பணியானது இலங்கையின் பொது வான்பயணவியலின் முழு சாத்தியத்தினையும் திறக்கும் நோக்கில் சான்று அடிப்படையிலான கொள்கை மற்றும் முதலீட்டு தீர்மானத்திற்கான அடித்தளத்தை இடுகின்றது.

# செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

## வான் போக்குவரத்து புள்ளிவிபரம் மற்றும் துறையின் வளர்ச்சி

CAASLஇன் வான்போக்குவரத்து புள்ளிவிபரத் திட்டமானது மூலோபாய தீர்மானம் மேற்கொள்வதற்கும் துறையின் எதிர்வுகூறலுக்கும் சீரான திரட்டல், பொருள்விளக்கம் மற்றும் வான்பயணவியல் தொடர்பான அவசியமான தரவுகளின் பிரசுரம் என்பவற்றை உறுதிசெய்கின்றது.

## 2024 இல் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள்:

- பயணிகள் அசைவுகள்: 8,804,019 (கோவிட்டுக்கு முன்னரான மட்டங்களில் 89% இனை எட்டியது)
- வானூர்தி அசைவுகள்: 55,848 (கோவிட்டுக்கு முன்னரான மட்டங்களில் 90% இனை எட்டியது)

சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகையுடன், உயரிய பாதை கிடைப்புத்தன்மை, மற்றும் மேம்பட்டு விமானநிறுவனங்களின் பங்கேற்பு என்பவற்றுடன் இலங்கை 2025 இன் இறுதியில் தொற்றிற்கு முன்னரான போக்குவரத்து பருமனளவுகளை விஞ்சுமளவிற்கு நன்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வலுவான மீட்டலானது வான்பயணவியல் துறையின் மீளெழுச்சியினையும் பொருளாதார மீட்பு, சுற்றுலாத்துறை வளர்ச்சி மற்றும் சர்வதேச இணைப்பு என்பவற்றை இயக்குவதில் அவசியமான பங்கினையும் வகிக்கின்றது.

## வானூர்தித்தள அபிவிருத்தி முன்னெடுப்புகள்

தேசிய வான்பயணவியல் உட்கட்டமைப்பினை மேம்படுத்தும் அதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (CAASL) வானூர்தித்தளப் பிரிவானது பல முக்கிய மைல்கற்களை 2024 இல் பதிவுசெய்தது. குறிப்பாக, ஹிங்குரக்கொட விமான நிலையம் தற்போது சர்வதேச விமானப் பயணச் செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கான மாற்றலுக்கு உட்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தியானது இலங்கை வான்படையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுவதுடன், இது CAASL இன் நேரடி வழிகாட்டி மற்றும் மேற்பார்வையின் கீழ் ஓடுபாதை மறுசீரமைப்பினை மேற்கொள்கின்றது.

இந்த முன்னெடுப்பானது பின்வரும் முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய சர்வதேச சிவில் வான்பயணவியல் நியமங்களுடன் முழு இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதில் முன்னிறுத்தம் செய்கின்றது :

- ஓடுபாதை பரிமாணம் மற்றும் தளவரிசைத்தரம்
- ஒளியூட்டல் முறைமைகளும் அடையாளங்களும்
- ஓடுபாதை குறியிடல்களும் பாதுகாப்பு வலயங்களும்
- தொடர்பாடல் மற்றும் வழிசெலுத்தல் உபகரணம்
- சூழல் நிலைபேறுடைமை மற்றும் தணித்தல் நடவடிக்கைகள்

இந்த பங்குடைமையானது உலகளாவிய பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு அளவுகோல்களை சந்திக்கும் வான்பயணவியல் உட்கட்டமைப்பினை விநியோகிப்பதற்கு முகவரிடையேயான ஒத்துழைப்பினை வளர்க்கும் CAASLஇன் கடப்பாட்டினை கோடிட்டுக்காண்பிக்கின்றது.

## பாடசாலை பிள்ளைகளுக்கான வான்பயணவியல் விழிப்புணர்வு

வான்பயணவியல் துறையில் ஆரம்பகால ஆர்வத்தினை வளர்ப்பதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டு, சிவில் வான்பயணவியல் ஊக்குவிப்பு அலகானது கட்டமைக்கப்பட்ட கல்வி வெளிக்களத் திட்டங்களினூடாக இளம் சந்ததியினரை ஈடுபடுவதற்கான அதன் முயற்சிகளை தொடர்ந்தது. 2024 இல் ஐந்து (05) வான்பயணவியல் விழிப்புணர்வுத் திட்டங்கள் நாட்டிலுள்ள பாடசாலைகளிடையே நடாத்தப்பட்டன. இந்த அமர்வுகள் சிவில் வான்பயணவியலின் அடிப்படை எண்ணக்கருக்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களது பாடசாலைகளினுள் சிவில் வான்பயணவியல் கழகங்களை உருவாக்குமாறு ஊக்கமளிக்கப்பட்டார்கள். இந்த குறிக்கோளானது ஆர்வத்தைத் தூண்டுதல் மற்றும் வான்பயணவியல் தொடர்பான தொழில்கள் மற்றும் துறைகளில் நீண்டகால ஆர்வத்தினை வளர்த்தல் என்பனவாகும்.

## விமானநிலையம் அடிப்படையிலான வான்பயணவியல் செயலமர்வுகள்

பாடசாலை அடிப்படையிலான திட்டங்களை விரிவாக்குவதில், ஊக்குவித்தல் அலகானது இரண்டாம் அடுக்கு ஈடுப்பாட்டு முன்னெடுப்பாக விமானநிலைய செயலமர்வுகளை அறிமுகப்படுத்தியது. 2024 இல் அத்தகைய ஏழு (07) செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன், ஒவ்வொரு செயலமர்விலும் ஏறத்தாழ 150 மாணவர்கள் பங்கேற்றார்கள். இவர்களுக்கு விமானநிலைய சூழல் மற்றும் வான்பயணவியல் செயற்பாடுகளுக்கான நேரடி வெளிப்பாடானது வழங்கப்பட்டது.

பரவலான அமுலாக்கத்திற்கான திட்டங்கள் காணப்பட்டபோதிலும், பல செயலமர்வுகள் கல்வி அமைச்சினால் கட்டாயமாக்கப்பட்டன கோவிட்-19 தொடர்பான பாதுகாப்பு கட்டுப்பாடுகளின் காரணமாக பிற்போடப்பட்டன. இருந்தபோதிலும், சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் திருத்தியமைக்கப்பட்ட அமர்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இவை சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்தன.

## “குவன்சர” வான்பயணவியல் சஞ்சிகையின் பிரசுரம்

பாடசாலைகளில் வான்பயணவியலுக்கு மேலும் துணையளிப்பதற்கு CAASL அதன் தனிப்பயனாக்கப்பட் பாடசாலை வான்பயணவியல் சஞ்சிகையான "குவன்சர" இனை தொடர்ந்தும் பிரசுரித்து விநியோகித்தது. 2024 இல் இருபத்து மூன்று (23) பதிப்புகள் பிரசுரிக்கப்பட்டு நாட்டிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இது உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளை இலக்கு வைத்தது. சஞ்சிகையானது ஒரு அறிவுபூர்வமான மற்றும் ஈடுபாட்டுடைய பிரசுரமாக மாணவர்களிடையே பிரபல்யம் அடைந்தது.

80 வருடங்கள் சர்வதேச சிவில் வான்பயணவியலின் ஞாபகார்த்தமாக 24ஆவது பதிப்பானது இந்த உலகளாவிய மைல்கல்லை குறிப்பிடும்விதமாக ஒரு விசேட பதிப்பாக வெளியிடப்பட்டது.

## “குவர் சரிசர” தொலைக்காட்சி நிகழ்ச்சி

“குவன் சரிசார” தொலைக்காட்சி நிகழ்ச்சியானது 2024 இல் புகழ்பெற்ற ஊடக மேடையாக சேவையாற்றுகின்றது. இது இலங்கையின் வான்பயணவியல் துறையினுள்ளான தனித்துவமான நுண்ணறிவுகளை வழங்குகின்றது. 35 அத்தியாயங்களுடன் இவ்வாண்டின்போது ஒளிபரப்பட்ட இந்நிகழ்ச்சியானது முன்னர் ஒளிபரப்பப்படாத பிரத்தியே உள்ளடக்கம், திரைக்கு பின்னாலான காட்சிகள் மற்றும் வான்பயணவியல் துறையின் வரலாற்றுரீதியான கதைகள் என்பவை இடம்பெற்றன.

இக்காட்சிப்படுத்தலானது அதன் பொது பெறுமதி மற்றும் ஊடகத் தனிச்சிறப்பிற்காக அங்கீகரிக்கப்பட்டதுடன் துறையின் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்களது அறிவுக்காக ஒரு விருதினை வென்றது. இது ஒரு பரந்த அவையோரை எட்டுவதற்கான மற்றும் வான்பயணவியலை தேசிய அபிவிருத்தியின் ஒரு முக்கிய துறையாக ஊக்குவிப்பதற்கான ஒரு முக்கிய சாதனமாக கருதப்பட்டது.

## ஊடக ஈடுபாடு மற்றும் விழிப்புணர்வு கட்டியெழுப்புதல்

CAASL சிவில் வான்பயணவியல் விழிப்புணர்வினை ஊக்குவிப்பதற்கான பாரம்பரிய மற்றும் டிஜிட்டல் ஊடகமாக பயன்படுத்துவதில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2024 முழுவதும், சிவில் வான்பயணவியல் ஊக்குவிப்பு அலகானது செய்தித்தாள்கள், வானொலி நிலையங்கள் மற்றும் தொலைக்காட்சி வலையமைப்புகள் உள்ளடங்கலான பல்வேறு ஊடக நிலையங்களுடன் CAASL செய்திகள் மற்றும் பொது வான்பயணவியல் துறை புதுப்பிப்புகள் என்பற்றை பரப்புவதற்காக கூட்டுசேர்ந்துள்ளது. இந்த முயற்சிகள் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் வான்பயணவியலின் பங்கில் ஒரு சிறந்த புரிந்துணர்வினை வளர்ப்பதற்கு பொதுமக்களை நன்கு அறியப்படுத்துவதற்கும் முனைகின்றன.

## விசேட ஞாபகார்த்த நிகழ்வுகள்

சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பின் (ICAO) 80 ஆவது ஆண்டுவிழாவினைக் குறிப்பிடும் விதமாக ஊக்குவிப்பு அலகினால் வசதியளிக்கப்பட்ட ஒரு விசேட நிகழ்வினை CAASL ஒழுங்குசெய்தது. இந்நிகழ்விற்கு துறைமுகம் மற்றும் சிவில் விமானப்போக்குவரத்துக்கான மான்புமிகு பிரதி அமைச்சர், பொறியாளர் ஜனித் கொடித்துவக்கு தலைமை தாங்கியதுடன், வான்பயணவியல் துறையிலிருந்து முக்கிய பங்காளிகள் சமூகமளித்தார்கள்.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக இலங்கையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிகவும் சிரேஷ்ட வானூர்தியாளரான திரு. லயினல் சிரிமான அவர்களுக்கு துறைக்கான அவரது அயராத பங்களிப்பிற்காக ஒரு கௌரவ விருது வழங்கப்பட்டமை காணப்பட்டது.

### புதிய ஊடகத்தினூடாக சிவில் வான்பயணவியல் விழிப்புணர்வு

நவீன தொடர்பாடல் போக்குகளுக்கு அமைவாக, உள்ளூரிலும் சர்வதேசத்திலும் பரந்த அவையோரை எட்டுவதற்காக இணைய அடிப்படையிலான மற்றும் சமூக ஊடக மேடைகளிலான முன்னிறுத்தத்தினை கடுமையாக்கியது. அதிகாரசபையின் செயற்பாடுகள், முறைமைப்படுத்தல் இற்றைப்படுத்தல்கள் மற்றும் பொதுமக்களுக்கு மெய்நேரத்திலான வான்பயணவியல் செய்திகள் என்பவற்றை தெரிவிக்கின்ற ஈடுபாடுடைய மற்றும் தகவல் தெரிவிக்கின்ற டிஜிட்டல் உள்ளடக்கத்தினை விருத்திசெய்து பிரசுரிப்பதற்கான முயற்சிகள் நடந்தவண்ணமுள்ளன.

புதிய ஊடக மேடைகளுக்கான இந்த மூலோபாய நகர்வானது வெளிப்படைத்தன்மை, பங்காளிகள் ஈடுபாடு மற்றும் வான்பயணயில் தொடர்பான விடயங்களில் பொதுமக்களது பங்குபற்றல் என்பவற்றை அதிகரிக்கும் நோக்கினைக் கொண்டதாகும்.

### ஊடக மற்றும் அறிவுப் பாதுகாப்பு - எதிர்கால கண்ணோட்டம்

அதன் நீண்டகால மூலோபாய முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக சிவில் வான்பயணவியல் ஊக்குவிப்பு அலகானது 2024 இல் ஒரு டிஜிட்டல் வான்பயணவியல் நூலகத்தின் அபிவிருத்தியினை ஆரம்பித்தது. இந்த இலத்திரணியல் களஞ்சியமானது வரலாற்றுரீதியான மற்றும் சமகாலத்திலான முக்கியமான நிகழ்வுகள், பிரசுரங்கள் மற்றும் வான்பயணவியல் தரவுகளின் ஒரு விரிவான காப்பகமாக சேவையாற்றும் நோக்கினைக் கொண்டதாகும்.

இவ்வலகானது தொடர்ச்சியான ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் முயற்சிகளூடாக இந்த மேடையினை தொடர்ந்தும் வளப்படுத்துகின்றது. இலங்கையின் வான்பயணவியல் பயணத்தின் மரபுவழியினை பாதுகாப்பதன் மூலம் இலத்திரணியல் நூலகமானது எதிர்காலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழில்வல்லுனர்களுக்கு ஒரு மதிப்பிடவியலா மேற்கோளாகச் சேவையாற்றும்.

### 2024 இல் வான்தகைமை அபிவிருத்திகளும் அங்கீகாரங்களும்

2024 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) தேசிய வான்பயணவியல் துறையின் பாதுகாப்பு மற்றும் நிலைபேறுடைய வளர்ச்சிக்கு துணையளிப்பதற்கு முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை பலப்படுத்துவதனை தொடர்ந்தது. சர்வதேச நியமங்கள் மற்றும் தேசிய முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் சீரமைவாக ஒரு தொடரான முக்கியமான வான்தகைமை அங்கீகாரங்களும் சான்றளிப்புகளும் வழங்கப்பட்டன. இவை பாதுகாப்பு, இணக்கப்பாடு மற்றும் செயற்பாட்டுச் தனிச்சிறப்பு என்பவற்றுக்கான CAASL இன் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றன.

### வானூர்தி பதிவீடுகள் மற்றும் வான்தகைமை சான்றளிப்புகள்

வானூர்தி பதிவீட்டுப் பிரிவில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. இங்கு பல செயற்பாட்டாளர்கள் விமானப்பயண செயற்பாட்டாளர்களுக்கான ஆரம்பம் அல்லது தொடர்ச்சிக்கு அவசியமான அங்கீகாரங்களை பெற்றார்கள்:

- ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஒரு சேர்க்கப்பட்ட எயார்பஸ் A320 வானூர்திக்கான பதிவீட்டுச் சான்றிதழ் (C of R) மற்றும் வான்தகைமை சான்றிதழ்கள் (C of A) (பதிவீடு 4R-ABT) இற்கு வழங்கியதுடன், வானூர்தியானது முறையாக வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அனுமதித்தது.
- லங்கா பெலூனிங் (பிரைவேட்) லிமிட்டட் அதன் புதிதாக சேர்க்கப்பட்ட வெப்பக் காற்று பலூன் பதிவீட்டுச் சான்றிதழ் மற்றும் வான்தகைமை சான்றிதழ்களை பெற்றது. இது CAASL இன் முறைமைப்படுத்தல் கட்டமைப்புடன் இணக்கப்பாடாக அவர்களது வான்கூண்டு செயற்பாடுகளை ஆரம்பிப்பதனை இயலுமையாக்கியது.
- விலயிங் ஏன்ஜல்ஸ் விலய்ட் அகடெமிக்கு அதன் புதிதாக கையகப்படுத்தப்பட்ட செஸ்னா 150 J (4R-FAC) இற்கான ஒரு ஆரம்ப வான்தகைமைச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இது முறைமைப்படுத்துப்பட்ட நியமங்களின் கீழ் விமான பயிற்சி நடவடிக்கைகளுக்கு துணையளிப்பதற்கான ஒரு முக்கிய படியாகும்.

### வானூர்தி பராமரிப்பு ஒழுங்கமைப்பு (AMO) அங்கீகாரங்கள்

வானூர்தியின் தொடர்ச்சியான வான்தகைமையினை உறுதிசெய்வதற்கு இரத்மலானையை தளமாகக் கொண்ட புளூ ஸ்கை ஏவியேசன் சேர்விசஸ் இற்கு புதிய வானூர்தி பராமரிப்பு ஒழுங்கமைப்பு அங்கீகாரமானது (AMO) வழங்கப்பட்டது. இந்த சான்றளிப்பானது நிறுவனத்தினை பொருத்தமான பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப நியமங்களுடன் இணக்கப்பாடான பராமரிப்பு சேவைகளை நடாத்துவதற்கு அதிகாரமளிப்பதுடன், நாடடினுள் பராமரிப்பு ஆற்றலை விரிவாக்குவதற்கு பங்களிப்பு செய்கின்றது.

### தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ ஒழுங்கமைப்பு (CAMO) அங்கீகாரங்கள்

இவ்வாண்டானது இரண்டு நிறுவனங்களுக்கு CAMO அங்கீகாரங்களை வெற்றிகரமாக வழங்கப்பட்டதை கண்டது:

- DP ஏவிசேசன் லிமிட்டட்
- விலயிங் ஏன்ஜல்ஸ் விலயிட் அகடெமி

இந்த அங்கீகாரங்கள் உரிய நிறுவனங்கள் அவற்றின் பொறுப்பின் கீழுள்ள வானூர்தியின் தொடர்ச்சியான வான்தகைமையினை முகாமைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கின்றது. இதன்மூலம் பொருத்தமான பராமரிப்பு அட்டவணைகள், வான்தகைமை பணிப்புரைகள் மற்றும் பாதுகாப்பு தேவைப்பாடுகளுடன் இணக்கமான முறைமையினை உறுதிசெய்கின்றது.


### வானூர்தி வகை ஏற்றுக்கொள்ளல்

இவ்வாண்டின்போதான ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக போயிங் 737-8 வானூர்தி மாதிரியின் வெற்றிகரமான வகை ஏற்றுக்கொள்ளல் காணப்பட்டது. இது இலங்கையின் வானூர்தி ஆற்றல் தேக்கத்திற்கு கணிசமான மேம்பாட்டினை குறிப்பிடுவதுடன், இது செயற்பாட்டாளர்கள் புதிய மற்றும் மிகவும் வினைத்திறனான வானூர்தி வகைகளை சேவையில் சேர்த்துகொள்வதனை இயலுமையாக்குகின்றது.

கூட்டாக, இந்த அங்கீகாரங்கள் முறைமைப்படுத்தல் மேற்பார்வையினை வலியுறுத்தல், செயற்பாட்டு தயார்நிலையினை மேம்படுத்தல் மற்றும் இலங்கையினுள் வான்பயணவியல் நடவடிக்கைகளின் பாதுகாப்பான விரிவாக்கத்தினை ஊக்குவித்தலில் ஒரு மூலோபாய முன்னேற்றமாகும். துறையில் புத்தாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு துணையளிப்பதற்கு கடப்பாட்டுடன் உள்ளவேளை வான்தகைமை மற்றும் விமானப்பயணப் பாதுகாப்பில் உயர்ந்த நியமங்களை பாதுகாக்கின்றது.

## செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

### ட்ரோன் செயற்பாட்டு அங்கீகாரப் போக்குகள் 2023-2024




| 2024 | 2023 |
|---|---|
| 5,333 | 3,478 |

வழங்கப்பட்ட ட்ரோன் அங்கீகாரங்கள்

| 2024 | 2023 |
|---|---|
| 2,200 | 1,388 |

பதிவீடளிக்கப்பட்ட ட்ரோன் - உள்ளூர் உடைமையாளர்

| 2024 | 2023 |
|---|---|
| 3,827 | 2,388 |

பதிவீடளிக்கப்பட்ட ட்ரோன் - வெளிநாட்டு உடைமையாளர்

**2,200**

பதிவீடளிக்கப்பட்ட ட்ரோன்கள் - உள்ளூர் உடைமையாளர்கள்

**3,827**

பதிவீடளிக்கப்பட் ட்ரோன்கள் - வெளிநாட்டு உடைமையாளர்கள்

**2024 ஆம் ஆண்டானது இலங்கையில் ஆளில்லா வானூர்தி முறைமைகளில் திடமான முன்னேற்றத்தை கண்டது. இது விரிவாக்கம் மற்றும் உலகளாவிய வான்பயணவியல் போக்குகள் நோக்கிய தெளிவான உத்வேகத்துடனாகும். செயற்பாட்டு தரவுகள் நாடுபூராவும் UAS நடவடிக்கைகளில் ஒரு திடமான வளர்ச்சியினை பிரதிபலிக்கின்றன.**

ஒரு பாரிய மைல்கல்லாக 197 ஆவது சபைக் கூட்டத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆளில்லா வானூர்தி முறைமைகள் (UAS) மற்றும் மேம்பட்ட வான் இயங்குதிறன் (AAM) என்பவற்றுக்கான 10- வருடத் திட்டத்தின் அபிவிருத்தியாகும். இந்த முன்னோக்கியத் திட்டமானது சிவில் வான்பயணவியல் அதிகாரசபையினுள் கொள்திறன் கட்டியெழுப்பலுக்கான அடித்தளத்தை நிறுவுவதுடன், ஒழுங்குவிதிகளை பலப்படுத்தி UAS மற்றும் AAM சூழலமைப்பின் பாதுகாப்பான மற்றும் நிலைபேறான வளர்ச்சியினை இயலுமையாக்குகின்றது.

மேலாக, 2024 ஆனது 2025 இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட SLCAIS 053 பதிப்பு 02 ஆனாது முறைமைப்படுத்தல் மேம்படுத்தலுக்கான அடித்தளத்தை இட்டுள்ளது. புதிய விதிகளுக்கான அமுலாக்கல் செயன்முறையின் வரைவானது ஏற்கனவே நடந்தவண்ணமுள்ளது.

கூட்டாக இந்த முன்னெடுப்புகள் வான்பயணவியலில் புத்தாக்கத்தை பயன்படுத்துவதற்கும் UAS மற்றும் AAM இன் எதிர்காலத்திற்கான தயாராதலுக்கும் இலங்கையின் கடப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது.



# கொள்திறன் அபிவிருத்தி

2024 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) ஒரு திறமையான உலகளாவிய ரீதியில் சீரமைவான வான்பயணவியல் தொழிற்சேனையினை கட்டியெழுப்பும் அதன் கடப்பாட்டினை மேம்படுத்தியது. பிராந்திய மற்றும் சர்வதேச அங்கங்களுடனான மூலோபாயமான பங்குடைமைகளூடாக அதிகாரசபையானது அதன் மேற்பார்வை ஆற்றல்களை, குறிப்பாக வானூர்தித்தள முகாமைத்துவம், விமானப்பயண செயற்பாடுகள், வான்பயணவியல் பயிற்சி மற்றும் துறையில் பாதுகாப்பான, வினைத்திறனான மற்றும் நிலைபேறுடைய வளர்ச்சி என்பவற்றிலாகும்.

ஒரு முக்கிய இயக்கியாக யூரோப்பியன் யூனியன் வான்பயணவியல் பாதுகாப்பு முகவருடனான (EASA) ஒத்துழைப்பாகும், CAASL இனுள் அமைந்துள்ள இதன் தெற்காசிய பிராந்திய அலுவலகமானது தொழில்நுட்ப நிபுணத்துவம், கொள்திறன் கட்டியெழுப்பல் திட்டங்கள் மற்றும் அறிவுப் பரிமாற்றத்தினை வழங்கியது. பரிசோதகர்கள் ட்ரோன் செயற்பாடுகள், வானூர்தித்தள வடிவமைப்பு, சூழல் முகாமைத்துவம் மற்றும் சரிவுமேடை பரிசோதனைகள் போன்ற பிரிவுகளில் விசேட பயிற்சியினை பெற்றவேளை, சிங்கப்பூர் வான்பயணவியல் அகடெமியிலான பயிற்சி உள்ளடங்கலான சர்வதேச திட்டங்கள் உலக நியமங்களுடனான இணக்கப்பாட்டினை மேம்படுத்தியது.

CAASL ஐநா - தெற்காசிய வான்பயணவியல் பங்குடைமைத் திட்டத்துடன் (EU-SA APP) பிராந்திய ஒத்துழைப்பு, நிலைபேறுடைமையினை ஊக்குவித்தல் மற்றும் காலநிலை மீளெழுச்சியினை கட்டியெழுப்புதல் என்பவற்றை வளர்ப்பதற்காக ஈடுபட்டுள்ளது. செயலமர்வுகள் மற்றும் நடைமுறை பயிற்சிகள் CAASL மற்றும் துறைசார் பங்காளிகளது ஆற்றலை பலப்படுத்துவதுடன் வளர்ச்சிடையும் வான்பயணவியலை பாதுகாப்பாகவும் நிலைபேறாகவும் முகாமைப்படுத்துவதற்கு தயாராக்குகின்றது.

இந்த முன்னெடுப்புகள் தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை விருத்திசெய்தல், வலுவான மேற்பார்வை பொறிமுறை மற்றும் ஒத்துழைப்பான வலையமைப்புகள் என்பவற்றில் CAASL இன் தொடர்ச்சியான முன்னிறுத்தத்தினை பிரதிபலிப்பதுடன், இலங்கையினை ஒரு முன்னோக்கிய மற்றும் மீளெழுச்சியான வான்பயணவியல் மையமாக நிலைப்படுத்துகின்றது.

## இலங்கையில் இடம்பெற்ற 08ஆவது சர்வதேச ஒத்துழைப்பு கருத்துக்களத்தின் (ICF/8) பிரதிபலிப்புகள்

பாதுகாப்பான மற்றும் பசுமையான வான்பயணவியலுக்கான உலகளாவிய முயற்சிகளை பலப்படுத்துவதற்கு, ஐரோப்பிய யூனியன் வான்பயணவில் பாதுகாப்பு முகவரமைப்பு (EASA) கொழும்பு, இலங்கையில் 2024 மார்ச் 19 முதல் 21 வரை 8ஆவது சர்வதேச ஒத்துழைப்பு கருத்துக்களத்தினை (ICF/8) வெற்றிகரமாக ஒழுங்குசெய்தது.

2008 இலிருந்தான ஆரம்பத்துடன், சர்வதேச ஒத்துழைப்பு கருத்துக்களமானது பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் முறைமைகளில் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கு வான்பயணவியல் அதிகாரசபைகளுக்கும் பிராந்திய ஒழுங்கமைப்புகளுக்கும் ஒரு உலகளாவிய மேடையாக சேவையாற்றியுள்ளது. இக்கருத்துக்களமானது பங்குபற்றுனர்கள் அனுபவங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை பரிமாற்றிக்கொள்வதற்கும், பாதுகாப்பு மற்றும் சூழல் நியமங்களில் சமீபத்தைய அபிவிருத்திகளை கலந்துரையாடுவதற்கான வாய்ப்பினை வழங்கியதுடன் உலகம் முழுவதும் பாதுகாப்பான மற்றும் நிலைபேறுடைய வான்பயணவியலை ஊக்குவிக்கும் பகிரப்பட்ட தொலைநோக்கினை வலியுறுத்துகின்றது.

ICF/8 ஆனது தொழில்நுட்ப புத்தாக்கத்தின் முறைமைப்படுத்தல் மற்றும் பரிணமிக்கின்ற இடர்கள், பரிணமிக்கின்ற சூழல் தேவைப்பாடுகளை சந்தித்தல், வான்பயணவியல் பாதுகாப்பில் பொதுமக்கள் நம்பிக்கையினை பராமரித்தல் மற்றும் பிராந்திய மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பினை மேம்படுத்துதல் உள்ளடங்கலான பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியிருந்தது. 2019 இல் இடம்பெற்ற கடைசிக் கருத்துக்களத்திலிருந்து பெற்ற அனுபவங்களிலும் EASA மற்றும் அதன் சர்வதேச பங்காளிகளுக்கிடையேயான திடமான ஒத்துழைப்பிலும் கட்டியெழுப்பியது,

ஐரோப்பிய யூனியன் மூன்றாம் நாடுகளுக்கான ஒரு அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புப் பங்காளியாக ஒரு முக்கிய பங்கினை தொடர்ந்து வகிக்கின்றது, குறிப்பாக வான்பயணவியல் துறையிலாகும். மூன்றாம் நாடுகளது வான்பயணவியல் அதிகாரசபைகள் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் ஐரோப்பிய வான்பயணவியல் பாதுகாப்பு, சூழல் நியமங்கள், கொள்கைகள் மற்றும் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்காக EASA நெருக்கமாக செயற்படுகின்றது.



## EU-தெற்காசிய வான்பயணவியல் பங்குடைமைத் திட்டம் (EU-SA APP)

The EU-தெற்காசிய வான்பயணவியல் பங்குடைமைத் திட்டமானது (EU-SA APP) ஐரோப்பிய யூனியனால் நிதியளிக்கப்பட்ட மற்றும் ஐரோப்பிய யூனியன் வான்பயணவியல் பாதுகாப்பு முகவரமைப்பினால் (EASA) அமுலாக்கப்பட்ட ஒரு முதன்மை முன்னெடுப்பாகும். இத்திட்டமானது பாதுகாப்பு, சூழல் நிலைபேறுடைமை மற்றும் காலநிலை மீளெழுச்சி என்பவற்றை மேம்படுத்துவதிலான ஒரு மூலோபாய முன்னிறுத்தத்துடன் சிவில் வான்பயணவியல் துறையில் மற்றும் தெற்காசியா ஆகியவற்றுகிடையேயான கூட்டு இணைப்பினை பலப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டதாகும்.

தெற்காசியப் பிராந்தியமானது உலகச் சனத்தொகையின் அண்ணளவாக 25% இற்கு கணக்கீடு செய்வதனால், உலகளாவிய ரீதியில் உயர்ந்த வான் போக்குவரத்து வளர்ச்சி வீதத்தினை அனுபவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த இரண்டு தசாப்தங்களில் வருடாந்தம் 8.6% என மதிப்பிடப்பட்டுள்ளது. இது வலுவான வான்பயணவியல் பாதுகாப்பு மேற்பார்வை, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் முறைமைப்படுத்தல் சீரமைப்பு என்பவற்றின் அவசியம் முக்கியம் என எடுத்துக்காட்டுகின்றது.




EU–SA APP நான்கு முக்கியமான குறிக்கோள்களூடாக இந்த தேவைகளை செலூக்கமாக விளித்துரைப்பதற்கு முனைகின்றது;

1. தெற்காசியா மற்றும் யூரோப்பியன் சிவில் வான்பயணவியல் அதிகாரசபைகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கிடையேயான நிறவன உறவுகளை பலப்படுத்துதல்.
2. தெற்காசிய மற்றும் யூரோப்பியன் வான்பயணவியல் பங்காளிகளுக்கிடையேயான தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கு வசதியளித்து பரஸ்பர பயிலல் மற்றும் அறிவுப் பரிமாற்றத்தினை வளர்த்தல்.
3. சர்வதேச நியமங்கள் மற்றும் திட்டமிட்ட வளர்ச்சிக்கு வசதியளிப்பதற்கு தெற்காசிய நாடுகளில் பாதுகாப்பு மேற்பார்வை ஆற்றல்களின் அபிவிருத்திக்கு துணையளித்தல்.
4. உமிழ்வு குறைப்பு, காலநிலை ஏற்பத்தன்மை மற்றும் நிலைபேறுடைய விமானநிலையச் செயற்பாடுகளை வலியுறுத்தி தெற்காசிய வான்பயணவியல் துறையினுள் மேம்பட்ட சூழல் செயற்திறனை ஊக்குவித்தல்.

### இலங்கையுடனான ஈடுபாடு

முறைமைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு பரப்பெல்லைக்கிடையே தொழில்நுட்ப திறமைகளை மேம்படுத்தும் நோக்கில், 2019 இலிருந்து, EU–SA APP ஆனது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையுடன் செயலூக்கமாக கூட்டுசேர்ந்து ஒரு பரந்தளவிலான கொள்திறன் கட்டியெழுப்பல் திட்டங்களை விநியோகித்துள்ளது.

இந்த திட்டங்கள் பின்வருவனவற்றில் முன்னிறுத்தம் செய்தன;

- வான்பயணவியல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள்
- சூழல் நிலைபேறுடைமை மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு
- வான்பயணவியலில் காலநிலை மாற்ற ஏற்புத்தன்மை மற்றும் குறைத்தல்

இந்த முன்னெடுப்புகளூடாக CAASL ஆளணியினர் மற்றும் துறையின் பங்காளிகள் வான்பயணவியல் பாதுகாப்பு மற்றும் சூழல் பாரபத்தியத்தில் சிறந்த நடைமுறைகளுக்கு மேம்பட்ட பயிற்சி மற்றும் வெளிப்பாடுகளிலிருந்து நன்மையடைந்துள்ளார்கள்.

### EU-தெற்காசிய வான்பயணவியல் பங்குடைமையின் திட்டம் II (EU-SA APP II)

EU-SA APP II முன்னெடுப்பின் ஒரு பாகமாக, பிராந்திய ஒத்துழைப்பினை வளர்ப்பதற்கு, வான்பயணவியல் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு மற்றும் தெற்காசிய முழுவதும் முறைமைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு கட்டமைப்புகளை பலப்படுத்துவதற்கு பின்வரும் செயலமர்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

- தெற்காசிய செயலமர்வு நிலத்தோற்றத்தில், தெற்காசிய செயலமர்வில் வானூர்தித்தளங்கள் நிலத்தோற்றம்
- தெற்காசிய சரிவுமேடை பரிசோதனை செயலமர்வு
- தெற்காசிய செயலமர்வில் விபத்து மற்றும் சம்பவ புலனாய்வு
- தெற்காசிய ATM பெருந்திட்ட நிறுவனங்கள்: வான் வழிசெலுத்தல் மற்றும் தெற்காசிய செயலமர்வுகளில் அரச பாதுகாப்பு திட்டத்தின் அமுலாக்கம்.
- சான்றளிக்கப்பட்ட பிரிவில் மற்றும் SORA செயலமர்வில் ட்ரோன்கள் செயற்பாடுகள்
- தெற்காசியாவில் சூழல் விடயங்கள்: வானிலை மாற்ற செயலமர்வில் வான்பயணவியல் தாக்கத்தினை விளித்துரைத்தல்
- ஆசிய சைபர் பாதுகாப்பு செயலமர்வு
- வான் வழிசெலுத்தல் முன்னெடுப்பு - ANSP சான்றளிப்பு மற்றும் தொடர்ச்சியான மேற்பார்வை செயலமர்வு



# செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

### ஆசிய பசிபிக் சிவில் வான்பயணவியல் அபிவிருத்திகள்

ஆசிய பசிபிக் ஆனது உலகில் விரைவாக வளர்ச்சியடையும் வான்பயணவியல் சந்தைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. சிவில் வானபயணவியலில் இரண்டாவது ஆசிய பசிபிக் அமைச்சர்களது கருத்தரங்கானது 11 - 12 செப்டம்பர் 2024 இல் இந்தியாவில் புதுடெல்லியின் இடம்பெற்றது. இது உட்கட்டமைப்பு, நிலைபேறுடைமை, தொழிற்சேனை அபிவிருத்தி மற்றும் அரச-தனியார் கூட்டுமுயற்சி என்பவற்றில் முன்னிறுத்தம் செய்தது.

பங்குபற்றியோர்கள் முக்கியமாக ICAO தலைவர் சல்வடோர் சியாசிட்டானோ மற்றும் செயலாளர் நாயகம் யுஹான் கார்லொஸ் சலசார் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. பின்வருபவர்கள் இலங்கையை பிரதிநிதித்தும் செய்தார்கள், AVM சாகர கொட்டகதெனிய (Retd.), DGCA & CEO ஆகியோர் தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கியதுடன், எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் (ஸ்ரீலங்கா) லிமிட்டட்டின் செல்வி. அவந்தி சேனாரத்னவும் பங்குபற்றினார்.

இந்தியாவின் பிரதம மந்திரி, திரு. நிரேந்திர மோடி அவர்கள் அனைத்து அங்கத்துவ நாடுகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட "டெல்லி பிரகடனத்தை" அறிவித்தார். இது பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் நிலைபேறுடைமையினை மேம்படுத்துவதில் ஒரு பாரிய நடவடிக்கையாக குறிப்பிடப்பட்டது. 2024 ஆசிய பசிபிக் 4.5 பில்லியன் பயணிகளை எதிர்பார்க்கின்றது எனவும் 2050 ஆண்டளவில் இது 11.5 பில்லியனை எட்டும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.





### COSCAP-தெற்காசியா (COSCAP-SA)

சிவில் வான்பயணவியலில் பாதுகாப்பினை ஊக்குவிக்கும் நோக்குடனான, COSCAP-தெற்காசியா (செயற்பாட்டு பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகைமை திட்டத்தின் கூட்டுறவு அபிவிருத்தி - தெற்காசியா) இன் 31 ஆவது வழிநடத்தல் குழுவின் கூட்டமானது பூட்டானின் பாரோவில் வெற்றிகரமாக இடம்பெற்றது. பணிப்பாளர் நாயகம் AVM சாகர கொட்டகதெனிய (Retd.) அவர்கள் COSCAP-SA இன் தலைமைத்துவத்தினை பொறுப்பேற்றார். 2024 மே 06 முதல் 09 வரை இடம்பெற்ற வழிநடத்தல் குழு கூட்டத்திற்கு இவர் தலைமை தாங்கியதுடன், இவர் பாக்கிஷ்தானின் DGCA திரு. கஹான் முர்தசாவினை பின்தொடர்ந்தார். COSCAP-SA, 1997 இல் நிறுவப்பட்டதுடன், இது தெற்காசியப் பிராந்தியத்தில் தொடர்ச்சியாக சிவில் வான்பயணவியல் பாதுகாப்பினை மேம்படுத்துகின்றது. எயார்பஸ். போயிங், FAA, EASA, CAA-UK மற்றும் DGCA-பிரான்ஸ் ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.



### 59 ஆவது DGCA கருத்தரங்கு - ICAO ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்கள்

ICAO ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்கான சிவில் வான்பயணவியலின் பணிப்பாளர்கள் நாயகத்திற்கான 59 ஆவது கருத்தரங்கு 2024 ஒக்டோபர் 14 முதல் 18 வரை பிலிப்பைன்சின் செபுவில் இடம்பெற்றது. இதில் 37 நாடுகள் மற்றும் 11 சர்வதேச ஒழுங்கமைப்புகளை பிரதிநிதித்துவம் செய்யும் 310 பிரதிநிதிகள் பங்கேற்றார்கள். முக்கிய கலந்தரையாடல்கள், வான்பயணவியல் பாதுகாப்பு, வான் வழிசெலுத்தல், வான் போக்குவரத்து அபிவிருத்தி, பேரழிவு தவிர்த்தல், சூழல் அக்கறைகள் மற்றும் கொள்திறன் கட்டியெழுப்புதல் என்பவற்றை உள்ளடக்கியதுடன், நடைமுறை அமுலாக்கல்களின் முன்னிறுத்தம் செய்யப்பட்டது. இலங்கையிலிருந்து பிரதான பிரதிநிதியாக AVM சாகர கொட்டகதெனிய (Retd.) அவர்கள் பங்குபற்றியதுடன், "வான் போக்குவரத்தின் பொருளாதார அபிவிருத்தி" எனும் தலைப்பில் ஒரு உயர்மட்ட குழு விவாதத்திற்கு நடுவராக இருந்ததுடன், இருதரப்பு வான்பயணவியல் ஒத்துழைப்பு மற்றும் கொள்திறன் கட்டியெழுப்பலை பலப்படுத்துவதற்காக கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.









### ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு

CAASL 13 செப்டம்பர் 2024 இல் மங்கிபொக்ஸ் (MPOX) என்பதில் ஒரு விழிப்புணர்வு அமர்வினை நடாத்தியது, இது MPOX நிகழ்வுகளை இனங்கண்டு முகாமைப்படுத்துவதற்கான அறிவுடன் ஆளணியினரை தயாராக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும். இந்த அமர்வானது சுகாதார அமைச்சினால் துணையளிக்கப்பட்டதுடன், சிவில் வான்பயணவியல் பரிசோதகர்கள் மற்றும் பங்காளிகள் உள்ளடங்கலான 50 பங்குபற்றுனர்கள் கலந்துகொண்டார்கள். WHO, MPOX இனை சர்வதேச அக்கறையுடைய பொது ஆரோக்கிய அவசரநிலையாக (PHEIC) பிரகடனப்படுத்தியுள்ளது.





### வான் செயற்பாட்டாளர் அபிவிருத்திகள்

ஸ்மார்ட்விங்ஸ் எயார்லைன் ஆனது அதன் ஆரம்ப வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர் சான்றிதழை 2024 பெப்ரவரி 09 இல் பெற்றது. இது ஹங்கேரியின் புடாபெஸ்ட்டிட்கும் கொழும்புக்கும் இடையேயான நேரடி விமானப் பயணத்தை இயலுமையாக்கியுள்ளது. ஏரோவிலொட் மற்றும் ரோசியா எயார்லைன்ஸ் என்பன இலங்கையில் அவற்றின் கோடைகால செயற்பாடுகளை தொடர்ந்ததுடன், புதிய வணிக வாய்ப்புக்களை ஆராய்வதற்கும் தொடர்ச்சியான நேரடி செயற்பாடுகளுக்குமான கலந்துரையாடல்கள் CAASL இல் இடம்பெற்றன.

# தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள்

2024 இல், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) அதன் டிஜிட்டல் உட்கட்டமைப்பினை தொடர்ச்சியாக பலப்படுத்தியதுடன், இது நிறுவனம் முழுவதும் செயற்பாட்டு வினைத்திறன், பாதுகாப்பு மற்றும் சேவை விநியோகம் என்பற்றை கணிசமாக மேம்படுத்தியது. முக்கிய முன்னெடுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கின: வலையமைப்பு ஸ்விட்ச்களின் முற்றான தரமுயர்த்தல், அதி விரைவான வைபர் இணைப்பு, மேம்பட்ட SSL பாதுகாப்புடன் மெய்நிகராக்கல முறைமைகளின் மேம்பாடு, மற்றும் வளர்ச்சியடையும் டிஜிட்டல் கேள்விகளை சந்திப்பதற்கு உள்ளூர் பகுதி வலையமைப்பு அலைவரிசையின் விரிவாக்கம் என்பவையாகும். இதற்கு இணையாக ஒரு தனிப்பயனாக்கப்பட்ட ட்ரோன் பரிசோதனை மேடையானது விருத்திசெய்யப்பட்டவண்ணமுள்ளது, மற்றும் பொது மக்களுக்கு மிகவும் பயனாளர் தோழமையான, பதிலளிக்கும் மற்றும் தகவல் தெரிவிக்கும் அனுபவத்தை வழங்குவதற்காக CAASL இன் இணையத்தளமானது மறுசீரமைக்கப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்ப அலகானது சேர்வர் மற்றும் மெய்நிகர் உட்கட்டமைப்பு முகாமைத்துவம், வலையமைப்பு கண்காணிப்பு, தடுப்புச்சுவர் கட்டமைப்பு, பேரழிவு மீட்டல் மேற்பார்வை மற்றும் மின்னஞ்சல் மற்றும் வைரஸ்தடுப்பு பாதுகாப்பு உள்ளடங்கலான மையச் செயற்பாடுகளுக்கான தடையற்ற உறுதுணையினை பராமரித்தது. இந்த முயற்சிகள் வணிகத் தொடர்வினை உறுதிப்படுத்தியதுடன், சைபர் பாதுகாப்பினை பலப்படுத்தி அனைத்து திணைக்களங்களிலும் நாளாந்த செயற்பாடுகளின் தடையற்ற செயற்பாடுகளுக்கும் வசதியளித்தது.

இந்த மூலோபாய தொழில்நுட்ப முன்னெடுப்புகளினூடாக, டிஜிட்டல் உருமாற்றம், செயற்பாட்டு மீளெழுச்சி மற்றும் புத்தாக்கத்திற்கான CAASL அதன் கடப்பாட்டினை வெளிப்படுத்துவதுடன், உயர் தரத்திலான வான் பயணவியல் சேவைகளை விநியோகிப்பதற்கான அதிகாரசபையின் கொள்திறனை வலுவூட்டும்வேளை வெளிப்படைத்தன்மை, அணுகக்கூடியதன்மை மற்றும் பங்காளிகள் மற்றும் பரவலான பொதுமக்களுடனான வினைத்திறனான தொடர்பாடலுக்கும் துணையளிக்கின்றது.

## தகவல் தொழில்நுட்பச் செயற்பாடுகள் மற்றும் முறைமை மேம்படுத்தல்கள்

கடந்த வருடத்தின்மீது, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL) அதன் டிஜிட்டல் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளதுடன், செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் பாதுகாப்பினை கணிசமாக மேம்படுத்தியது. பல தொழில்நுட்ப தரமுயர்த்தல்கள் மற்றும் முறைமை அமுலாக்கல்கள் என்பன வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், இது டிஜிட்டல் நவீனமயப்படுத்தலுக்கான CAASL இன் கடப்பாட்டினை வற்புறுத்துகின்றது:

பாரிய உட்கட்டமைப்பு மற்றும் முறைமை அபிவிருத்திகள்

- வலையமைப்பு ஸ்விட்ச் தரமுயர்த்தல்கள்: பழமையான வலையமைப்பு ஸ்விட்ச்களின் முழுமையான மாற்றீடு, இது ஒட்டுமொத்த வலையமைப்பு செயற்திறன் மற்றும் நம்பகத்தன்மையினை மேம்படுத்துகின்றது.
- வைபர் இணைப்பின் பயன்பாடு: தடையற்ற தரவு பரிமாற்றம் மற்றும் மேம்பட்ட இணைப்பினை உறுதிசெய்வதற்கு மைய ஸ்விட்ச் மற்றும் சேர்வர் அறைக்கிடையேயான உயர் விரைவான வைபர் இணைப்பினை நிறுவியது.
- மெய்நிகராக்கப்பட்ட உட்கட்டமைப்பு மேம்படுத்தல்: தரவுப் பாதுகாப்பு மற்றும் முறைமைப் பாதுகாப்பினை பலப்படுத்துவதற்கு பாதுகாப்பான சாக்கட் லெயர் (SSL) நிறுவலின் முடிவுறுத்தல்.
- ட்ரோன் பரிசோதனைத் திட்டம்: ட்ரோன் செயற்பாடுகளுக்கான ஒரு தனிப்பயனாக்கப்பட்ட பரிசோதனை மேடையின் அபிவிருத்தி தற்போது நடந்தவண்ணமுள்ளது.
- CAASL இணையத்தள மறுசீரமைப்பு: உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீள்அபிவிருத்தியானது இறுதிக்கட்டத்தில் உள்ளதுடன், இது மிகவும் பயனாளர் தோழமையான, பதிலளிக்கும் மற்றும் தகவலுடைய அனுபவத்தை நோக்காகக் கொண்டது.
- உள்ளக பரப்பு வலையமைப்பு (LAN) அலைவரிசை தரமுயர்த்தல்: கொள்திறனானது 120 Mbps இற்கு அதிகரிக்கப்பட்டதுடன், டிஜிட்டல் சேவைகளுக்கான வளர்ச்சியடையும் கேள்வி மற்றும் செயற்பாட்டு வேகத்தை மேம்படுத்துவதற்கு துணையளிக்கப்படுகின்றது.
- பேரழிவு மீட்டல் (DR) தளம்: இணையச் சேவை வழங்குனர்களின் (ISP) தரவு மத்தியநிலையத்திற்கு DR தளத்தின் இடம்பெயர்வானது இறுதி அமுலாக்கல் கட்டத்தினுள் நுழைந்துள்ளதுடன், சிறந்த தரவு மிகுதம் மற்றும் வணிகத் தொடர்வினை உறுதிசெய்கின்றது.

## மைய த.தொ. செயற்பாடுகள் மற்றும் சேவைத் தொடர்வு


இந்த பாரிய முன்னெடுப்புகளுக்கும் மேலாக, த.தொ. அலகானது தடையற்ற மற்றும் CAASL இன் நாளாந்த செயற்பாடுகளுக்கு முக்கியமான உயர் தரத்திலான உறுதுணை சேவைகளை வழங்குவதனை தொடர்ந்தது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- இணையத்தள முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு
- காப்பரண் வடிவமைப்பு மற்றும் வலையமைப்பு பாதுகாப்பு மேற்பார்வை
- சேர்வர் மற்றும் மெய்நிகர் உட்கட்டமைப்பு முகாமைத்துவம், 40 இற்கும் மேலான சேர்வர்களை உள்ளடக்கியது
- பேரழிவு மீட்புத் தளக் கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு
- முனையத்திலிருந்து முனையம் (P2P)இணைப்பு மற்றும் பணித்தளக்கணினி, மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறி உள்ளடங்கலான த.தொ. சொத்து முகாமைத்துவம்
- தொடர்ச்சியான வலையமைப்பு கண்காணிப்பு மற்றும் தரவு காப்பு
- நிறுவன மின்னஞ்சல் சேவைகள், வைரஸ்எதிர்ப்பு பாதுகாப்பு மற்றும் முறைமை பாதுகாப்பு நிர்வாகம்

த.தொ. அலகானது புத்தாக்கத்தினை இயக்குதல், முறைமை நேர்மையினை பராமரித்தல், மற்றும் CAASLஇன் தொழில்நுட்ப நிலத்தோற்றத்தின் மீளெழுச்சியினை உறுதிசெய்வதற்கு திடமான கடப்பாட்டுடன் உள்ளது. டிஜிட்டல் உருமாற்றம் விரைவாக்கப்படும்போது, அலகானது அதிகாரசபையின் மூலோபாய இலக்குகளுடன் அதன் முயற்சிகளை தொடர்ந்து சீரமைப்பதுடன், அனைத்து திணைக்களங்கள் பூராவும் வலுவான தொழில்நுட்ப உறுதுணையினை உறுதிசெய்கின்றது.

## CAASL இணையத்தளம்

CAASL இணையத்தளமானது உரியநேரத்திற்கான மற்றும் பொதுமக்களுக்கு துல்லியமான சிவில் வான்பயணவியல் தகவல்களை பரப்புவதற்கான ஒரு முக்கியமான தொடர்பாடல் வழியாக சேவையாற்றியது. வருடம் பூராவும், இணையத்தளமானது போக்குவரத்தில் கணிசமான அதிகரிப்பினை கண்டது, இது 161,829 பயனாளர்கள் முறைமைப்படுத்தல் இற்றைப்படுத்தல்கள், வான்பயணவியல் அபிவிருத்திகள் மற்றும் ஏனைய பொருத்தமான செய்திகள் பற்றி அறிந்திருப்பதற்காக அதன் உள்ளடக்கத்தினை அணுகுகின்றார்கள். சீரான ஈடுபாடானது மேடையின் பெறுமதியினை ஒரு நம்பிக்கையான பொது தகவல்களின் மூலமாக அடிக்கோடிடுவதுடன், இணையத்தள மீள்அபிவிருத்தியானது தற்போது நடைமுறையில் உள்ளதுடன் அணுக்கம், செயற்பாடு மற்றும் பயனாளர் அனுபவம் என்பன மேலும் மேம்படுத்துப்படுகின்றது.



# பணியாட்களுக்கு வலுவளித்தல்

2024 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது ஒரு திறமையுடைய, ஏற்புடைய மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான தொழிற்சேனையினை கட்டியெழுப்புவதற்கான அதன் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது. முறைமைப்படுத்தல் தனிச்சிறப்பின் ஒரு மூலைக்கல்லாக மனித மூலதனம் இனங்காணப்பட்டு, அதிகாரசபையானது பணியாட்கள் திறமைகள், அறிவு மற்றும் தொழில்முறை ஆற்றல்களை பலப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட பல்வேறு மனித வள அபிவிருத்தி (HRD) முன்னெடுப்புகளில் முதலீடு செய்தது.

வருடத்தின் மீது, CAASL ரூபா 13 மில்லியனை பயிற்சித் திட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் என்பவற்றை உள்ளூரிலும் இயங்கலை மேடைகளூடாக சர்வதேச ரீதியாக நடாத்துவதற்கும் ஒதுக்கியது. டிஜிட்டல் பயிலலிலான வலியுறுத்தலானது அமைவிடத்தைப் பொருட்படுத்தாது பணியாட்கள் உயர் தரத்திலான அபிவிருத்தி வாய்ப்புக்களை அணுகக்கூடியதாகவும், தொழில்சார் அபிவிருத்தியில் உலகளாவிய போக்குகளுடனான தொடர்ச்சி மற்றும் சீரமைவிற்கும் துணைபுரிகின்றது.

கொள்திறன் கட்டியெழுப்பல் முன்னெடுப்புகளுக்கு பக்கமாக, மூலோபாய நிறுவன மறுசீரமைப்புகள் மற்றும் இலக்குவைத்த ஆட்சேர்த்தல் என்பன அதிகாரசபையின் நிறுவன கட்டமைப்பினை பலப்படுத்தியது. தேசிய மட்டத்திலான ஆட்சேர்த்தல் காணப்பட்டபோதிலும், 18 புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருட இறுதியில் தொழிற்சேனையினை 169 பணியாட்களாகக் கொண்டுவந்தவேளை ஒரு திடமான பணியாள் புரள்வாக 5.92% இனை பராமரித்தது. இந்த முயற்சிகள் தொழில்சார் வளர்ச்சியினை ஆதரித்தல், செயற்பாட்டு தொடர்ச்சி மற்றும் தொடர்ச்சியான பயிலல் கலாச்சாரத்திற்கான CAASL இன் அர்ப்பணிப்பினை பிரதிபலிப்பதுடன், அதன் தொழிற்சேனையானது இலங்கையின் சிவில் வான்போக்குவரத்துத் துறையின் இயக்காற்றலான கேள்விகளை சந்திக்கும் ஆற்றலுடன் காணப்படுவதை உறுதிசெய்கின்றது.

## மனித வளங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள்


மூலோபாயமான தொலைநோக்கிற்கு சீரமைவாக, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) 2024 இல் அதன் மனித மூலதனத்தை விருத்திசெய்வதிலான முன்னுரிமையினை தொடர்ந்தது. எதிர்காலத்திற்கு தயாரான ஒரு பணிச்சேனையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி அதிகாரசபையானது அதன் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்கால வெற்றிக்கு முக்கியமான, பணியாட்கள் திறன்கள், திறமைகள் மற்றும் அறிவைப் பலப்படுத்துவது நோக்கிய முன்னெடுப்புகளில் செயலூக்கமாக முதலீடு செய்தது.

மீளாய்வாண்டின்போது, மனித வள அபிவிருத்தித் (HRD) திட்டங்கள் நோக்கி மொத்தமாக ரூபா 13,031,080.91 ஒதுக்கப்பட்டதுடன், இது உள்ளூர் ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் இயங்கலை மேடைகளூடாகவும் நடாத்தப்பட்ட பரந்தளவிலான பயிற்சி அமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை உள்ளடக்கியது. இந்த முதலீடானது CAASL அதன் அனைத்து செயற்பாட்டுப் பிரிவுகளிலும் நிறுவனக் கொள்திறனை கட்டியெழுப்புவதற்கும் தொழில்சார் தனிச்சிறப்பினை பராமரிப்பதற்குமான அதன் கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது.

பயிற்சி விநியோகத்தின் பரிணமிக்கின்ற தன்மையின் காரணமாக, இயங்கலை பயிலலில் குறிப்பிட்ட வலியுறுத்தல் இடப்பட்டதுடன், இது பூகோளவியல் வரையறைகளை பொருட்படுத்தாது பொருத்தமான மற்றும் உயர் தரத்திலான அபிவிருத்திக்கான வாய்ப்புகளை அணுகுவதற்கு பணியாட்களை இயலுமையாக்குகின்றது. இந்த டிஜிட்டல் பயிலல் முன்னெடுப்புகள் கொள்திறனை கட்டியெழுப்புவதை தொடர்வதனை உறுதிசெய்வதற்காக வடிவமைக்கப்பட்டவேளை, தொலைதூர பயிலல் மற்றும் தொழில்சார் அபிவிருத்தியில் உலகளாவிய போக்குகளுடன் சீரமைக்கின்றது.

இந்த முயற்சிகளூடாக சிவில் வான்பயணவியல் துறையின் இயக்காற்றலான கேள்விகளுக்கு பயனுறுதியாக பதிலளிக்கக்கூடிய ஒரு திறமையான மற்றும் ஏற்புடைய தொழிற்சேனையினை CAASL தொடர்ந்தும் வளர்க்கின்றது. அதிகாரசபையானது தொடர்ச்சியான பயிலல், புத்தாக்கம் மற்றும் தொழில்சார் வளர்ச்சிக் கலாச்சாரத்தினை பராமரிப்பதற்கு கடப்பாட்டுடன் உள்ளது.

### மனிதவள அபிவிருத்தி திட்டங்களின் எண்ணிக்கை - 2024





| 1 ஜனவரி 2024 முதல் 31 டிசம்பர் 2024 வரை | | | |
|---|---|---|---|
| | பயிற்சிகளின் எண்ணிக்கை | பயிற்சிகர்களின் எண்ணிக்கை | பயிற்சி மனித நாட்கள் |
| உள்ளகத்தேயான பயிற்சித் திட்டங்கள் | 5 | 175 | 845 |
| வெளிநாட்டு கூட்டங்கள் / மாநாடுகள் / ஆய்வரங்குகள் | 13 | 13 | 61 |
| வெளிநாட்டு பயிற்சிகள் / கருத்தரங்குகள் / செயலமர்வுகள் | 19 | 21 | 97 |
| உள்ளூர் பயிற்சிகள் / கருத்தரங்குகள் / செயலமர்வுகள் | 19 | 72 | 334 |
| இயங்கலை பயிற்சிகள் / கருத்தரங்குகள் / செயலமர்வுகள் | 5 | 18 | 129 |
| மொத்தம் | 61 | 299 | 1,466 |

## மனித வளங்கள் சிறப்பம்சங்கள்

### நிறுவன மறுசீரமைப்புகளும் பணிக்கமர்த்தலும்

ஒரு திறமையான மற்றும் நம்பகமான வான்பயணவியல் பாதுகாப்பு முறைமைப்படுத்துபவராகும் அதன் தொலைநோக்கிற்கு சீரமைவாக, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) மூலோபாய நிறுவன மறுசீரமைப்புகள் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தியினூடாக அதன் நிறுவனக் கட்டமைப்பினை தொடர்ந்தும் பலப்படுத்தியது. இந்த மூலோபாயத்தின் ஒரு முக்கிய அம்சமாக அதன் கடுமையான மற்றும் ஒழுங்குமுறையான ஆட்சேர்த்தல் செயன்முறை காணப்படுவதுடன், இது பொருத்தமான தகைமை மற்றும் அனுபவத்துடனான விண்ணப்பதாரிகளை இனங்காண்பது மாத்திரமன்றி, புதிய பணியாட்கள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பங்களிப்பு, செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் முழுமையான இலக்குகள் குறித்து முற்றாக அறிந்திருப்பதனை உறுதிசெய்கின்றது.

**பணியாளர்களின் வகைகள்**




### விளையாட்டு மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் 2024



வெசக் தர்மதேசனா நிகழ்ச்சி



நத்தார் கரோல்கள்



வருடாந்த கிரிக்கட் போட்டி



சிங்கள இந்து புது வருடக் கொண்டாட்டம்

மனித வளங்கள் மற்றும் ஆதன முகாமைத்துவப் (HRPM) பிரிவானது CAASL இன் பொறுப்பாணையினை விநியோகிக்கும் ஆற்றலுடைய திறனான மற்றும் திறமையுடைய தொழிற்சேனையினை கட்டியெழுப்புவதற்கு முன்முயற்சியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இந்த சீர்திருத்தங்களை இயக்குவதற்கு காரணியாயுள்ளது. முறைப்படுத்தல் தனிச்சிறப்பிற்கான மூலைக்கல்லாக மனித மூலதனத்தை இனங்கண்டு முக்கியமான வெற்றிடங்களை மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரிகளினால் நிரப்புவதற்காக HRPM ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் அனைத்து பிரிவுகளிடையேயும் தடையற்ற செயற்பாட்டினை உறுதிசெய்கின்றது.

தேசிய மட்டத்திலான ஆட்சேர்ப்பு கொள்கைகளிலிருந்து எழுகின்ற கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், பதினெட்டு (18) புதிய நியமனங்கள் 2024 இல் மேற்கொள்ளப்பட்டன. 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான மொத்த பணியாட்கள் பலம் 169 பணியாட்களாகும். மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு சூழலினுள்ளும், இந்த ஆட்சேர்ப்புகள் செயற்பாட்டு தொடர்வு, இணக்கப்பாடு, மற்றும் நிறுவன கொள்திறன் கட்டியெழுப்பலுக்கான HRPM இன் நிலைபேறுடைய கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள நடைமுறையிலுள்ள ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளின் காரணமாக, அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் 39 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. இந்த ஆட்சேர்ப்பு இடைவெளியானது முக்கிய பிரிவுகளின் உரிய காலத்திற்கான நியமனங்களுக்கு வசதியளிப்பதற்காக பொருத்தமான அதிகாரிகளுடன் தொடர்ச்சியான கலந்துரையாடலுக்கான அவசியத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

தொழிற்சேனை ஸ்திரத்தன்மையினைப் பொறுத்தளவில், பணியாட்கள் புரள்வானது 2024 இல் 5.92% ஆக பதிவுசெய்யப்பட்டது. ஒப்பீட்டளவில் இந்த குறைவான வீதமானது ஒரு ஆரோக்கியமான மட்டத்திலான பணியாட்கள் நிறுத்திவைத்தல் மற்றும் ஒரு திடமான பணியிடச் சூழலை குறிப்பிடுகின்றது. இவை இரண்டும் முறைமைப்படுத்தல் மேற்பார்வை மற்றும் நிறுவன அறிவின் நிலைபேறுடமைக்காக அவசியமாகும்.

முன்னோக்கிப் பார்க்கும்போது, தொடர்வுத் திட்டமிடல், இலக்குவைத்த கொள்திறன் கட்டியெழுப்பல் மற்றும் திறன் நிறுத்திவைத்தல் கட்டமைப்புகள் உள்ளடங்கலான புத்தாக்கமான மனித வள மூலோபாயங்களை ஆராயும், இது உலகளாவிய வான்பயணவியல் துறையின் பரிணமிக்கின்ற கேள்விகளுக்கு பதிலளிக்கக் கூடியதாய் இருப்பதனை உறுதிசெய்வதற்காகும்.

# நிதியியல் சிறப்பம்சங்கள்

நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினுள் (CAASL) ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றது. இப்பிரிவானது நிறுவன மூலோபாய தொலைநோக்கு மற்றும் செயற்பாட்டு வினைத்திறனுக்கு துணையளிக்கும் நிதியியல் முதுகெலும்பாக சேவையாற்றுகின்றது. எமது பிரதான குறிக்கோளானது CAASL இன் நிதியியல் வளங்கள் மற்றும் வருவாய் ஓட்டங்களின் வலுவான முகாமைப்படுத்தலை உறுதிசெய்வதுடன், இதன்மூலம் நிலைபேறுடைய வளர்ச்சி, இணக்கப்பாடு மற்றும் அதிகாரசபையினது பொறுப்பாணையின் வினைத்திறனான விநியோகம் என்பன இயலுமையாக்கப்படுகின்றன.

## முக்கிய செயற்பாடுகள்

### 1. வருவாய் திரட்டல் மற்றும் செலவு முகாமைத்துவம்

எமது பிரிவானது, உரிமமளித்தல், முறைமைப்படுத்தல் தண்டப்பணங்கள், விமானநிலையக் கட்டணங்கள் மற்றும் ஏனைய சேவைக் கட்டணங்கள் உள்ளடங்கலான ஆனால் இவற்றுக்கு மாத்திரம் வரையறை செய்யப்படாத பல்வேறு மூலங்களிலிருந்து உருவாக்கப்படுகின்ற விரிவான வருவாய் திரட்டலினை மேற்பார்வை செய்கின்றது. அதே நேரத்தில், நாம் அதிகாரசபையின் செலவினங்களை துல்லியமாக முகாமைப்படுத்தியதுடன், நிதியியல் செலவீடுகள் நிறுவனத்தின் முன்னுரிமைகளுடன் சீராக உள்ளதையும் உகப்பாக்கமான வள ஒதுக்கீடு மற்றும் நிதிசார் ஒழுக்கத்துடன் நடாத்தப்படுவதனை உறுதிசெய்கின்றது. இந்த இரு பொறுப்புக்களும் CAASL இன் நிதியியல் நேர்மையினை பாதகாக்கும்வேளை நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்பாடுகள் மற்றும் மூலோபாய முன்னெடுப்புகளுக்கு துணையளிக்கின்றது.

### 2. நிதியியல் எதிர்வுகூறலும் திட்டமிடல் பாதீடும்

மேம்பட்ட நிதியியல் எதிர்வுகூறல் முறைகள் மற்றும் விரிவான திட்ட பாதீட்டினை பயன்படுத்துவதனூடாக, நாம் CAASL இன் மூலோபாய குறிக்கோள்களுக்கு அடித்தளமிடும் முன்னோக்கிப் பார்க்கும் நிதியியல் திட்டங்களை விருத்திசெய்கின்றோம். இது வருவாய் உட்பாய்ச்சல்களின் துல்லியமான எதிர்வுகூறல், செயற்பாட்டு மற்றும் மூலதனச் செலவுகளின் கண்டிப்பான மதிப்பீடுகள் மற்றும் பன்முகமான திட்டங்களிடையே வளங்களின் விவேகமான ஒதுக்கீடு என்பவற்றை உள்ளடக்குகின்றது. அத்தகைய நிதித் திட்டமிடலானது அதிகாரசபை நிதியியல் தேவைப்பாடுகளை எதிர்பார்ப்பதற்கு, சந்தை இயக்காற்றல்களுக்கு செம்மையாக்குவதற்கு மற்றும் அதன் முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி பங்கினை வினைத்திறனாக நிலைபேறுடைமையாக்குதல் என்பவற்றை இயலுமையாக்குகின்றது.

### 3. நிதிய முகாமைத்துவம்

CAASL இன் நிதிச் சொத்துக்களின் காப்பானாக நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவானது விவேகமான நிதிய முகாமைத்துவத்திற்கு பொறுப்பாயுள்ளது. இது கிடைப்புத்திறனுடைய வளங்களின் பயன்பாடு, விளைவுகளை உகப்பாக்குவதற்கு மூலோபாயமாக முதலீடு செய்தல் மற்றும் நாளாந்தச் செயற்பாடுகளை சந்திப்பதற்கு போதுமான திரவத்தன்மையினை பராமரித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. அனைத்து நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளும் பொருத்தமான நிதியியல் ஒழுங்குவிதிகள் மற்றும் உள்ளகக் கொள்கைகளுடன் கடுமையான இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்படுவதுடன் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்கின்றது.

### 4. நிதி அறிக்கையிடல்

நாம் CAASL இன் நிதியியல் நிலையினை பிரதிபலிக்கும், வருமானக் கூற்றுக்கள், ஐந்தொகைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் உள்ளடங்கலான, துல்லியமான, விரிவான மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களை தயார் செய்கின்றோம். இந்த அறிக்கைகள் உள்ளக முகாமைத்துவம் மற்றும் வெளிவாரி பங்காளிகளுக்கான அவசியமான கருவிகளாக சேவையாற்றுவதுடன், தகவலறிந்த தீர்மானம் மேற்கொள்ளல், முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் கணக்காய்வு செயன்முறைகளுக்கு வசதியளிக்கின்றது. எமது அறிக்கையிடல் நடைமுறைகள் உயர்ந்த மட்டத்திலான நிதியியல் நேர்மை மற்றும் வெளிப்படைத்துன்மையினை நிலைநிறுத்துகின்றது.

### 5. கையிருப்பு முகாமைத்துவம்

இப்பிரிவானது கையிருப்பு முகாமைத்துவ சுழற்சியினை மேற்பார்வை செய்வதுடன், இது கொள்முதல், களஞ்சியப்படுத்தல், பராமரிப்பு மற்றும் CAASL இன் செயற்பாட்டு கடமைகளுக்கு அவசியமான பௌதீக சொத்துக்களின் பகிர்ந்தளிப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது. வினைத்திறனான கையிருப்பு கட்டுப்பாடானது அதிகாரசபையின் சொத்துக்கள் தேவையானபோது கிடைக்கக்கூடியதாகவும் மற்றும் செலவுச் சிக்கனமான மற்றும் பொறுப்புள்ள விதத்தில் முகாமைப்படுத்தப்படுவதற்கும் உத்தரவாதமளிக்கின்றது.

### 6. வாகனத்தொகுதி முகாமைத்துவம்

அதிகாரசபையின் வாகனத் தொகுதியினை முகாமைப்படுத்துதல் எமது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஒரு முக்கிய செயற்பாட்டு கடமையாகும். இது உகப்பாக்கமான செயற்திறன் மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்கு கொள்வனவு, பராமரிப்பு, ஈடுபடுத்தல் மற்றும் வாகனங்களின் பயன்பாடு என்பவற்றை மேற்பார்வை செய்வதனை உள்ளடக்குகின்றது. 2024 இல் நாம் ஒரு விரிவான வாகனத்தொகுதி முகாமைத்துவ முறையின் அபிவிருத்தியில் மேம்பட்டதுடன், இது வருடத்தின் இறுதியில் 50% நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைமையானது வாகனத்தொகுதி செயற்பாடுகளை சீரமைப்பதனையும், பராமரிப்பு அட்டவணைப்படுத்தலை மேம்படுத்துவதனையும் மற்றும் சிறந்த செயற்பாட்டு வினைத்திறனுக்காக மேம்பட்ட சொத்து தடங்காண்பதனையும் நோக்காகக் கொண்டதாகும்.

### வெளிநாட்டு விற்பனை மிகையூட்டம் மற்றும் விமானமேறுதல் கட்டணத்தின் சேகரிப்பும் பகிர்ந்தளிப்பும்

2003 இன் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவானது இலங்கையினுள் செயற்படும் விமான நிறுவனங்களிடமிருந்து பயணிகள் விமானமேறுதல் கட்டணத்தை திரட்டும் முக்கிய பொறுப்பினைக் கொண்டுள்ளது. CAASLஇன் சார்பில் செயலாற்றும்போது நாம், கடுமையான ஒட்டியொழுகல் மற்றும் முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளுடன் இந்த நிதிகளின் துல்லியமான திரட்டல் மற்றும் நேரகாலத்திலான பகிர்ந்தளிப்பினை உறுதிசெய்கின்றோம்.

2024 இல் மொத்தமான 2,797,521 பயணிகள் விமானமேறுதல் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் அவர்களது கடப்பாடுகளை நிறைவேற்றினார்கள். திரட்டப்பட்ட நிதியானது அதன் பின்னர் சட்டம் மற்றும் நிறுவனக் கொள்கையினால் கட்டாயமாக்கப்பட்டவாறு நியமிக்கப்பட்ட நிருவகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதுடன், பல்வேறு வான்பயணவியல் தொடர்பான மற்றும் அரசாங்க முன்னெடுப்புகளுக்கு துணையளிக்கின்றது.

### நிதிச் செயற்பாடுகள் மீளாய்வு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) அதன் நிதியியல் செயற்பாடுகளை செயல்திறனுடனும் பயனுறுதியுடனும் முகாமைப்படுத்துவதற்கான அதன் கடப்பாட்டில் உறுதியாய் உள்ளது. வலுவான நிதியியல் பாரபத்தியமானது அதிகாரசபையின் மூலோபாய குறிக்கோள்களை அடைவதற்கும் அதன் வளர்ச்சிப் பாதையினை நிலைபேறாக்கவும் அடிப்படையானது என இனங்கண்டு, நாம் எமது நிதியியல் முகாமைத்துவக் கட்டமைப்புகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக முயற்சி செய்கின்றோம். இந்த கண்ணோட்டமானது அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் மீது எமது நிதிச் செயற்பாடுகளின் முக்கிய கூறுகளையும் சாதனைகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

### நிதி அறிக்கைகளின் உரிய காலத்தின் தயாரிப்பும் சமர்ப்பிப்பும்

வெளிப்படைத்தன்மை மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டினை பராமரிப்பதற்காக அனைத்து சட்டரீதியான நிதி அறிக்கைகளின் துல்லியமான மற்றும் உரிய காலத்திற்கான தயாரிப்பிற்கு நாம் முன்னுரிமையளிக்கின்றோம். இவ்வாண்டின்போது, நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவானது 2024 இற்கான வருடாந்த பாதீடு, 2024 இற்கான நிதியியல் அதிகாரத்தின் ஒப்படைப்பு கூற்று, 2023 இற்கான வருடாந்த நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்கலான முக்கிய ஆவணங்களை வெற்றிகரமாக தயார்செய்து சமர்ப்பித்தது. இவ்வறிக்கைகள் அவற்றின் நேர்மை, பூரணத்துவம் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச கணக்கீட்டு நியமங்களுடனான சீரமைவினை உறுதிப்படுத்துவதற்காக கடுமையான உள்ளக கூர்ந்தாய்வு மற்றும் வெளிவாரி கணக்காய்வுகளுக்கு உட்பட்டன. விதந்துரைக்கப்பட்ட அனைத்து காலக்கெடுவினை சந்திப்பதானது நிதியியல் ஒழுக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான எமது அசைக்கவியலா அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கின்றது.

### பன்முகமான மற்றும் நிலைபேறுடைய வருவாய் ஓட்டங்கள்

எமது நிதியியல் மீளெழுச்சியானது பரந்தளவிலான வருவாய் ஓட்டங்களினால் துணையளிக்கப்பட்டு, செயற்பாட்டு தேவைப்பாடுகளை நிலைநிறுத்துவதற்கு மற்றும் மூலோபாய முன்னெடுப்புகளுக்கு வசதியளிப்பதற்காக கவனமாக முகாமைப்படுத்துகின்றது. இந்த வருவாய் மூலங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம்: இலங்கையின் பிராந்திய எல்லைகளுக்கு அப்பால் நடாத்தப்பட்ட வர்த்தக விற்பனையிலிருந்து உருவாக்கப்பட்ட வருவாயானது வளர்ச்சிடையும் எமது சர்வதேச அடிச்சுவட்டினை பிரதிபலிக்கின்றது.

- விமானமேறுதல் கட்டணத்திலான சேவைக் கட்டணம்: வெளியேறும் பயணிகளிடமிருந்து திரட்டப்படும் கட்டணமானது CAASL இன் நிதியளித்தல் தளத்திற்கு கணிசமானளவு பங்களிப்பினை மேற்கொள்கின்றது.

- முறைமைப்படுத்தல் சேவைகளிலிருந்து வருமானம்: வான்பயணவியல் துறையிடையே முறைமைப்படுத்தல் மேற்பார்வை மற்றும் உரிமமளித்தல் சேவைகளை வழங்குதல் தொடர்பான கட்டணங்கள் மற்றும் செலவினம் என்பவற்றிலிருந்து பெறப்படும் உழைப்புகள்.

- வட்டி வருமானம்: பணியாட்கள் கடன்கள் மற்றும் நுட்பமுடைய நிதி முகாமைத்துவம் என்பவற்றிலான அட்டுறு வட்டியானது ஒட்டுமொத்த நிதியியல் ஆரோக்கியத்திற்கு பங்களிப்பு செய்கின்றது.

- ஏனைய செயற்பாடு சாரா வருமானம்: நானாவீத மூலங்களிலிருந்து வருமானம், நிதியியல் பன்முகப்படுத்தலை மேம்படுத்துதல் மற்றும் பிரதான வருவாய் ஓட்டங்களில் தங்கியிருத்தலை குறைத்தல்.

### நெகிழ்ச்சியான மற்றும் அணுகத்தக்க கொடுப்பனவு வழிகள்

எமது பங்காளிகளின் பன்முகமான தேவைகளை புரிந்துகொண்டு, கொடுக்கல் வாங்கல்களை எளிதாக்குவதற்கும், வினைத்திறனான வருவாய் திரட்டலை உறுதிப்படுத்துவதனை வசதியளிப்பதற்காகவும் CAASL பன்மடங்கு பாதுகாப்பான கொடுப்பனவு முறைகளை வழங்குகின்றது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- காசு மற்றும் காசோலைக் கொடுப்பனவுகள்: CAASL இன் தலைமைக் காரியாலயத்தினுள் தனிப்பயனாக்கப்பட்ட பணிக்களங்களில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, இது பாரம்பரிய கொடுப்பனவுத் தெரிவுகளுக்கு வசதியளிக்கின்றது.

- இயங்கலை கொடுப்பனவு வலைவாசல்: கடன் மற்றும் பற்று அட்டை தெரிவுகளு டாக பாதகாப்பான மற்றும் சௌகரியமான டிஜிட்டல் கொடுப்பனவுகளை இயலுமையாக்கி, அணுக்கத்தன்மையினை விரிவாக்குகின்றது.

- லங்கா QR குறியீட்டு முறைமை: இந்த தேசிய இலத்திரணியல் கொடுப்பனவு மேடையின் ஒருங்கிணைப்பானது கொடுக்கல் வாங்கல்களை சீரமைப்பதுடன் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு துணையளிக்கின்றது.

- நேரடி USD கொடுப்பனவுகள்: வெளிநாட்டு விமான நிறுவனங்கள் மற்றும் பங்காளிகளுக்கான தடையற்ற சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளித்தல்.

- நேரடி வங்கி வைப்புகள்: தூதரகங்கள், விமான நிறுவனங்கள் மற்றும் முகவர்களை CAASL இன் தனிப்பயனாக்கப்பட்ட வங்கி கணக்குகளுக்கு நேரடியாக நிதியினை மாற்றல் செய்வதற்கு அனுமதிப்பதுடன், வெளிப்படைத்தன்மை மற்றும் கண்டறிதலை உறுதிசெய்கின்றது.

### திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு

எமது சட்டரீதியான கடப்பாடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு அமைவாக, CAASL இலங்கை அரசாங்கத்திற்கு கணிசமான வருமானப் பங்களிப்புகளை மேற்கொண்டுள்ளது. அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் போது CAASL மொத்தமாக ரூபா 4 பில்லியனை 2023 இன் போதும் ரூபா 750 மில்லியனை 2024 இன் போதும் திரண்ட நிதியத்திற்கு அனுப்பியது. இந்த பங்களிப்புகள் நாட்டின் பரந்த பொருளாதார கட்டமைப்பிற்கு துணையளிப்பதில் ஒரு முக்கிய நிதியியல் பங்காளியாக அதிகாரசபையின் பங்கானது கோடிட்டுக் காட்டப்படுகின்றது.

### கடுமையான வரி இணக்கப்பாடு

CAASL பொருத்தமான அனைத்து வரிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கடுமையாக ஒட்டியொழுகுவதுடன், வருமான வரி, பெறுமதி சேர்த்தல் வரி (VAT) மற்றும் முத்திரைத் தீர்வை

# செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

உள்ளடங்கலான அனைத்து பொருத்தமான வரிகளின் உரிய நேரத்திலான தீர்ப்பனவினை உறுதிசெய்கின்றது. இந்த இணக்கப்பாடாது தேசிய வரி அதிகாரிகளுடன் ஒரு திடமான பங்குடைமையினை வளர்ப்பதுடன், ஒரு பொறுப்புமிக்க பெருநிறுவன பிரஜையாக CAASL இன் நன்மதிப்பினை மேம்படுத்துகின்றது. எமது வரி முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் மாற்றமடையும் முறைமைப்படுத்தல் சூழலைக் கடைப்பிடிப்பதற்காக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுவதுடன், தொடர்ச்சியான இணக்கப்பாட்டினை உறுதிசெய்கின்றது.

## மூலோபாய நிதிய முகாமைத்துவமும் முதலீடும்

நிதியியல் வளங்களின் விவேகமான முகாமைப்படுத்தலானது CAASL இன் நிதியியல் மூலோபாயத்தின் மூலைக்கல்லாகும். நிதியியல் பிரிவானது மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி போன்ற முன்னணி தேசிய வங்கிகளில் பராமரிக்கப்படும் நிதிய முகாமைத்துவ கணக்குகளை மேற்பார்வை செய்கின்றது. இந்த கணக்குகள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற பாதுகாப்பான அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்வதன் மூலம் CAASL அதன் மிகையான நிதியினது முதலீட்டினை உகப்பாக்குவதனை இயலுமையாக்குகின்றது. இந்த அணுகுமுறையானது அதிகூடிய விளைவு நோக்கத்துடன் திரவத்தன்மை தேவைப்பாடுகளை சமநிலைப்படுத்துவதுடன், நிதியியில் வளர்ச்சியினை பெருமமாக்கும்வேளை செயற்பாட்டு தேவைகளை சந்திப்பதற்கு நிதி கிடைக்கப்பெறுவதனை உறுதிசெய்கின்றது.


## நிதியியல் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடு

CAASL இன் நிதியியல் ஆளுகைக் கட்டமைப்பானது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நிலைபேறுடைமை கொள்கைகளில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. வழமையான உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வுகள், சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களைக் கடைப்பிடித்தல் மற்றும் நிதியியல் அதிகாரத்தின் தெளிவான பகிர்ந்தளிப்பு என்பன கூட்டாக நிதியியல் வளங்கள் மீதான வலுவான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டினை உறுதிசெய்கின்றது. இந்த நடவடிக்கைகள் பொது நிதியினை பாதுகாத்து CAASL இன் நிதி முகாமைத்துவத்தில் பங்காளிகளது நம்பிக்கையினை பலப்படுத்துகின்றது.


## உரித்துவமும் பொறுப்புக்களும்

31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறு இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது ஒரு திடமான மற்றும் ஸ்திரமான நிதி நிலைமையினை பராமரித்ததுடன், மொத்த உரித்துவமும் பொறுப்புக்களும்


### மொத்த வருமானம் 2024 எதிர் 2023





### OSS வருமானம் 2024 எதிர் 2023





### வருமானம் 2024 எதிர் 2023




**மூலதனச் செலவினம் 2024 எதிர் 2023**




**மீள்நிகழும் செலவினம் 2024 எதிர் 2023**




**பாதீடும் மெய்யானதும்- 2024**




ரூபா 41,364 மில்லியனாகக் காணப்பட்டன. அதிகாரசபையின் மூலதனமும் ஒதுக்கங்களும் ரூபா 7,116 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இது எதிர்கால வளர்ச்சி மற்றும் செயற்பாட்டு மீளெழுச்சிக்கான ஒரு திடமான அடித்தளத்தினை வழங்குவதற்கு திரண்ட நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் மற்றும் பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் என்பவற்றை பிரதிபலிக்கின்றது. அடுத்த பன்னிரண்டு மாதங்களுக்கு அப்பால் நீடிக்கப்படும் நீண்டகால கடப்பாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் நடைமுறையல்லா பொறுப்புக்கள் ரூபா 475 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இது விவேகமான கடன் முகாமைத்துவத்தினை வெளிக்காட்டுகின்றது. நடைமுறைப் பொறுப்புக்கள் மொத்தமாக ரூபா 33,773 மில்லியனாக உள்ளதுடன், இது செயற்பாட்டு சென்மதிகள், அட்டுறுச் செலவினங்கள் மற்றும் அதிகாரசபையின் தடையற்ற நாளந்த செயற்பாட்டிற்கு அவசியமான ஏனைய குறுங்காலக் கடப்பாடுகளை உள்ளடக்குகின்றது.

### சொத்துக்கள்

நிதியாண்டின் இறுதியில், CAASL இன் மொத்த சொத்துக்கள் ரூபா 41,365 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன், இது அதன் உரித்துவம் மற்றும் பொறுப்புக்களுக்கு சீரமைவாக சமநிலையான சொத்து முகாமைத்துவத்தினை குறிப்பிடுகின்றது. ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் நீண்டகால முதலீடுகள் உள்ளடங்கலான நடைமுறையல்லா சொத்துக்கள் ரூபா 2,705 மில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டதுடன், இது செயற்பாட்டு தொடர்ச்சி மற்றும் எதிர்கால அபிவிருத்திக்கு அவசியமான முக்கியமான உட்கட்டமைப்பு மற்றும் மூலதனச் சொத்துக்களிலான அதிகாரசபையின் நிலைபேறான முதலீட்டினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. நடைமுறைச் சொத்துக்கள், பிரதானமாக காசு, வருமதிகள் மற்றும் ஏனைய திரவத்தன்மை வளங்களை உள்ளடக்குவதுடன், இது ரூபா 38,660 மில்லியனாகக் காணப்பட்டது. இந்த ஆரோக்கியமான திரவத்தன்மை நிலையானது CAASL அதன் உடனடியான நிதியியல் கடப்பாடுகளை விரைவாக சந்திப்பதனை இயலுமையாக்குவதுடன், அதன் மூலோபாய குறிக்கோள்களுக்கு துணையளிக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்களில் முதலீடு செய்வதற்கான நெகிழ்வுத் தன்மையினை வழங்குகின்றது.

### இலாபகரத்தன்மை

2024 ஆம் ஆண்டின்போது CAASL வலுவான நிதிச் செயற்திறனை வழங்கியதுடன், வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 1,014 மில்லியனை பதிவுசெய்தது. இந்த திடமான வரிக்கு முந்திய இலாபமானது அதிகாரசபையின் செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் பயனுறுதியான செலவு முகாமைத்துவ மூலோபாயங்களை வலியுறுத்துகின்றது. வரிவிதிப்பினை கணக்கீடு செய்ததன் பின்னரான தேறிய இலாபமானது ரூபா 1,023 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இலாபத்திலான தொடர்ச்சியான வளர்ச்சியினை பிரதிபலித்து நிலைபேறுடைய நிதியியல் ஆரோக்கியம் மற்றும் ஸ்திரத்தன்மையினை பராமரிப்பதற்கான CAASL இன் கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது.

### நிதியியல் பகுப்பாய்வும் கண்ணோட்டமும்

2024 இற்கான நிதியியல் விளைவானது இலங்கையின் சிவில் வான்பயணவியல் உட்கட்டமைப்பு மற்றும் முறைமைப்படுத்தல் ஆற்றல்களை மேம்படுத்தும் மூலோபாய குறிக்கோள்களில் முன்னேறும்வேளை அதன் நிதியியல் அடித்தளங்களை பலப்படுத்துவதற்கான CAASL இன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுகின்றது. நடைமுறைச் சொத்துக்களின் கணிசமான தளத்துடன் தொடர்ச்சியான இலாபகரத்தன்மையும் சேர்ந்து செயற்பாட்டு கேள்விகளை வினைத்திறனாக முகாமைப்படுத்துவதற்கும், மூலதன முதலீடுகளுக்கு துணையளிப்பதற்கும், நிதிசார் ஒழுக்கத்தினை நிலைநிறுத்துவதற்குமான அதிகாரசபையின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றது. முன்னோக்கிப் பார்க்கும்போது, நிதி அறிக்கையிடலில் CAASL வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதுடன் திரவத்தன்மையினை பராமரிப்பதற்கு முன்னுரிமையளித்து வளங்களின் ஒதுக்கீட்டினை உகப்பாக்குகின்றது. நடைமுறையல்லா சொத்துக்களிலான தொடர்ச்சியான முதலீடானது செயற்பாட்டு விரிவாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தலை இயக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் மூலம் தேசிய வான்பயணவியல் அபிவிருத்தி மூலோபாயங்களுடன் சீரமைவாக நீண்டகால குறிக்கோள்களை அடைவதற்கு வசதியளிக்கின்றது.



# வான்பயணவியலின் எதிர்காலம்

# நிதிக் கூற்றுக்கள்

## ஆண்டு 2024


| | |
|---|---|
| விரிவான வருமானக் கூற்று | 80 |
| நிதி நிலைமைக் கூற்று | 81 |
| உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று | 82 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 83 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 84 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024 | 109 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கைக்கான மறுமொழி 2024 | 120 |
| முறைமைப்படுத்தல் நோக்கெல்லை | 129 |
| CAASL இன் தொழில்நுட் செயற்திறனின் பொழிப்பு | 131 |
| முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் | 133 |
| போக்குவரத்து விபரங்கள் | 139 |

# விரிவான வருமானக் கூற்று

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் உள்ளன.) | குறிப்பு | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | **2,385,836,374** | **5,530,639,804** |
| | | | |
| செயற்பாட்டு வருமானம் | 23 | 1,678,760,397 | 4,267,567,018 |
| செயற்பாடு சாரா வருமானம் | 23 | 707,075,977 | 1,263,072,786 |
| | | | |
| **செலவினம்** | | **1,009,306,201** | **973,440,478** |
| | | | |
| பணியாட்கள் செலவினங்கள் | 24 | 442,740,440 | 432,938,638 |
| கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் | 25 | 8,108,329 | 8,063,683 |
| பயிற்சிச் செலவினங்கள் | 26 | 7,314,858 | 9,659,098 |
| நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் | 27 | 339,640,223 | 364,502,061 |
| நிதிச் செலவினங்கள் | 28 | 11,596,896 | 918,390 |
| பெறுமானத்தேய்வு | 29 | 193,728,558 | 149,698,845 |
| அருவச் சொத்துக்களின் பெறுமதிகுறைப்பு | 30 | 6,155,864 | 7,638,729 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் பெறுமானத்தேய்வு | 32 | 21,034 | 21,034 |
| | | | |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **1,376,530,174** | **4,557,199,326** |
| வருமான வரிச் செலவினங்கள் | 31 | 205,883,300 | 208,920,729 |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **1,170,646,874** | **4,348,278,597** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகளின் மீள்-அளவீட்டிலிருந்து எழுகின்ற இலாபம்/(நட்டம்) | | (38,040,641) | (14,345,234) |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 47,314,551 | 105,418,708 |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | **1,179,920,784** | **4,439,352,071** |

பக்கங்கள் 84 முதல் 108 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதி நிலைமைக் கூற்று

| டிசம்பர் 31 இல் உள்ளவாறானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் உள்ளன.) | குறிப்பு | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 29 | 2,668,915,112 | 2,781,375,720 |
| அருவச் சொத்துக்கள் | 30 | 7,516,912 | 13,503,511 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 32 | 273,437 | 294,471 |
| நடப்பு வேலை - மூலதனம் | 33 | 6,696,660 | 12,266,660 |
| நிலையான வைப்பு - பணியாட்கள் நல்வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம் | | 170,647 | 158,564 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி - சொத்துக்கள் | 42 | 17,584,263 | 15,596,177 |
| **மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்** | | **2,701,157,031** | **2,823,195,103** |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| இருப்புக்கள் | | 7,864,255 | 8,774,766 |
| விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துக்கள் | 29 | 5,924,034 | - |
| வர்த்தக வருமதிகள் | 34 | 29,800,210,676 | 355,783,337 |
| பணியாட்கள் கடன்கள் | 35 | 62,155,855 | 60,762,235 |
| நிதிச் சொத்துக்கள் | 36 | 4,138,699,589 | 3,737,658,343 |
| முற்பணங்கள், முற்கொடுப்பனவுகள், ஏனைய வருமதிகள் | 37 | 395,188,767 | 449,910,755 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 38 | 4,256,321,939 | 3,451,520,415 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **38,666,365,115** | **8,064,409,851** |
| **மொத்த சொத்துக்கள்** | | **41,367,522,146** | **10,887,604,954** |
| உரித்துவமும் பொறுப்புக்களும் | | | |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | | | |
| அரசாங்க மானியங்கள் | 39 | 547,453,186 | 551,162,338 |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | 40 | 6,458,656,678 | 6,137,845,749 |
| மீள்மதிப்பீட்டு மிகை | 41 | 266,545,785 | 219,231,233 |
| **மொத்த மூலதனமும் ஒதுக்கங்களும்** | | **7,272,655,649** | **6,908,239,320** |
| பொறுப்புக்கள் | | | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | | | |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 42 | 102,262,671 | 100,184,510 |
| குத்தகைப் பொறுப்பு | 43 | 257,536 | 281,554 |
| ஏற்பாடுகளும் ஏனைய பொறுப்புக்களும் | 44 | 311,692,841 | 268,222,208 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 45 | 63,487,487 | 31,578,115 |
| **மொத்த நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | **477,700,536** | **400,266,387** |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வர்த்தக சென்மதிகள் | 46 | 33,493,881,229 | 3,656,608,443 |
| ஏனைய சென்மதிகள் | 46 | 36,765,358 | 41,764,655 |
| வருமான வரிப் பொறுப்புக்கள் | 47 | 86,519,374 | (119,273,851) |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **33,617,165,961** | **3,579,099,247** |
| **மொத்த உரித்துவமும் பொறுப்புக்களும்.** | | **41,367,522,146** | **10,887,604,954** |

பக்கங்கள் 84 முதல் 108 வரை காணப்படும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி தயாரிக்கப்பட்டுள்ள என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

பணிப்பாளர்கள் சபையானது இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாவார்கள். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களது சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளன.

**K V P R M டி சில்வா**
*பணிப்பாளர் - நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவம்*

**AVM சாகர கொட்டகதெனிய (Retd.)**
*சிவில் வான்பயணவியலின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பி.நி.அ.*

**சுனில் ஜயரத்ன**
*தலைவர்*

27 பெப்ரவரி 2025

# உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் உள்ளன.) | அரசாங்க மானியம் | மீள்மதிப்பீட்டு மிகை | நிறுத்திவைக்கப். உழைப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **1 ஜனவரி 2023 இல் உள்ளவாறான மீதி** | **554,889,603** | **113,812,525** | **5,826,217,782** | **6,494,919,909** |
| காலத்திற்கான இலாபம் | - | - | 4,348,278,597 | 4,348,278,597 |
| சொத்துக்களின் மீள்மதிப்பீடு | - | 105,418,709 | - | 105,418,709 |
| ஆண்டிற்கான பெறுமதிகுறைப்பு | (3,709,152) | - | - | (3,709,152) |
| அரசாங்க மானியங்களின் விற்பனை - சொத்துக்கள் | (18,113) | - | - | (18,113) |
| **அனுமதிக்கப்படாத உள்ளீட்டு வரி - VAT** | - | - | (22,305,396) | (22,305,396) |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகளின் மீள்அளவீடு | - | - | (14,345,234) | (14,345,234) |
| திரண்ட நிதிய மாற்றல்கள் | - | - | (4,000,000,000) | (4,000,000,000) |
| **31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மீதி** | **551,162,338** | **219,231,234** | **6,137,845,749** | **6,908,239,320** |
| காலத்திற்கான இலாபம் | - | - | 1,170,646,874 | 1,170,646,874 |
| சொத்துக்களின் மீள்மதிப்பீடு | - | 47,314,551 | - | 47,314,551 |
| ஆண்டிற்கான பெறுமதிகுறைப்பு | (3,709,152) | - | - | (3,709,152) |
| விபத்து புலனாய்வு நிதிக்கான மாற்றல் | - | | (61,795,304) | (61,795,304) |
| அனுமதிக்கப்படாத உள்ளீட்டு வரி - VAT | - | - | - | - |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகளின் மீள்அளவீடு | - | - | (38,040,641) | (38,040,641) |
| திரண்ட நிதிய மாற்றல்கள் | - | - | (750,000,000) | (750,000,000) |
| **31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான மீதி** | **547,453,186** | **266,545,785** | **6,458,656,678** | **7,272,655,649** |

பக்கங்கள் 84 முதல் 108 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# காசுப் பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது.<br>(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் உள்ளன.) | குறிப்பு | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| **சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | | **1,376,530,174** | **4,557,199,326** |
| **செம்மையாக்கல்கள்** | | | |
| பெறுமானத்தேய்வு - நடப்பாண்டு | 29 | 193,728,558 | 149,698,845 |
| பெறுமானத்தேய்வு - அனுமதிக்கப்படாத VAT | | - | 2,174,170 |
| அருவச் சொத்துக்களின் பெறுமதி குறைப்பு | 30 | 6,155,864 | 7,638,729 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களிலான பெறுமானத்தேய்வு | 32 | 21,034 | 21,034 |
| அரசாங்க மானியங்களின் பெறுமதிகுறைப்பு | 39 | (3,709,152) | (3,709,152) |
| முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் | 23 | (691,689,265) | (1,235,493,468) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான நட்டம் | | 1,685,935 | 862,778 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான இலாபம் | | - | (106,226) |
| குத்தகைப் பொறுப்புக்களிலான நிதிச் செலவினம் | 43 | 8,123 | 6,682 |
| நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களுக்கான ஏற்பாடு | 45 | 6,927,202 | 4,426,929 |
| முன்னைய ஆண்டு செம்மையாக்கல்கள் | | - | (22,305,396) |
| **தொழிற்படும் மூலதன மாற்றங்களுக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | **889,658,472** | **3,460,414,251** |
| இருப்புக்களிலான (அதிகரிப்பு)/ குறைப்பு | | 910,511 | 1,015,176 |
| வர்த்தக வருமதிகளிலான (அதிகரிப்பு)/ குறைப்பு | 34 | (29,444,427,339) | (61,867,890) |
| பணியாட்கள் கடன்களிலான (அதிகரிப்பு) | 35 | 22,751,826 | 11,324,547 |
| முற்பணங்கள்/முற்கொடுப்பனவுகள்/ஏனைய வருமதிகளிலான (அதிகரிப்பு)/ குறைப்பு | 37 | (4,010,509) | 110,568,853 |
| வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளிலான அதிகரிப்பு | 46 | 29,832,273,489 | 1,260,284,386 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு | | 1,297,156,450 | 4,781,739,323 |
| செலுத்தப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டச் செலவுகள் (பணிக்கொடை) | 45 | (13,058,470) | (8,390,100) |
| வருமான வரிக்கு எதிராக ஈடுசெய்யப்பட்ட VAT திருப்பிப் பெறுகை | | - | (8,250,934) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 47 | - | (765,282,046) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | | **1,284,097,980** | **3,999,816,244** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கையகப்படுத்தல் | 29 | (41,776,634) | (48,449,971) |
| ஆ.பொ.உ. இலான அனுமதிக்கப்படாத VAT | | - | (98,947,675) |
| அருவச் சொத்துக்களின் கையகப்படுத்தல் | 30 | - | (3,046,875) |
| நடப்பிலுள்ள மூலதன வேலையிலிருந்தான (அதிகரிப்பு) / குறைப்பு | 33 | 5,570,000 | (5,599,264) |
| ஏனைய முதலீடுகளின் மீளப்பெறுதல் /(கையகப்படுத்தல்) | 36 | (297,164,602) | (484,262,387) |
| பெறப்பட்ட வட்டி | | 622,399,671 | 1,303,788,920 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிலிருந்தான விற்பனை வருவாய்கள் | | 44,000 | 196,298 |
| விபத்து புலனாய்வு நிதியிலான அதிகரிப்பு / (குறைப்பு) | | (118,000) | (621,823) |
| வங்கி உத்தரவாதத்திலான அதிகரிப்பு / (குறைப்பு) | | (18,218,755) | 196,332,395 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | **270,735,680** | **859,389,618** |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு | | (750,000,000) | (4,000,000,000) |
| வீரவில காணிக்கான குத்தகைக் கொடுப்பனவு | 43 | (32,141) | (32,141) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | **(750,032,141)** | **(4,000,032,141)** |
| காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | 804,801,520 | 859,173,720 |
| வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும் | 38 | 3,451,520,415 | 2,592,346,694 |
| **வருடத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | 38 | **4,256,321,939** | **3,451,520,415** |

பக்கங்கள் 84 முதல் 108 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

*வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலொழிய, குறிப்புகளில் காண்பிக்கப்பட்டுள்ள அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயிலாகும்.

## 1. பெருநிறுவன தகவல்கள்

### 1.1. உருவாக்கமும் செயற்பாடுகளின் தன்மையும்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரச்சபைச் சட்டத்தின் கீழ் 27 டிசம்பர் 2022 இல் நிறுவப்பட்டது. இது 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பினால் கடைப்பிடிக்கப்படும் பொருத்தமான சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக பாதுகாப்பு, செயற்திறனை முறைப்படுத்துதல் மற்றும் சிவில் வான்பயணவியல் மற்றும் சூழலில் அதன் தாக்கம் என்பவற்றை செயற்பாடாகக் கொண்ட ஒரு சட்டரீதியான அங்கமாக கருதப்படுகின்றது.

அதிகாரசபையின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 152/1 மினுவங்கொட வீதி, கட்டுநாயக்காவில் அமைந்துள்ளது.

## 2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. வேறுவிதத்தில் குறிப்பிட்டாலொழிய, இந்த கொள்கைகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து வருடங்களுக்கும் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 2.1. தயாரிப்பின் அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரமும் அதற்கு இணங்கியும் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், சில நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

### 2.2. இணக்கப்பாட்டு கூற்று

SLFRSs/ LKASs இன் ஏற்பாடுகளின் பிரகாரம் CAASL இன் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பணிப்பாளர்கள் சபை பொறுப்பாயுள்ளது. 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான CAASL இன் நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் ஒப்பிடப்படும் தகவல்கள் என்பன இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இணக்கப்பாடு காண்கின்றன.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாகும். 28 பெப்ரவரி 2025 இல் மேற்கொள்ளப்பட்ட பணிப்பாளர்களின் தீர்மானத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

### 2.3. வழங்கலுக்காக அங்கீகரிக்கப்பட்ட திகதி

31 டிசம்பர் 2024 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2025 இன் பணிப்பாளர்கள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.

### 2.4. செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது CAASL செயலாற்றும் பொருளாதாரச் சூழலின் முதன்மை நாணயமாகும். குழுமத்திலுள்ள ஒவ்வொரு நிறுவனமும் அனை செயலாற்றும் பிரதான பொருளாதாரச் சூழலின் நாணயத்தை அவற்றின் செயற்பாட்டு நாணயமாக பயன்படுத்துகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாயில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது அதிகாரசபையின் செயற்பாட்டு நாணயம் மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் அதிகாரசபையின் உரிய செயற்பாட்டு நாணயத்திற்கு கொடுக்கல் வாங்கல் திகதியில் உள்ள பரிமாற்றல் வீதத்தில் பரிமாற்றல் செய்யப்படுகின்றன.

### 2.5. நிறுவனத் தொடர்ச்சி

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது முகாமைத்துவமானது நிறுவனத் தொடர்ச்சியினை தொடர்வதற்கான அதிகாரசபையின் ஆற்றலை மதிப்பீடு செய்தது. அதிகாரசபையானது அதன் சட்டரீதியான கடமைகள் மற்றும் செயற்பாடுகளை செயலாற்றுவதற்கு மற்றும் எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்திற்கு செயற்பாட்டு இருப்பினை தொடர்வதற்கு போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என முகாமைத்துவம் நியாயமாக எதிர்பார்க்கின்றது. எதிர்காலம் பற்றிய அனைத்து கிடைக்கப்பெறும் தகவல்களை கருத்திலெடுத்து அதிகாரசபையானது செயற்பாடுகளது கலைப்பு அல்லது நிறுத்தலுக்கான ஒரு அவசியத்தினை எதிர்பார்க்கவில்லை. இதன் பிரகாரம், நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் அதிகாரசபையானது நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையினை தொடர்ந்தும் கடைப்பிடித்தது.

### 2.6. முக்கியமான கணக்கீட்டு நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் அதிகாரசபைக்கு SLFRSs உடன் இணக்கப்பாடு காணும் தேவை உள்ளது மற்றும் அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான அறிக்கையிடப்பட்ட வருவாய்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல் என்பவற்றை பாதிக்கக்கூடிய நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை முகாமைத்துவமானது மேற்கொள்ளவேண்டியுள்ளது. எவ்வாறாயினும், இந்த அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் பாதிக்கக்கூடிய சொத்தின் கொண்டுசெல்லல் தொகை அல்லது பொறுப்பில் ஒரு பொருண்மையான செம்மையாக்கல் தேவையான விளைவினை விளைவிக்கலாம். இந்த காரணிகள் நியாயப்பாடு, மதிப்பீடு மற்றும் அனுமானங்களை உள்ளடக்குகின்றன.

#### *2.6.1. நியாயப்பாடுகள்*

அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிப்பதில், முகாமைத்துவமானது பின்வரும் நியாயப்பாடுகளை பயன்படுத்தியுள்ளது. இவை நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் ஒரு கணிசமான தாக்கத்தைக் கொண்ட மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் உள்ளடக்கியவை தவிர்த்தவையாகும்.

#### *2.6.2. மதிப்பீடுகளும் அனுமானங்களும்*

அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான மதிப்பீட்டு உறுதியின்மைகளின் எதிர்கால மற்றும் ஏனைய முக்கிய மூலங்கள் தொடர்பான முக்கிய அனுமானங்கள் அடுத்த நிதியாண்டினுள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லப்படும் தொகைகளில் ஒரு பொருண்மையான செம்மையாக்கலை விளைவிக்கும் ஒரு கணிசமான இடரினை ஏற்படுத்தலாம். இவை கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன

**(அ) நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி**

நிதி நிலைமைக் கூற்றில் பதிவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதிகள் செயலூக்கமான சந்தைகளிலிருந்து பெறவியலாதுள்ளது. எவ்வாறாயினும், கழிவிறக்கம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் மற்றும் கணிதவியல் மாதிரிகள் உள்ளடங்கலான பல்வேறு பெறுமதியிடல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் இவை தீர்மானிக்கப்படுகின்றன. இந்த மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமானபோது அவதானிக்கக் கூடிய சந்தைத் தரவுகளில் பெறப்படுவதுடன், அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகள் கிடைக்காதபோது, நியாயப் பெறுமதிகளை தீர்மானிப்பதற்கு நியாயப்பாடுகள் தேவைப்படுகின்றன.

இந்தக் காரணிகள் தொடர்பான அனுமானங்களிலான மாற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். திறைசேரி உண்டியல்களிலான முதலீடுகள் அவற்றின் முகப் பெறுமதியில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதிச் சொத்துக்களின் (திறைசேரி உண்டியல்கள்) கொண்டு செல்லல் பெறுமதியானது ரூபா 4,256,403,952 என்பதுடன் இது 2023 ஆம் ஆண்டில் ரூபா 3,959,239,350 ஆக காணப்பட்டது.

### (ஆ) நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் பெறுமதியிடல்

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களின் கிரயமானது இலங்கை கணக்கீட்டு நியமம் 19 (LKAS) இன் பிரகாரம் ஒரு சூத்திர முறையினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது.

31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் கொண்டு செல்லல் பெறுமதியானது ரூபா 63,487,487.- ஆகும் (2023 - ரூபா 31,578,115.-)

### (இ) நியாயப் பெறுமதி

நிர்ப்பந்தம் எதுவுமின்றி அறிவுபடைத்த விருப்பமுடைய தரப்பினர்களிடையே ஒரு முழங்கையளவு தூரத்திலான கொடுக்கல் வாங்கலில் உடன்பாடு கண்ட மறுபயனின் பெறுமதியே நியாயப் பெறுமதி ஆகும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், ஒரு நிதியியல் கருவியின் நியாயப் பெறுமதியானது பொதுவாக செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட மறுபயனின் பெறுமதியாகும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், ஒரு செயலூக்கமான சந்தையில் விலைகூறப்பட்ட ஒரு நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதியானது பொதுவாக அதன் கேட்பு விலை என்பதுடன், ஒரு செயலூக்கமான சந்தையில் விலைகூறப்பட்ட ஒரு நிதிப் பொறுப்பின் நியாயப் பெறுமதியானது பொதுவாக அதன் கூறு விலையாகும். குறுகிய கால அளவையுடைய காசுக்குச் சமனானவைகள் மற்றும் குறுங்கால முதலீடுகள் போன்ற நிதிக் கருவிகளுக்கு, இக்கருவிகளின் கொண்டு செல்லல் தொகையானது அண்ணளவாக அவற்றின் நியாயப் பெறுமதியாகும்.

### (ஈ) வருமான வரி

அதிகாரசபையானது வருமான வரிக்கு உட்பட்டதுடன், வருமான வரிக்கான ஒட்டுமொத்த ஏற்பாட்டினை தீர்மானிப்பதற்கு கணிசமானளவு நியாயப்பாடு தேவைப்படுகின்றது.

## 3. நிதிச் சொத்துக்கள்

அதிகாரசபையானது அதன் நிதிச் சொத்துக்களை பின்வரும் பிரிவுகளுக்கு வகைப்படுத்துகின்றது: கடன்களும் வருமதிகளும், முதிர்வுவரை வைத்திருக்கப்படுபவை மற்றும் விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை. வகைப்படுத்தலானது ஆரம்ப அங்கீகாரத்தின்போது முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படுவதுடன், இது முதலீடானது மேற்கொள்ளப்பட்ட நோக்கத்தில் தங்கியுள்ளது.

### 3.1. வகைப்படுத்தல்

#### (அ) கடன்களும் வருமதிகளும்

கடன்களும் வருமதிகளும் நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான ஒரு செயலூக்கமான சந்தையில் விலை குறிப்பிடப்படாத மூலாதாரமற்ற நிதிச் சொத்துக்கள் ஆகும். சாதாரண கொடுக்கல் வாங்கல் பற்றுச்சீட்டுகளும் இந்த பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவை வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படும்.

#### (ஆ) முதிர்வுவரை வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்

முதிர்வுவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான மற்றும் நிலையான முதிர்வுகளையுடைய மூலாதாரமற்ற நிதிச் சொத்துக்களாகும். பின்வருவன தவிர்த்து, அதிகாரசபையின் முகாமைத்துவம் முதிர்வுவரை வைத்திருக்கும் சாத்தியமான நோக்கம் மற்றும் ஆற்றலைக் கொண்டிருக்கும்.

- அதிகாரசபையானது ஆரம்ப அங்கீகாரத்தின்போது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் என்று குறிப்பிட்டால் அல்லது
- அதிகாரசபையானது விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை என்று குறிப்பிட்டால் மற்றும்
- கடன்கள் மற்றும் வருமதிகள் வரைவிலக்கணத்தை சந்திப்பவை.

முதிர்வுவரை வைத்திருக்கப்படும் முதலீடுகளிலிருந்தான வட்டியானது வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டு ‘முதலீட்டு வருமானமாக’ அறிக்கையிடப்படுகின்றது.

#### (இ) விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்கள்

விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் என்பன ஒரு வரையறையற்ற காலத்திற்கு வைத்திருக்கும் நோக்கினைக் கொண்ட நிதிச் சொத்துக்களாகும். இவை திரவத்தன்மை தேவைகளுக்காக அல்லது வட்டி வீதம், பரிமாற்றல் வீதம் அல்லது உரித்துவ விலைகளில் ஏற்படும் மாற்றம் காரணமாக விற்பனை செய்யப்படலாம் அல்லது கடன்களும் வருமதிகளாக, முதிர்வுவரை வைத்திருக்கப்படும் முதலீடுகளாக அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படாதவை ஆகும்.

### 3.2. அங்கீகாரமும் அளவீடும்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக கொண்டுசெல்லப்படாத அனைத்து நிதிச் சொத்துக்கள் மற்றும் அவற்றின் கையகப்படுத்தலுக்கு நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயத்தைப் பொறுத்தளவில் நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியுடன் கூட்டி அங்கீகரிக்கப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, கொடுக்கல் வாங்கல் கிரயமானது வருமானக் கூற்றில் செலவினமாக பதியப்படுகின்றது. நிதிச் சொத்துக்கள், அவற்றிலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமை முதிர்வடைந்திருந்தால் அல்லது அவை மாற்றல் செய்யப்பட்டிருந்தால் மற்றும் அதிகாரசபையானது உரித்துடைமையின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமாக மாற்றல் செய்திருந்தால், அங்கீகார நீக்கம் செயப்படுகின்றன. விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்கள் பின்னர் நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லப்படுகின்றன. கடன்களும் வருமதிகளும் முதிர்வுவரை வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் என்பதுடன் இவை விளைவுறு வட்டி முறையினை பயன்படுத்தி பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன.

பணரீதியான மற்றும் பணரீதியல்லாத பிணையங்களின் நியாயப் பெறுமதியிலான மாற்றங்கள் விற்பனைக்கு கிடைக்கக்கூடியவையாக வகைப்படுத்தப்பட்டு ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

விற்பனைக்கு கிடைக்கக்கூடியவையாக வகைப்படுத்தப்பட்ட பிணையங்கள் விற்பனை செய்யப்பட்டால் அல்லது வலுக்குன்றியிருந்தால் திரண்ட நியாயப் பெறுமதி செம்மையாக்கல்கள் ஏனைய விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டு வருமானக் கூற்றில் நிதிச் சொத்துக்களில் தேறிய எய்தப்பெற்ற இலாபம் / நட்டமாக வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

விளைவுறு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்படும் விற்பனைக்கு கிடைக்கக்கூடிய பிணையங்களிலான வட்டி, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### *3.2.1. நியாயப் பெறுமதியின் தீர்மானம்*

கடன்கள், முற்பணங்கள் மற்றும் வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியானது நிகழ்காலப் பெறுமதி மாதிரியினைப் பயன்படுத்துவதன் மூலம் ஒப்பந்த ரீதியாக உடன்பட்ட காசுப் பாய்ச்சல்கள், கடன்தகைமை, திரவத்தன்மை மற்றும் இணைந்த செலவுகள் போன்ற காரணிகளைக் கருத்திற்கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. வர்த்தக வருமதிகள் மற்றும் சென்மதிகளின் வலுக்குன்றல் ஏற்பாடுகள் நிகராக கொண்டுசெல்லப்படும் பெறுமதியானது அண்ணளவாக அவற்றின் நியாயப் பெறுமதிகளாகும் என அனுமானிக்கப்படுகின்றது.

# *நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்*

### *3.2.2. அங்கீகார நீக்கம்*

ஒரு நிதிச் சொத்தானது (அல்லது பொருத்தமானவிடத்து, நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக்கள் குழுவின் ஒரு பகுதி) பின்வரும் சமயத்தில் அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது:

- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகள் முதிர்வடைந்திருந்தால்
- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகளை அதிகாரசபை மாற்றல் செய்திருந்தால், அல்லது ஒரு 'கடந்து செல்லல்' உடன்படிக்கையின் கீழ் ஒரு மூன்றாம் தரப்பினருக்கு பொருண்மையான தாமதமின்றி பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்களை செலுத்துவதற்கான ஒரு கடப்பாட்டினை பொறுப்பேற்றிருந்தால்; மற்றும் ஒன்றில்,

(அ) அதிகாரசபையானது சொத்தின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவு மாற்றல் செய்திருந்தால் அல்லது

(ஆ) அதிகாரசபையானது மாற்றல் மற்றும் சொத்தின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவு தக்கவைத்தல் ஆகிய இரண்டையும் செய்யாது, ஆனால் முதலீட்டின் கட்டுப்பாட்டினை மாற்றல் செய்திருந்தால்.

அதிகாரசபையானது ஒரு சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றல் செய்திருந்தால் அல்லது ஒரு கடந்து செல்லல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தால் மற்றும் சொத்தின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவு மாற்றல் செய்யாது மற்றும் வைத்திருக்காது மற்றும் அதன் கட்டுப்பாட்டினை மாற்றல் செய்யாதிருந்தால், சொத்தானது அதிகாரசபையின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றது. அப்படியாயின், அதிகாரசபையானது அதனுடன் இணைந்த ஒரு பொறுப்பினையும் அங்கீகரிக்கின்றது. மாற்றல் செய்யப்பட்ட சொத்து மற்றும் இணைந்த பொறுப்பானது அதிகாரசபை தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை பிரதிபலிக்கும் ஒரு அடிப்படையில் அளவீடு செய்யப்படுகின்றது. மாற்றல் செய்யப்பட்ட சொத்து மீதான ஒரு உத்தரவாதம் வடிவிலான தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் ஆரம்ப கொண்டுசெல்லல் தொகையில் மற்றும் அதிகாரசபை மீள்செலுத்தவேண்டிய ஆகக்கூடிய மறுபயன் தொகை இவற்றில் எது குறைவானதோ அதில் அளவிடப்படுகின்றது.

## 4. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

### 4.1. கிரயம் / மீள்மதிப்பீடு

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகள் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன. கிரயமானது சொத்தின் கையகப்படுத்தலுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினத்தை உள்ளடக்குகின்றது. சுய கட்டமைக்கப்பட்ட சொத்தின் கிரயமானது பொருட்கள், நேரடி கூலி மற்றும் அவர்களின் கருதிய பயன்பாட்டிற்கான செயற்படும் நிலைமைகளுக்கு கொண்டுவருவதற்கு நேரடியாக உடைமையாக்கத்தக்க வேறு ஏதேனும் செலவுகளை உள்ளடக்குகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் பகுதியினை மாற்றீடு செய்யும் கிரயமானது, அப்பகுதியினுள் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் அதிகாரசபைக்கு பாய்ச்சப்படும் மற்றும் அதன் கிரயமானது நம்பகமாக அளவிடக்கூடிய சாத்தியம் காணப்படுமாயின், அந்த உருப்படியின் கொண்டுசெல்லல் தொகையானது அங்கீகரிக்கப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நாளாந்த சேவையாற்றல் கிரயமானது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் உருப்படிகள் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்படுமாயின், அத்தகைய சொத்தின் முழு வகுப்பும் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றன. 2014 முதல் அதிகாரசபையானது சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுக் கொள்கையினை ஒவ்வொரு 03 வருடங்களில் இருந்து ஒவ்வொரு 05 வருடங்களாக மாற்றியுள்ளது. எவ்வாறாயினும், மீள்மதிப்பீட்டிற்கு உட்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதியானது கொண்டுசெல்லல் தொகையிலிருந்து பொருண்மையாக வித்தியாசப்பட்டிருந்தால், மேலும் ஒரு மீள்மதிப்பிடல் மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு சொத்தானது மீள் பெறுமதியிடப்படும்போது, கொண்டுசெல்லல் தொகையிலான ஏதேனும் அதிகரிப்பானது நேரடியாக ஒரு மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்படுகின்றது. இது முன்னர் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியினை திருப்பும் அளவிற்கு நீங்கலாக, அப்போது அதிகரிப்பானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒரே சொத்திலான ஒரு முன்னைய மிகையினை ஈடுகட்டும் ஏதேனும் மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையானது நேரடியாக மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலுள்ள மிகைக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டு, ஏதேனும் மிகையானது ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. விற்பனை செய்யப்பட்ட சொத்து தொடர்பான ஏதேனும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கமானது விற்பனையின் பின்னர் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கு மாற்றல் செய்யப்படுகின்றது.

### 4.2. பெறுமானத்தேய்வு

பெறுமானத்தேய்வானது தேய்மானத் தொகையின் மீது, இது சொத்தின் கிரயம் அல்லது கிரயத்திற்கு மாற்றீடு செய்யப்பட்ட மற்றைய தொகை என்பவற்றிலிருந்து எச்சப் பெறமதி கழிக்கப்பட்டு கணிப்பிடப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது ஒரு நேர் கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு அங்கீகரிக்கப்படுகின்றது. கையகப்படுத்தும் வருடத்தில் பெறுமானத்தேய்வானது சொத்தானது பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்ட திகதியிலிருந்து ஒரு விகிதாசார அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. அத்துடன் குறிப்பிட்ட சொத்தானது விற்பனை செய்யப்பட்ட திகதிக்கு பெறுமானத்தேய்வு எதுவும் அறவிடப்படமாட்டாது. குத்தகைச் சொத்துக்கள் குத்தகைக் காலம் மற்றும் அவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் இதில் எது குறைந்ததோ அதன்மீது பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. காணி பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை.

சொத்துக்களின மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 15-40 வருடம் |
| கொள்கலன் கட்டமைப்புகள் | 5-10 வருடம் |
| மோட்டார் வாகனங்கள் | 8-15 வருடம் |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 4-10 வருடம் |
| தளபாடமும் பொருத்திகளும் | 4-10 வருடம் |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 4-10 வருடம் |

பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடானது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயம் / பெறுமதியில் கணிப்பிடப்படுகின்றது (சொத்தின் கிரயம் / பெறுமதியின் எச்சப் பெறுமதியின் 10% இற்கும் குறைவானது). காணியைத் தவிர்த்த அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன பின்வரும் சதவீதங்களின் அத்தகைய தொகைகளை அவற்றின் பயனுள்ள வாழ்நாள் மீது பதிவழிப்பதற்காக பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 6 2/3% |
| கொள்கலன் கட்டமைப்புகள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 12.5% |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 25% |
| தளபாடமும் பொருத்திகளும் | 25% |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 25% |

பெறுமானத்தேய்வானது சொத்து பயன்பாட்டிற்கு கிடைக்கக்கூடிய திகதியிலிருந்து ஒரு விகிதாசார அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கணக்கிற்கு சாட்டப்படுகின்றது. தனித்தனியான சொத்துக்களின் தேய்மான தொகையினை தீர்மானிப்பதில் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டு தொகையின் 10% ஆனது எச்சப் பெறுமதியாக நிறுத்திவைக்கப்படுகின்றது.

பெறுமானத்தேய்வு முறை, பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எச்சப் பெறுமதிகள் என்பன முகாமைத்துவத்தினால் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு, அவசியமாயின் செம்மையாக்கப்படுகின்றது. இது LKAS 16 இன் பிரகாரம் சொத்துக்களின் சிறந்த கிடைக்கக்கூடிய தகவல் மற்றும் எதிர்பார்க்கும் விளைவிக்கும் திறனின் அடிப்படையிலாகும். இந்த மதிப்பீடுகளிலுள்ள நிச்சயமற்ற தன்மைகள், குறிப்பாக தொழில்நுட்ப காலாவதி தொடர்பானவை, குறிப்பிட்ட மென்பொருள் மற்றும் த.தொ. உபகரணத்தின் பயன்பாட்டில தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

## 4.3. அங்கீகார நீக்கம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன விற்பனையின்போது அல்லது அவற்றின் பயன்பாட்டிலிருந்து எவ்விதமான எதிர்கால பொருளாதார நலன்களும் எதிர்பார்க்காவிடின், அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் அங்கீகார நீக்கத்திலிருந்து எழுகின்ற இலாபம் அல்லது நட்டமானது சொத்தின் விற்பனை வருவாய்க்கும் அதன் கொண்டுசெல்லல் தொகைக்கும் இடையேயான வித்தியாசமாக தீர்மானிக்கப்பட்டு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 4.4. புலப்படும் சொத்துக்களின் வலுக்குன்றல்

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியிலும் அதிகாரசபையானது அதன் புலப்படும் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகைகளை, அந்த சொத்துக்கள் ஒரு வலுக்குன்றல் இழப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதான ஒரு குறிகாட்டி காணப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்காக மீளாய்வு செய்கின்றது. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படுமாயின், சொத்தின் மீட்கத்தக்க தொகையானது வலுக்குன்றல் நட்டத்தின் (ஏதேனும் இருப்பின்) அளவிற்கு மதிப்பிடப்படுகின்றது. ஒரு தனியான சொத்தின் மீட்கத்தக்க தொகையினை மதிப்பிடுவதற்கு இயலாதுவிடின், மீட்கத்தக்க தொகையானது சொத்து உரியதாயுள்ள காசு உருவாக்கும் அலகிற்காக தீர்மானிக்கப்படுகின்றது. ஒதுக்கீட்டின் ஒரு நியாயமான மற்றும் நிலையான அடிப்படையானது இனங்காணப்பட இயலுமாயின் சொத்துக்கள் தனியான காசு உருவாக்கும் அலகுகளுக்கு ஒதுக்கப்படுகின்றன; இல்லாவிடின், ஒரு நியாயமான மற்றும் நிலையான ஒதுக்கீட்டு அடிப்படை இனங்காணப்படக்கூடிய ஆகச்சிறிய குழுவான காசு உருவாக்கும் அலகுகளுக்கு ஒதுக்கப்படுகின்றன.

மீட்கத்தக்க தொகையானது உயர்ந்த நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனை செய்வதற்கான கிரயம் அல்லது பயன்பாட்டிலுள்ள பெறுமதி கழிக்கப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியினை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் வரிக்கு முந்திய கழிவிறக்க வீதத்தினை பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்கு கழிவிறக்கம் செய்யப்படுகின்றது. இக்கழிவிறக்க வீதமானது பணத்தின் நேரப் பெறுமதியின் நடப்பு சந்தை மதிப்பீடுகளையும் சொத்திற்கு குறிப்பிட்ட இடர்களுக்காக மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் செம்மையாக்கப்படாததை பிரதிபலிக்கின்றது.

ஒரு சொத்தின் மீட்கத்தக்க தொகையானது அதன் கொண்டுசெல்லல் தொகைக்கும் குறைவாக மதிப்பிடப்பட்டிருப்பின் (அல்லது காசு உருவாக்கும் அலகு). சொத்தின் கொண்டுசெல்லல் தொகையானது (காசு உருவாக்கும் அலகு) அதன் மீட்கத்தக்க தொகைக்கு குறைக்கப்படுகின்றது. குறிப்பிட்ட சொத்தானது ஒரு மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் கொண்டுசெல்லப்பட்டொழிய, ஒரு வலுக்குன்றல் நட்டமானது உடனடியாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. அச்சமயத்தில், வலுக்குன்றல் நட்டமானது ஒரு மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியாக கருதப்படுகின்றது.

## 4.5. மூலதன நடப்பு வேலை

மூலதன நடப்பு வேலையானது கிரயத்திலிருந்து திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள், ஏதேனும் இருப்பின், நிகராக குறிப்பிடப்படுகின்றன. இந்தச் செலவினங்கள் மூலதனத் தன்மையைக் கொண்டவை என்பதுடன் கட்டிடங்கள், வலையமைப்பு உபகரணங்கள், அமைப்பு அபிவிருத்தி மற்றும் மூலதனமாக்கத்திற்கு காத்திருக்கும் ஏனைய நிலையான சொத்துக்களது கட்டுமானத்தில் நேரடியாக ஆட்பட்டவையாகும்.

முடிவுறுத்தல் சான்றிதழ் அல்லது சொத்து கிடைக்கப்பெறும்போது செலவினங்கள் CAASL இன் சொத்து இடாப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## 4.6. அருவச் சொத்துக்கள்

திட்டமான பயனுள்ள வாழ்நாட்களை உடைய அதிகாரசபையினால் கையகப்படுத்தப்பட்ட அருவச் சொத்துக்கள், கிரயத்திலிருந்து திரண்ட பெறுமதிகுறைப்பும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்களும் கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன. பெறுமதி குறைப்புக்கான ஏற்பாடானது த.தொ. மென்பொருள் மற்றும் செயற்பாட்டு முறைமைகளின் கிரயத்தில் (சொத்தின் பெறுமதியின் எச்சப் பெறுமதியின் 10% இற்கு குறைவானது) ஒரு நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

அனைத்து த.தொ. மென்பொருளும் வருடாந்தம் 50% இல் பெறுமதிகுறைப்பு செய்யப்படுவதுடன். பயனுள்ள வாழ்நாள் மீது அத்தகைய தொகைகள் பதிவழிக்கப்படுவதற்காகும்.

அருவச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படுவதற்காக அவசியத்துடன் மீளாய்வு செய்யப்படுகின்றது. த.தொ. மென்பொருளின் பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு

| | |
|---|---|
| **த.தொ.மென்பொருள்** | **2- 4 வருடங்கள்** |

## 4.7. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகைச் சொத்துக்கள்

### *4.7.1. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்*

அதிகாரசபையானது குத்தகை ஆரம்பிக்கும் திகதியிலிருந்து பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களை அங்கீகரிக்கின்றது. இது உள்ளார்ந்த சொத்து பயன்பாட்டிற்கு கிடைக்கத்தக்க திகதியாக தீர்மானிக்கப்படுகின்றது. இந்த சொத்துக்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்பட்டு, அதன் பின்னர் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் வலுக்குன்றல் நட்டங்களினால் குறைக்கப்பட்டு குத்தகை பொறுப்புக்களின் ஏதேனும் மீள்அளவீட்டிற்கு செம்மையாக்கப்படுகின்றன. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் கிரயமானது, அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்புக்கள், ஆட்பட்ட ஏதேனும் ஆரம்ப நேரடி செலவுகள் மற்றும் பெறப்பட்ட ஏதேனும் குத்தகை ஊக்குத்தொகைகள் நிகராக ஆரம்ப திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொண்ட குத்தகை கொடுப்பனவுகள் என்பனவாகும்.

பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் சொத்தின் குத்தகைக் காலம் அல்லது மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் இவற்றில் குறுகிய காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. அவை பின்வருமாறு:

| சொத்து | மதிப்பிடப்பட்ட வாழ்நாள் |
|---|---|
| காணி | 30 வருடங்களுக்கு மேலாக |

### *4.7.2. குத்தகைப் பொறுப்புக்கள்*

குத்தகை ஆரம்பிக்கும் திகதியில், அதிகாரசபையானது குத்தகை காலத்தின் மீதான குத்தகை கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியில் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்கின்றது. குத்தகை கொடுப்பனவுகளின் நிகழ்கால பெறுமதியினை கணிப்பிடுவதில், அதிகாரசபையானது குத்தகை ஆரம்பித்தல் திகதியில் திறைசேரி முறிகள் வட்டி வீதத்தைப் பயன்படுத்துகின்றன.

## 5. இருப்புக்கள்

இருப்புக்கள் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. கிரயமானது முதல் வருகை முதல் வெளியே முறையில் தீர்மானிக்கப்படுகின்றது (FIFO). இருப்புக்களின் பெறுமதியானது கையகப்படுத்தல், மாற்றல் கிரயங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள இடத்திற்கு மற்றும் நிலைக்கு அவற்றை கொண்டு வருவதில் ஆட்படும் ஏனை செலவுகளை

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

உள்ளடக்குகின்றது. அதிகாரசபையின் இருப்புக்கள் எழுதுகருவிகள் மற்றும் நுகர்பொருட்களை உள்ளடக்குகின்றது.

## 6. ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்கள் ஏனைய கடன்பட்டோர்களும் வருமதிகளும், முற்பணங்கள், வைப்புகள், முற்கொடுப்பனவுகள் மற்றும் வருமதியான வரிவிதிப்புகளை உள்ளடக்குகின்றது.

(அ) முற்பணங்கள், வைப்புகள், முன்செலுத்தப்பட்ட செலவினம்
ஒரு நிதியாண்டிற்கு மேலாக நலன் அல்லது உறவுமுறையினையாக கருதக்கூடிய செலவினம் முற்பணங்கள், வைப்புகள் மற்றும் முன்செலுத்தப்பட்ட செலவினமாக வகைப்படுத்தப்படுகின்றன. அத்தகைய செலவினமானது தொடர்புடைய காலத்தின்மீது ஒரு விகிதாசார அடிப்படையில் பதிவழிக்கப்படுகின்றது. ஒரு தனி நிதியாண்டிற்கு அப்பால் நலன்களை வழங்கும் அல்லது உறவினைக் கொண்டுள்ள செலவினங்கள் முற்பணங்கள், வைப்புகள் மற்றும் முன்செலுத்தப்பட்ட செலவினங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இந்த செலவினங்கள் உரிய காலத்தின்மீது ஒரு நேர விகிதாசார அடிப்படையில் ஒரு செலவினமாக கணக்கீடு செய்யப்படுகின்றன.

(ஆ) ஏனைய கடன்பட்டோர்கள்
ஏனைய கடன்பட்டோர்கள் கிரயத்திலிருந்து வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றது.

(இ) வருமதியான வரிவிதிப்பு
வருமதியான வரிவிதிப்பானது ஒரு கிரயமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

(ஈ) முன்செலுத்தப்பட்ட பணியாட்கள் செலவினம்
இது அதிகாரசபையின் பணியாட்களுக்கு சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்பட்டுள்ள பணியாட்கள் கடன்களிலிருந்து எழுகின்ற மீதியினை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

(உ) வருமதியான VAT
இது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து வருமதியான VAT மீள்பெறுகைகளை பிரதிநிதித்தும் செய்கின்றது.

## 7. காசும் காசுக்குச் சமனானவைகளும்

காசும் காசுக்குச் சமனானவைகள் கையிலுள்ள காசு மற்றும் பெறுமதி மாற்றத்தில் முக்கியமற்ற இடருக்குட்பட்ட மற்றும் தெரிந்த தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர் திரவத்தன்மையுடைய குறுங்கால முதலீடுகளை உள்ளடக்குகின்றன. இவை குறுங்கால காசுக் கடப்பாடுகளை சந்திப்பதற்காக வைத்திருக்கப்படுகின்றன.

காசுப் பாய்ச்சல் கூற்றுக்களுக்கு, காசும் காசுக்குச் சமனானவைகள் கையிலுள்ள காசையும் வங்கி வைப்புகளையும் உள்ளடக்குகின்றது. குறுங்கால முதிர்வுகளைக்கொண்ட முதலீடுகள் காசுக்குச் சமனானவைகளாக கருதப்படுகின்றன. ஒருங்கிணைந்த ஐந்தொகையானது வங்கி மேலதிகப் பற்றுக்களை கடன் பெறுகைகளினுள் நடைமுறை பொறுப்புக்களினுள் காண்பிக்கப்படுகின்றன.

## 8. ஏற்பாடுகள்

ஒரு கடந்தகால நிகழ்வின் விளைவாக ஒரு நிகழ்கால கடப்பாட்டினை (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) அதிகாரசபை கொண்டிருக்கும்போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. இங்கு கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாய்ச்சல் சாத்தியமானது மற்றும் கடப்பாட்டுத் தொகையில் ஒரு நம்பகமான மதிப்பீட்டினை மேற்கொள்ள இயலும் போதாகும். பணத்தின் நேரப்பெறுமதியின் விளைவானது பொருண்மையாயிருப்பின், வரிக்கு முந்திய வட்டி வீதத்தில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களை கழிவிறக்கம் செய்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது இந்த வட்டிவீதமானது பணத்தின் நேரப் பெறுமதியின் நடப்பு சந்தை மதிப்பீடுகள் மற்றும் பொருத்தமானபோது பொறுப்பிற்கு குறிப்பிட்ட இடர்களையும் பிரதிபலிக்கின்றது.

2002 இன் 34 ஆம் இலக்க சிவில் வான்பயணவியல் அதிகாரசபைப் பட்டத்தின் பிரிவு 7 (h) இன் கீழ் வானூர்தி விபத்துக்கள் மற்றும் நிகழ்வுகளில் புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்கான அதிகாரம், செயற்பாடு மற்றும் கடமை ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், தேடுதல் மற்றும் மீட்பு செயற்பாடுகளது வழங்கலுக்கும் ஒழுங்கு செய்தல் வேண்டும். இது 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் வான்பயணவியல் சட்டத்தின் அத்தியாயம் VI, பிரிவுகள் 53,54,55 ஏற்பாடுகளில் மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒரு தீவாக பரந்தளவிலான சமுத்திர வான்வெளியினைக் கொண்டிருப்பதுடன், பிராந்தியம் மற்றும் சமுத்திர வான்வெளியின் மேல் பறக்கின்ற எப்போதும் அதிகரிக்கின்ற வானூர்தி அசைவுகளுடன் மற்றும் நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் செயற்படுவதனால், வானூர்தி விபத்து புலனாய்வு மற்றும் தேடுதல் மற்றும் மீட்டல் செயற்பாடுகளை உள்ளடக்கிய பணிகளை சந்திப்பதற்கு போதுமான ஒதுக்க நிதியத்தினை பராமரிப்பதற்கான ஒரு சமரசம் செய்யவியலாத கடப்பாட்டினை CAASL கொண்டுள்ளது.

30 மே 2018 இல் இடம்பெற்ற 145 ஆவது சபைக் கூட்டத்தில், சபையானது ரூபா 50 மில்லியனை வானூர்தி விபத்து மற்றும் புலனாய்விற்காக "விபத்து புலனாய்வு நிதியம்" என ஒரு தனியான நிதியத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு தீர்மானித்துள்ளது. 11 ஒக்டோபர் 2023 இல் இடம்பெற்ற 193 ஆவது சபைக் கூட்டத்தில் சபையானது 2023 இன் இறுதியில் “விபத்து புலனாய்வு நிதியம்” இனை ரூபா 100 மில்லியனாக அதிகரிப்பதற்கும் வருடாந்தம் 10% அதிகரிப்புடன் ஒவ்வொரு நிதியாண்டின் ஆரம்பத்திலும் அதே மட்டத்தைப் பராமரிப்பதற்கு தீர்மானித்தது. இதன் பிரகாரம் விபத்து புலனாய்வு நிதியமானது 31 டிசம்பர் 2024 இல் ரூபா 110,000,000.- ஆக உள்ளது.

## 9. பணியாட்கள் நலன்கள்

### 9.1. நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

ஒரு நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது ஒரு தொழில் முடிவுறுத்தப்பட்டதன் பின்னரான நலன் திட்டம் என்பதுடன், அதன் கீழ் ஒரு தனியான நிதியத்திற்கு பங்களிப்புகள் மேள்கொள்ளப்படுவதுடன், நிறுவனமானது மேலதிகத் தொகைகளை செலுத்துவதற்கு எவ்விதமான சட்ட மற்றும் ஆக்கபூர்வமான கடப்பாட்டினை கொண்டிருக்காது. நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் பணியாட்கள் சேவைகளை வழங்கும் காலத்தின் மீது இலாபம் அல்லது நட்டத்தில் ஒரு பணியாள் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

- **ஊழியர் சேமலாப நிதியம்**
  அதிகாரசபையின் அனைத்து பணியாட்களும் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களாவார்கள் என்பதுடன் CAASL ஆனது அத்தகைய பணியாட்களின் அடிப்படை சம்பளம் மற்றும் படிகளில் 15% இனை பங்களிப்பு செய்கின்றது.
- ஊழியர் நம்பிக்கை நிதியம்
  CAASL ஒவ்வொரு பணியாளின் சம்பளத்தின் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு செய்கின்றது.

### 9.2. நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள்

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் என்பன நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களை தவிர்த்த தொழிலின் பின்னரான திட்டங்களாகும். அதிகாரசபையானது 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் பணிக்கொடையினை செலுத்துவதற்கு பொறுப்பாளியாகும். இச்சட்டத்தின் கீழான கடப்பாடுகளுக்கான ஏற்பாடானது முழு மாதாந்தச் சம்பளத்தை சேவையிலிருந்த வருடங்களின் எண்ணிக்கையினால் பெருக்கும் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. கணிப்பீடுகள் LKAS 19 இன் சூத்திர முறையின் அடிப்படையிலாகும். ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பணிக்கொடை ஏற்பாட்டின் பெறுமதிக்கு ஒரு தனியான முதலீடானது மேற்கொள்ளப்படுகின்றது.

### 9.3. பணியாட்டொகுதி நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம்

பணியாட்டொகுதி நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நிதியமானது 2022 இன் 34 அம் இலங்கை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 20 (5) இன் கீழ் உருவாக்கப்பட்டது. இது அரச சேவையிலிருந்து இளைப்பாறுதல் அடைந்து சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் இணைந்தவர்கள் தொடர்பானதாகும். ஒவ்வொரு இளைப்பாறிய அதிகாரியின் பெயரில் கிடக்கும் தொகையானது திரண்ட வட்டியுடன் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிலிருந்து இளைப்பாறுதலின் போது விடுவிக்கப்படும்.

### 10. நிதிப் பொறுப்புக்கள்

**ஆரம்ப அங்கீகாரமும் அளவீடும்**

LKAS 39 இனது நோக்கத்தினுள் காணப்படும் நிதிப் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அல்லது பொருத்தமானவிடத்து கடன்களும் கடன்பெறுகைகளுமாக வகைப்படுத்தப்படுகின்றன. அதிகாரசபையானது அதன் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகாரத்தின்போது தீர்மானிக்கின்றது.

அனைத்து நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு கடன்கள் மற்றும் கடன்பெறுகைகளைப் பொறுத்தளவில் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றது. இது நேரடியாக உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயத்தினை உள்ளடக்குகின்றது. அதிகாரசபையின் நிதிப் பொறுப்புக்கள் வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளை உள்ளடக்குகின்றன.

### 11. ஏனைய பொறுப்புக்கள்

ஏனைய பொறுப்புக்கள் அட்டுறு செலவினங்கள் உள்ளடங்கலான ஏனைய கடன் கொடுத்தோர்களை உள்ளடக்குகின்றது. இவை அவற்றின் வரலாற்றுப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டு அவை நியாயப் பெறுமதியாக கருதப்படுகின்றன.

### 12. வருமான அங்கீகாரம்

**12.1.** 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் வான்பயணவியல் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் அதிகாரசபையானது அதன் சொந்த நிதியத்தை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் பிரிவு 12 (2) இன் கீழ் அதிகாரசபையினால் பெறப்படும் அனைத்து பணமும் அந்த நிதியத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். பிரிவு 12 (2) இன் பெறப்பட்ட பணமானது SLFRS 15 உடன் இணக்கப்பாடு காண்பதற்காக மற்றும் முன்னிலைப்படுத்தல் நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களில் வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 12.2. வருமானத்தின் மூலங்கள்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது பின்வரும் மூலங்களிலிருந்து வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்றது:

*செற்பாட்டு வருமானம்*

- வெளிநாட்டு விற்பனை மேலதிகக்கட்டணம்
- விமானமேறுதல் கட்டணத்திலிருந்தான சேவைக் கட்டணம்
- முறைமைப்படுத்தல் சேவைகள் (வழங்கல்/ உரிமங்களின் புதுப்பித்தல்/சான்றிதழ்கள்/ அங்கீகாரங்கள் மற்றும் சோதனைகளை நடாத்துதல்)

*செயற்பாடு சாரா வருமானம்*

- ஏனைய வருமானம்
- வட்டி வருமானம் (பணியாட்டொகுதி கடன்கள் மற்றும் நிதிக் கருவிகளிலிருந்து)

வெளிநாட்டு விற்பனையிலிருந்தான மேலதிகக் கட்டணம், விமானமேறுதல் கட்டணத்தின் சேவைக்கட்டணம் மற்றும் முறைமைப்படுத்தல் சேவைகளிலிருந்தான வருவாயானது தொடர்புடைய சேவைகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. இவ்வனைத்து வருமானமும் ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

19 பெப்ரவரி 2023 இல் இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அதன் செயற்பாட்டு செலவினங்களை சந்திப்பதற்காக OSS வருவாயிலிருந்து மாதாந்தம் ரூபா 90 மில்லியனை நிறுத்தி வைப்பதற்கு CAASL இற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஏதேனும் எஞ்சிய மீதியானது அடுத்த மாதத்திற்கு முன்னர் பொது திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### 12.3. வட்டி வருமானம்

அனைத்து வட்டி பெறும் நிதியியல் கருவிகளுக்கான வட்டி வருமானம், இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டவை உள்ளடங்கலாக, 'முதலீட்டு வருமானத்தினுள்' விளைவுறு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒரு வருமதியானது வலுக்குன்றியுள்ளபோது, அதிகார சபையானது கொண்டுசெல்லல் தொகையினை அதன் மீட்கத்தக்க தொகைக்கு குறைக்கின்றது. இது எதிர்பார்க்கப்படும் எதிர்கால காசுப் பாய்ச்சல் கருவியின் ஆரம்ப விளைவுறு வட்டி வீதத்தில் கழிவிறக்கம் செய்யப்பட்டு கழிவினை வட்டி வருமானமாக தொடர்ந்து பிரித்தெடுக்கின்றது.

### 12.4. ஏனைய வருமானம்

ஏனைய வருமானமானது ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 13. செலவினங்களின் அங்கீகாரம்

அனைத்து செலவினங்களும் ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. வழமையான வணிகப் போக்கின்போது மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வினைத்திறனான பராமரிப்பில் ஆட்படும் அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தை கணிப்பிடுவதற்கு வருமானத்திற்கு எதிராக அறவிடப்படுகின்றது.

சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்பார்க்கும் பயனுள்ள வாழ்நாட்களிலான அல்லது எதிர்கால பொருளாதார நலன்களில் எதிர்பார்த்த நுகர்வுப் போக்கிலான மாற்றங்கள் பெறுமானத்தேய்வு காலத்தை மாற்றுவதனூடாக கணக்கீடு செய்யப்படுகின்றது. இவை கணக்கீட்டு மதிப்பீட்டிலான ஒரு மாற்றமாக கருதப்படுகின்றது.

### 14. கடன்பெறுகைக் கிரயங்கள்

கடன்பெறுகைக் கிரயங்கள் என்பது நிதியினை கடன்பெறுவதுடன் இணைந்துள்ள அதிகாரசபையினால் ஆட்பட்ட வட்டி மற்றும் ஏனைய கிரயங்களாகும். கடன்பெறுகைக் கிரயங்கள் அவை ஆட்பட்ட காலத்தில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 15. நடப்பு மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி

**15.1.** காலப்பகுதிக்கான வரிச் செலவினமானது நடப்பு மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. வரியானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இது ஏனைய விரிவான வருமானம் இல்லது நேரடியாக உரித்துவத்தில் அங்கீகரிக்கப்பட்ட உருப்படிகள் தொடர்பான அளவினை விடுத்ததாகும். இதன்போது வரியானது ஏனைய விரிவான வருமானத்தில் அல்லது நேரடியாக உரித்துவத்தில் முறையாக அங்கீகரிக்கப்படுகின்றது.

நடப்பு வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடப்பு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக வரிவிதிப்பு அதிகாரிகளுக்கு செலுத்துவதற்கு அல்லது மீட்டெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகளை உள்ளடக்குகின்றன. தொகையினை கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட வரி வீதங்கள் மற்றும் சட்டங்கள் என்பன நிதி நிலைக் கூற்றுத் திகதியில் அல்லது அதற்கு பின்னர் சட்டமாக்கப்பட்டதாகும். இதன் பிரகாரம், வரிவிதிப்பிற்கான ஏற்பாடானது ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில், 2017 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் மற்றும் அதற்கான திருத்தங்களினால் வரிவிதிப்பு நோக்கங்களுக்காக செம்மையாக்கப்படுகின்றன.

பொறுப்பு முறையினை பயன்படுத்தி ஒத்திவைக்கப்பட்ட வருமான வரியானது

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அங்கீகரிக்கப்படுகின்றது. இது நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடித்தளங்களுக்கும் அவற்றின் கொண்டு செல்லல் தொகைகளுக்கு இடையேயான தற்காலிக வித்தியாசத்திலாகும். எவ்வாறாயினும், கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற நேரத்தில் ஒரு வணிகச் சேர்க்கை நீங்கலான ஒரு கொடுக்கல் வாங்கலில் ஒரு சொத்து அல்லது ஒரு பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி எழுகின்றது. இது கணக்கீட்டு அல்லது வரிவிதிக்கத்தக்க இலாபத்தை பாதிக்காததுடன் அதற்கு கணக்கீடு செய்யப்படவில்லை. ஒத்திவைக்கப்பட்ட வருமான வரியானது அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் சட்டமாக்கப்பட்ட அல்லது கணிசமாக சட்டமாக்கப்பட்ட வரி வீதங்களை (சட்டங்கள்) பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. இது தொடர்புடைய ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்தானது எய்தப்பெற்றபோது அல்லது ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிப் பொறுப்பானது தீர்ப்பனவு செய்யப்படும்போது பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கக்கூடிய சாத்தியமான அளவிற்கு அங்கீகரிக்கப்படுவதுடன், இதற்கு எதிராக தற்காலிக வித்தியாசங்கள் பயன்படுத்தப்படலாம்.

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரியானது துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களிலான முதலீடுகளிலிருந்து எழுகின்ற தற்காலிக வித்தியாசங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, தற்காலிக வித்தியாசங்களின் திருப்பத்தின் நேரத்தை அதிகாரசபை கட்டுப்படுத்துமாயின் மற்றும் அநேகமாக எதிர்வரும் எதிர்காலத்தில் தற்காலிக வித்தியாசங்கள் திரும்பப்படாது.

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நடைமுறை வரிச் சொத்துக்களை நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக ஈடுகட்டுவதற்கான ஒரு சட்டரீதியாக வலியுறுத்தத்தக்க உரிமை காணப்படும்போது ஈடுசெய்யப்படுகின்றன. ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதே வரிவிதிப்பு அதிகாரசபையினால் அறவிடப்படும் வருமான வரி தொடர்பானவையாக இருப்பின், ஒன்றில் வரிவிதிக்கத்தக்க நிறுவனம் அல்லது வேறு வரிவிதிக்கத்தக்க நிறுவனங்களில் ஒரு தேறிய அடிப்படையில் மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கான ஒரு நோக்கம் காணப்பட்டிருப்பின் ஆகும்.

பயன்படுத்தப்படாத நட்டங்கள் அல்லது பயன்படுத்தப்படாத வரி வரவுகளது கொண்டு செல்லல்களிலான வரி விளைவுகள், இந்த நட்டங்களை பயன்படுத்துவதற்கு எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் கிடைக்கப்பெறும் சாத்தியம் காணப்படுமாயின் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 15.2. ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வு

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது.<br>(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|
| **ஆரம்ப மீதி** | **84,588,333** | **47,874,164** |
| பணிக்கொடைக்கான ஏற்பாட்டிலிருந்து | 2,078,160 | 1,328,079 |
| விரைவுபடுத்தப்பட்ட வரி பெறுமானத்தேய்விலிருந்து | (1,988,086) | 35,386,090 |
| **தேறிய ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு** | **84,678,407** | **84,588,333** |

வரிச் செலவுகள் மற்றும் கணக்கீட்டு இலாபம் என்பன சட்டரீதியான வரி வீதத்தினால் பெருக்கப்பட்டு அவற்றிற்கிடையேயான வித்தியாசங்களின் கணக்கிணக்கம் பின்வருமாறு

## 15.3.

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது.<br>(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|
| வருமான வரிக்கு முந்திய கணக்கீட்டு இலாபம் | 1,376,530,173 | 4,557,199,326 |
| கழி: ஏனைய மூலங்களிலிருந்தான வருமானமும் விலக்களிக்கப்பட்ட வருமானமும் | (855,916,991) | (1,403,893,444) |
| | **520,613,182** | **3,153,305,881** |
| கழிக்கவியலாத செலவினங்கள் | 209,497,559 | 162,779,370 |
| **வணிகத்திலிருந்து சட்டரீதியான வருமானம்** | **730,110,741** | **3,316,085,251** |
| கழி: தகைமைபெறும் கொடுப்பனவு | (751,000,000) | (4,000,000,000) |
| வரிவிதிக்கத்தக்க வருமானம் - வணிக வருமானம் | (20,889,259) | (683,914,749) |
| வரிவிதிக்கத்தக்க வருமானம் - வணிகம் சாரா வருமானம் | 706,866,677 | 1,257,936,616 |
| மொத்த வரிவிதிக்கத்தக்க வருமானம் | 685,977,418 | 574,021,867 |
| வருமான வரிச் செலவினங்கள் | | |
| வரிவிதிக்கத்தக்க வருமானம் - வணிக மற்றும் வணிகம் சாரா வருமானம் 30% | 205,793,225 | 172,206,560 |
| **ஆண்டிற்கான வருமான வரிச் செலவினங்கள்** | **205,793,225** | **172,206,560** |

## 16. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

செயற்பாட்டு நாணயத்தை விட ஏனைய நாணயங்களிலான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் ஆரம்ப அங்கீகாரத்தின்போது செயற்பாட்டு நாணயத்தில் ஸ்பொட் பரிமாற்றல் வீதத்தைப் பயன்படுத்தி பதிவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் நாணயரீதியான உருப்படிகள் இறுதி வீதத்தைப் பயன்படுத்தி மீள்பரிமாற்றப்படுகின்றது. பணம்சாரா உருப்படிகள் ஒரு வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று கிரயத்தில் அளவிடப்படுவதுடன், இவை கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற திகதியிலுள்ள பரிமாற்றல் வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றது. பணரீதியான உருப்படிகளது தீர்ப்பனவிலான பரிமாற்றல் வித்தியாசங்கள் அல்லது இக்காலத்தின்போது அல்லது முன்னைய நிதிக் கூற்றுக்களில் ஆரம்ப அங்கீகாரத்தில் மாற்றம் செய்யப்பட்டவற்றுடன் பரிமாற்றல் வீதமானது வித்தியாசமாயிருந்தால், அது எழுகின்ற காலத்தில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. அந்நிய செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பானவை என்பதுடன் இவை விரிவான வருமானக் கூற்றில் "நிதி வருமானம் அல்லது கிரயத்தின்" கீழ் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

## 17. அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

CAASL அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் நிலவிய நிலைமைகள் பற்றி தகவல்களைப் பெற்றால், அறிக்கையிடப்படும் காலத்தின் பின்னரான நிகழ்வுகள் தொடர்பாக, பொருத்தமானவாறு, நடப்பு நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 18. எதிர்பாரா பொறுப்புக்கள்

ஒரு கடந்தகால நிகழ்வின் காரணமாக அல்லது ஒரு கடந்த கால நிகழ்வின் விளைவாக ஒரு நிகழ்கால கடப்பாட்டின் காரணமாக சாத்தியமான எதிர்கால கடப்பாடானது காணப்படுமாயின் எதிர்பாரா பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், ஒன்றில் ஒரு கொடுப்பனவு சாத்தியமற்றது அல்லது தொகையானது நியாயமாக மதிப்பிடவியலாதுள்ளது.

## 19. காசும் காசுக்குச் சமனானவைகளும்

காசும் காசுக்குச் சமனானவைகளும் குறுங்கால, தெரிந்துகொள்ளப்பட்ட பணத்தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர் திரவத்தன்மை முதலீடுகளை உள்ளடக்குவதுடன், இவை பெறுமதியில் மிகச்சிறிய இடருக்கு உட்பட்டவையாகும். காசும் காசுக்குச் சமனானவைகள், கையிலுள்ள காசு, வங்கி மீதிகள் மற்றும் அழைப்பு அல்லது குறுகிய அறிவித்தலில் உள்ள பணத்தை உள்ளடக்குகின்றது.

## 20. அரசாங்க மானியங்கள்

அரசாங்க மானியங்கள், அவை பெறப்படும் என்ற நியாயமான உறுதிமொழி காணப்படும்போது அல்லது அவை அதிகாரசபைக்கு மாற்றல் செய்யப்பட்டபோது நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. அரசாங்க மானியங்கள் பெறுமதியானது சிவில் வான்பயணவியல் திணைக்களத்திடமிருந்து அதிகாரசபையின் உருவாக்கலின்போது சொத்துக்களிலிருந்து திரண்ட பெறுமதிக்குறைப்பு கழித்து மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்களை பிரதிபலிக்கின்றது.

### 20.1. அரசாங்க மானியங்களின் பெறுமதி குறைப்பு

பெறுமதி குறைப்புக்கான ஏற்பாடானது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயம் அல்லது பெறுமதியில் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது (சொத்தின் கிரயம் அல்லது பெறுமதியின் எச்சப் பெறுமதியின் 10% இற்கும் குறைவானது). காணி தவிர்த்த, அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் அரச மானியங்களுக்கு எதிராக ஒரு இணையான கணக்காக கணக்கீடு செய்யப்படுவதுடன், அவற்றின் பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது பின்வரும் சதவீதங்களில் வருடாந்தம் பெறுமதிகுறைப்பு செய்யப்பட்டுள்ளன.

| உருப்படி | வீதம் |
|---|---:|
| கட்டிடங்கள் | 6 2/3 % |
| கொள்கலன் கட்டமைப்புகள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 12.50% |
| பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 25% |
| தளபாடமும் பொருத்திகளும் | 25% |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 25% |

## 21. முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

### 21.1. முக்கிய முகாமைத்துவ ஆளணயினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர்கள் சபையானது அதிகாரசபையின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக கருதப்பட்டுள்ளார்கள்.

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது.<br>(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---:|---:|
| குறுங்கால பணியாட்கள் நலன்கள் | 4,077,197 | 3,943,458 |

## 21.2. தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது, ஒரு சட்டரீதியான சபையாக, வழக்கமான வணிகப் போக்கின்போது அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களுடன் பின்வரும் கணிசமான கொடுக்கல் வாங்கல்களை பொறுப்பேற்றுள்ளது. LKAS 24 " தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" இன் பிரகாரம் தனித்தனியாக முக்கியமான கொடுக்கல் வாங்கல்களுக்கு வரையறையான வெளிப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது. இது அவற்றின் அளவு மற்றும் அரசாங்க கட்டுப்பாடுடைய அல்லது தொடர்புடைய நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் கைப்பற்றி வெளிப்படுத்துவதனை செயல்படுத்தவியலாததனலாகும். இலங்கை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களுடனான மீதிகள் நிதி நிலைமைக் கூற்றில் வர்த்தக வருமதிகள் மற்றும் வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| அரச உடைமையான நிறுவனங்கள் | கொடுக்கல் வாங்கலின் தன்மை | 2024 (ரூ.) | 2023 (ரூ.) |
|---|---|---:|---:|
| ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் | வெளிநாட்டு விற்பனை மிகையூட்டம் | 927,554,905 | 1,260,242,886 |
| இலங்கை மின்சார சபை | மின் கட்டணங்கள் | 29,973,663 | 33,668,354 |
| எயார்போட் அன்ட் ஏவியேசன் (பிரைவேட்) லிமிட்டட் | மின் கட்டணங்கள் | 1,762,257 | 1,952,062 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை | நீர் கட்டணங்கள் | 230,415 | 116,528 |
| எயார்போட் அன்ட் ஏவியேசன் (பிரைவேட்) லிமிட்டட் | நீர் கட்டணங்கள் | 2,109,323 | 2,188,008 |
| பொது திறைசேரி | விமானமேறுதல் கட்டண பிரித்தளிப்பு | 38,013,284,702 | 38,828,543,756 |
| எயார்போட் அன்ட் ஏவியேசன் (பிரைவேட்) லிமிட்டட் | விமானமேறுதல் கட்டண பிரித்தளிப்பு | 7,894,638,105 | 8,970,987,501 |
| இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை | விமானமேறுதல் கட்டண பிரித்தளிப்பு | 3,947,319,052 | 4,485,493,750 |
| ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | ஊ.ந.நி. | 6,082,316 | 8,551,128 |
| ஊழியர் சேமலாப நிதியம் | ஊ.சே.நி. | 30,401,085 | 42,755,626 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | வருமான வரி | | 765,282,046 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | முத்திரை தீர்வை | 2,214,248 | 2,153,482 |
| ஸ்ரீலங்கா ரெலிகொம் | தொலைதொடர்பு கட்டணங்கள் | 11,085,715 | 8,713,349 |
| இலங்கை வான்படை | எரிபொருள் கட்டணங்கள் | 447,283 | 915,404 |
| எயார்போட் அன்ட் ஏவியேசன் (பிரைவேட்) லிமிட்டட் | எரிபொருள் கட்டணங்கள் | 19,325,324 | 25,689,829 |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | காப்புறுதிக் கட்டணங்கள் | 256,624 | 301,478 |
| இலங்கை வங்கி | முதலீடுகள் | 4,440,999,988 | 3,614,946,156 |
| மக்கள் வங்கி | முதலீடுகள் | 2,705,500,000 | 2,236,500,000 |
| ஸ்ரீலங்கன் கேட்டரிங் (பிரைவேட்) லிமிட்டட் | கூட்டங்கள் மற்றும் பயிற்சிக்கு உணவளித்தல் சேவைகள் | 2,979,215 | 2,407,991 |
| சாலை அபிவிருத்தி அதிகாரசபை | அதிவேக நெடுஞ்சாலைக் கட்டணங்கள் | 2,945,243 | 2,456,557 |
| **வருமதிகள்** | | | |
| ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் | வெளிநாட்டு விற்பனை மிகையூட்டம் | - | 46,300,641 |
| **சென்மதிகள்** | | | |
| பொது திறைசேரி | விமானமேறுதல் கட்டண பிரித்தளிப்பு | 5,558,382,098 | 4,020,600,433 |
| எயார்போட் அன்ட் ஏவியேசன் (பிரைவேட்) லிமிட்டட் | விமானமேறுதல் கட்டண பிரித்தளிப்பு | 1,545,889,702 | 705,844,005 |
| இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை | விமானமேறுதல் கட்டண பிரித்தளிப்பு | 772,944,851 | 139,822,680 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 22. நிதியியல் இடர் முகாமைத்துவம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது சிவில் வான்பயணவியல் துறைக்கு முறைமைப்படுத்தல் சேவைகளை வழங்குகின்ற பிரதான செயற்பாட்டினைக் கொண்ட ஒரு நியதிச்சட்ட சபையாகும். அதிகாரசபையானது அதன் செயற்பாடுகளை பங்குகள், கடன்பிணையங்கள். கடன்கள் அல்லது ஒத்த வசதிகள் போன்ற நிதிக் கருவிகளினூடாக நிதியளிக்கவில்லை. இதன் விளாவாக, அதிகாரசபையானது நிதியியல் கருவிகளைப் பயன்படுத்துவதிலிருந்து எழுகின்ற கடன் இடர் மற்றும் திரவத்தன்மை இடர் என்பவற்றுக்கு சிறுமமான வெளிப்பாட்டினையே கொண்டுள்ளது.

## 22.1. கடன் இடர்

கடன் இடர் என்பது ஒரு வாடிக்கையாளர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திக்கத் தவறுவதன் விளைவாக அதிகாரசபைக்கு ஏற்படும் சாத்தியமான நிதியியல் இழப்பினைக் குறிப்பிடுகின்றது. இந்த இடரானது பிரதானமாக உள்வாரி மற்றும் வெளிவாரி தரப்பினர்களிடமிருந்து வரவேண்டிய வருமதிகளிலிருந்து எழுகின்றது.

**முதலீடுகள்**

அதிகாரசபையானது முற்றிலும் அரசாங்க திறைசேரி உண்டியல்கள் மற்றும் CAASL இன் உத்தியோகபூர் வங்கியாளரான இலங்கை வங்கியுடன் குறுங்கால வைப்புகளில் முதலீடு செய்வதன் மூலம் கடன் இடருக்கான அதன் வெளிப்பாட்டினை தணிக்கின்றது.

**பணியாள் கடன்கள்**

அதிகாரசபையானது பணியாட்களின் மாதாந்த சம்பளத்தினூடாக கடன் மீதிகள் மீளப்பெறப்படுவதை உறுதிசெய்வதன் மூலம் கடன் இடருக்கான அதன் வெளிப்பாட்டினை தணிக்கின்றது. மேலாக, இந்த கடன்களைப் பயன்படுத்தி பணியாட்களினால் கொள்வனவு செய்யப்படும் ஆதனங்களின் முழுமையான உரித்துவத்தை CAASL தக்கவைத்துள்ளது.

## 22.2. திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடர் என்பது அதிகாரசபை அதன் நிதியியல் கடப்பாடுகளை அவை செலுத்தப்படவேண்டியபோது அவற்றை சந்திக்கவியலாதமைக்கு குறிப்பிடுகின்றது. திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்கான அதிகாரசபையின் அணுகுமுறையானது இயலுமானவரை அதன் பொறுப்புக்களை செலுத்தவேண்டியபோது அதைச் சந்திப்பதற்கு போதுமான பணத்தை எந்நேரமும் வைத்திருப்பதுடன், இது எதிர்பார்த்த மற்றும் எதிர்பாரா நிலைமைகளில் ஏற்றுக்கொள்ளவியலா இழப்புகளுக்கு ஆட்படாது அல்லது அதிகாரசபையின் நற்பெயரை இடருக்குள்ளாக்காது இருத்தல் வேண்டும்.

திரவத்தன்மையினை பராமரிப்பதற்கு, அதிகாரசபையானது ரூபா 5 மில்லியனை விஞ்சுகின்ற மிகை பணத்தை குறுகிய, மத்திய மற்றும் நீண்டகால நிதியியல் கருவிகளில் முதலீடு செய்கின்றது. நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவானது காசுப் பாய்ச்சல் எதிர்வுகூறலுக்கு பொறுப்பாளியாவதுடன், செயற்பாட்டு தேவைகளை சந்திப்பதற்கு போதுமான பணம் கிடைக்கக்கூடியதனை உறுதிசெய்வதற்கு அதிகாரசபையின் திரவத்தன்மை தேவைப்பாடுகளின் உருளல் எதிர்வுகூறலை தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது.

## 23. வருமானம்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| செயற்பாட்டு வருமானம் | 1,678,760,397 | 4,267,567,018 |
| செயற்பாடு சாரா வருமானம் | 695,642,849 | 1,239,457,119 |
| ஏனைய செயற்பாடு சாரா வருமானம் | 11,433,128 | 23,615,667 |
| **மொத்த வருமானம்** | **2,385,836,374** | **5,530,639,804** |
| **செயற்பாட்டு வருமானம்** | | |
| வெளிநாட்டு விற்பனை மிகையூட்டம் | 1,080,000,000 | 3,771,642,993 |
| விமானமேறுதல் கட்டணத்தின் சேவைக் கட்டணம் | 456,175,353 | 364,495,616 |
| முறைமைப்படுத்தல் சேவைகளிலிருந்தான வருமானம் | 142,585,044 | 131,428,409 |
| | **1,678,760,397** | **4,267,567,018** |
| **செயற்பாடு சாரா வருமானம்** | | |
| வாடகை வருமானம் | 136,250 | 432,050 |
| சுற்று பங்களாக்களின் ஒதுக்கீடு | 1,380,250 | 130,500 |
| சொத்துக்கள் விற்பனையிலான இலாபம் | - | 106,226 |
| ஒப்பந்த விண்ணப்பக் கட்டணங்கள் | 51,000 | 27,000 |
| நூற்றாண்டு வான்பயணவியல் புத்தகத்தின் விற்பனை | 3600 | - |
| நானாவித வருமானம் | 2,113,484 | 1,774,198 |
| நிர்வாகக் கட்டணம் / மாணவர்களுக்கான வீசா பரிந்துரைத்தல் | 169,000 | 152,000 |
| நிர்வாகத் தண்டப்பணம் | 100,000 | 1,341,677 |
| பணியாள் கடன்களிலான வட்டி | 18,801,911 | 22,156,182 |
| திறைசேரி உண்டியல்களிலான முதலீட்டிலிருந்து வட்டி | 413,330,039 | 797,605,933 |
| அழைப்பு வைப்புகளிலான முதலீட்டிலிருந்து வட்டி | 182,693,208 | 335,462,280 |
| ஏனைய முதலீடுகளிலிருந்து வட்டி | 76,864,108 | 80,269,073 |
| | **695,642,849** | **1,239,457,119** |
| **ஏனைய செயற்பாடு சாரா வருமானம்** | | |
| பணியாட்கள் கடன்களிலிருந்தான வட்டி வருமானம் (IFRS செம்மையாக்கல்) | 7,723,976 | 19,906,515 |
| அரசாங்க மானியத்தின் பெறுமதிகுறைப்பு | 3,709,152 | 3,709,152 |
| | **11,433,128** | **23,615,667** |
| **மொத்த செயற்பாடு சாரா வருமானம்** | **707,075,977** | **1,263,072,786** |
| | **2,385,836,374** | **5,530,639,804** |

CAASL நிதிய முகாமைத்துவக் கணக்குகளை இலங்கை வங்கி, கட்டுநாயக்கா கிளையிலும், மக்கள் வங்கி சீதுவ கிளையிலும் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்துடன் திறந்துள்ளது. இந்த கணக்குகள் ஒவ்வொரு நாளின் இறுதியிலும் வங்கியிலுள்ள காசு மீதியினை பணச் சந்தையில் ஓரிரவு முதலீடுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்த குறுங்கால முதலீடுகளிலிருந்து உருவாக்கப்படும் வட்டி வருமானமானது 'ஏனைய முதலீடுகளிலிருந்தான வட்டி' இன் கீழ் அறிக்கையிடப்படுகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 24. பணியாட்கள் செலவினங்கள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது.<br>(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---:|---:|
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 115,459,725 | 114,622,376 |
| ஏனைய படிகள் | 188,139,691 | 174,403,862 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 30,401,085 | 42,755,626 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 6,082,316 | 8,551,128 |
| லீவைப் பணமாக்குதல் | 7,970,777 | 6,960,151 |
| போனஸ் | 8,224,598 | 9,060,561 |
| மிகை நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 9,811,904 | 9,713,849 |
| நலன்புரிச் செலவினங்கள் | 52,162,367 | 38,885,080 |
| பணிக்கொடை | 6,927,202 | 4,426,929 |
| பணியாட்களுக்கு இறப்பு மானியம் | 9,836,800 | 3,652,560 |
| கடன் நலன்களிலான பணியாட்கள் கிரயம் – ( IFRS செம்மையாக்கல்கள்) | 7,723,976 | 19,906,515 |
| | **442,740,440** | **432,938,638** |

## 25. கூட்டங்கள், கருத்தரங்ககள் மற்றும் செயலமர்வுச் செலவினங்கள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது.<br>(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---:|---:|
| கூட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் - உள்ளூர் | 3,360,729 | 1,642,653 |
| கூட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள - வெளியூர் | 4,747,600 | 6,421,030 |
| | **8,108,329** | **8,063,683** |

## 26. பயிற்சிச் செலவினங்கள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது.<br>(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---:|---:|
| பயிற்சி - உள்ளூர் | 4,974,708 | 4,116,875 |
| பயிற்சி - வெளியூர் | 2,340,149 | 5,542,223 |
| | **7,314,858** | **9,659,098** |

## 27. நிர்வாக மற்றும் ஏனையச் செலவினங்கள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது.<br>(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|
| பரிசோதனைகள் | 2,826,146 | 2,695,915 |
| வெளிக்கள கூட்டங்கள் | 160,315 | 62,229 |
| உள்ளகத்தேயான கூட்டங்கள் | 1,034,238 | 1,923,185 |
| பிரயாணச் செலவுகள் - உள்ளூர் | 2,945,243 | 2,456,557 |
| ஆலோசனை மற்றும் சட்டக் கட்டணங்கள் | 3,226,289 | 349,903 |
| வெளிவாரி தொழில்நுட்ப உறுதுணை | 38,660,857 | 44,990,350 |
| நேர்முகத்தேர்வுகள் / பணியாட்கள் மதிப்பிடல்கள் | 670,629 | 371,897 |
| சபைக் கொடுப்பனவுகள் | 1,176,000 | 1,570,000 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பராமரிப்பு | 2,306,713 | 3,926,456 |
| எழுதுகருவியும் நுகர்பொருட்களும் | 20,074,905 | 23,882,546 |
| உள்ளூர் விமானநிலைய அபிவிருத்தி | - | 992,000 |
| ஏனைய வழங்கு பொருட்கள் | 1,212,613 | 1,354,916 |
| தொலைதொடர்பு | 13,156,628 | 12,342,350 |
| தபால் கட்டணங்கள் | 338,551 | 626,994 |
| சர்வதேச வான்பயணவியல் ஒழுங்கமைப்பிற்கான பங்களிப்புகள் | 47,883,592 | 63,622,713 |
| பிரசுரங்களுக்கான சந்தா, விளம்பரங்கள் | 4,909,833 | 6,876,987 |
| பரீட்சைக் கட்டணங்கள் | 3,265,280 | 2,673,639 |
| அச்சிடல் செலவினங்கள் | 809,400 | 9,025,685 |
| கணக்காய்வுக் கட்டணம் | 1,444,000 | 1,079,400 |
| சொத்துக்களின் விற்பனையிலிருந்தான நட்டம் | 1,685,935 | 862,778 |
| மொழிபெயர்ப்பு மற்றும் தட்டச்சு செலவினங்கள் | 67,605 | 95,524 |
| நலன்புரி பயன்பாடுகள் - விளையாட்டு | - | 540,453 |
| நானாவிதச் செலவினங்கள் | 48,165 | 19,225 |
| எரிபொருள் மற்றும் மசகுப்பொருட்கள் | 19,585,950 | 26,953,740 |
| வாகனப் பராமரிப்பு | 23,389,249 | 17,971,645 |
| வாடகை மற்றும் வாடகைக்கமர்த்தல் கட்டணங்கள் | 27,526,802 | 16,977,099 |
| பொதுவானவை - நலன்புரி | 16,172,859 | 17,317,284 |
| அலுவலக கட்டிடங்கள் மற்றும் குடியிருப்பிலானச் செலவினங்கள் | | |
| மின்சாரம் | 31,735,920 | 35,621,216 |
| தண்ணீர் | 3,147,013 | 3,092,733 |
| பாதுகாப்பு | 12,001,482 | 11,883,755 |
| துப்புரவுப்பணி | 16,083,189 | 13,494,800 |
| ஏனைய பராமரிப்பு | 19,780,006 | 27,009,417 |
| முகாமைத்துவச் சேவைகள் | 3,266,026 | 2,520,000 |
| நிலத்தோற்றமைத்தலும் பராமரிப்பும் | - | 3,221,448 |
| வான்பயணவியல் அபிவிருத்தி | 4,535,980 | 1,666,401 |
| த.தொ. பராமரிப்பு | 13,512,811 | 4,430,822 |
| பெருநிறுவன சமூகப் பொறுப்பு | 1,000,000 | |
| | **339,640,223** | **364,502,061** |

* 2024 ஆம் ஆண்டின்போது, 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் "நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள்" கீழ் முன்னர் வகைப்படுத்தப்பட்ட ரூபா 918,390 ஆனது "நிதிச் செலவினங்கள்" ஆக மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளது (குறிப்பு இலக்கம் 28). இந்த செம்மையாக்கலானது செலவினத்தின் தன்மையை சரியாக பிரதபலிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. மீள்வகைப்படுத்தலானது CAASL இன் ஒட்டுமொத்த நிதி நிலைமையை அல்லது செயற்திறனை பாதிக்காது, இது வெறுமனே செலவினங்களின் முன்னிலைப்படுத்தலிலான ஒரு மாற்றம் மட்டுமே.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 28. நிதிச் செலவினங்கள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது.<br>(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024<br>ரூ. | 2023<br>ரூ. |
|---|---|---|
| வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களில் பரிமாற்றல் நட்டம் | 11,587,718 | 911,208 |
| வங்கிக் கட்டணங்கள் | 1,054 | 500 |
| குத்தகைப் பொறுப்புக்களின் நிதிச் செலவினம் | 8,123 | 6,682 |
| | **11,596,896** | **918,390** |

## 29. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| சொத்துக்களின் வகை | 01/01/2024 இல் உள்ளவாறான மீதி | சேர்க்கைகள்/ மாற்றல்கள் | மீள்மதிப்பீடு | விற்பனைகள் | 31/12/2024 இல் உள்ளவாறான மீதி | 31/12/2023 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம்:** | | | | | | |
| காணி | 583,943,139 | - | - | | 583,943,139 | 583,943,139 |
| கட்டிடம் | 2,431,845,847 | 18,127,530 | - | | 2,449,973,377 | 2,431,845,847 |
| கொள்கலன் கட்டமைப்புகள் | 4,315,018 | 2,129,503 | (465,018) | | 5,979,503 | 4,315,018 |
| மோட்டார் வாகனங்கள் | 169,736,315 | (7,650,000) | - | (186,950) | 161,899,365 | 169,736,315 |
| பொறியும் இயந்திரமும் | 78,527,151 | 19,025,095 | 8,563,327 | (3,067,473) | 103,048,100 | 78,527,151 |
| தளபாடமும் பொருத்திகளும் | 35,421,039 | 2,494,506 | 8,569,404 | (114,949) | 46,370,000 | 35,421,039 |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 216,208 | - | (18,406) | (137,802) | 60,000 | 216,208 |
| | **3,304,004,718** | **34,126,634** | **16,649,307** | **(3,507,174)** | **3,351,273,484** | **3,304,004,718** |

| சொத்துக்களின் வகை | 01/01/2024 இல் உள்ளவாறான மீதி | ஆண்டிற்கான கட்டணம் | மீள்மதிப்பீடு | விற்பனைகள்/ மாற்றல்கள் | 31/12/2024 இல் உள்ளவாறான மீதி | 31/12/2023 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| கட்டிடம் | 503,932,336 | 145,982,957 | - | | 649,915,293 | 503,932,336 |
| கொள்கலன் கட்டமைப்புகள் | 796,919 | 402,139 | (1,153,351) | | 45,707 | 796,919 |
| மோட்டார் வாகனங்கள் | 12,272,178 | 18,291,651 | - | (1,022,921) | 29,540,908 | 12,272,178 |
| பொறியும் இயந்திரமும் | 3,272,817 | 19,755,128 | (19,882,242) | (1,176,497) | 1,969,206 | 3,272,817 |
| தளபாடமும் பொருத்திகளும் | 2,164,335 | 8,431,275 | (9,660,952) | (48,547) | 886,111 | 2,164,335 |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 190,413 | 2,425 | (67,669) | (124,022) | 1,147 | 190,413 |
| | **522,628,998** | **192,865,575** | **(30,764,214)** | **(2,371,987)** | **682,358,372** | **522,628,998** |
| **குறைத்தெழுதப்பட்ட பெறுமதி** | **2,781,375,720** | | | | **2,668,915,112** | **2,781,375,720** |

## விற்பனைக்கு வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துக்கள்

| **வாகனம்** | **2024**<br>**ரூ.** |
|---|---|
| கிரயம் | 7,650,000 |
| 01.01.2024 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு | 862,983 |
| 2024 இற்கான பெறுமானத்தேய்வு | 862,983 |
| **31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறானது** | **5,924,034** |

CAASL ஆனது ரூபா 5,924,034.25 இனை கொண்டுசெல்லல் பெறுமதியாகக் கொண்ட வாகன இலக்கம் KI-8568 (மைக்ரோ ரெக்ஸ்டன்) இனை SLFRS 5 இன் பிரகாரம் 31 டிசம்பர் 2024 இல் "விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்து" என வகைப்படுத்தியுள்ளது. இங்கு சொத்தானது உடனடி விற்பனைக்கு கிடைக்கக்கூடியதாயுள்ளதுடன் அடுத்த பன்னிரண்டு மாதங்களினுள் விற்பனையானது உயர்ந்த சாத்தியத்தைக் கொண்டுள்ளது.

2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து சட்டத்தின் பிரிவு 9 தொடர்பாக, போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்திற்கான மாண்புமிகு அமைச்சரினால் பிரசுரிக்கப்பட்ட 1 ஜூலை 2016 திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் மட்டக்களப்பினை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு மாற்றல் செய்து ஒப்படைக்குமாறு பணித்துள்ளார். இதன் பிரகாரம், காணியும் கட்டிடங்களும் 2017 மற்றும் 2018 இல் CAA சொத்து இடாப்பினுள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆதனங்கள் செயற்பாடுகளுக்காக எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் ஸ்ரீலங்கா (லிமிட்டட்) இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2022 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் மூலம், போக்குவரத்து மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் 21.12.2017 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2050/38 இல் பின்வருவனவற்றை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு மாற்றல் செய்து ஒப்படைக்குமாறு ஒரு கட்டளையினை மேற்கொண்டுள்ளார். இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வானூர்தித் தளங்கள் மற்றும் வான்வழிப்பயண வசதிகள் மற்றும் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதனுடன் சார்ந்த காணி என்பவற்றை அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு உடனடியாக மாற்றல் செய்து ஒப்படைத்தல் வேண்டும்.

**வானூர்தித் தளங்கள் (இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவை)**

- கட்டுநாயக்கா விமானநிலையம்
- இரத்மலான விமானநிலையம்

**வான்வழிப்பயண வசதிகள் மற்றும் அதனைச் சார்ந்த காணி (மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது)**

இரத்மலான, காந்தவல வீதியிலுள்ள சிவில் வான்பயணவியல் பயிற்சி நிலையம், கட்டிடம் மற்றும் அதிலுள்ள கட்டமைப்புகள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள காணி.
;

இரத்மலான, அத்திடியவிலுள்ள வான்வழிப்பயண தொடர்பாடல் பரப்பு நிலையம், கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள கட்டமைப்புகள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள காணி.

கம்பஹா, மாதம்பெலவில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கான வழிசெலுத்தல் வானொலி உதவி, கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள கட்டமைப்புகள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள காணி.

கம்பஹா, பமுனுகம, கப்புன்கொடவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஓடுபாதைக்கான வழிசெலுத்தல் வானொலி உதவி, கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள கட்டமைப்புகள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள காணி.

பிதுருதலாகல மலையில் அமைந்துள்ள ரேடா நிலையம், கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள கட்டமைப்புகள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள காணி.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பிதுருதலாகாலவிலுள்ள காணி,\ வான்பயணவியல் பணியாட்களுக்கான விடுமுறை பங்களாக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன, அதிலுள்ள ஏதேனும் கட்டமைப்புகள் அல்லது அதனுடன் சார்ந்தவை.

அநுராதபுர மாவட்டத்தின் நுவரகம்பலாத்த கிழக்கு பிராந்திய செயலகப் பிரிவு, கட்டம் II- கிராமசேவகர் பிரிவு, இலக்கம் 240, அநுராதபுரம் புதிய நகரத்தில் அமைந்துள்ள 0.125 ஹெக்டெயார் பரப்பளவினைக் கொண்ட காணித் தொகுதி. மேற்குறிப்பிட்ட ஆதனத்தின் பெறுமதியானது அளக்கைத் தரைப்படங்கள் மற்றும் பெறுமதியிடல்கள் முடிவுறுத்தப்பட்டு 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் மாற்றல் செய்யப்பட்டதன் பின்னர் CAASL இன் சொத்து இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**சொத்துக்களின் மீள்மதிப்பீடு**

CAASL முன்னர் ஒவ்வொரு மூன்று (03) ஆண்டுகள் தோறும் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் கொள்கையினை கடைப்பிடித்தது. எவ்வாறாயினும், 2024 முதல் இக்கொள்கையானது சொத்துக்கள் ஒவ்வொரு ஐந்து (05) ஆண்டுகள் தோறும் மதிப்பிடுவதற்கு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இக்கொள்கை இருந்தாலும், 2023 மற்றும் 2024 வருடங்களில் சொத்துக்களின் ஒரு தொடர்ச்சியான மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன், இது இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம் இன் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகும். இந்த மீள்மதிப்பிடலானது CAASL இனால் நியமிக்கப்பட்ட ஒரு உள்வாரி குழுவினால் நடாத்தப்பட்டதுடன், சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகையானது அவற்றின் நியாயப் பெறுமதியினை பிரதிபலிப்பதனை உறுதிசெய்வதற்காகும்.

CAASL 1 டிசம்பர் 2024 இல் அதன் சொத்துக்களில் ஒரு மீள்மதிப்பீட்டினை நடாத்தியது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பின்வரும் வகையானவை மீள்மதிப்பிடப்பட்டன;

- கொள்கலன் கட்டமைப்பு
- பொறியும் இயந்திரமும்
- தளபாடமும் பொருத்திகளும்
- ஏனைய நிலையான சொத்துக்கள்

இந்த மீள்மதிப்பிடலின் தாக்கமானது 31 டிசம்பர் 2024 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக கூற்றுக்களில் பொருத்தமானவாறு பிரதிபலிக்கப்படுவதுடன், இதன் விளைவிலான ஏதேனும் செம்மையாக்கல்கள் உரிய நிதி அறிக்கையிடல் கட்டமைப்பின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 30. அருவச் சொத்துக்கள்

| சொத்துக்களின் வகை | 01/01/2024 இல் உள்ளவாறான மீதி | சேர்க்கைகள்/ மாற்றல்கள் | மீள்மதிப்பீடு | விற்பனைகள்/ மாற்றல்களா | 31/12/2024 இல் உள்ளவாறான மீதி | 31/12/2023 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| கிரயம்: | | | | | | |
| த.தொ. மென்பொருள் | 14,229,616 | - | (6,358,166) | (75,700) | 7,795,750 | 14,229,616 |

| | 01/01/2024 இல் உள்ளவாறான மீதி | ஆண்டிற்கான கட்டணம் | மீள்மதிப்பீடு | | 31/12/2024 இல் உள்ளவாறான மீதி | 31/12/2023 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| பெறுமானத்தேய்வு | | | | | | |
| த.தொ. மென்பொருள் | 726,105 | 6,155,864 | (6,564,708) | (38,423) | 278,838 | 726,105 |
| **குறைத்தெழுதப்பட்ட பெறுமதி** | **13,503,511** | | | | **7,516,912** | **13,503,511** |

**த.தொ. மென்பொருளின் மீள்மதிப்பீடு**

CAASL முன்னர் ஒவ்வொரு மூன்று (03) ஆண்டுகள் தோறும் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் கொள்கையினை கடைப்பிடித்தது. எவ்வாறாயினும், 2024 முதல் இக்கொள்கையானது சொத்துக்கள் ஒவ்வொரு ஐந்து (05) ஆண்டுகள் தோறும் மதிப்பிடுவதற்கு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இக்கொள்கை இருந்தாலும், 2023 மற்றும் 2024 வருடங்களில் சொத்துக்களின் ஒரு தொடர்ச்சியான மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதுடன், இது இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம் இன் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகும். இந்த மீள்மதிப்பிடலானது CAASL இனால் நியமிக்கப்பட்ட ஒரு உள்வாரி குழுவினால் நடாத்தப்பட்டதுடன், சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகையானது அவற்றின் நியாயப் பெறுமதியினை பிரதிபலிப்பதனை உறுதிசெய்வதற்காகும். CAASL 1 டிசம்பர் 2024 இல் அதன் சொத்துக்களில் ஒரு மீள்மதிப்பீட்டினை நடாத்தியது.

இந்த மீள்மதிப்பிடலின் தாக்கமானது 31 டிசம்பர் 2024 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் பொருத்தமானவாறு பிரதிபலிக்கப்படுவதுடன், இதன் விளைவிலான ஏதேனும் செம்மையாக்கல்கள் உரிய நிதி அறிக்கையிடல் கட்டமைப்பின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 31. வருமான வரிச் செலவினங்கள்

டிசம்பர் 31 இல் நிறைவடையும் ஆண்டிற்கான வருமான வரிச் செலவினங்களின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| **நடப்பு வரிக் கட்டணங்கள்** | | |
| வருமான வரிச் செலவினங்கள் | 205,793,225 | 172,206,560 |
| **ஒத்திவைக்கப்பட்ட வரி** | | |
| ஒத்திவைக்கப்பட்ட வரி தொடர்பான கட்டணம்/ (திருப்பம்) (குறிப்பு 41) | 90,074 | 36,714,169 |
| | **205,883,300** | **208,920,729** |

அதிகாரசபையின் வரிக்கு முந்திய இலாபத்திலான வரியானது அதிகாரசபையின் இலாபத்திற்கு பிரயோகிக்கத்தக்க அடிப்படை வரி வீதமான 30% இனை பயன்படுத்தி எழுகின்ற கொள்கைமுறை தொகையிலிருந்து பின்வருமாறு வித்தியாசப்படுகின்றது.

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | 1,376,530,173 | 4,557,199,326 |
| விளைவுறு வீதமான 30% இல் கணிப்பிடப்பட்ட வரி | 412,959,052 | 1,367,159,798 |
| செலவினங்களிலான வரியானது வரிக்காக கழிக்கப்படவியலாதது | 274,909,271 | 426,214,796 |
| வரிக்காக கழிக்கப்படக்கூடிய செலவினங்கள்/ வருமானத்திலான வரி விளைவு | (482,075,097) | (1,621,168,033) |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து அங்கீகரிக்கப்படாத வரி நட்டங்கள் | 90,074 | 36,714,169 |
| | **205,883,300** | **208,920,729** |

## 32. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்து - வீரவில காணி

அதிகாரசபையானது ஜனவரி 2008 இல் அரசாங்கத்திடமிருந்து 30 வருட குத்தகை உடன்படிக்கையின் கீழ் வீரவில, சுற்று பங்களா காணியினைப் பெற்றது. அதிகாரசபையானது 31.12.2019 வரை குத்தகைக் கொடுப்பனவுகளை இலாபம் மற்றும் நட்டக்கணக்கிற்கு விதிக்கப்பட்டது. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமானது குத்தகைகளுக்கு SLFRS 16 இனை வழங்கியுள்ளதுடன் இது LKAS 17 இனை தாண்டி நிற்கின்றது. எனவே, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது 1 ஜனவரி 2020 இல் இந்த நியமத்தை பின்னோக்கி கடைப்பிடித்ததுடன், SLFRS 16 இன் பந்திகள் C7–C13 இனை பின்பற்றிய ஆரம்ப பிரயோகத் திகதியில் நியமத்தின் ஆரம்ப பிரயோகத்தின் திரண்ட விளைவானது அங்கீகரிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| 1 ஜனவரி 2024 இல் உள்ளவாறானது | 294,471 | 315,505 |
| சேர்க்கைகள் | | - |
| பெறுமானத்தேய்வு | (21,034) | (21,034) |
| **31 டிசம்பர் 202 இல் உள்ளவாறானது** | **273,437** | **294,471** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 33. மூலதன நடப்பு வேலை

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| விமானநிலைய காணிகளின் கையகப்படுத்தல் | 841,660 | 457,610 |
| கட்டுமானங்கள் - தலைமைக் காரியாலயம் | - | 5,954,050 |
| த.தொ.அபிவிருத்திகள் | 5,855,000 | 5,855,000 |
| | **6,696,660** | **12,266,660** |

விமானநிலை காணிகளது அளக்கைத் திட்டத்திற்காக செலுத்தப்பட்ட தொகைகள் விமானநிலைய காணிகளது கையகப்படுத்தலின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளன. விமானமேறுதல் முகாமைத்துவ மென்பொருளுக்காக மேற்கொள்ளப்பட்ட பகுதி கொடுப்பனவுகள் (4,730,000.-), மற்றும் தன்னியக்க தனிப்பட்ட உரிமமளித்தல் முறைமைக்கானவை (1,125,000.-) த.தொ. அபிவிருத்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 34. வர்த்தக வருமதிகள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| OSS மற்றும் விமானமேறுதல் சேவைக் கட்டண வருமான வருமதிகள் | 243,540,652 | 352,585,282 |
| விமான நிறுவனங்களிடமிருந்து OSS மற்றும் விமானமேறுதல் கட்டண வருமதிகள்* | 29,553,764,984 | - |
| ஏனைய வருமதிகள் | 2,905,039 | 3,198,055 |
| | **29,800,210,676** | **355,783,337** |

* 2024 ஆம் ஆண்டிற்கு விமான நிறுவனங்களிடமிருந்து வருமதியான OSS மற்றும் விமானமேறுதல் கட்டணம் என்பன "விமான நிறுவனங்களிடமிருந்து வருமதியான OSS மற்றும் விமானமேறுதல் கட்டணத்தின" கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலாக, 2024 நிதிக் கூற்றுக்களில் "ஏனைய கடன்பட்டோர்கள்" என்பது "ஏனைய வருமதிகளாக" பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், இது வருமதிகளின் தன்மையினை மிகவும் துல்லியமாக பிரதிபலிப்பதற்காகும். இந்த மாற்றங்கள் தெளிவினை மேம்படுத்துவதற்கும் மிகவும் துல்லியமான அறிக்கையிடலை உறுதிப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், CAAS இன் ஒட்டுமொத்த நிதி நிலைமையில் எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை.

## 35. பணியாட்கள் கடன்கள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| பணியாட்கள் கடன்கள் | 100,514,453 | 123,266,278 |
| ஒத்திவைக்கப்பட்ட பணியாட்கள் கிரயம் (கடன்கள்) | (38,358,598) | (62,504,044) |
| | **62,155,855** | **60,762,235** |

## 36. நிதிச் சொத்துக்கள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| திறைசேரி உண்டியல்கள் | 4,224,825,837 | 3,938,043,298 |
| திறைசேரி உண்டியல்கள் - பணிக்கொடை நிதியம் | 31,578,115 | 21,196,052 |
| கழி: ஒத்திவைக்கப்பட்ட வட்டி வருமானம் | (117,704,363) | (221,581,007) |
| | **4,138,699,589** | **3,737,658,343** |

ஒரு தனியான முதலீடானது ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டிற்காக பராமரிக்கப்படுவதுடன், இது "நிதிச் சொத்துக்களின்" கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 37. முற்பணங்கள், முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வருமதிகள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| முற்பணங்கள் | 178,821,386 | 176,789,416 |
| முற்கொடுப்பனவுகள் | 19,814,549 | 19,418,757 |
| வருமதியான VAT | 138,382,067 | 136,799,321 |
| வருமதியான வட்டி வருமானம் | 19,812,167 | 54,399,217 |
| முன்செலுத்தப்பட்ட பணியாட்கள் கிரயம் | 38,358,598 | 62,504,044 |
| | **395,188,767** | **449,910,755** |

## 38. காசும் காசுக்குச் சமனானவைகளும்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| வங்கியிலுள்ள காசு | | |
| LKR நடைமுறை கணக்கு: 000 202 6666 - BOC | 33,268,191 | 118,716,340 |
| LKR நடைமுறை கணக்கு: 000 202 6678- BOC | 484,653,695 | 130,291,453 |
| LKR நடைமுறை கணக்கு: 0088591866 -BOC (Lanka QR) | 1,215,241 | 841,237 |
| USD நடைமுறை கணக்கு: 89897817- BOC | 12,045,266 | 5,061,829 |
| USD நடைமுறை கணக்கு: 91551502- BOC | 487,155,108 | - |
| LKR நடைமுறை கணக்கு: 324 100 190 023 731- மக்கள் வங்கி | 69,992,440 | 590,591,556 |
| அழைப்பு வைப்புகள் | 3,166,500,000 | 2,604,500,000 |
| சில்லறைக் காசு முற்பணங்கள் | 1,492,000 | 1,518,000 |
| **காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக மொத்த காசும் காசுக்குச் சமனானவைகளும்** | **4,256,321,939** | **3,451,520,415** |

அதிகாரசபையானது இலங்கை வங்கியில் ஒரு புதிய USD கணக்கினை ஆரம்பித்துள்ளதுடன், இது வெளிநாட்டு வாடிக்கையாளர்களிடமிருந்து கொடுப்பனவுகளின் சேகரிப்பிற்கு வசதியளிப்பதற்காகும். வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அந்நிய செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் விரிவான வருமானக் கூற்றில் 'நிதியியல் வருமானம் அல்லது கிரயத்தின்' கீழ் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 39. பெறப்பட்ட அரச மானியங்கள்

i. 2002 இன் 34 அம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 9 இன் பிரகாரம் மட்டக்களப்பு விமானநிலைய கட்டிடங்கள் மற்றும் காணிகள் CAASL இற்கு மாற்றல் செய்யப்பட்டன.

ii. ICAO திட்டத்திடமிருந்து பெறப்பட்ட இரண்டு வாகனங்களின், 65-3651 மற்றும் 65-3653 பெறுமதி.

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. |
|---|---|
| 01.01.2023 இல் உள்ளவாறான அரசாங்க மானியங்கள் | 554,889,603 |
| கூட்டு: 2023 ஆம் ஆண்டின்போது பெறப்பட்ட மானியங்கள் | - |
| கழி: மானியமாக பெறப்பட்ட சொத்துக்களின் விற்பனை | (18,113) |
| கழி: 2023 ஆம் ஆண்டிற்கான பெறுமதிகுறைப்பு | (3,709,152) |
| 31.12.2023 இல் உள்ளவாறான அரசாங்க மானியங்கள் | 551,162,338 |
| கூட்டு: 2024 ஆம் ஆண்டின்போது பெறப்பட்ட மானியங்கள் | - |
| கழி: மானியமாக பெறப்பட்ட சொத்துக்களின் விற்பனை | - |
| கழி: 2024 ஆம் ஆண்டிற்கான பெறுமதிகுறைப்பு | (3,709,152) |
| **31.12.2024 இல் உள்ளவாறான அரசாங்க மானியங்கள்** | **547,453,186** |

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| காணி | 522,374,500 | 522,374,500 |
| கட்டிடங்கள் | 24,196,310 | 26,498,005 |
| பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 205,331 | 205,331 |
| மோட்டார் வாகனங்கள்* | 4,386,197 | 5,793,653 |
| **மொத்தம்** | **551,162,338** | **554,871,490** |
| ஆண்டிற்கான பெறுமதிகுறைப்பு | (3,709,152) | (3,709,152) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி** | **547,453,186** | **551,162,338** |

* 2024 ஆம் ஆண்டின்போது 2023 நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் "தளபாடங்களும் பொருத்திகளும்" கீழ் முன்னர் வகைப்படுத்தப்பட்ட ரூபா 7,793,653 "மோட்டார் வாகனங்களாக" மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த செம்மையாக்கலானது சொத்தின் தன்மையினை சரியாகப் பிரதிபலிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. மீள்வகைப்படுத்தலானது CAASL இன் ஒட்டுமொத்த நிதி நிலைமை அல்லது செயற்திறனை பாதிக்காததுடன், இது வெறுமனே சொத்தின் முன்னிலைப்படுத்தலிலான மாற்றமே.

## 40. நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறானது | 6,137,845,749 | 5,826,217,782 |
| நடப்பு ஆண்டிற்கான இலாபம் | 1,170,646,874 | 4,348,278,597 |
| ஏனைய விரிவான வருமானம் / (செலவினங்கள்) | (38,040,641) | (14,345,234) |
| முன்னைய ஆண்டு செம்மையாக்கல்கள்: அனுமதிக்கவியலாத உள்ளீட்டு வரி | - | (22,305,396) |
| விபத்து புலனாய்வு நிதியத்திற்கான மாற்றல் | (61,795,304) | - |
| திரண்ட நிதியத்திற்கான மாற்றல்கள் | (750,000,000) | (4,000,000,000) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி** | **6,458,656,678** | **6,137,845,749** |

## 41. மீள்மதிப்பீட்டு மிகைகள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 149,478,190 | 149,478,190 |
| பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 70,985,852 | 42,821,221 |
| த.தொ. மென்பொருள் | 1,274,083 | 1,087,915 |
| தளபாடமும் பொருத்திகளும் | 44,070,064 | 25,843,908 |
| கொள்கலன் கட்டமைப்பு | 688,333 | - |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 49,263 | - |
| | **266,545,784** | **219,231,233** |

## 42. ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு

| | நிதி நிலைமைக் கூற்று | | விரிவான வருமானக் கூற்று | |
|---|---|---|---|---|
| **டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.)** | **2024 ரூ.** | **2023 ரூ.** | **2024 ரூ.** | **2023 ரூ.** |
| **பின்வருவனவற்றில் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு:** | | | | |
| நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் | 23,380,725 | 21,302,565 | 2,078,160 | 1,328,079 |
| விரைவாக்கப்பட்ட வரிப் பெறுமானத்தேய்வு | 78,881,946 | 78,881,946 | - | 35,386,090 |
| | **102,262,671** | **100,184,511** | **2,078,160** | **36,714,169** |
| **பின்வருவனவற்றில் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து:** | | | | |
| விரைவாக்கப்பட்ட வரிப் பெறுமானத்தேய்வு | 17,584,263 | 15,596,177 | 1,988,086 | - |
| நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் | | | | |
| | **17,584,263** | **15,596,177** | **1,988,086** | **-** |
| ஏனைய விரிவான வருமானம் | | | | |
| **ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிக் கட்டணம் (குறிப்பு இல. 28)** | | | **90,074** | **36,714,169** |

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நடைமுறை வரிச் சொத்துக்களை நடைமுறை வரிப் பொறுப்புகளுக்கு எதிராக ஈடுகட்டுவதற்கான ஒரு சட்டரீதியாக வலியுறுத்தக்கூடிய உரிமை காணப்படும்போது ஈடுகட்டப்படுகின்றன மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிகள் அதே இறைவரி அதிகாரசபையுடன் தொடர்புடையதாய் இருத்தல் வேண்டும். தேறிய ஒத்திவைக்கப்பட்ட வரித் தொகைகள் பின்வருமாறு.

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து | 17,584,263 | 15,596,177 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு | (102,262,671) | (100,184,511) |
| **தேறிய ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தும் பொறுப்பு** | **(84,678,408)** | **(84,588,334)** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 43. குத்தகைப் பொறுப்பு

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| ஜனவரி 01 இல் உள்ளவாறானது | 281,554 | 307,013 |
| சேர்க்கைகள் | - | - |
| வட்டியின் திரட்டல் | 8,123 | 6,682 |
| கொடுப்பனவுகள் | (32,141) | (32,141) |
| **டிசம்பர் 31 இல் உள்ளவாறானது** | **257,536** | **281,554** |

## 44. ஏற்பாடுகளும் ஏனைய பொறுப்புக்களும்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| பணியாட்கள் நலன்புரி நிதியம் | 170,647 | 158,564 |
| வங்கி உத்தரவாத வைப்புகள் (விமானமேறுதல் கட்டணம்) | 201,522,193 | 219,740,948 |
| விபத்து புலனாய்வு நிதியம் | 110,000,000 | 48,322,696 |
| | **311,692,841** | **268,222,208** |

பணிப்பாளர்கள் சபையானது 11 ஒக்டோபர் 2023 இல் இடம்பெற்ற அதன் 193 ஆவது கூட்டத்தில் விபத்து புலனாய்வு நிதியத்தினை ரூபா 100 மில்லியன் வரைக்கும் அதிகரிப்பதற்கும் வருடாந்தம் 10% அதிகரிப்புடன் ஒவ்வொரு நிதியாண்டின் ஆரம்பத்திலும் அதே மட்டத்தை பராமரிப்பதற்கும் தீர்மானித்தது.

## 45. ஓய்வுபெறல் நலன் கடப்பாடு

நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பிலான அசைவுகள் பின்வருமாறு.

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---:|---:|
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறானது | 31,578,115 | 21,196,052 |
| நடைமுறை சேவைக் கட்டணம் | 5,090,590 | 2,336,505 |
| வட்டிச் செலவினம் | 1,836,611 | 2,090,424 |
| ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (13,058,470) | (8,390,100) |
| அனுமானங்கள் காலத்திலான மாற்றங்களிலிருந்து எழுகின்ற (இலாபங்கள்)/நட்டங்கள் | 38,040,641 | 14,345,234 |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறானது** | **63,487,487** | **31,578,115** |

வருட இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் பொறுப்பினை கணிப்பதற்கு திட்டமிட்ட அலகு வரவு முறையினை பயன்படுத்தி பணியாட்கள் நலன்களது கிரயத்தை தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படும் பிரதான அனுமானங்கள் பின்வருமாறு:

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 | 2023 |
|---|---:|---:|
| கழிவிறக்க வீதம் | 7% | 12% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | 1% | 1% |
| வாழ்க்கைச் செலவு படிகளின் அதிகரிப்பு வீதம் | 0% | 0% |
| பணியர்கள் புரள்வு வீதம் | 0% | 0% |
| ஓய்வுபெறல் வயது | 60 years | 60 years |

நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டிற்கான பொறுப்பானது வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை; ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டின் பெறுமதிக்கு ஒரு தனியான முதலீடானது பராமரிக்கப்படுகின்றது.

## 46. வர்த்தக சென்மதிகள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| வைப்பு பரிசோதனை கட்டணங்களும் செயற்பாடுகளும் | 22,081,738 | 18,533,532 |
| AASL, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பொது திறைசேரிக்கு சென்மதியானவை | 32,419,438,350 | 2,585,713,770 |
| வைப்பு - யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி - SLTDA | 1,050,000,000 | 1,050,000,000 |
| ஏனைய கடன் கொடுத்தோர் | 2,361,140 | 2,361,140 |
| | **33,493,881,229** | **3,656,608,443** |

11 ஒக்டோபர் 2019 இல் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்கள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு (SLTDA) அனுப்பிவைக்கும் விமானமேறுதல் கட்டணத்தை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL) ரூபா 1,050 மில்லியன் வரைக்கும் நிறுத்திவைப்பதற்கு அங்கீகரித்துள்ளது. இது பிராந்திய வர்த்தக விமானச் செயற்பாடுகளுக்காக யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 1,050 மில்லியன் "வைப்பு - யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி - SLTDA" இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஏனைய சென்மதிகள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| **அட்டுறு செலவினங்கள்** | | |
| - பணியாட்கள் செலவினங்கள் | | |
| ஊ.சே.நி. | 3,241,116 | 5,684,076 |
| லீவை பணமாக்குதல் | 7,884,333 | 6,960,151 |
| போனஸ் | 8,224,598 | 52,050 |
| ஊ.ந.நி. | 388,934 | 682,089 |
| நலன்புரி கொடுப்பனவுகள் | 53,959 | 117,500 |
| PAYE | 852 | 879,699 |
| சம்பளங்களும் ஊதியங்களும் | 62,500 | 1,888,271 |
| தொழில்சார் படிகள் | 4,920,000 | - |
| - பயிற்சி | 1,277,820 | 45,000 |
| - நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் | | |
| அச்சிடுதல் | 3,250,422 | 6,537,204 |
| மின்சாரம் | - | 3,439,637 |
| நலன்புரி - பொதுவானவை | - | 1,486,238 |
| கட்டிடப் பராமரிப்பு - ஏனையவை | 3,004,705 | 2,366,637 |
| துப்புரவுப்பணி | - | 1,140,697 |
| வெளிவார் தொழில்நுட்ப உறுதுணை | 204,000 | 3,319,700 |
| பிடித்து வைத்தல் வரி கழித்தல்கள் | 832,472 | 683,146 |
| தொலைதொடர்பு | 67,971 | 1,041,338 |
| பாதுகாப்பு | 540,460 | 1,015,665 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 1,240,000 | 1,035,000 |
| வாடகைக் கட்டணங்கள் | - | 1,480,960 |
| ஏனைய செலவினங்கள் | 1,571,215 | 1,909,596 |
| | **36,765,358** | **41,764,655** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 47. வருமான வரிப் பொறுப்புக்கள்

| டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது. (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன.) | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | (119,273,851) | 482,052,569 |
| ஆண்டிற்கான ஏற்பாடு | 205,793,225 | 172,206,560 |
| ஈடுசெய்யப்பட்ட VAT மீளப்பெற்றது (Y/A 2024/25) | - | (8,250,934) |
| ஆண்டின்போது செலுத்தப்பட்டவை | - | (765,282,046) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி** | **86,519,374** | **(119,273,851)** |

## 48. எதிர்பாரா பொறுப்புக்கள்

ஆண்டின் இறுதியில் பின்வரும் நீதிமன்ற வழக்குகள் பொருண்மையான எதிர்பாரா பொறுப்புக்களான காணப்படுவது குறிக்கப்பட்டது.

2024 மற்றும் 2025 காலத்தில் சிறிய கோரல் நீதிமன்றத்தில் CAASL இற்கு எதிராக மூன்று (3) வழக்குகள் உள்ளன.
மேல் நீதிமன்றத்தில் மூன்று (3) வழக்குகள் உள்ளன - இரண்டு (2) வழக்குகள் CAASL இற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு (1) வழக்கானது 2024 இல் CAASL இனால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2022 மற்றும் 2024 காலத்தில் மூன்று (3) வழக்குகள் CAASL இற்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
2024 இல் இரண்டு (2) வழக்குகள் CAASL இற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. AAV/A/CAASL/FA/24/20 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 12 June 2025

தலைவர்
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட, ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவிற்கு அமைவான, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 தகுதியான அபிப்பிராயம்**

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் (அதிகார சபை) 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள், 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடையும் ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கலான முக்கிய கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் இலங்கை சனநாயகச் சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளைக்கமைய கணக்காய்விற்குட்படுத்தப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். எனது அபிப்பிராயத்தின் பிரகாரம், எனது அறிக்கையின் தகுதியான அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகளைத் தவிர்த்து, இணைந்துள்ள நிதிக் கூற்றுக்கள் அதிகாரசபையின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தன்று முடிவடைந்த வருடத்தின் நிதிச் செயற்திறன் மற்றும் அதன் காசுப் பாய்ச்சலானது, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப, அதிகார சபையின் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024

**1.2 தகுதியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) இலக்கம் 37 – ஏற்பாடுகள், எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா சொத்துக்கள் இன் பிரகாரம் வரிவிதிப்பு அதிகாரிகளுடன் தீர்க்கப்படாத பிணக்குகள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையானது ரூபா 40.1 மில்லியன் பெறுமதியான பதினைந்து VAT மதிப்பீட்டு அறிவித்தல்களை 31 டிசம்பர் 2024 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தவில்லை.

(ஆ) சமீபத்தைய மாதிரி கணக்காய்வானது குடியிருப்புகளின் புதுப்பித்தலுக்காக ஆட்பட்ட செலவினத்தில் ஒரு தொகையான ரூபா 4.6 மில்லியன் மூலதனமயமாக்கலுக்கு பதிலாக பிழையாக இலாபம் மற்றும் நட்டக் கணக்கிற்கு விதிக்கப்பட்டதை வெளிப்படுத்தியது. இதன் விளைவாக, சொத்துக்கள் மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்கள் ஒத்த தொகையினால் குறைத்துக் கூறப்பட்டுள்ளன.

(இ) 21 டிசம்பர் 2017 இல் வர்த்தமானி இலக்கம் 2050/38 இன் கீழ் மூன்று நிலப்பகுதிகளுக்கான பதிவீட்டுச் செயன்முறை முடிவுறுத்தப்பட்டு உரிமைச் சான்றிதழ்களும் பெறப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இந்த காணிகள் (கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் உள்ளடங்கலானவை) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் பெறுமதியிடப்படவோ கணக்கீடு செய்யப்படவோ இல்லை. 21 டிசம்பர் 2027 இன் வர்த்தமானி இலக்கம் 2050∴38 இல் உத்தியோகபூர்வமாக விபரிக்கப்பட்டுள்ள மூன்று நிலப்பகுதிகளுக்கான கையகப்படுத்தல் மற்றும் பதிவீடானது 16 மே 2025 இலும் கூட இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை.

(ஈ) மட்டக்களப்பு விமான நிலையத்தின் அபிவிருத்திக்கான மொத்த செலவுகள் ரூபா 22.7 மில்லியன், விமான நிலைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செலவினமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக பிழையாக காணி கையகப்படுத்தல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு விவரிக்கமுடியாத வருமதியான ரூபா 18.9 மில்லியனும் காணியின் பெறுமதியின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்பட்டுள்ளது.

(உ) எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் ஒவ் ஸ்ரீலங்காவுக்காக தொலைதூர டாக்ஸி தரிப்பிடம் மற்றும் ஏனைய வசதிகளது இடமாற்றச் செலவுகள் தொகையான ரூபா 10.4 மில்லியன் விமான நிலைய உட்கட்டமைப்பு செலவுகள் அல்லது திட்டச் செலவுகளாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நய்கந்த காணியின் கீழ் பிழையாக மூலதனமயமாக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஒரு சொத்தானது இன்னமும் அலுவலக வளாகத்தில் வைத்திருக்கப்படும்போது அச்சொத்தின் விற்பனையிலான நட்டமாக ரூபா 1.6 மில்லியன் பிழையாக நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2019∴2020 ஆண்டிற்கான வரி மதிப்பீடு ரூபா 89.5 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், அதிகாரசபையின் வரி அறிக்கையின் பிரகாரம் ரூபா 175 மில்லியன் வரியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து வருமதியானது என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சிக்கலை தீர்த்துவைப்பதற்கு எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிக் கொள்கை, சட்டம், தீர்ப்புகள் மற்றும் சர்வதேச விவகாரங்களது பிரதி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட 20 மார்ச் 2023 திகதியிடப்பட்ட கடிதம் இலக்கம் ACT/03/15 இன் பிரகாரம், வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டணம் (OSS) மற்றும் விமானமேறுதல் கட்டணத்தின் (விமானமேறுதல் கட்டணத்தின் சேவைக் கட்டணம்) 2.5% என்பன சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு கட்டணத்தை (SSCL) செலுத்துவதற்கு பொறுப்புடையதாகும். அதிகாரசபையானது SSCL இனை முறைமைப்படுத்தல் வருமானத்தில் மாத்திரம் செலுத்தியுள்ளதுடன், வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டண (OSS) வருமானம் மற்றும் விமானமேறுதல் கட்டணத்தின் 2.5% இல் செலுத்தவில்லை. எனவே, மீளாய்வாண்டிற்கான SSCL பொறுப்பானது ரூபா 38.4 மில்லியனால் குறைவாக கூறப்பட்டுள்ளது.

(ஐ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பாரிய வரி செலுத்துபவர் அலகின் 24 ஒக்டோபர் 2023 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம், 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்த்தல் வரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி ஐஐ இன் (த) இன் கீழான பெறுமதி சேர்த்தல் வரி (VAT) விலக்களிப்பிற்கான வரன்முறையினை அதிகாரசபை நிறைவேற்றவில்லை மற்றும் அதிகாரசபையானது விமானமேறுதல் கட்டணத்திலான சேவைக் கட்டண வருமானத்திலான பெறுமதி சேர்த்தல் வரியாக ரூபா 167.5 மில்லியனையும் 2016 இன் இரண்டாம் காலாண்டிலிருந்து 31 டிசம்பர் 2023 வரை ரூபா 43.4 மில்லியனை அபராதமாக செலுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது. மேலும், கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம், அதிகாரசபையானது மீளாய்வாண்டிற்கு சேவைக் கட்டண வருமானத்திலான பெறுமதி சேர்த்தல் வரியாக ரூபா 68.4 மில்லியனை செலுத்துவதற்கு பொறுப்பாயுள்ளது. இதன் பிரகாரம், 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான மொத்த செலுத்தவேண்டிய பெறுமதி சேர்த்தல் வரி மற்றும் செலுத்தவேண்டிய மொத்த பெறுமதி சேர்த்தல் வரி அபராதம் முறையே ரூபா 403.5 மில்லியன் மற்றும் ரூபா 43.4 மில்லியன் ஆகும்.

நான் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழ் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் எனது பொறுப்புக்கள் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வுச் சான்றுகள் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளது என நான் நம்புகின்றேன்.

**1.3 அதிகாரசபையின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்**

ஏனைய தகவல்கள் அதிகாரசபையின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றது ஆனால் இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரது அறிக்கையினை உள்ளடக்கவில்லை. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவமானது பொறுப்பாளியாகும்.

# கணக்காய்வாளா் தலைமை அதிபதி அவா்களின் அறிக்கை 2024

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன், அவற்றில் நான் எந்த விதமான உறுதிமொழி தீர்மானத்தையும் தெரிவிப்பதில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்வதில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மையாக வேறுபட்டுள்ளதா அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவு அல்லது இல்லாவிடின் பொருண்மையான பிறழ்கூற்றாகத் தோன்றுகின்றதா என்பதை கருத்திலெடுப்பதாகும்.

இந்த கணக்காய்வாளரது அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களில் நான் செயலாற்றிய பணியின் அடிப்படையில், இந்த ஏனைய தகவல்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் நிறைவுசெய்தால், அந்த உண்மை தொடர்பாக அறிக்கையிடல் வேண்டும். இது தொடர்பில் நான் அறிக்கையிடுவதற்கு எதுவுமில்லை.

**1.4 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஒரு நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான அதிகாரசபையின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் அதிகாரசபையினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் அதிகாரசபையின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு அதிகாரசபை வேண்டப்படுகின்றது.

**1.5 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கான கணக்காய்வாளாரது பொறுப்புக்கள்**

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளரது அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஒரு உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வானது எந்நேரமும் ஒரு பொருண்மையான

பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை பொருண்மையானதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்:

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களது இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்களுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஒரு தவறின் விளைவாக எழக்கூடிய இடரிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாத இடரானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஒரு புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான அதிகாரசபையின் ஆற்றலில் கருதத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றிக் காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் அதிகாரசபையானது நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பான பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்கலாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

**2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இன் தேவைக்கேற்ப அதிகாரசபையானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (d) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (d) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை;

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (d) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் அதிகாரசபையினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் அதிகாரசபையினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (f) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூலச் சட்டம், அதிகாரசபையினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு, பின்வருவன தவிர்த்து, அதிகாரசபை இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு;

| சட்டம் மற்றும் பணிப்புரைக்கான மேற்கோள் | விவரிப்பு |
|---|---|
| (அ) இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | |
| பிரிவு 7 (உ) | இலங்கைக்கான வான்பயணவியல் அபிவிருத்தித் திட்டமானது அதிகாரசபையினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்தாலும், இந்த அறிக்கையின் திகதி வரைக்கும் அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| பிரிவு 9 | சட்டமானது சட்டமாக்கப்பட்டு 21 வருடங்கள் கழிந்திருந்தபோதிலும், இந்த அறிக்கையின் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையானது பின்வருவனவற்றுக்காக ஒரு கட்டளையினை வர்த்தமானியிடுவதற்கு தவறியுள்ளது: 14 விமான நிலையங்களில் 10 விமான நிலையங்களை, மற்றும் 8 வானூர்தி வசதிகள் மற்றும் அவற்றின் இணைந்த காணிச் சொத்துக்கள் என்பவற்றை சட்டத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றல் செய்யவில்லை. |
| பிரிவு 9 மற்றும் இலங்கை சனநாயக சோசலி‘ குடியரசின் வர்த்தமானி (அதி விசேடம்) இலக்கம் 2050/38 21 டிசம்பர் 2017 திகதியிடப்பட்டது. | 2 ஏப்ரல் 2019 இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு அமைச்சரவைத் தீர்மானத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாண விமான நிலையமானது சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு உத்தியோகபூர்வமாக மாற்றல் செய்யப்பட்டு சர்வதேச செயற்பாடுகள் 17 ஒக்டோபர் 2019 இல் ஆரம்பமாகின. எவ்வாறாயினும், அறிக்கையின் திகதியில் உள்ளவாறு, அதிகாரசபையானது விமான நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட 349 ஏக்கர் காணியின் எல்லைகளை இனங்காணும் செயன்முறையினை இன்னமும் முடிவுறுத்தாது உள்ளதுடன், ஒரு வர்த்தமானி அறிவித்தலூடாக உத்தியோகபூர்வமாக அவற்றை பிரசுரிக்கவும் இல்லை. |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் பிரிவு 47, 1980 இன் 16 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டத்தின் பிரிவு 44 மற்றும 11 செப்டம்பர் 2013 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 02/2013. | ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உழைப்புகளுக்கு முரணாக அதிகாரசபையானது, ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. சட்டங்களினால் அனுமதிக்கப்படாத ஏழு வகையான படிகளை உள்ளடக்கியுள்ளதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கான பங்களிப்புகளை தவறாக கணிப்பீடு செய்துள்ளது. 2024 ஜனவரி 01 முதல் ஜுன் 30 2024 வரை இடம்பெற்றுள்ள இத்தவறானது ஊ.சே.நி. இற்கு ஒரு மிகை கொடுப்பனவாக ரூபா 11,402,157 இனையும் ஊ.ந.நி இற்கு ஒரு மிகை கொடுப்பனவாக ரூபா 2.2 மில்லியனையும் விளைவித்துள்ளதுடன், மொத்த நிதியியல் நட்டமாக ரூபா 13.6 மில்லியனுக்கு இட்டுச்சென்றுள்ளது. |

*கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024*

| சட்டம் மற்றும் பணிப்புரைக்கான மேற்கோள் | விவரிப்பு |
|---|---|
| (இ) 11 ஜனவரி 2023 திகதியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலி' குடியரசின் வர்த்தமானி (அதி விசேடம்) இலக்கம் 2314/16 | பயணிகள் விமானப் பயணங்களை செயலாற்றும் விமான நிறுவனங்கள் இலங்கையிலிருந்து புறப்படும்போது திரட்டப்பட்ட விமானமேறுதல் கட்டணத்திற்கான ஒரு பிணையமாக ஒரு தொகை பணத்தை அல்லது ஒரு வங்கி உத்தரவாதத்தினை வழங்கும் தேவை காணப்படுகின்றது. எவ்வாறாயினும், எட்டு விமான நிறுனங்கள் மொத்தமாக ரூபா 4,611.7 மில்லியனுக்கு வங்கி உத்தரவாதங்களை சமர்ப்பிப்பதற்கு தவறியுள்ளன. |
| (ஈ) 17 நவம்பர் 2021 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021. பிரிவு 3.2 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, விசேட படிகள், முகாமைத்துவ படிகள் மற்றும் இடைக்கால படிகள் என மொத்தமாக ரூபா 60.6 மில்லியன், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அதிகாரசபையின் அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்டுள்ளன. |
| 09 ஏப்ரல் 2015 திகதியிடப்பட்ட நிதி அமைச்சின் செயலாளரின் கடிதம் இலக்கம் DMS/1748 | அதிகாரசபையானது இரண்டு அதிகாரிகளுக்கு, அவர்களது தேவையான உரிமங்கள் / சான்றிதழ்களை சரிபார்க்காது முறையற்ற விதத்தில் ரூபா 2.9 மில்லியனை தொழில்நுட்ப படிகளாக செலுத்தியுள்ளது. மேலாக, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (CAASL) பணிப்பாளர் நாயகத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ரூபா 27 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. இது அப்பதவிக்கு தேவையான தகைமைகள் தெரிவிக்கப்படுகின்றவாறு சந்திக்கப்படாது இருந்த போதிலும் ஆகும். |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (G) பிரிவின் தேவைக்கேற்ப அதிகாரசபையானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு;

(அ) அதிகாரசபையின் பணியாட்கள் மற்றும் நிர்வாக விதிகளின் கையேட்டின் பிரிவு 1.4 இன் பிரகாரம், அதிகாரசபையின் பெரு நிறுவன ஆளுகை விதிகள் மூன்று பிரதான பகுதிகளை உள்ளடக்குவதுடன், அவையாவன, பணியாட்கள் மற்றும் நிர்வாக விதிகள், பெருநிறுவன விதிகள் மற்றும் நிதியியல் விதிகள் என்பனவாகும். கையேட்டின் பிரகாரம் பெருநிறுவன விதிகளும் நிதியியல் விதிகளும் தனித்தனியாக வழங்கப்படுதல் வேண்டும் என்று காணப்பட்டபோதிலும், இந்த விதிகள் இவ்வறிக்கையின் திகதி வரைக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (h) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல், கீழுள்ளது தவிர, அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு;

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) வீரவில சுற்று பங்களாவின் புதுப்பித்தலில் கணிசமானளவு அதிகமாக செலவழித்துள்ளது, ஒரு பாதீடான ரூபா 7.5 மில்லியனுக்கு எதிராக ரூபா 24.2 மில்லியனை செலவழித்துள்ளது. ஒப்பந்ததாரர் ஒரு தனியான விலை கோரல் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், இது அரசாங்க கொள்முதல் வழிகாட்டிகளுக்கு முரணானதாகும் என்பதுடன் எவ்விதமான உத்தியோகபூர்வமான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவில்லை. ஒப்பந்தமானது 18 மே 2022 இல் வழங்கப்பட்டபோதிலும், பணியானது அதே விலைகோரல் விலையில் பத்து மாதங்கள் கடந்து 13 மார்ச் 2023 இலேயே ஆரம்பிக்கப்பட்டது. மேலாக, ஒப்பந்ததாரர் ரூபா 2,193,750 பெறுமதியான வேண்டப்படாத பணியினை நிறைவு செய்ததுடன், இது தொழில்நுட்ப மதிப்பிடல் குழுவினாலோ (TEC) அல்லது கொள்முதல் குழுவினாலோ (PC) அங்கீகரிக்கப்படவில்லை. அரசாங்க கொள்முதல் வழிகாட்டிகள் 8.12.2 இன் பிரகாரம் ஒரு நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. கட்டுமானமானது நிறைவடையாது மற்றும் கணிசமான குறைபாடுகளைக் கொண்டிருந்தபோதிலும், இறுதிப் பட்டியலானது சமர்ப்பிக்கப்பட்டு 11 ஒக்டோபர் 2023 இல் செலுத்தப்பட்டது.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) 1 ஒக்டோபர் 2014 இல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்கள் மற்றும் நிர்வாக விதிகளை (CASL CAP 5000) மீளாய்வு செய்வதற்கோ மற்றும் புதுப்பிப்பதற்கோ தவறியுள்ளது. இவ்விதிகள் மூன்று வருடங்களை விஞ்சாத இடைவெளியில் மீளாய்வு செய்யப்படுதல் கட்டாயமானதாகும் மற்றும் பொது திறைசேரியின் அங்கீகாரத் தேவையும் காணப்படுகின்றது. இந்த முக்கியமான ஆவணம் 8 மே 2025 இல் திருத்தியமைக்கப்படாது உள்ளது.

(ஆ) மீளாய்வு காலத்தின்போது கடன் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளவாறு, நிலுவையிலுள்ள கடன் மீதிகளின் மொத்தமான ரூபா 1.5 மில்லியன் ஒரு வருடத்திற்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்படுகின்றது.

(இ) பணியாட்கள் மற்றும் நிர்வாக விதிகள் கையேட்டின் பிரிவு 14.9 இன் பிரகாரம் விசேட கடன்கள், கண்டிப்பாக ஆதனம் தொடர்பான செலவினங்களுக்கு மாத்திரமே அனுமதிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், ஒரு தொகையான ரூபா 2.2 மில்லியன் விசேட கடன்களாக ஏனைய நோக்கங்களுக்காக செலுத்தப்பட்டுள்ளது. இது கையேட்டில் அத்தகைய விலகல்களை அங்கீகரிப்பதற்கு எந்தவிதமான வழிகாட்டிகளும் இல்லாதபோதிலும் ஆகும்.

(ஈ) அதிகாரசபையின் ஐம்பத்து எட்டு பணியாட்கள் உள்ளக விதிகளை மீறி முறையற்ற விதத்தில் இரட்டிப்பு பிரயாண நலன்களை, மாதாந்த படிகள் மற்றும் பகிரப்பட்ட போக்குவரத்து, பெறுகின்றார்கள். மேலும் இந்த பணியாட்களுள் 54 பேர் 2018 இல் கட்டுநாயக்காவிற்கான இடமாற்றத்திற்காக ரூபா 5,000 இனை கஷ்டப் படிகளாகவும் பெறுகின்றார்கள். 2024 இல் இந்த மூன்று நலன்களான மாதாந்த பிரயாணப் படிகளுக்கு ரூபா 9.9 மில்லியனும், கஷ்டப் படிகளாக மொத்தம் ரூபா 3.2 மில்லியனும் பேருந்து வாடகைகளாக ரூபா 18.5 மில்லியனும் தேவைக்கு மேற்பட்டதாக காணப்படுவதுடன், இவை அனைத்தும் ஒரே நோக்கான பணி தொடர்பான பிரயாணத்திற்கு சேவையாற்றுகின்றன. மேலாக, பிரயாணப் படிகளது கழித்தலானது நடைமுறை அதிகாரசபை கையேட்டிற்கு பதிலாக 2018 இல் உள்ள பழமையான சுற்றறிக்கையின் அடிப்படையிலேயே கழிக்கப்படுகின்றன.

## *கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024*

(உ) பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் (ஸ்ரீலங்கா) லிமிட்டட்டிற்கு (AASL) இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் (CAASL) வழங்கப்பட்ட ரூபா 170.6 மில்லியன் நிதியானது ஐந்து வருடங்களாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்படுகின்றது. மேலும், CAASL இன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், முற்பணமானது ரூபா 170.6 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், AASL இன் கூற்றின் பிரகாரம் இத்தொகையானது ரூபா 175.4 மில்லியன் என்பதுடன், இதன் விளைவாக கணக்கிணக்கம் செய்யப்படாத வித்தியாசமாக ரூபா 4.8 மில்லியன் காணப்படுகின்றது.

(ஊ) நடப்பிலுள்ள உரிமமளித்தல் முறைமையினை தரமுயர்த்துவதற்கான ஒப்பந்தமானது போட்டித்தன்மையான விலைகேட்டலை பின்பற்றாது ஒரு ஒப்பந்த விலையான ரூபா 1.5 மில்லியனிற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு 25 ஜூன் 2020 இல் நேரடியாக வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், வழங்கப்பட்ட திகதியின் பின்னர் அதிகாரசபையினால் உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதில் தாமதம் காணப்பட்டது. அதிகாரசபையானது வழங்குநருக்கு ஒரு கொடுப்பனவாக ரூபா 1.1 மில்லியனை ஏற்கனவே செய்துள்ளபோதிலும், அதிகாரசபையானது ஒரு முழுவதும் புதிய முறைமையினை விருத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளதனால், இந்த மொத்தச் செலவானது சிக்கனமற்றதாகும்.


(எ) விமானமேறுதல் கட்டணம் மற்றும் EJ வரியினைச் சேகரிக்கும் நோக்குடைய தகவல் தொழில்நுட்பத் திட்டமானது 20 பெப்ரவரி 2022 இல் எதிர்பார்க்கப்பட்ட நிறைவுடன் 06 டிசம்பர் 2021 இல் ஆரம்பமாகியது. எவ்வாறாயினும், 26 மே 2025 வரை இத்திட்டமானது நிறைவு செய்யப்படாது உள்ளதுடன் இலக்குவைத்த 32 விமான நிறுவனங்களுள் ஒன்று மாத்திரமே பதிலளித்துள்ளது. இதன் விளைவாக, மொத்தமாக ரூபா 4.7 மில்லியன் மற்றும் இந்த திட்டம் நோக்கி ஏற்கனவே ரூபா 1.5 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதுடன் இவை சிக்கனமற்றவையாகும்.

(ஏ) ரூபா 7.6 மில்லியன் கிரயமுடைய ஒரு வாகனத்தினை விற்பனை செய்வதற்கு சபையானது அங்கீகரித்தபோதிலும் அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறு விற்பனையானது நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின்போது அதிகாரசபையானது வெளிவாரி தொழில்நுட்ப உறுதுணை செலவினங்களாக ரூபா 38.6 மில்லியனை செலவழித்தது. இது சபை அங்கீகாரம் DP/July/2017/06 இல் 20 நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து பரிசோதகர்களை ஈடுபடுத்தியதன் மூலம் ஏற்பட்டது. இது இந்த அதிகாரிகளது தெரிவு மற்றும் ஈடுபடுத்தலுக்கான ஒரு முறையான செயன்முறையினை நிறுவாது மேற்கொள்ளப்பட்டது.

(ஒ) 23 மே 2025 இல் உள்ளவாறு ஒன்பது விமான நிறுவனங்களிடமிருந்து நிலுவையாயுள்ள விமானமேறுதல் கட்டணமான ரூபா 25,878.2 மில்லியனில் அதிகாரசபையினால் கணிக்கப்பட்ட வட்டியானது ரூபா 3,821 மில்லியன் ஆகும். இக்கணிப்பீடானது 12 ஜனவரி 2023 இல் சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட EL/01/2023 பணிப்புரையின் பந்தி 9 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இந்த நிலுவையிலுள்ள வட்டிக் கட்டணங்களை மீட்டெடுப்பதற்கு அதிகாரசபையினால் எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் செலுத்தவேண்டிய விமானமேறுதல் கட்டணமாக பதிவுசெய்யப்பட்டுள்ள தொகைக்கும் எயார்போட் அன்ட ஏவியேசன் சேர்விசஸ் ஸ்ரீலங்கா லிமிட்டட்டின் நிதிக் கூற்றுக்களில் வருமதியான விமானமேறுதல் கட்டணமாக பதிவுசெய்யப்பட்டுள்ள தொகைக்கும் இடையே ஒரு வித்தியாசமாக ரூபா 4,697.1 மில்லியன் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த வித்தியாசத்தை தீர்த்து வைப்பதற்கு எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.



G.H.D. தர்மபால
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024 இற்கான மறுமொழி இற்கா

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
பத்தரமுல்ல

**2019 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 31 டிசம்பர் 2024 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை**

12 ஜுன் 2025 திகதியிடப்பட்ட இலக்கம் AAV/A/CAASL/FA/24/20 இனைக் கொண்ட அறிக்கையினை மேற்கோள் காட்டி இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது, அதில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு அதன் முறையான மறுமொழியினை இத்தால் சமர்ப்பிக்கின்றது.

1.2.1 திருத்தியமைக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) VAT மதிப்பீட்டு அறிவித்தலானது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 37: ஏற்பாடுகள், எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா சொத்துக்கள் இன் பிரகாரம் 2025 இன் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும்.

(ஆ) இல. 9 குடியிருப்பில்லங்களது புதுப்பித்தலுக்கு ஆட்பட்ட செலவினமானது 2025 இல் மூலதனமயமாக்கப்பட்டுள்ளது.

(இ) பின்வரும் காணிகளுக்கு அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பிடல் அறிக்கைகளை பெறும் செயன்முறையினை ஆரம்பிப்பதற்கு அதிகாரசபையானது உடனடி நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது,

- இரத்மலான, காந்தவல வீதியிலுள்ள சிவில் வான்பயணவியல் பயிற்சி மத்தியநிலையம், கட்டிடங்கள் மற்றும் அதனிலான கட்டமைப்புகள் மற்றும் அதனைச் சார்ந்த காணி.
- இரத்மலான, அத்திடியவிலுள்ள வான்வழிசெலுத்தல் தொடர்பாடல் அலைபரப்பு நிலையம், கட்டிடங்கள் மற்றும் அதனிலான கட்டமைப்புகள் மற்றும் அதனைச் சார்ந்த காணி.
- கம்பஹா, மாதம்பெலவில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கான வானொலி வழிசெலுத்தல் உதவி, கட்டிடங்கள் மற்றும் அதனிலான கட்டமைப்புகள் மற்றும் அதனைச் சார்ந்த காணி.

(ஈ) மட்டக்களப்பு விமான நிலைய அபிவிருத்திக்கான மொத்த செலவான ரூபா 22.7 மில்லியன் 2017 இல் காணி கையகப்படுத்தல் கிரயமாக மூலதனமயமாக்கப்பட்டது. அது 2025 ஆம் ஆண்டில், "விமான நிலைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி" ஆக மீள்வகைப்படுத்தப்பட்டு, பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் வழிகாட்டிகளுக்கு அமைவாக அவசியமான கணக்கீட்டு நடவடிக்கை உரியவாறு மேற்கொள்ளப்படும்.

(உ) தொலைதூர டாக்ஸி தரிப்பிடம் மற்றும் ஏனைய வசதிகளின் இடமாற்றச் செலவான ரூபா 10.4 மில்லியன் 2016 இன் நய்கந்த காணியாக மூலதனமயமாக்கப்பட்டது. இது 2025 ஆம் ஆண்டில் "விமான நிலைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி" ஆக மீள்வகைப்படுத்தப்பட்டு, பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் வழிகாட்டிகளுக்கு அமைவாக அவசியமான கணக்கீட்டு நடவடிக்கை உரியவாறு மேற்கொள்ளப்படும்.

(ஊ) இது விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதனை முல்லைத்தீவிலுள்ள புனித. ஜோசப் சிறுவர் விடுதிக்கும், மூச்சுப் பரிசோதனை இயந்திரமானது நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்திற்கும் கொடையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(எ) வித்தியாசமானது 2025 ஆம் ஆண்டிற்கான VAT அறிக்கையில் செம்மையாக்கப்படும்.

(ஏ) CAASL 2022 இலிருந்து SSCL இற்கு செலுத்தவேண்டிய அனைத்தையும் முற்றாக செலுத்தியுள்ளதுடன், 2025 இன் இரண்டாம் காலாண்டுவரை மொத்தமாக ரூபா 194,331,568.96 செலுத்தப்பட்டுள்ளது.

(ஐ) CAASL உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெறுமதி சேர்த்தல் வரி (VAT) அறிவித்தலுக்கு எதிராக மேன்முறையீட்டினை தாக்கல் செய்துள்ளது. இவ்விடயமானது தற்போது கலந்துரையாடப்படுவதுடன், எவ்விதமான இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

நிதிக் கூற்றுக்கள் - 2025 இல் ஒரு ஏற்பாடு மேற்கொள்ளப்படும். தொடர்ச்சியான நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், இறுதி நினைவூட்டலானது 5 ஆகஸ்ட் 2025 இல் வழங்கப்பட்டது.

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாட்டிலான அறிக்கை

*2.2.2.*

(அ)

(i) சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு தேசிய சிவில் விமானப் போக்குவரத்து பெருந்திட்டத்தினை (NCAMP) சமர்ப்பிப்பதற்கான அனுமதியினை வழங்கியது. இது இலங்கையில் ஒரு விரிவான 10 வருட NCAMP கட்டமைப்பினை நிறுவி அமுலாக்கும் நோக்கத்துடனாகும். இத்தீர்மானமானது 26 பெப்ரவரி 2024 இல் இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் 197ஆவது சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது

அதேநேரத்தில், எயார்போட் அன்ட் ஏவியேசன் சேர்விசஸ் (ஸ்ரீலங்கா) (பிரைவேட்) லிமிட்டட் NCAMP இற்கு முன்மொழியப்பட்ட திருத்தத்தினை சமர்ப்பித்தது. இதன் பிரகாரம், NCAMP பங்காளிகளது பின்னூட்டத்தினைத் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டதுடன், 28 ஒக்டோபர் 2024 திகதியிடப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக உரிய அமைச்சினூடாக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு (NPD) சமர்ப்பிக்கப்பட்டது. 20 மே 2025 அளவில் NPD இடமிருந்து பெறப்பட்ட கருத்துரைகளின் பின்னர் ஒரு புதுப்பிக்கப்பட்ட ஆவணமானது 16 ஜுன் 2025 இல் NPD இற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

(ii)

அ. 2002 இன் 34 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 9 இனை மேற்கோளிட்டு, "வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் அமைச்சர் அதிகாரசபைக்கு இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வானூர்தித் தளங்கள் மற்றும் வான்வழிசெலுத்தல் வசதிகள் மற்றும் இந்தச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அதனைச் சார்ந்த காணியினை மாற்றல் செய்யலாம் மற்றும் ஒப்படைக்கலாம்." எனவே, மூன்றாம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள ஆதனங்கள் அமைச்சரினால் வாத்தமானியிடப்படும்வரைக்கும், இந்த ஆதனங்கள் குறித்து எவ்விதமான நடடிவக்கையையும் எடுக்கவியலாது.

எவ்வாறாயினும், சிவில் வான்பயணவியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு இதுவரைக்கும் மாற்றல் செய்யப்படாதவை, ஒப்படைத்து மாற்றல் செய்யுமாறு போக்குவரத்து,

நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமானபோக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சிவில் வான்பயணவியலின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், குறித்த ஆதனங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு 07.10.2024 இல் ஒரு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 28.10.2024 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம், இந்த அனைத்து விமான நிலைய ஆதனங்களும் தற்போது பாதுகாப்பு காரணங்களுக்காக பாதுகாப்பு அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றன. இதன்பிரகாரம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமானபோக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு உரிய நேரத்தில் இவ்விடயம் தொடர்பாக அறிவிக்கப்படும் மற்றும பெறப்படும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எனவே, செயன்முறையானது நடந்தவண்ணம் உள்ளபோதிலும், இந்த அதிகாரசபையானது இது தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கையினை எடுத்துள்ளது.

ஆ. இதன் விளைவாக, கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 21 வருட காலம் இந்த அதிகாரசபை தொடர்பானதல்ல. ஆகையால் கீழே குறிப்பிட்டுள்ளவாறு இது தொடர்பான வர்த்தமானிகள் 2016, 2017 மற்றும் 2019 இலேயே பிரசுரிக்கப்பட்டன.

1. 01.07.2016 இன் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1973-78 - மட்டக்களப்பு விமானநிலையம்
2. 21.12.2017 இன் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2050-38 - பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம், இரத்மலான சர்வதேச விமான நிலையம் மற்றும் தொடர்புடைன வான்வழிப்போக்கு வசதிகள்.
3. 26.09.2019 இன் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2142-74 - பலாலி விமானநிலையம்

எனவே அதிகாரசபையானது மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம், குறித்த காணிகளின் ஒப்படைத்தல் மற்றும் மாற்றலுக்கான செயன்முறைகளை முன்னெடுத்துள்ளது.

(iii)

1950 இல் சிவில் வான்பயணவியல் திணைக்களமானது 141.6296 எக்டேயார்ஸ் காணிகளை (அண்ணளவாக 349 ஏக்கர்கள்) வானூர்தித்தளத்தினை நிறுவும் நோக்கத்திற்காக கையகப்படுத்தியது. அதன்பின்னர், 1986 இல் விமான நிலையத்தின் விரிவாக்கலுக்கானக இலங்கை வான் படையினால் 261.7365 எக்டேயார்ஸ் காணி (அண்ணளவாக 646 ஏககர்கள்) கையகப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இந்த காணிகளுக்கான கையகப்படுத்தல் செயன்முறைகள் நிறைவுறாது உள்ளன. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிப் பரப்பான 2,962.18 ஏக்கர்கள் இலங்கை வான்படையினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளையும் உள்ளடக்குகின்றன.

மேலாக, பலாலி விமான நிலையம் தொடர்பாக 26.09.2019 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2142-74 ஆனது காணிகளின் எல்லைகளை குறிப்பிடாது பிரசுரிக்கப்பட்டது. எனவே, இந்த அதிகாரசபை, எல்லைகள் உள்ளடங்கலான, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் கையகப்படுத்திய காணிகள் மீள்வர்த்தமானியிடுவதற்கான ஒரு வரைவினை தயாரித்துள்ளதுடன் இந்த ஆவணம் சட்வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், சட்டவரைஞரினால் அனுப்பப்பட்ட வரைவின் சரிபார்ப்பு வாசிப்பு நிறைவுற்றது. இது சரிபார்ப்பு வாசிப்பு நிறைவடைந்ததன் பின்னர் பிரசுரிப்பதற்காக அனுப்பிவைக்கப்படும்.

எனவே, யாழ்ப்பாண விமானநிலையம் தொடர்பான தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அவதானிப்பு இருந்தாலும், இந்த அதிகாரசபையானது எல்லைகளை இனங்காண்பதற்கும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் கையகப்படுத்திய 349 ஏக்கர்ஸ் காணியினை பதிவுசெய்வதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எவ்வாறாயினும், கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு மொத்த 2,962.18 ஏக்கர்களின் எஞ்சிய பகுதியானது அதிகாரசபையின் அதிகார வரம்பினுள் இல்லை.

(ஆ)

CAASL இன் ஆரம்பத்திலிருந்து அமைச்சரவை அமைச்சர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்கள் மற்றும் நிர்வாக விதிகளின் கையேட்டின் பிரிவு 4.7 இன் (SLCAP 5000) பிரகாரம் CAASL பணியாட்களின் மொத்த ஊதியத்திலிருந்து ஊ.சே. நி. மற்றும் ஊ.ந.நி. இற்கு பங்களிப்பு செய்கின்றது. 'ஊதியம்' என்ற பதம் SLCAP 5000 இல் வரையறை செய்யப்பட்டுள்ளாத வேளை, ஆரம்பத்திலிருந்தான (ஏறத்தாழ 20 வருடங்கள்) நடைமுறையானது பணியாட்களின் மொத்த உழைப்புகளின் அடிப்படையில் ஊ.சே.நி./ஊ.ந.நி. இற்கு பங்களிப்பு செய்வதாகும். அதிகாரசபை 2003 இல் நிறுவப்பட்டபோது, பணியாட்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்கள் பணியாட்களின் மொத்த சம்பளங்கள் ஊ.சே.நி./ஊ.ந.நி. பங்களிப்புகளை கணிப்பிடுவதற்கான தளமாக சேவையாற்றும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

02 மே 2024 இல் இடம்பெற்ற 199 ஆவது சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சபையின் தீர்மானத்தின் பிரகாரம், AAV/B/CAASL/AQ/2023/02 - கணக்காய்வு வினவலைத் தொடர்ந்து பணியாட்களின் மொத்த சம்பளத்தில் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. பணமனுப்பலை பிடித்துவைத்திருக்குமாறு தீர்மானிக்கப்பட்டதுடன் மே 2024 இலிருந்து ஆளுகைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு வரையறை செய்து ஊ.சே.நி./ஊ.ந.நி இனை கணிப்பிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சிக்கல் தொடர்பாக தொழிலாளர் பணிப்பாளர் நாயகத்திடமிருந்த ஒரு அபிப்பிராயத்தினைப் பெறுவதற்கு சபை தீர்மானித்துள்ளது. 13.05.2024 திகதியிடப்பட்ட பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு மறுமொழியாக தொழில் திணைக்களம் 31.07.2024 திகதியிடப்பட்ட கடிதம் இலக்கம் □□.□.□./□□/16/□□□□ □□□□/2024 இல் பின்வருமாறு அறிவித்துள்ளது. ஊ.சே.ந. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'உழைப்புகளாக' இனங்காணப்பட்டுள்ள ஆகக்குறைந்த பிரிவுகளில் மாத்திரமே தொழில் ஆணையாளர் தலையிடலாம், பணிக்கொள்பவர் ஊ.சே.நி. சட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள ஆகக்குறைந்த உழைப்புகள் வகைகளுக்கு மேலாக மற்றும் அப்பால் ஏதேனும் உழைப்புகளை செலுத்துவதற்கான தனியான விருப்புரிமையினைக் கொண்டுள்ளர்.

தொழில் திணைக்களத்தின் அபிப்பிராயமானது 30.08.2024 இல் இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன், சபையானது அதன் சாராம்சத்தை மற்றும் குறித்த சாராம்ச அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் ஒரு அபிப்பிராயத்தினை மேற்கொண்டுள்ளதுடன் அது சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் காணப்படுவதனால் சபையானது அதற்கு அப்பால் செல்லவியலாது. சபையானது 31 மே 2024 இல் இடம்பெற்ற 200 ஆவது சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை மாற்றமின்றி இருப்பதற்கு தீர்மானித்தது.

அதன்பின்னர், இவ்விடயமானது செப்டம்பர் 2024 இல் பொது நிறுவனங்கள் திணைக்களத்திற்கு மேலதிக வழிகாட்டலுக்காக அனுப்பிவைக்கப்பட்டதுடன், இறுதித் தீர்மானமானது இன்னமும் நிலுவையிலுள்ளது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024 இற்கான மறுமொழி

அதேநேரம், பணியாட்கள் இவ்விடயம் தொடர்பாக தொழில் திணைக்களத்திற்கு ஒரு முறைப்பாட்டினை மேற்கொண்டதுடன், தொழில் திணைக்களமானது CAASL இன் அதிகாரிகளை அழைத்து 09.08.2024 மற்றும் 03.12.2024 இல் ஒரு விசாரணையினை நடாத்தியது. எழுத்துமூல சமர்ப்பிப்பானது திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. 03.04.2025 திகதியிடப்பட்ட SID/D/D/148/2024 கடிதத்தின் பிரகாரம் தொழில் திணைக்களமானது ஊ.சே.நி. சட்டத்தின் பிரிவு 47 இன் கீழ் விளக்கப்பட்டுள்ளவாறு 'உழைப்புகள்' எனும் நோக்கெல்லையினுள் வருகின்றவற்றுள் ஏதேனும் கொடுப்பனவுகளுக்கு கழித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும் என குறிப்பிட்டது.

2024 மே மாதத்திலிருந்து இதுவரைக்கும் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. பங்களிப்பானது ஊ.சே.நி. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு வரையறை செய்து கணிப்பிடப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. பங்களிப்புகள் மொத்த அடிப்படை சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி என்பவற்றின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

(இ) எட்டு விமான நிறுவனங்களுள் CAASL ஐந்து விமான நிறுவனங்களிடமிருந்து வங்கி உத்தரவாதங்களைப் பெறக்கூடியதாயிருந்தது. CAASL தற்போது வழக்காடலுக்காக சட்ட நடவடிக்கையினை நாடுகின்றது.

(ஈ)

**இடைக்காலப் படி**

அதிகாரசபையானது 08.04.2022 இல் இடம்பெற்ற அதன் 180ஆவது சபைக் கூட்டத்தில் CAASL இன் அனைத்து பணியாட்களுக்கும் ஒரு தற்காலிக இடைக்கால படியாக ரூபா 25,000.- இனை செலுத்துவதை அங்கீகரித்தது. இந்தப் படியானது அனைத்து பணியாட்களுக்கும் செலுத்தப்பட்டதுடன், 2016 இலிருந்து அவர்களது சம்பளத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஒன்றும் காணப்படவில்லை. மேலும், வாழ்க்கைச் செலவானது மிகப்பெரியளவில் அதிகரித்துள்ளது. கடுமையான ஒழுங்குவிதிகளின் காரணமாக சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களமானது திறமையானவர்களை பணிக்கமர்த்த இயலாது உள்ளதுடன், சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களத்திற்கு, அதாவது 2002 இல் நிறுவப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு அதிக சுயாதிகாரம் வழங்கப்படல் வேண்டும்.

மேலும் கடந்த காலங்களில் CAA எவ்விதமான நட்டங்களுக்கும் ஆட்படவில்லை என்பதனை சபையானது அவதானித்ததுடன், 2022 இல் ரூபா 1000 மில்லியனை திரண்ட நிதியத்திற்கு பங்களிப்பு செய்துள்ளது. அத்துடன் பணியாட்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தனிச்சலுகையானது தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியில் மீளப்பெறப்படுமாயின் இதன் விளைவாக ஏற்படக்கூடிய பணியாட்கள் குழப்பநிலையானது நாட்டில் முக்கியமான வான்பயணவியல் துறையினை முடக்கி ஏற்கனவே அழுத்தமாயுள்ள நாட்டின் பொருளாதாரத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

மேற்குறிப்பிட்டவற்றை கருத்திலெடுத்ததன் பின்னர், சபையானது 01.02.2023 இல் இடம்பெற்ற அதன் 185 ஆவது கூட்டத்தில் இடைக்கால படியினை தொடர்வதற்கு உடன்பட்டது. எவ்வாறாயினும், இந்த தீர்மானமானது 08.04.2022 இல் இடம்பெற்ற 180 ஆவது கூட்டத்தில் ஒரு தற்காலிக நடைமுறையாக எடுக்கப்பட்டுள்ளதனால், அது எதிர்கால சம்பள மீட்டல்கள் / அதிகரிப்புகளினுள் உள்வாங்கப்படல் வேண்டும் என சபை தீர்மானித்தது.

இதன் பிரகாரம், 19.01.2024 இல் இடம்பெற்ற 196 ஆவது சபைக் கூட்டத்தில் ஒவ்வொரு பணியாளது இடைக்கால படியிலிருந்து ரூபா 10,000.- இனை கழித்து வாழ்க்கைச் செலவு படியினை அதிகரிப்பதற்கு தீர்மானித்தது. இது DMS சுற்றறிக்கை இலக்கம் 01/2024 மூலம் அதிகரிக்கப்பட்டது.

அதிகாரசபையானது மேற்குறிப்பிட்ட படியின் கொடுப்பனவிற்கான நிதி அமைச்சின் அங்கீகாரத்தினை பெறுவதற்கான நடவடிக்கையினை 07.05.2025 இல் இடம்பெற்ற 207 ஆவது சபைக் கூட்டத்தில் எடுத்துள்ளது. அங்கீகாரமானது நிலுவையிலுள்ளது.

**முகாமைத்துவ படி**

முகாமைத்துவ படியானது முகாமையாளர் தரத்திலுள்ள அதிகாரிகளுக்கு செலுத்தப்படுகின்றது (பொது திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு MM1-1 இற்கான சம்பள அளவுகோல்)
இது 19 சிரேஷ்ட சிவில் வான்பயணவியல் பரிசோதகர்களையும் அத்தரத்திலுள்ள 15 முகாமையாளர்களையும் உள்ளடக்குகின்றது.

அதிகாரசபையானது 29.03.2018 இல் இடம்பெற்ற 143 ஆவது கூட்டத்தில் போக்குவரத்து படியான ரூபா 20,000.- இற்கு பதிலாக முகாமையாளர்களுக்கு ஒரு மாதாந்த படியாக ரூபா 50,000.- இனை அங்கீகரித்தது.

அதிகாரசபையானது 01.02.2023 இல் இடம்பெற்ற 185 ஆவது கூட்டத்தில் பின்வரும் காரணங்களுக்காக முகாமையாளர்களின் படிகள் கொடுப்பனவினை தொடர்வதற்கு தீர்மானித்தது. இந்தப் படியானது 2018 இலிருந்து செலுத்தப்படுவதனால் அதிகாரசபைக்கு இந்த தீர்மானத்தை மாற்றவியலாதுள்ளது.

- தொடர்வுத் திட்டம் மற்றும் உருமாற்றத்தினை வினைத்திறனாக அமுலாக்குவதற்காக மத்திய மட்டத்திலான முகாமையாளர்களை சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளுக்காக சீர்படுத்துதல்;
- இந்த வகையான பணியாட்கள் CAASL இன் பணிப்பாளர்களுக்கு உடனடியாக கீழுள்ளதுடன், வருடாந்த செயற் திட்டங்களை பகுப்பாய்தல், திட்டமிடுதல் நிறைவேற்றலுக்கு எதிர்வுகூறல் போன்ற பல்வேறு கடமைகளை நிறைவேற்றவேண்டிய தேவை உள்ளதுடன், இவர்களது பணியிடல் மணித்தியாலங்கள் பொதுவான அலுவலக நேரங்களுக்கு வரையறை செய்யப்பட்டதல்ல. அவர்கள் கிழமை நாட்களில் நீடித்த நேரங்கள் வேலை செய்யவேண்டியதாயின் மற்றும் வாரஇறுதி நாட்களில் கடமைக்கு அழைக்கப்பட்டால், CAASL வழமையான சூழ்நிலைகளின் கீழ் போக்குவரத்து வசதியினை வழங்கவேண்டிய தேவை உள்ளது. இந்தப் படியின் கொடுப்பனவுடன் CAASL இனால் போக்குவரத்து வசதிகளை வழங்கவேண்டிய தேவைப்பாடு காணப்படுவதில்லை என்பதுடன் இது CAASL இற்கு ஒரு செலவுச் சேமிப்பாகும்;
- அதிகாரசபையின் சேவைக்கு திறமையான அதிகாரிகளை வைத்திருத்தல்;

  பணியின் தனித்துவமான தன்மையின் காரணமாக, சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பு (ICAO) நிறுவனத்தில் முறைமைப்படுத்தல் அதிகாரசபையின் பணியாட்களை தக்கவைப்பதற்கு சந்தை பெறுமதியுடனான ஊதியம் வழங்குவது ஒரு கட்டாயத் தேவை எனக் குறிப்பிட்டுள்ளது. பாதுகாப்பு மேற்பார்வை கையேடானது (ஆவணம் 9734) பாதுகாப்பு மேற்பார்வை கடமைகளை செயலாற்றுவதற்கு தகைமையுடைய ஆளணியினர் பணிக்கமர்த்தப்பட்டு நிறுத்திவைக்கப்படுவதனை உறுதிசெய்யதவற்காக அரசாங்கமானது ஊதியம் மற்றும் சேவையின் நிபந்தனைகள் போன்ற அவசியமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் என குறிப்பிடுகின்றது;
- போக்குவரத்திலான கவலைகள் இன்றி ஒப்படைக்கப்பட்ட கடமைகள் மற்றும் செயற்பாடுகளை பயனுறுதியாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதனை இயலுமையாக்குவதற்கு உத்தியோகபூர்வ அசைவுகளை சுயாதீனமாக முறைமைப்படுத்துவதற்கு முகாமைத்துவப் பிரிவிலுள்ள பணியாட்களுக்கு உதவுகின்றது;
- இந்த அதிகாரிகள் அவர்களது சொந்த போக்குவரத்து ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் காரணமாக, அதிகாரசபையானது போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் நடைமுறை சிக்கல்களுக்கோ மற்றும் நிதிச் செலவினங்களுக்கோ முகங்கொடுக்கத் தேவையில்லை;

- கொடுப்பனவினை நிறுத்துதல் நிறுவனத்தின் நிலையினையும் மற்றும் முகாமைத்துவ வகையில் உள்ள அதிகாரிகளின் வாழ்க்கைத் தரத்தையும் கடுமையாக பாதிக்கும். மேலும், இந்த வகையில் உள்ள அதிகாரிகள் விரிவாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் CAASL இனை விட்டு விலகினால், நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு அது பேரிழப்பாகும் என்பதுடன் சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பினால் நடாத்தப்படும் கணக்காய்வில் கடுமையான கண்டுபிடிப்புகளை விளைவிக்கும்;

- இந்த படியின் ஆரம்ப கட்டத்தில் அனைத்து முகாமைத்துவ வகையான அதிகாரிகளும் அவர்களது சொந்த போக்குவரத்து முறையினை ஏற்பாடு செய்யுமாறு ஊக்குவிக்கப்பட்டதுடன், அவர்கள் அதிகாரசபையிடமிருந்து வாகன கடன் திட்டத்தின் கீழ் கடன்களை எடுப்பதன்மூலம் வாகனங்களைக் கொள்வனவு செய்தார்கள். குறிப்பிட்ட படியானது நிறுத்தப்பட்டால், அவர்கள் கடன் தவணைகளை செலுத்துவதில் சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும்;

- சிரேஷ்ட சிவில் வான்பயணவியல் பரிசோதகர்களினால் வான்பயணவியல் துறையில் கண்காணிப்பினை தொடர்வதற்கு முகாமையாளர்களது படிகள் மிகவும் உறுதுணையாக உள்ளது, ஏனெனில் அவர்கள் சொந்த போக்குவரத்து ஏற்பாடுகளை கொண்டிருப்பதனாலாகும்;

- இந்த அதிகாரசபையானது மேற்குறிப்பிட்ட படியின் கொடுப்பனவிற்காக நிதி அமைச்சிடமிருந்து அங்கீகாரத்தை பெறுவதற்கு 07.05.2025 இல் இடம்பெற்ற 207 ஆவது சபைக் கூட்டத்தின் சம்மதத்துடன் நடவடிக்கை எடுத்துள்ளது. அங்கீகரமானது நிலுவையிலுள்ளது.

**விசேட படி**

இந்த நிலையத்திற்கான செம்மையாக்கல் படி ரூபா 5,000.- 22.02.2018 இல் இடம்பெற்ற 142 ஆவது கூட்டத்தில் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. தலைமைக் காரியாலயத்தை கொழும்பிலிருந்து கட்டுநாயக்காவிற்கு இடம் மாற்றியதனால் பணியாட்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்தை சிறுமமாக்குவதற்காக இந்தப் படியானது இடம் மாற்றத்தின்போது சேவையில் இருந்த பணியாட்களுக்கு மாத்திரமே செலுத்தப்படுகின்றது. இதன் பிரகாரம் ஜனவரி 2018 இற்குப் பின்னர் அதிகாரசபையில் இணைந்த பணியாட்களுக்கு இந்த படியானது செலுத்தப்படமாட்டாது.

அதிகாரசபையானது 07.05.2025 இல் இடம்பெற்ற 207 ஆவது சபைக் கூட்டத்தின் சம்மமதத்துடன் மேற்குறிப்பிட்ட படியின் கொடுப்பனவிற்கு நிதி அமைச்சின் அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளது. அங்கீகாரமானது நிலுவையிலுள்ளது.

(உ)

**1. தொழில்நுட்ப படிகள்**

"சர்வதேச சிவில் வான்பயணவியலிலான வழக்கமுறைமைகளின் கீழ் அரசின் மேல் ஒப்படைக்கப்பட்டுள்ள சர்வதேச கடப்பாடுகளின் வினைத்திறனான நிறைவேற்றலுக்காக சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பாதுகாப்பு மேற்பார்வை திறன்களை பலப்படுத்துவதற்கான அவசரத் தேவை" என்ற தலைப்பில் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட 09.04.2015 திகதியிடப்பட்ட கடித இலக்கம் DMS/1748 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் விசேட தொழில்நுட்ப படியின் கொடுப்பனவிற்கான மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை மற்றும் பணியாட்தொகுதி குழுவின் அங்கீகாரத்துடன் விசேட தொழில்நுட்ப படியானது செலுத்தப்படுகின்றது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட தொழில்நுட்ப படியின் கொடுப்பனவுகள் பின்வரும் தீர்மானங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது.

| பதவி | விசேட தொழில்நுட்ப படியினை செலுத்துவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானம் |
|---|---|
| சிரேஷ்ட சிவில் வான்பயணவில் பரிசோதகர் (வானூர்தி வானறைப் பாதுகாப்பு) | 26.07.2004 இல் இடம்பெற்ற 202 ஆவது சபைக் கூட்டத்தில் பின்வரும் காரணிகள் கருத்திலெடுக்கப்பட்டன;<br>• ஒரு நடைமுறை உரிமத்தினை பராமரிப்பதற்கு ஒரு பதவியில் உள்ளவர் ஒரு விமான நிறுவனத்தினால் பணிக்கொள்ளல் வேண்டும், இவர் CAASL இனால் பணிக்கமர்த்தப்பட்டுள்ளதால் இது சாத்தியமாகாது.<br>• பெறப்பட்ட இரண்டு விண்ணப்பங்களில், அவரது விண்ணப்பம் உள்ளடங்கலாக, பதவியில் உள்ளவர் மாத்திரமே சிரேஷ்ட சிவில் வான்பயணவியல் பரிசோதகர் (வானூர்தி வானறை பாதுகாப்பு) பதவிக்கான தகைமையினைக் கொண்ட விண்ணப்பதாரியாவார். பொருத்தமான மற்றும் தகைமையுடைய ஆளணியினரை கவர்வதில் காணப்படும் சிரமமான சூழமைவில் விசேட தொழில்நுட்ப படியினை பிடித்துவைத்திருத்தல் பணியாட்களை ஊக்கங்கெடச்செய்து அதிகாரசபையிலிருந்து அவர்களது சாத்தியமான விலகலுக்கு வழிவகுக்கும். |
| விமான நடவடிக்கைகள் இயக்குனர் | 29.12.2023 திகதியிடப்பட்ட பணியாட்டொகுதி தீர்மானம், பின்வரும் காரணிகளை கருத்திலெடுத்தது;<br>• பதவியில் இருப்பவர் 22 வருடங்களுக்கு மேலாக அனுபவத்தைக் கொண்ட ஒரு புகழ்பெற்ற வர்த்தக விமானியாவார். இவரது பரந்தகாலமானது ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் எயர்பஸ் A330 இல் கெப்டனாக சேவையாற்றியமை, எத்தியாட் எயார்லைன்சில் A330 இன் கெப்டன் மற்றும் பிரதம விமானிக்கான உதவியாளர் A 340 ஆக சேவையாற்றியமையை உள்ளடக்கும்.<br>• ஆசிய வான்பயணவியல் மத்தியநிலையத்தில் தரை பயிற்றுவிப்பாளர்<br>• 10.05.2007 இலிருந்து வான் போக்குவரத்து விமான உரிமம் (ATPL) வைத்திருப்பவர். |

12.03.2024 திகதியிடப்பட்ட அமைச்சரவை அங்கீகார இலக்கம் 24/0436/628/024 பந்தி III இன் பிரகாரம் இந்த அதிகாரசபையானது விசேட தொழில்நுட்ப படியினை கொட்டகதெனிய அவர்களுக்கு செலுத்தியது, முன்னர் DGCA மற்றும் CEO பதவிகளுக்கு செலுத்தப்பட்டது. துறைமுகம், கப்பல் மற்றும் வான்பயணவியல் அமைச்சின் செயலாளருக்கு 22.03.2024 திகதியிடப்பட்ட கடித இலக்கம் AD/1/1/365/1மூலம் அறிவிக்கப்பட்டது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024 இற்கான மறுமொழி

## 2.2.3

(அ)

**பெருநிறுவன விதிகள் -**
கணக்காய்வு கண்டுபிடிப்புகளுக்கான பரிகார நடவடிக்கைகளில் ஒன்றாக CAA நிறுவன மறுசீரமைப்பினை அறிமுகப்படுத்த வேண்டியதாயிற்று. இவை டிசம்பர் 2010 இல் நடாத்தப்பட்ட அரசின் பாதுகாப்பு மேற்பார்வை கணக்காய்வின் விளைவாக சர்வதேச சிவில் வான்பயணவியல் ஒழுங்கமைப்பினால் எழுப்பப்பட்டவையாகும். இதன் காரணமாக 2002 இன் 34 ஆம் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 40 (1) இனை அதிகாரசபையினால் பெருநிறுவன விதிகள் மேற்கொள்ளப்பட்டு துறைமுகம் மற்றும் வான்பயணவியலுக்கு பொறுப்பான மாண்புமிகு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானி இலக்கம் 1748 02.03.2012 இல் வர்த்தமானியிடப்பட்டது.

இதன் பிரகாரம், CAASL பெருநிறுவன விதிகளை உள்ளடக்கிய மறுசீரமைப்பு பிரேரணைகளை உரிய அமைச்சினூடாக பொது திறைசேரிக்கான அங்கீகாரத்திற்கு 11.12.2012 இல் அனுப்பிவைத்தது. எவ்வாறாயினும், திறைசேரியானது CAASL இன் பிரேரணைக்கு பதிலளிக்கவில்லை. பதிலாக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது 22.11.2013 திகதியிடப்பட்ட கடிதம் இலக்கம் DMS. /2/1 இன் மூலம் 22.09.2006 திகதியிட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 30 இன் ஏற்பாடுகளை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தியது. இச்சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான அங்கங்கள் மற்றும் முற்றாக அரச உடைமையான கம்பனிகள் மறுசீரமைக்கப்பட்டு ஒரு பொதுவான சம்பளக் கட்டமைப்பினை கொண்டிருத்தல் வேண்டும். CAASL இன் மறுசீரமைப்பிற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், இது அரசாங்க அறிவுறுத்தல்களுக்கு சீரமைவாக உள்ளது. இதன் பிரகாரம், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களமானது பின்வரும் கடிதத் தொடர்புகளை அங்கீகரித்தது.

ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் விவரங்கள் திட்டம் (SLCAP 5005)- முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது - 23.11.2015 திகதியிடப்பட்ட கடிதம் இலக்கம் DMS/1748-SOR

II. பணியாட்கள் சம்பளங்கள் - CAASL அரச கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான அங்கங்கள் மற்றும் முற்றாக அரச உடைமையான கம்பனிகளின் பணியாட்களது சம்பள திருத்தங்கள் 2006 தொடர்பான 22.09.2006 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 30 உடன் இணங்கியுள்ளது.

III. பணிநிலை - முகாமைத்துவச் சேவைகள் திணைக்களமானது 22.11.2013 திகதியிடப்பட்ட கடிதம் இலக்கம் DMS/F1/52/1 மூலம் CAASL இன் பணிநிலைப் பிரிவினை அங்கீகரித்துள்ளது.

IV. நிறுவன கட்டமைப்பு - 22.11.2013 திகதியிடப்பட்ட கடிதம் இலக்கம் DMS/F1/52/1 மூலம் மறுசீரமைப்பிற்காக முகாமைத்துவச் சேவைகளினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் நிறுவன கட்டமைப்பானது அதிகாரசபையினால் அமுலாக்கப்பட்டது.

V. பணியாளர் பயிற்சிக் கொள்கை - பணியாட்கள் பயிற்சிக் கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் கையேடானது 30 ஜுன் 2016 இல் இடம்பெற்ற 123 ஆவது சபைக் கூட்டத்தின் அங்கீகாரத்தின் மூலம் அமுலாக்கப்பட்டது.

**நிதியியல் விதிகள் -** தயாரிப்பானது நிறைவுற்றுள்ளதுடன் முடிவுறுத்தலானது 2025 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.2.4

(அ) இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது நடைமுறையிலுள்ள வீரவிலவில் அமைந்துள்ள சுற்று பங்களாவினை புதுப்பிப்பதற்கு உரிய நேரத்திலான மற்றும் அவசியமான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது. இந்தத் தீர்மானமானது இந்த ஆதனம் காலப்போக்கில் கணிசமானளவு சீர்குலைந்துள்ளதனால் பராமரிப்பதற்கான அவசரத் தேவைக்கு பதிலளிக்கும் விதமாக மேற்கொள்ளப்பட்டது. பங்களாவின் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதனால், பணியாள் அங்கத்தவர்களோ வாடிக்கையாளர்களோ அங்கு விஜயம் செய்வதற்கோ தங்குவதற்கோ தயக்கம் காட்டுவதனால் அதிகாரசபைக்கான சாத்தியமான வருமானத்தின் இழப்பினை விளைவிக்கின்றது.

அரசாங்க கொள்முதல் வழிகாட்டிகள் 7.12.2 இன் பிரகாரம் தேசிய போட்டித்தன்மை விலைகேட்டலின் கீழ் விலைக் குறிப்புகள் அழைக்கப்படும்போது, ஒரு விலை கேட்டல் மாத்திரம் பெறப்பட்டால் கூட கொள்முதல் செயன்முறையானது சில நிபந்தனைகளின் கீழ் தொடரப்படலாம். இந்த வழிகாட்டியானது கொள்முதலானது வரையறையான போட்டித்தன்மை தோன்றும் சூழ்நிலைகளிலும் அது நியாயமானதாகவும் வினைத்திறனாகவும் காணப்படுவதனை உறுதிசெய்கின்றது. DPC பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் நிலவிய நிலைமையின் அடிப்படையில் வீதங்களை அங்கீகரித்துள்ளது. எனவே, விலைகள் இரண்டிலிருந்து மூன்று மடங்கு அதிகரித்துள்ளதை தெரிந்துகொண்டு விலைகேட்பவருடன் ஒரு கீழ்நோக்கிய விலை திருத்தத்திற்கு பேரம்பேசுவது நடைமுறையில் சாத்தியமற்றதாகும். மேலாக, விலைகேட்பவர் அவர்களது 13 மார்ச் 2023 திகதியிடப்பட்ட கடிதத்தில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு (CAASL) கட்டுமானத் துறையின் சிதைவிற்கு இட்டுச்சென்ற நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட உயர் விலை உறுதியின்மை மற்றும் தளம்பல்களின் காரணமாக அவர்கள் சந்திக்கும் சவால்களை அறிவித்தார்கள். நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் கட்டுமானத் துறையின் சிதைவினை கருத்திற்கொண்டு CAASL கொள்முதல் அலுவலகமானது கொள்முதல் குழுத் திணைக்களத்திடமிருந்து (DPC) வழிகாட்டலை வேண்டியது.

நாட்டிலுள்ள நடைமுறை சந்தை நிலைமைகள் மற்றும் கொள்முதல் வழிகாட்டிகளுடனான கடுமையான ஒட்டியொழுகலின் அடிப்படையில், DPC ஒப்பந்தத்தினை அதே விலைகேட்பவருக்கு மீள்வழங்குவதற்கான முக்கியமான தீர்மானத்தை மேற்கொண்டது. இத்தீர்மானமானது சந்தை இயக்காற்றல், முன்னைய கொள்முதல் நடைமுறைகள் மற்றும் மிகவும் முக்கியமாக அதே விலைகளுடன் ஒட்டியொழுகுவதற்கான விலைகேட்பவரின் உடன்பாடு போன்ற பல்வேறு காரணிகளை கருத்திலெடுத்து நிலைமையின் ஒரு விரிவான மதிப்பீட்டின் பின்னர் எட்டப்பட்டது. இது CAASL இற்கு மிகவும் நன்மையானதாகும்.

முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒப்பந்ததாரருடன் கைச்சாத்திடப்பட்டது. பணிப்பாளர்கள் சபையானது புத்தாக்கத்திற்கு ரூபா 25 மில்லியன் பாதீட்டினை அங்கீகரித்ததுடன், அது ஒதுக்கப்பட்ட வரையறையினுள் நிறைவு செய்யப்பட்டது. TEC இன் பரிந்துரை மற்றும் அங்கீகரிக்கு அதிகாசபையிடமிருந்தான முறையான அங்கீகாரத்தின் பின்னர் மேலதிக வேலைகள் ஒப்பந்ததாரியினால் நிறைவு செய்யப்பட்டது.

விலை கேட்பவர் C7 மட்டத்தில் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) பதிவு செய்துள்ளார். CIDA என்பது இலங்கையின் கட்டுமானத் துறையினை ஆளுகை செய்யும் மற்றும் முறைமைப்படுத்தும் அதிகாரமுள்ள அங்கமாகும் என்பதுடன், அனைத்து பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களும் கடுமையான தர நியமங்கள், நம்பகத்தன்மை மற்றும் தொழில்முறையினை சந்திப்பதனை உறுதிப்படுத்துகின்றது. C7 பதிவீடானது ஒரு உயர்மட்டத்திலான திறமை மற்றும் நம்பகத்தன்மையினை குறிப்பிடுவதுடன், இந்த கடுமையான நியமங்களுக்கு விலைகேட்பவரின் ஒட்டியொழுகலை பிரதிபலிக்கின்றது.

ஆரம்ப திட்டத்தின் நோக்கெல்லைக்கு ஒரு வேறுபாடாக நீடிப்பானது வழங்கப்பட்டது, இது 12 குளியலறைகளில் சுவர் ஓடு வேலையின் கட்டுமானத்தினை நிறைவேற்றுவதற்காகும். இந்த வேலையானது ஆரம்பத்தில் ஒப்படைக்கப்பட்ட வேலைகளிலிருந்து பரஸ்பரமாக தனித்துவமானது

ஆகும், எனவெ ஆரம்ப திட்டத்திற்கு பொருத்தமான காலக்கெடுவானது வேறுபட்ட வேலைக்கு பிரயோகிக்கப்படமாட்டாது.

கட்டிடத்தின் கட்டுமானத்தின் எட்டு வருடங்களின் பின்னரான ஒரு விரிவான பரிசோதனையானது, தொட்டிகள், மலசலகூடங்கள் மற்றும் ஏனைய குளியலறை துணைப்பொருட்கள் உள்ளடங்கலான சுகாதாரப் பொருட்களில் கடுமையான சீர்குலைவினை தெளிவாக்கியது. இனங்காணப்பட்ட சிக்கல்கள், நிறச்சிதைவு, எரிவு மற்றும் வெடிப்புகள் என்பனவாகும். நிறச்சிதைவானது பொருட்களின் சிதைவினையும், எரிவு கடுமையான காலநிலைக்கான வெளிப்பாட்டினை குறிப்பிடுவதுடன் வெடிப்புகள் செயற்பாடு மற்றும் அழகியல் ஆகிய இரண்டையும் சமரசம் செய்கின்றது. இந்த பிரச்சனைகள் சுகாதாரப் பொருட்களின் பயன்பாடு மற்றும் தோற்றத்தினை தாழ்த்தியதுடன் அவற்றின் மாற்றீடின் அவசியத்தினை குறிகாட்டியது. சுகாதார நியமங்கள், செயற்பாடு மற்றும் காட்சி வசீகரம் என்பவற்றை மீட்டமைப்பதற்கு புதிய, உயர்தரமான பொருத்திகள் அவசியமாகக் கருதப்படுவதுடன், பங்களாவானது அதன் குடியிருப்பாளர்களுக்கு நல்ல நிலைமையில் இருப்பதனையும் CAASL இன் பிரதிமையினை உறுதிப்படுத்துகின்றது.

## 2.3 ஏனைய விடயங்கள்

(அ)

பணியாட்கள் மற்றும் நிர்வாக விதிகளது கையேடானது (SLCAP 5000) 18.09.2014 இல் அமைச்சரவை அமைச்சர்களினால் அங்கீகரிக்கப்பட்டது. அத்தியாயம் 14 முற்பணங்கள் மற்றும் கடன்களின் பந்தி 14.1 பின்வருமாறு குறிப்பிடுகின்றது "கடன் தொகைகள் பணவீக்கம் மற்றும் CAASL இன் நிதியியல் ஆரோக்கியத்தினை கணக்கிலெடுத்து திருத்தியமைக்கப்படலாம், இவை பொது திறைசேரியின அங்கீகாரத்துடன் மூன்று வருடங்களுக்குக் குறையாத இடைவெளியினை கொண்டிருத்தல் வேண்டும்"

இதன் பிரகாரம், அதிகாரசபையானது பண்டிகை முற்பணத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளது. அதிகாரசபையானது முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டர் சைக்கிள்களது கொள்வனவுக்கான கடன்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதுடன். பொது திறைசேரியின் அங்கீகாரமானது செயன்முறையிலுள்ளது. அத்தியாயம் 14 இல் குறிப்பிட்ட பத்து மாத சம்பளக் கடன், மோட்டார் வாகனக் கடன், ஆதனக் கடன் போன்ற ஏனைய கடன்கள் பணியாட்களின் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

பணியாட்கள் மற்றும் நிர்வாக விதிகளின் கையேட்டின் (SLCAP 5000) மீளாய்வு செயன்முறையானது அதன் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. பணியாட்கள் மற்றும் நிர்வாக விதிகள் தொடர்பாக அதிகாரசபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் திருத்தியமைக்கப்பட்ட SLCAP 5000 இல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் தேவையான அங்கீகாரங்கள் செயன்முறையாக்கப்பட்டவண்ணம் உள்ளது.

(ஆ) 07 செப்டம்பர் 2023 இல் இடம்பெற்ற பணியாட்கள் குழுவானது ஒரு பணியாளுக்கு சம்பளமற்ற ஒரு வருட லீவினை 15.10.2023 முதல் அங்கீகரித்தது. இது பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக அவசியமான மருத்துவ பராமரிப்பிற்கு உட்படுவதற்காகும்

- சம்பளமற்ற காலத்தின்போது மாதாந்த வட்டியினை கடன் மீதிகளுடன் திரட்டி அவர் வேலைக்குத் திரும்பும் திகதியிலிருந்து மீட்பதற்கு.

மீட்டல் செயன்முறையானது ஜனவரி 2025 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், கடனானது மீள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) மருத்துவ மற்றும் கல்வி நோக்கங்களுக்கான விசேட கடன்கள் அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் பணியாட்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த கடன் திட்டத்தினை தற்போது திருத்தியமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பணியாட்கள் மற்றும் நிர்வாக விதிகள் (SLCAP 5000) கையேட்டினுள் ஒருங்கிணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

(ஈ) மாதாந்த போக்குவரத்துப் படியானது கனிஷ்ட முகாமையாளர் (JM1-1) மற்றும் அமுலாக்கல்/வலியுறுத்தல்;/நீடித்தல் தரங்கள் (MA 5-3) மற்றும் அதற்கு கீழுள்ளவர்களுக்கு வதிவிடத்திலிருந்து பணியிடத்திற்கு நாளாந்தம் பயணம் மேற்கொள்வதற்கு துணையளிப்பதற்காக வழங்கப்படுகின்றது. இந்தப் படியானது 2002 இலிருந்து இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது (CAASL) கொழும்பு நகரத்தினுள் அமைந்துள்ளபோதிலிருந்து செலுத்தப்பட்டது (கொழும்பு 01 மற்றும் கொழும்பு 03).

எவ்வாறாயினும் CAASL தலைமைக் காரியாலத்தினை கொழும்பிலிருந்து கட்டுநாயக்காவிற்கு இடமாற்றல் செய்வதற்கான தீர்மானத்தைத் தொடர்ந்து பணியாளர்களின் அதிருப்தி அதிகரித்தது. இது அவர்களது நாளாந்த பயணம் மற்றும் வாழ்க்கை முறையில் அதிகரித்த சுமையினை இட்டதனலாகும். இதற்கு பதிலளிக்கும் விதமாக CAASL முகாமைத்துவமானது பணியாட்கள் முகங்கொடுக்கும் சவால்களை தணிப்பதற்கும் இடமாற்றத்தின் காரணமாக மாற்றத்தை தணிப்பதற்கு பல நடவடிக்கைகளை எடுப்பதற்கு வற்புறுத்தப்பட்டது.

CAASL இன் தலைமைக் காரியாலயத்தை கட்டுநாயக்காவிற்கு இடமாற்றியதுடன், சபையானது 22.02.2018 இல் இடம்பெற்ற அதன் 142 ஆவது சபைக் கூட்டத்தில் பணியாட்களிலான அதிகரித்த போக்குவரத்து சுமையினையும் அவர்களது வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்து நகர வேண்டியுள்ளதனையும் அறிந்துகொண்டது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, சபையானது அனைத்து பணியாட்களுக்கும் நிலையம் திருத்தப் படியாக ரூபா 5,000 இனை அங்கீகரித்தது. இது மேலதிக பிரயாணச் செலவுகள், நேரம் மற்றும் கொழும்பின் மத்தியிலிருந்த மிகவும் தொலைவிலுள்ள பகுதிக்கான இடமாற்றலின் காரணமாக தேவைப்படும் வாழ்க்கைமுறை திருத்தங்கள் என்பவற்றுக்கு பணியாட்களுக்கு இழப்பீடு அளிக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. இது 2018 இற்கு முன்னர் CAASL இல் உள்ள பணியாட்களுக்கு மாத்திரமே பொருந்தும்.

மேலாக, சபையானது 29 மார்ச் 2018 இல் இடம்பெற்ற அதன் 143ஆவது சபைக் கூட்டத்திலும், 30 மே 2018 இல் இடம்பெற்ற அதன் 145 ஆவது கூட்டத்திலும் இரண்டு குறிப்பிட்ட பணியாட்களுக்கு பிரயாண வசதிகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. இது பணியிடத்திற்கு வருவதற்கு பல இணைப்பு பேருந்து பயணங்கள் தேவையான மற்றும் கணிசமான பிரயாண நேரம் தேவையானவர்களுக்காகும்:

1. கொழும்பின் தெற்கு பாகத்திலிருந்து பயணிக்கும் பணியாட்களுக்கு
2. ஆனமடுவ பகுதியில் வசிக்கும் பணியாட்களுக்கு,

உதாரணமாக, கொட்டாவயில் வசிக்கும் ஒரு பணியாள் முன்னர் கொழும்புக்கு 45 நிமிடங்களினுள் பயணித்தார். எவ்வாறாயினும், கட்டுநாயக்காவிற்கு இடம்மாற்றம் செய்ததன்பின்னர் பயண நேரமானது இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தது. அலுவலக போக்குவரத்து வசதியளித்தல் (இரண்டு நியமிக்கப்பட்ட பேருந்துகள் ஊடாக) இந்த சிரமத்தை தணிப்பதற்கு உதவியதுடன் பணியாளது ஆக்கத்திறன் மற்றும் நேரம்தவறாமை சமரசம் செய்யாதிருப்பது உறுதிசெய்யப்பட்டது.

போக்குவரத்து சேவையானது ஒரு செலவு பங்கீட்டு அடிப்படையில் செயலாற்றப்பட்டதுடன், அவர்கள் ஏறும் இடத்தைப் பொறுத்து ஒரு நிலையான தொகை பங்குபற்றும் பணியாட்களிடமிருந்து மாதாந்தம் கழிக்கப்படுகின்றது. பிரயாணப் படியானது பிரயாண வசதியிலிருந்து வேறுபட்டது என்பதை குறிப்பிடுவது முக்கியமாகும். படியானது வதிவிடத்திலிருந்து அலுவலகத்திற்கு பயணிப்பதற்கு துணையளிப்பதற்காகவும், பயணச் சேவைகள் ஒரு வரையறையான பாதையில் மாத்திரம் செல்வதுடன், பணியாட்கள் நியமித்த பேருந்து ஏற்றும் இடம் வரைக்குமான பயணத்தின் முதல் பகுதியை அவர்கள் சொந்தமாக முகாமைப்படுத்தல் வேண்டும். அதனைத் தவிர பிரயாணப் படியானது

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024 இற்கான மறுமொழி

அனைத்து பணியாட்களுக்கும் பொருத்தமான ஒரு பொது படியாகும் ஆனால் குறித்த வசதியானது இனங்காணப்பட்ட ஒரு தனியான பணியாட்கள் குழுவுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது. இந்த வசதியானது கனிஷ்ட முகாமையாளர் (JM1-1) மற்றும் அமுலாக்கல்/வலியுறுத்தல்/நீடித்தல் தரங்கள் (MA 5-3) மற்றும் அதற்கு கீழுள்ள வகையான பணியாளர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

மேலும் இந்த வசதியானது ஆட்சேர்ப்பிற்கு ஒரு ஊக்குவிப்பாக செயற்பட்டதுடன், நிறுவனத்தின் அமைவிடமானது பிரதான நகரத்தின் மத்தியிலிருந்து தூரத்தில் இருந்தபோதிலும் இது பணியாட்களை கவர்வதற்கும் அவர்களை தக்கவைப்பதற்கும் துணைபுரிந்தது.

கணக்காய்வு வினவலுக்கு பதிலளிக்கும் விதமாக,SLCAP 5000 இன் பிரிவு 18.3.2 ஒவ்வொரு ஐந்தாண்டும் பிரயாணப் படியினை 10% ஆல் மீட்டியமைப்பதற்கு அனுமதிக்கின்றது. பிரயாணப் படிக்கும் போக்குவரத்து சேவைகளுக்காக மாதாந்தம் கழிக்கப்படும் மெய்யான தொகைக்கும் இடையே எவ்விதமான தொடர்பும் இல்லை என்பது வலியுறுத்தப்படல் வேண்டும். இருந்தபோதிலும், நடைமுறையிலுள்ள பொருளாதார சூழல் மற்றும் பணியாட்களிலான சாத்தியமான நிதியியல் சுமையினை கணக்கிலெடுத்து சமீப வருடங்களில் கழித்தல்களுக்காக எவ்விதமான திருத்தமும் அமுலாக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், மாதாந்த கழித்தல்களை 10% ஆல் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இது பிரயாணப் படியிலான 10% அதிகரிப்பிற்கு சீரமைவாகும் என்பதுடன் SLCAP 5000 இன் பிரிவு 18.3.2(b) இன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு டிசம்பர் 2025 இன் இறுதியில் அமுலாக்குவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 16.05.2025 திகதியிடப்பட் கடித இலக்கம் AD/2/3/1 இன் மூலம் நிலையம் திருத்த படியான ரூபா 5,000.- கொடுப்பனவினை (இது கணக்காய்வு வினவலில் கஷ்டப் படி என குறிப்பிடப்பட்டுள்ளது) வழங்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது.

நிறைவாக, பிரயாணப் படியின் தொடர்ச்சியான வழங்கல் மற்றும் வசதியானது நியாயப்படுத்தப்பட்டுள்ளதுடன், பணியாட்கள் மையமான கொள்கையானது நியாயத்தன்மை, அணுகக்கூடியதன்மை மற்றும் CAASL இன் பணியாட்தொகுதியில் செயற்பாட்டு வினைத்திறனை உறுதிசெய்வதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இது CAASL இன் எவ்விதமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறவில்லை.

(உ) CAASL இன் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பலாலி விமானநிலையத்தின் அபிவிருத்திக்கான ஒரு தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணமாக ரூபா 170.6 மில்லியன் காணப்படுகின்றது. இதற்கு CAASL, AASL இனால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களை சரிபார்த்து கணக்கிணக்கம் செய்யும் செயன்முறையிலுள்ளது.

**(ஊ)** உரிமமளித்தல் முறைமை

ஆரம்ப உரிமமளித்தல் முறைமையானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் மென்பொருள் அபிவிருத்தி மத்தியநிலையம், கணினியியல் பள்ளியினால் (UCSC) விருத்திசெய்யப்பட்ட ஒரு தனித்துவமான மென்பொருள் முறைமையாகும். உரிமமளித்தல் பிரிவின் வேண்டுதலுக்குமைய தொடர்ச்சியான பராமரிப்பும் முறைமைக்கான உறுதுணையும் UCSC பணியாட்களினால் வரலாற்று ரீதியாக வழங்கப்பட்டன. ஆரம்ப விருத்தியாளராக UCSC மென்பொருளின் அறிவுசார் சொத்துரிமையினைக் கொண்டுள்ளது.

விமானிகள், வானூர்தி பராமரிப்பு பொறியாளர்கள், வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் வானறைப் பணியாளர் அங்கத்தவர்களுக்கான உரிமங்களை வழங்குவதில் இந்த முறைமையின் முக்கிய பங்கினைக் கருத்திற்கொண்டு, முறைமையின் நம்பகத்தன்மை மற்றும் தொடர்ச்சியானது கடுமையாக பராமரிப்பது தவிர்க்கவியலாததாகும்.

கொள்முதல் குழு திணைக்களத்தின் (DPC) கூட்டக் குறிப்புகளின் பிரகாரம் முறைமையின் ஆரம்ப அபிவிருத்தி மற்றும் பராமரிப்பில் விசேடத்துவ அறிவினையும் அதன் கட்டமைப்புடனான பரிச்சயத்தையும் UCSC பணியாட்கள் கொண்டுள்ளார்கள். இதன் பிரகாரம் முறைமையின் தரமுயர்த்தலை அதே அணிக்கு ஒப்படைப்பது மிகவும் வினைத்திறனானதும் செலவுச் சிக்கனமான செயலாகும் என DPC தீர்மானித்துள்ளதுடன், இது அவசியமற்ற நேரம், பணம் மற்றும் வளங்களின் செலவழிப்பினைத் தவிர்க்கும்.

மேலும், DPC கூட்டக் குறிப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளவாறு, UCSC இன் ஆய்வு மற்றும் ஆலோசனைச் சேவைகளை தொழில்முறையாக்குவதற்காக நிறுவப்பட்ட கம்பனியான தீக்சன, பல்கலைக்கழகத் துறையில் முன்னோடி நிறுவனங்களுள் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது. தீக்சனவின் முகாமைத்துவச் சபையானது UCSC பீடங்களின் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது. குறிப்பாக UCSC மென்பொருள் அபிவிருத்தி மத்தியநிலையத்தினூடாக முன்னர் சேவைகளை வழங்கிய அனைத்து ஆளணியினரும், தீக்சனவினால் உள்ளீர்க்கப்பட்டுள்ளதுடன், இது இந்த சேவைகளை மிகவும் கட்டமைக்கப்பட்ட மற்றும் தொழில்சார் தரத்தில் தொடர்ந்தும் விநியோகிக்கின்றது.

DPC கூட்டக் குறிப்புகளின் பிரகாரம், UCSC தொடர்பான அனைத்து மென்பொருள் திட்டங்களும் தீக்சனவினால் நிறைவேற்றப்படுவதுடன், இது நிபுணத்துவம் மற்றும் சேவை விநியோகத்தில் தொடர்ச்சியினை உறுதிசெய்கின்றது. அதன் அமைப்பு அகவிதிகளின் பிரகாரம், மென்பொருள் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக UCSC இன் பின்வருநராக தீக்சன கருதப்படுகின்றது.

மேற்குறிப்பிட்டவற்றை கருத்திற்கொண்டு, தீக்சனவுடனான உரிமமளித்தல் முறைமையின் தரமுயர்த்தலின் தொடர்ச்சியானது பொருத்தமானதாகவும் நிலைநாட்டப்பட்ட நிறுவனச் செயன்முறைகள் மற்றும் தொழில்நுட்ப சிறந்த நடைமுறைகளுடன் சீரமைவாக உள்ளதாகவும் கருதப்படுகின்றன.

கோவிட்-19 தொற்றின் ஆரம்பமானது திட்டமிட்ட தரமுயர்த்தலின் நிறைவேற்றலை கணிசமானளவு தாமதப்படுத்தியது என்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். தொற்றானது நிறுவனச் செயற்பாடுகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அட்டவணைகளில் பரந்த இடையூறுகளை ஏற்படுத்தின. இது அலுவலகங்கள் முறைமைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பௌதீக அணுகல், தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகளிலான தாமதங்கள் மற்றும் வளங்களது வரையறைகளையும் உள்ளடக்கியிருந்தது. இந்தக் காரணிகள் முறைமை தரமுயர்த்தல் மற்றும் உடன்படிக்கைகளது கைச்சாத்திடல் என்பவற்றிலான தாமதங்களுக்கு கூட்டாக பங்களிப்பு செய்தன.

கம்பனியானது திட்டத்தின் நோக்கெல்லையின் கீழான ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றி CAASL இன் செயற்பாட்டுத் தேவைகளுக்கு சேவையாற்றும் ஒரு செயற்பாடான உரிமமளித்தல் முறைமையினை விநியோகித்தவேளை, ஒட்டுமொத்த செயற்திறனானது சில முக்கிய பிரிவுகளில் எதிர்பார்க்கப்பட்ட நியமங்களை முற்றாக சந்திக்கவில்லை எனக் குறிப்பிடுவது முக்கியமானதாகும்.

முறைமையின் மையமான சிறப்புக்கூறுகள் தேவையானவாறு விருத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன மற்றும் கம்பனியானது ஒப்பந்தக் கடப்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் (ரூபா 1,125,000.-) என்பவற்றுக்கு சீரமைவாக ஒரு மெச்சத்தக்க சேவையினை வழங்கியது. எவ்வாறாயினும், செயற்பாட்டு பயனுறுதித்தன்மையில் ஓரளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்திய முறைமையின் செயற்திறன், அச்சிடுதல் மற்றும் ஒட்மொத்த துலங்குதிறனைப் பொறுத்தளில் வரையறைகள் அவதானிக்கப்பட்டன.

செயலாற்றிய பணியானது பொதுவாக ஒப்பந்தத்தின் நிதியியல் பெறுமதியுடன் சீரமைவாக காணப்பட்டவேளை, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது பணத்திற்கான பெறுமதி மற்றும் செயற்திறன் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் அதன் நம்பகமான பொறுப்பில் இனங்காணப்பட்ட செயற்திறன் அக்கறைகள் தீர்த்துவைக்கப்படும் வரை இறுதிக் கொடுப்பனவினை பிடித்துவைத்திருப்பதற்கு தீர்மானித்தது. இந்த தீர்மானமானது, விமானிகள், வானூர்தி பராமரிப்பு பொறியாளர்கள் மற்றும் வானறை பணியாள் அங்கத்தவர்கள் போன்ற வான்பயணவியல் ஆளணியினருக்கு உரிமமளிப்பதற்கு நேரடியாக துணையளிக்கும் முறைமைகளில் உயர்ந்த நியமனங்கள் பராமரிக்கப்படும் தேவையினை கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

அந்நேரத்தில் நிலவிய கட்டுப்பாடுகளின் கீழ் அதன் கொள்திறனுள் கம்பனியானது ஒரு திருப்திகரமான சேவையினை விநியோகித்தது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகும்.

அரசாங்க டிஜிட்டல்மயமாக்கல் திட்டத்தின் பிரகாரம், நடைமுறையிலுள்ள முறைமையானது 15 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தது என்பதனால், பரிணமிக்கின்ற தொழில்நுட்பங்களுடன் ஒரு புதிய முறைமைக்கு செல்லுவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. மேற்குறிப்பிட்ட காரணிகளை கருத்திற்கொண்டு கண்டுபிடிப்புகளுடன் நாம் உடன்பாடு காணவில்லை.

(எ) தரவு பகிர்தலுடனான ஒருங்கிணைத்தல் சிக்கல்கள் காரணமாக திட்டமானது தாமதமாகியது. தற்போது, ஒரு விமான நிறுவனத்துடன் CAASL ஒரு இணை ஓட்டத்தினை நடாத்துவதுடன் முறைமையானது விரைவாக முடிவுறுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்காக வழிமுறைகள் அமுலாக்கப்பட்டுள்ளன.

(ஏ) பெப்ரவரி 2024 இல் வாகனத்தை விற்பனை செய்வதற்காக சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இது 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ‘விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்தாக” கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. சொத்தானது இவ்வாண்டின்போது விற்பனை செய்யப்படும்.

(ஐ)
27.07.2017 இல் இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் பணிப்பாளர்கள் சபையானது, ஒப்படைக்கப்படக்கூடிய ஒரு நிர்ணயிக்கப்பட்ட நேரக் கட்டமைப்பினுள் பூர்த்தி செய்யவேண்டிய குறிப்பிட்ட பாதுகாப்பு மேற்பார்வை செயற்பாடுகளை செயலாற்றுவதற்காக ஓய்வுபெற்ற CAASL இன் அதிகாரிகள் உள்ளடங்கலான வான்பயணவியல் துறையின் தகைமை வாய்ந்த ஆளணியிடமிருந்து சேவைகளைப் பெறுவதற்கான அங்கீகாரத்தை வழங்கியது. இப்பிரிவுகள், வான் வழிசெலுத்தல் சேவைகள், வானூர்தித்தளம், வான்தகைமை, ஆளணி உரிமமளித்தல், வானூர்திச் செயற்பாடுகள் மற்றும் வான்பயணவியல் பாதுகாப்பு என்பவையாகும்.

இதன் பிரகாரம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட சிவில் வான்பயணவியல் பரிசோதகர்களின் (DSCAIs) சேவையினை பெற்றுக்கொள்வதற்கு கொள்கையானது விருத்திசெய்யப்பட்டது. இது CAASL இன் தடையற்ற செயற்பாட்டிற்கு DSCAI இன் வினைத்திறனான பயன்பாட்டினை உறுதிசெய்வதற்காகும். (இணைப்பு 1 - முகாமைத்துவ சுற்றறிக்கை)

கொள்கையின் பிரகாரம், ஒப்படைப்பின் காலமானது பின்வருவனவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும், தொடர்ச்சியான பாதுகாப்பு மேற்பார்வை செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான அவசியம், திட்டமாக ஒப்படைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பணியின் சிக்கல் என்பவற்றிலாகும். தொடர்வு, முற்றான மதிப்பீடு மற்றும் வினைத்திறனான பாதுகாப்பு மேற்பார்வை என்பவற்றை உறுதிசெய்வதற்காக ஆகக்குறைந்த ஒப்படைப்புக் காலமானது ஆறு மாதங்களாகும். எவ்வாறாயினும், தொடர்ச்சியான பாதுகாப்பு மேற்பார்வை மற்றும் திட்டங்களின் பாரிய சிக்கல்கள் என்பவற்றுக்கான நிறுவனத்தின் தேவையினை சந்திப்பதற்காக ஒப்படைப்பு காலமானது ஆறு மாத காலத்திற்கு அப்பால் நீடிக்கப்படலாம். அத்தகைய நீடிப்பானது பிரிவின் தலைமையினால் மேற்கொள்ளப்படும் நியாயமான நியாயப்பாடு மற்றும் மதிப்பிடல் குழுவின் ஆராய்வு மற்றும் ஒப்புதலுடன் மாத்திரமே வழங்கப்படுகின்றது.

DSCAIs, "உத்தியோக பொறுப்புக்கள் மற்றும் தனிப்பட்ட விடயங்களுக்கிடையே ஏதேனும் மெய்யான, தோற்றநிலை அல்லது சாத்தியமான முரண்பாட்டு அக்கறைகளின் பிரகடனம்" (இணைப்பு 2) எனத் தலைப்பிட்ட ஒரு படிவமானது பொதுவான உடன்படிக்கைக்கு சீரமைவாக கையொப்பமிடப்படல் வேண்டும்.

DSCAIs செலவுக் காரணியில் உள்ளடங்காத உள்ளூர் பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றுள்ளார்கள். வெளிநாட்டு திட்டங்களில், அவர்கள் புத்துணர்ச்சி திட்டங்களாக நவீன / இற்றைப்படுத்தப்பட்ட அறிவினை பெறுவதற்காக பெயரிடப்பட்டார்கள்.

நியமிக்கப்பட்ட சிரேஷ்ட சிவில் வான்பயணவியல் பரிசோதகர்களின் (DSCAIs) சேவைகளை பெறுவதற்காக ஆரம்பத்தில் விருத்திசெய்யப்பட்ட கொள்கையானது DSCAI களின் வரையறைகளை ஒருங்கிணைப்பதற்காக மேலும் சீர்திருத்தப்பட்டு தெளிவாக நிர்ணயிக்கப்பட்ட பணிகள் மற்றும் காலக்கெடுக்கள், செயற்திறன் மற்றும் வருகைப் பதிவினை கண்காணிப்பதற்கான செயன்முறைகள் மற்றும் பொருத்தமான கொடுப்பனவு முறைகளும் உள்ளடக்கப்படும்.

(ஒ) CAASL சிவில் வான்பயணவியலின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட விமானமேறுதல் கட்டண ஒழுங்குவிதிகளின் சரியான அமுலாக்கலினை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதுடன், நிலுவையிலுள்ள மீதிகளை மீட்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.


- 2022 இலிருந்து விமானமேறுதல் கட்டணம் மற்றும் பொருத்தமான தண்டப்பணங்களை செலுத்தாமை தொடர்பாக விமான நிறுவனங்களை தொடர்ச்சியாக பின்தொடர்ந்தது. இது மின்னஞ்சல்கள், உத்தியோகபூர்வ கடிதங்கள் மற்றும் கூட்டங்கள் என்பவற்றூடாக மேற்கொள்ளப்பட்டன.
- CAASL பொறுப்பான அமைச்சினூடாக நிதி அமைச்சிற்கு இவ்விடயம் தொடர்பாக இடைவிடாது தொடர்புகொண்டது.
- நிலுவையிலுள்ள தொகைகளில் ஒரு பகுதியினை மீட்பதற்கு தவறிய சில விமான நிறுவனங்களுக்காக வைத்திருந்த வங்கி உத்தரவாதங்களை CAA பணமாக்கியது.
- சபையின் தீர்மானத்தின் பிரகாரம், குறித்த விமானநிறுவனங்களுக்கு ஏழு நாட்களுக்குள் செலுத்தவேண்டியவைகளை தீர்ப்பனவு செய்யுமாறு வேண்டி 20 மே 2024 இல் இறுதி நினைவூட்டல்கள் வழங்கப்பட்டன. சபையானது சட்டமா அதிபரிடமிருந்து சட்ட ஆலோசனையினை பெறுவதற்கு தீர்மானித்தது.
- மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் அவர்களுக்கு ஒரு முறையான கடிதம் ஜுன் 2024 இல் அனுப்பிவைக்கப்பட்டது. மீளாய்வு செய்ததன் பின்னர் சட்டமா அதிபர் மிகவும் வினைத்திறனான வலியுறுத்தல் மற்றும் மீட்டல் பொறிமுறைகளை இயலுமையாக்குவதற்கு நிதிச் சட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்களை பரிந்துரைத்தார்.
- இந்த விடயத்தில் முன்னதாகவே திறைசேரி பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானித்ததுடன் விமானநிறுவனங்களுடன் DGCA இனால் தொடர்ச்சியான கூட்டங்களை வைக்குமாறும் தீர்மானித்தது.

# *கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை 2024 இற்கான மறுமொழி*

- இந்த தீர்மானத்தைத் தொடர்ந்து நிதி அமைச்சின் இறைவரிக் கொள்கை திணைக்களத்துடன் CAA கலந்துரையாடல்களை நடாத்தியது. இது 2003 இன் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு அவசியமான திருத்தங்களை வரைவு செய்து அமுலாக்குவதனை ஆரம்பிப்பதற்காகும்.

- மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு சமாந்திரமாக, தற்போது சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதனை மதிப்பிடுகின்றது.

(ஓ) CAASL செலுத்தவேண்டிய மீதியினை ஏற்கனவே AASL இற்கு உறுதிசெய்து ஏற்றுக்கொண்டுள்ளது.



**சுனில் ஜயரத்ன**
*தலைவர்*
இலங்கை சிவில் விமானப் போக்கவரத்து அதிகாரசபை

# முறைப்படுத்தல் நோக்கெல்லை

↑ அதிகரிப்பு ↓ குறைப்பு = சமன்

| முறைமைப்படுத்தப்படும் பிரிவு | 2024 | 2023 | மாற்றம் |
|---|---|---|---|
| **விமான நிலையங்கள்** | | | |
| உள்ளூர் தரை விமானநிலையங்கள் | 10 | 10 | = |
| உள்ளூர் நீர் வானூர்தித் தளங்கள் | 11 | 11 | = |
| சர்வதேச விமானநிலையங்கள் | 4 | 4 | = |
| **விமான நிறுவனங்கள்** | | | |
| உள்ளூர் வான் சேவையில் ஈடுபடுகின்ற உள்ளூர் விமான நிறுவனங்கள் | 4 | 5 | ↓ |
| சர்வதேச வான் சேவையில் ஈடுபடுகின்ற உள்ளூர் விமான நிறுவனங்கள் | 2 | 2 | = |
| சர்வதேச வெளிநாட்டு விமானநிறுவனங்கள் | 38 | 37 | ↑ |
| **பயிற்சி நிறுவனங்கள்** | | | |
| அங்கீகரிக்கப்பட்ட பறத்தல் பயிற்சி நிறுவனங்கள் | 8 | 7 | ↑ |
| அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் - விமானப்பயண செயற்பாட்டு அதிகாரிகள் | 1 | 1 | = |
| அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் - வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் | 1 | 1 | = |
| வகை தரப்படுத்தல் பயிற்சி நிறுவனங்கள் | 1 | 1 | = |
| அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள் / பொறியியல் கல்லூரிகள் | 6 | 5 | ↑ |
| அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு நிறுவனங்கள் (உள்ளூர்) | 14 | 13 | ↑ |
| தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ நிறுவனங்கள் | 14 | 12 | ↑ |
| சிவில் வான்பயணவியல் பயிற்சி மத்தியநிலையங்கள் | 1 | 1 | = |
| **வான் வழிசெலுத்தல்** | | | |
| வான் வழிசெலுத்தல் சேவை வழங்குனர்கள் | 1 | 1 | = |
| **வானூர்தியின் பதிவீடும் வான்தகைமையும்** | | | |
| பாரிய வானூர்தி (ஆகக்கூடிய புறப்படுதல் சுமை 5700 கிலோகிராம் மற்றும் அதற்குமேல்) | 27 | 29 | ↓ |
| **சிறிய வானூர்தி (ஆகக்கூடிய புறப்படுதல் சுமை 5700 கிலோ கிராமுக்கு குறைவானது)** | | | |
| இலகுரக போக்குவரத்து வானூர்தி | 41 | 40 | ↑ |
| மிகவும் இலகுகரக வானூர்தி | 2 | 1 | ↑ |
| உலங்குவானூர்தி | 6 | 7 | ↓ |
| வெப்பக் காற்று பலூன்கள் | 7 | 4 | ↑ |
| **செயற்கை பயிற்சிச் சாதனங்கள் பறத்தல் பயிற்சி சாதனங்கள்** | | | |
| உள்ளூர் முழு பறத்தல் பாவனையாக்கிகள் - A 320/A 330/ ஒருங்கிணைத்த குழு பயிற்றுவிப்பாளர் | 3 | 3 | = |
| ATC தூண்டுதல் | 1 | 1 | = |
| **ஆளணியினர் உரிமமளித்தல்** | | | |
| மாணவ விமானி உரிமம் வைத்திருப்பவர்கள் | 388 | 253 | ↑ |
| தனிப்பட்ட விமானி உரிமம் வைத்திருப்பவர்கள் | 212 | 100 | ↑ |
| வர்த்தக விமானி உரிமம் வைத்திருப்பவர்கள் | 188 | 300 | ↓ |
| வான் போக்குவரத்து விமானி உரிமம் வைத்திருப்பவர்கள் | 709 | 768 | ↓ |
| வான் போக்குவரத்து கட்டுப்பாட்டு உரிமம் வைத்திருப்பவர்கள் | 99 | 68 | ↑ |
| வானூர்தி பராமரிப்பு பொறியாளர் உரிமம் வைத்திருப்பவர்கள் | 2 | 2 | = |

# முறைப்படுத்தல் நோக்கெல்லை

↑ அதிகரிப்பு ↓ குறைப்பு = சமன்

| முறைமைப்படுத்தப்படும் பிரிவு | 2024 | 2023 | மாற்றம் |
|---|---|---|---|
| வானூர்தி பராமரிப்பு உரிமம் வைத்திருப்பவர்கள் | 536 | 507 | ↑ |
| வான்பயண அனுப்புவர் உரிமம் வைத்திருப்பவர்கள் / வான்பயண செயற்பாட்டு அதிகாரி உரிமம் | 234 | 233 | = |
| வான்போக்குவரத்து நிலையச் செயற்பாட்டாளர் உரிமம் வைத்திருப்பவர்கள் | 9 | 9 | = |
| வானறை பணியாள் அங்கத்தவர் சான்றிதழ் வைத்திருப்பவர்கள் | 979 | 894 | ↑ |
| விமானப்பயண பயிற்றுவிப்பாளர்கள் | 24 | 22 | ↑ |
| விமானப்பயண பயிற்றுவிப்பாளர்கள (மட்டுப்படுத்தப்பட்டது) | 7 | 11 | ↓ |
| தரை பயிற்றுவிப்பாளர்கள் | 32 | 28 | ↑ |
| வகுப்பு தரப்படுத்தல் பயிற்றுவிப்பாளர்கள் | 2 | 1 | ↑ |
| வகை தரப்படுத்தல் பயிற்றுவிப்பாளர்கள் | 27 | 9 | ↑ |
| செயற்கை விமானப்பயண பயிற்றுவிப்பாளர்கள் | 5 | 4 | ↑ |
| விமானப்பயண பரிசோதகர்கள் | 6 | 6 | = |
| வகுப்பு தரப்படுத்தல் பரிசோதகர்கள் | - | 1 | ↓ |
| வகை தரப்படுத்தல் பரிசோதகர்கள் | 23 | 23 | = |
| செயற்கை விமானப்பயண பரிசோதகர்கள் | 3 | 3 | = |
| சிவில் வான்பயணவியல் மருத்துவ பரிசோதகர்கள் / மருத்துவ மதிப்பீட்டாளர் | 6 | 6 | = |
| சான்றளிக்கப்பட்ட வான்பயணவியல் பாதுகாப்பு திரைகண்காணிப்பாளர்கள் | 1117 | 1056 | ↑ |
| சான்றளிக்கப்பட்ட வான்பயணவியல பாதுகாப்பு பயிற்றுவிப்பாளர்கள் | - | 20 | ↓ |
| சான்றளிக்கப்பட்ட வான்பயணவியல் பாதுகாப்பு முகாமையாளர்கள் | 13 | 23 | ↓ |
| **வான்போக்குவரத்து சேவை வழங்குனர்கள்** | | | |
| உலகளாவிய பகிர்ந்தளித்தல் சேவை வழங்குனர்கள் | 3 | 3 | = |
| வான் போக்குவரத்து சேவை வழங்குனர் உரிமம் வைத்திருப்பவர்கள் | 582 | 528 | ↑ |
| வான் போக்குவரத்து சேவை வழங்குனர் - குழு A | 564 | 510 | ↑ |
| வான் போக்குவரத்து சேவை வழங்குனர் - குழு B | 18 | 18 | = |
| **பொது விற்பனை முகவர்கள்** | 26 | 26 | = |

# CAASL இன் தொழில்நுட்ப செயற்திறனின் பொழிப்பு

| ஒழுங்குவிதிகள் / அறிவித்தல்கள் / விதிகளின் எண்ணிக்கை | 2024 | 2023 |
|---|---|---|
| வானூர்தி செயற்பாடுகள் | 1 | 12 |
| வானூர்தி பதிவீடும் வான்தகைமையும் | 1 | 1 |
| வானூர்தித் தளங்கள் | 9 | 3 |
| வான வழிசெலுத்தல் சேவைகள் | 7 | 2 |
| வான்பயணவியல் பாதுகாப்பு | 0 | 11 |
| வான்மருத்துவச் சேவைகள் | 1 | 2 |

| நிறுவனங்கள் / ஆளணியினரின் ஆரம்ப சான்றளிப்புகள் | 2024 | 2023 |
|---|---|---|
| விமான நிறுவனங்கள் (வெளிநாடு0 | 5 | 7 |
| அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு நிறுவனங்கள் (AMO) | 1 | 2 |
| அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள் (AMTO) | 1 | 1 |
| தொடர்ச்சியான வான்தகைகை முகாமைத்துவ நிறுவனங்கள் (CAMO) | 2 | 1 |
| வானூர்தி பராமரிப்பு நிறுவனங்கள் (வெளிநாடு) | 5 | 1 |
| விமானிகள் | 368 | 492 |
| வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் | 33 | 7 |
| வானூர்தி பராமரிப்பு உரிமம் வைத்திருப்பவர்கள் | 29 | 38 |
| விமானப்பயண செயற்பாடுகள் அதிகாரிகள் (விமானம் அனுப்புபவர்கள்) | 1 | 4 |
| விமானப்பயண பயிற்றுவிப்பாளர்கள் | 4 | 15 |
| விமானப்பயண பயிற்றுவிப்பாளர்கள் (மட்டுப்படுத்தப்பட்டது) | 6 | 9 |
| வகை தரப்படுத்தல் பயிற்றுவிப்பாளர்கள் (மட்டுப்படுத்தப்பட்டது) | 1 | 0 |
| வகுப்பு தரப்படுத்தல் பயிற்றுவிப்பாளர்கள் | 1 | 1 |
| வகை தரப்படுத்தல் பயிற்றுவிப்பாளர்கள் | 8 | 9 |
| செயற்கை விமானப்பயண பயிற்றுவிப்பாளர்கள் | 5 | 4 |
| தரை பயிற்றுவிப்பாளர்கள் | 11 | 27 |
| வானறைப் பணியாள் அங்கத்தவர்கள் | 85 | 137 |

# CAASL இன் தொழில்நுட்ப செயற்திறனின் பொழிப்பு

| சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் / ஆளணியினரின் கண்காணிப்பு | 2024 | 2023 |
|---|---|---|
| சரிவுப் பாதை பரிசோதகர்கள் - செயற்பாடுகள் | 11 | 13 |
| பாவனையாக்கி பரிசோதனைகள் | 3 | 3 |
| செல்லும் வழி பரிசோதனைகள் | 11 | 10 |
| ஆபத்தான பொருட்களின் பரிசோதனைகள் | 10 | 13 |
| நிலையத்தின் வசதி பரிசோதனைகள் - செயற்பாடுகள் | 8 | 0 |
| பிரதான தள பரிசோதனைகள் / பயிற்றுவிப்பாளர் அவதானிப்புகள் | 4 | 6 |
| நியமிக்கப்பட்ட பரிசீலனை விமானிகள் (DCP கண்காணித்தல்) | 1 | 0 |
| சரிவுப்பாதை பரிசோதனைகள் - வான்தகைமை | 11 | 15 |
| வானூர்தியின் வான்தகைமையிலான சான்றிதழ் (C of A) | 49 | 42 |
| வானூர்தி பராமரிப்பு நிறுவன பரிசோதனைகள் | 21 | 22 |
| அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவனங்களது பரிசோதனைகள் | 5 | 4 |
| தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ நிறுவன (CAMO) பரிசோதனைகள் | 16 | 9 |
| எரிபொருள் வசதி பரிசோதனைகள் / கணக்காய்வுகள் | 4 | 4 |
| அங்கீகரிக்கப்பட்ட பறத்தல் பயிற்சி நிறுவனங்களின் பரிசோதனைகள் | 17 | 16 |
| உரிமங்களின் கண்காணிப்பு | 5 | 13 |
| வானூர்தித்தள பரிசோதனைகள் | 43 | 60 |
| ATM பரிசோதனைகள் | 40 | 42 |
| AIM பரிசோதனைகள் | 6 | 6 |
| SMS பரிசோதனைகள் | 15 | 15 |
| CNS பரிசோதனைகள் | 31 | 25 |
| MET பரிசோதனைகள் | 7 | 3 |
| நிலப்படங்கள் மற்றும் வரைபடங்களது பரிசோதனைகள் | 3 | 3 |
| PANS-OPS பரிசோதனைகள் | 6 | 3 |
| Non-SKED விமானப் பயண பரிசோதனைகள் | 6 | 5 |
| வான்பயணவியல் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை நடாத்துதல் (பரிசோதனைகள், கணக்காய்வுகள், புலனாய்வுகள், பரிசீலனைகள்) | 97 | 97 |
| நியமிக்கப்பட்ட மருத்துவமனைகள் - பரிசோதனைகள் | 5 | 5 |

| நிறைவுசெய்யப்பட்ட கணக்காய்வுகள் | 2024 | 2023 |
|---|---|---|
| வான்பயணவியல் பாதுகாப்பு | 1 | 1 |

# முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள்

| இயக்கமும் முகாமைப்படுத்தலும் | 2024 | 2023 |
|---|---|---|
| அதிகாரசபை கூட்டங்கள் | 8 | 11 |
| கணக்காய்வுக் குழ கூட்டங்கள் | 3 | 5 |
| பணியாட்டொகுதி குழு கூட்டம் | 3 | 3 |
| துறைசார் ஆலோசனைக் கூட்டம் | 29 | 13 |
| வெளிவாரி, நிறுவன /ஆளணியினரின் நியமனம் | 195 | 203 |
| பெறப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை | 4,717 | 5,225 |

| சட்ட அலுவல்கள் மற்றும் வலியுறுத்தல் (LA&E) | 2024 | 2023 |
|---|---|---|
| சட்டமயமாக்கப்பட்ட பிரதான சட்டங்கள் / மீளாய்வு செய்யப்பட்ட வரைவுச் சட்டமூலங்கள் | 4 | 6 |
| வழங்கப்பட்ட / மீளாய்வு செய்யப்பட்ட / திருத்தியமைக்கப்பட்ட துணைச் சட்டங்கள் | 18 | 41 |
| உடன்படிக்கைகள் / பு.ஒ. | 22 | 24 |
| சட்டமா அதிபர் திணைக்களத்தில் / சட்ட வரைஞர் திணைக்களத்தில் கலந்தாலோசனைகளில் பங்குபற்றியோரின் என்ணிக்கை | 15 | 14 |
| சட்ட விடயங்களில் CAASL/DGCA வழங்கப்பட்ட சட்ட ஆலோசனை | 54 | 86 |
| நீதிமன்றங்களில் / வழக்குகளில் தோன்றியமை | 38 | 27 |
| தயாரிக்கப்பட்ட சட்ட ஆவணங்கள் | 9 | 10 |
| மீளாய்வு செய்யப்பட்ட CAASL ஆவணங்களின் எண்ணிக்கை | 6 | 5 |

| வான்பயணவியல் பாதுகாப்பு (AVSEC) | 2024 | 2023 |
|---|---|---|
| மீளாய்வுகள் / திருத்தங்கள் - NCASP மற்றும் துணை ஆவணங்கள் | - | 10 |
| மதிப்பீடுகள் / மீளாய்வுகள் - உள்ளூர் விமானநிறுவனம்/விமானநிலைய செயற்பாட்டாளர் பாதுகாப்புத் திட்டம் | 4 | 6 |
| மதிப்பீடுகள் / மீளாய்வுகள் – வெளிநாட்டு விமானநிறுவன செயற்பாட்டாளர் வான்பயணவியல் பாதுகாப்புத் திட்டம் | 25 | 14 |
| மதிப்பீடுகள் / மீளாய்வுகள் – வான்பயணவியல் பாதுகாப்பு பயிற்சி / பாடத்திட்டங்கள் | - | 4 |
| வான்பயணவியல் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை நடாத்துதல் (பரிசோதனைகள், கணக்காய்வுகள், புலனாய்வுகள், பரிசீலனைகள்) | 97 | 97 |
| வான்பயணவியல் பாதுகாப்பு முகாமையாளர்களின் சான்றளிப்பும் மீள்சான்றளிப்பும் | 13 | 23 |
| வான்பயணவியல் பாதுகாப்பு பயிற்றுவிப்பாளர்களின் சான்றளிப்பும் மீள்சான்றளிப்பும் | - | 20 |
| வான்பயணவியல் பாதுகாப்பு திரை கண்காணிப்பாளர்களின் சான்றளிப்பும் மீள்சான்றளிப்பும் | 1,117 | 1,056 |
| ஆயுதங்களை விமானத்தினுள் கொண்டுசெல்வதற்கான அங்கீகாரம் / ஒரு வானூர்தியின் சரக்கு கிடங்கில் | 61 | 87 |
| விமானநிலைய அணுகுதல் அனுமதிகள் வழங்குவதற்கான பரிந்துரைத்தல் | 683 | 572 |
| வான்பயணவியல் பாதுகாப்பு பயிற்சி / விரிவுரைகள் / முன்னிலைப்படுத்தல்கள் | - | 2 |
| அரசாங்கம் மற்றும் ஏனைய முகவர்களுக்கு நிபுணத்துவ சேவைகளை வழங்குதல் | 1 | - |

# முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள்

| சூழல், ஆய்வு மற்றும் திட்டங்கள் (ERP) | 2024 | 2023 |
|---|---|---|
| சர்வதேச விமான நிறுவனங்களின் புள்ளிவிபர அறிக்கைகள் | 406 | 357 |
| உள்ளூர் விமான நிறுவனங்களின் புள்ளிவிபர அறிக்கைகள் | 45 | 51 |
| அனுப்பிவைக்கப்பட்ட ICAO அறிக்கையிடல் படிவங்கள் | 69 | 69 |
| CAASL தொழில் செயற்திறன் புள்ளிவிபர அறிக்கைகள் | 240 | 240 |
| அரசாங்க நிறுவனங்கள்/ பொதுமக்கள்/ CAASL இன் ஏனைய பிரிவுகளுக்கான புள்ளிவிபர வழங்கல்கள் | 29 | 38 |
| வழங்கப்பட்ட விலைகோரல்கள்/RFP (பிரேரணைகளுக்கான வேண்டுதல்) | 25 | 19 |
| வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் | 166 | 130 |
| CAASLஇன் சபை ஆவணங்களை தயார்செய்தமை | 1 | 3 |
| CAASLஇன் செயலமர்வுகள்/விழாக்கள்/ நிகழ்வுகள்/ விசேட தினங்களுக்கு நிர்வாக துணையளித்தல் | - | 3 |
| கூட்டங்கள்/பயிற்சிகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள் (வான்பயணவியல்) ஒழுங்கு செய்வதில் நிர்வாக உறுதுணை | 9 | 13 |

| வான் வழிச்செல்லல் சேவைகள் (ANS) | 2024 | 2023 |
|---|---|---|
| நடாத்தப்பட்ட ATM பரிசோதனைகள் | 40 | 42 |
| நடாத்தப்பட்ட AIM பரிசோதனைகள் | 6 | 6 |
| நடாத்தப்பட்ட SMS பரிசோதனைகள் | 15 | 15 |
| நடாத்தப்பட்ட CNS பரிசோதனைகள் | 31 | 25 |
| நடாத்தப்பட்ட MET பரிசோதனைகள் | 7 | 3 |
| நடாத்தப்பட்ட நிலப்படங்கள் மற்றும் வரைபடங்களின் பரிசோதனைகள் | 3 | 3 |
| நடாத்தப்பட்ட PANS-OPS பரிசோதனைகள் | 6 | 3 |
| Non-SKED விமானப்பயண பரிசோதனைகள் | 6 | 5 |
| NOTAM வழங்கல்களுக்கான அங்கீகாரங்கள் | 348 | 326 |
| வழங்கப்பட்ட AIP இணைப்புகள் | 6 | 13 |
| AIP திருத்தம் | 5 | 4 |
| வழங்கப்பட்ட AIC இன் எண்ணிக்கை | 8 | 6 |
| அங்கீகரிக்கப்பட்ட வான்வழி பணிகளின் எண்ணிக்கை | 185 | 73 |
| வழங்கப்பட்ட தரையிறக்க தடைநீக்கங்கள் | 781 | 591 |
| வழங்கப்பட்ட மேல் பறத்தல் தடைநீக்கங்கள் | 1,429 | 1,667 |
| அட்டவணைப்படுத்தப்படாத விமான பயணங்களது அங்கீகாரங்களின் எண்ணிக்கை | 2,210 | 2,258 |
| அனுப்பிவைக்கப்பட்ட AFTN | 1,870 | 1,983 |
| பெறப்பட்ட AFTN | 3,905 | 4,249 |
| தரையிறங்கல் மற்றும் தரிப்பிட கட்டணங்களின் விலக்களிப்பு எண்ணிக்கை | 6 | 9 |
| இராஜதந்திர விமானப் பயணத்திற்கான ஆட்சேபனையற்ற குறிப்புகள் (தரையிறங்கல்) | 176 | 103 |
| இராஜதந்திர விமானப் பயணத்திற்கான ஆட்சேபனையற்ற குறிப்புகள(மேலாகப் பறத்தல்) | 210 | 176 |
| கொழும்பு FIR இன் மேலாகபறக்கும் வானூர்திகளின் எண்ணிக்கை | 40,511 | 35,929 |

| வானூர்தித் தளங்கள் | 2024 | 2023 |
|---|---|---|
| கோபுர அங்கீகாரங்களின் எண்ணிக்கை | 142 | 266 |
| உயர் மாடிக் கட்டமைப்புகளின் கட்டுமானத்திற்கான அங்கீகாரங்கள் | 115 | 85 |
| தரை விமானத்தள சான்றிதழ்கள் - புதுப்பிப்புகள் | 4 | 2 |
| மேற்கொள்ளப்பட்ட வானூர்தித்தள கண்காணிப்பு | 43 | 60 |

| வான்பயணவியல் பயிற்சி மற்றும் ஆளணியினர் உரிமமளித்தல் | 2024 | 2023 |
|---|---|---|
| மாணவர் விமானி உரிமங்கள் (SPL) (வழங்கல்கள் + புதுப்பிப்புகள்) | 135 | 253 |
| தனிப்பட்ட விமானி உரிமங்கள் (PPL) வழங்கல்கள் | 70 | 66 |
| வர்த்தக விமானி உரிமங்கள் (CPL) வழங்கல்கள் | 34 | 73 |
| விமான நிறுவன போக்குவரத்து விமானி உரிமம் (ATPL) வழங்கல்கள் | 27 | 38 |
| வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் உரிமங்கள் (ATC) (வழங்கல்கள் + புதுப்பிப்புகள்) | 107 | 68 |
| வானூர்தி பராமரிப்பு பொறியாளர் உரிமங்கள் (வழங்கல்கள் + புதுப்பிப்புகள்) | 2 | - |
| வானூர்தி பராமரிப்பு உரிமம் (வழங்கல்கள் + புதுப்பிப்புகள்) | 271 | 275 |
| வானூர்தி பராமரிப்பு உரிமம் -வகை தரப்படுத்தல் (வழங்கல்கள்) | 54 | 59 |
| வானூர்தி பராமரிப்பு உரிமம்- வகைகள் (வழங்கல்கள்) | 25 | 8 |
| வானூர்தி பணியாட்கள் சான்றளிப்பு (வழங்கல்கள் + புதுப்பிப்புகள்) | 220 | 501 |
| விமானப்பயண செயற்பாட்டு அதிகாரி உரிமம் (வழங்கல்) | 1 | 4 |
| ஒற்றை இயந்திர பிஸ்டன் (SEP)(வழங்கல்கள் + மீள்செல்லுபடியாக்கல் + புதுப்பிப்புகள்) | 71 | 106 |
| பன்முக இயந்திர பிஸ்டன் (MEP) (வழங்கல்கள் + மீள்செல்லுபடியாக்கல் + புதுப்பிப்புகள்) | 23 | 29 |
| ஒற்றை இயந்திர விசையாழி (SET) (வழங்கல்கள் + மீள்செல்லுபடியாக்கல் + புதுப்பிப்புகள்) | 16 | 15 |
| வகை தரப்படுத்தல்கள் (வழங்கல்கள் + மீள்செல்லுபடியாக்கல் + புதுப்பிப்புகள்) | 751 | 1,772 |
| பயிற்றுவிப்பாளர் தரப்படுத்தல்கள் – (வழங்கல்கள் + புதுப்பிப்புகள்) | 40 | 47 |
| அங்கிகரிக்கப்பட்ட விமானப்பயண பயிற்சி நிறுவனங்களது உரிமங்கள் - (வழங்கல்கள் + புதுப்பிப்புகள்) | 7 | 7 |
| தரை பயிற்றுவிப்பாளர் அங்கீகாரங்கள் (வழங்கல்கள் + புதுப்பிப்புகள்) | 11 | 28 |
| வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் தரப்படுத்தல் (வழங்கல்கள் + புதுப்பிப்புகள்) | 149 | 118 |
| NIB தடையொழிப்புகளின் வழங்கல் | 319 | 231 |
| PPL பரீட்சை (தாள்களின் எண்ணிக்கை) | 640 | 573 |
| விமானப்பயண செயற்பாடுகள் அதிகாரி பரீட்சை | 4 | - |
| AML பரீட்சை (பரீட்சைகளின் எண்ணிக்கை) | 4 | 5 |
| AML பரீட்சை (தாள்களின் எண்ணிக்கை) | 1,915 | 2,650 |
| ATPL (A) விநியோகிக்கப்பட்ட தாள்களின் எண்ணிக்கை | 1,401 | 1,653 |
| ATPL (H) பரீட்சை (தாள்களின் எண்ணிக்கை) | 17 | 17 |
| ஆங்கில மொழித் தேர்ச்சி பரிசீலனை (ELPC) | 169 | 127 |
| விமானப் பயண பயிற்றுவிப்பாளர் (மட்டுப்படுத்தப்பட்டது) (கோட்பாடும் வாய்மொழித் தேர்வும்) | 7 | 9 |

| வானூர்தி செயற்பாடுகள் | 2024 | 2023 |
|---|---|---|
| விசேட செயற்பாடுகள் | 3 | 1 |
| வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர் சான்றிதழ் - ஆரம்பம் | 5 | 7 |
| வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர் சான்றிதழ் - புதுப்பிப்பு | 29 | 34 |
| ஆபத்தான பொருட்களது போக்குவரத்து உரிமங்கள் - ஆரம்பம் | - | 2 |
| ஆபத்தான பொருட்களது போக்குவரத்து உரிமங்கள் - புதுப்பிப்பு | 19 | 11 |
| சர்வதேச வான் செயற்பாட்டாளர் சான்றிதழ் - புதுப்பிப்பு | 2 | 1 |
| பாவனையாக்கி புதுப்பித்தல் | 1 | 2 |
| PPC அதிகாரமளிப்பு | 111 | 57 |
| செயலாற்றப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் | 82 | 67 |
| பதிவுசெய்யப்பட்ட ட்ரோன்கள் - உள்ளூர் உடைமையாளர்கள் | 2,200 | 1,388 |
| பதிவுசெய்யப்பட்ட ட்ரோன்கள் - வெளிநாட்டு உடைமையாளர்கள் | 3,827 | 2,388 |

# முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள்

| வானூர்தி பதிவீடும் வான்தகைமையும் (AR & AW) | 2024 | 2023 |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் (சரிவுப்பாதை, கணக்காய்வு) | 119 | 96 |
| வானூர்திகளின் வான்தகைமைச் சான்றிதழ் - ஆரம்பம் | 3 | 2 |
| வானூர்திகளின் வான்தகைமைச் சான்றிதழ் - புதுப்பிப்பு | 49 | 40 |
| வழங்கப்பட்ட பரீட்சார்த்த விமானப்பற்று அனுமதி | 8 | 25 |
| வகை ஏற்றுக்கொள்ளல் சான்றிதழ்கள் வழங்கல் | 1 | - |
| வானூர்திகளின் பதிவீட்டுச் சான்றிதழ் - ஆரம்பம் | 3 | 4 |
| வானூர்திகளின் பதிவீட்டுச் சான்றிதழ் - புதுப்பிப்பு | 73 | 63 |
| வானூர்திகள் பதிவீட்டு நீக்கம் | 4 | 4 |
| அங்கீரிக்கப்பட்ட பராமரிப்பு நிறுவனங்கள் (உள்ளூர்) - ஆரம்பம் | 1 | 1 |
| அங்கீரிக்கப்பட்ட பராமரிப்பு நிறுவனங்கள் (உள்ளூர்) - புதுப்பிப்பு | 16 | 17 |
| பராமரிப்பு நிறுவனங்கள் (வெளிநாடு) - ஆரம்பம் | 5 | 1 |
| பராமரிப்பு நிறுவனங்கள் (வெளிநாடு) - புதுப்பிப்பு | 52 | 45 |
| அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள் - ஆரம்பம் | 1 | 1 |
| அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள் - புதுப்பிப்பு | 5 | 4 |
| தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ நிறுவனம் - ஆரம்பம் | 2 | 1 |
| தொடர்ச்சியான வான்தகைமை முகாமைத்துவ நிறுவனம் - புதுப்பிப்பு | 12 | 9 |
| எரிபொருள் வசதி அங்கீகாரம் - புதுப்பிப்பு | 4 | 4 |
| வான்பயணவியல் நிகழ்வுகளின் புலன்விசாரணைகள் | 231 | 339 |

| வான்போக்குவரத்தும் பொருளாதார ஒழுங்குவிதிகளும் (ATER) | 2024 | 2023 |
|---|---|---|
| உள்ளூர் விமானப்பயண அட்டவணை அங்கீகாரங்கள் | 48 | 72 |
| வான் போக்குவரத்து வழங்குனர்களுக்காக நடாத்தப்பட்ட மதிப்பீடுகள் | 103 | 123 |
| சர்வதேச விமானப்பயண அட்டவணை அங்கீகாரங்கள் | 526 | 477 |
| வெளிநாட்டு தொழில்நுட்ப/தொழில்நுட்பம் சாரா நிபுணத்துவ பணியாட்களுக்கு வீசா பரிந்துரைகள் | 121 | 110 |
| வெளிநாட்டு மாணவர்களுக்கான வீசா பரிந்துரைத்தல்கள் | 198 | 162 |
| இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட விமானநிறுவனங்களுக்கான சாட்டர் உரிமங்கள் | 7 | 4 |
| இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட விமானநிறுவனங்களுக்கான விமானநிறுவன உரிமம் | 4 | 2 |
| சாட்டர் உரிமங்கள் - சர்வதேச செயற்பாடுகள் | 3 | 2 |
| சாட்டர் உரிமங்கள் - உள்ளூர் வழக்கமான செயற்பாடுகள் | 6 | 2 |
| வான் போக்குவரத்து வழங்குனர்களது உரிமங்கள் | 582 | 528 |
| வெளிநாட்டு விமானநிறுவன உரிமங்கள் | 20 | 33 |
| கைச்சாத்திட்ட புதிய வான் சேவை உடன்படிக்கைகள் | 1 | - |
| நடைமுறையிலுள்ள வான் சேவை உடன்படிக்கைகளின் புதுப்பிப்பு | 1 | 1 |
| கையாண்ட நுகர்வோர் முறைப்பாடுகள் | 41 | 52 |
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறான திறந்தவெளி வான் சேவைகள் உடன்படிக்கைகள் | 19 | 19 |

| மனித வளங்களும் ஆதன முகாமைத்துவமும் (HRPM) | 2024 | 2023 |
|---|---|---|
| பணியாட்களின் ஆட்சேர்ப்புகள் | 18 | 10 |
| மொத்த பணியாட்கள் (நிரந்தர பணிநிலை) | 169 | 168 |
| வசதியளிக்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சிகள் / கருத்தரங்குகள் / செயலமர்வுகள் | 19 | 15 |
| வசதியளிக்கப்பட்ட வெளிநாட்டு கூட்டங்கள்/ கருத்தரங்குகள் / ஆய்வரங்குகள் | 13 | 18 |
| வசதியளிக்கப்பட்ட வெளிநாட்டு பரிசோதனைகள் | 10 | 16 |
| வசதியளிக்கப்பட்ட உள்ளூர் பயிற்சிகள் / கருத்தரங்குகள் / செயலமர்வுகள் | 19 | 14 |
| வசதியளிக்கப்பட்ட உள்ளூர் உள்வாரி பயிற்சித் திட்டங்கள் (போதனைகள் உள்ளடங்கலானவை) | 14 | 9 |
| வசதியளிக்கப்பட்ட இயங்கலை பயிற்சிகள் / கருத்தரங்குகள் / செயலமர்வுகள் | 5 | 11 |
| வசதியளிக்கப்பட்ட இயங்கலை கூட்டங்கள் / கருத்தரங்குகள் | - | 2 |
| செயன்முறையாக்கப்பட்ட செயற்திறன் மதிப்பீடுகள் | 112 | 102 |
| வசதியளிக்கப்பட்ட பணியாட்கள் கடன்கள் | 49 | 80 |

| தரமும் உள்ளகக் கணக்காய்வும் (Q&IA) | 2024 | 2023 |
|---|---|---|
| நடாத்தப்பட்ட கணக்காய்வுகள் | 30 | 104 |
| எழுப்பப்பட்ட கண்டுபிடிப்புகள் | 58 | 133 |

| வான்பயணவியல் பாதுகாப்பு கண்காணித்தல் | 2024 | 2023 |
|---|---|---|
| அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் | 9 | 16 |
| அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் | 279 | 364 |
| பயணிகள் அல்லது வான் பணியாட்களுக்கு சிறிய காயங்கள் | - | 1 |
| திருத்தியமைக்கப்பட்ட நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் | 1 | - |
| திருத்தியமைக்கப்பட்ட நடைமுறையிலுள்ள வழிகாட்டல் சடப்பொருட்கள் | 1 | 1 |
| திருத்தியமைக்கப்பட்ட நடைமுறையிலுள்ள IS | 1 | 1 |
| உரிமம் வைத்திருப்பவர்களிலான விபத்து / நிகழ்வு சரிபார்த்தல்கள் | 51 | 96 |

| வான்மருத்துவச் சேவைகள் (AMS) | 2024 | 2023 |
|---|---|---|
| மருத்துவ பரிசோதனைகள் | 1,108 | 1,657 |

| தகவல் தொழில்நுட்பம் (IT) | 2024 | 2023 |
|---|---|---|
| முறைப்பாடுகளின் எண்ணிக்கை - உதவி மைய ஆதரவு | 11,945 | 11,732 |
| தீர்த்துவைக்கப்பட்ட முறைப்பாடுகள் - உதவி மைய ஆதரவு | 11,945 | 11,732 |
| கொள்வனவு செய்யப்பட்ட புதிய த.தொ உபகரணங்களில் நடாத்தப்பட்ட மதிப்பீடுகள் | 9 | 9 |

# முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள்

| சிவில் வான்பயணவியல் பிரச்சாரம் மற்றும் ஊடகம் | 2024 | 2023 |
|---|---|---|
| குவன்சரா சஞ்சிகையின் பிரசுரம் | 1 | - |
| நடாத்தப்பட்ட CADEC திட்டம் | 5 | 5 |
| பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வுகள் | 11 | 8 |
| நடாத்தப்பட்ட விசேட நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள் | 2 | 4 |
| பத்திரிகை கட்டுரைகள் | 33 | 30 |
| TV நிகழ்ச்சிகள் | 9 | 24 |

| தொழில்நுட்ப நூலகம் | 2024 | 2023 |
|---|---|---|
| மதிப்பீடு செய்து விநியோகிக்கப்பட்ட ICAO ஆவணங்கள் | 118 | 267 |

# போக்குவரத்து விபரங்கள்

| | 2024 | 2023 | மாற்றம் |
|---|---|---|---|
| **சர்வதேச போக்குவரத்து** | | | |
| **பயணிகள்** | | | |
| விமானம் ஏறியோர் | 4,430,361 | 3,837,541 | ↑ |
| விமானத்திலிருந்து இறங்கியோர் | 4,373,658 | 3,637,041 | ↑ |
| இடங்கடப்பில் | 778,804 | 899,229 | ↓ |
| **சரக்கு (மெட்ரிக் தொன்கள்)** | | | |
| உள்வருகை | 78,630 | 65,071 | ↑ |
| வெளிச்செல்லல் | 116,749 | 93,544 | ↑ |
| **வானூர்தி அசைவுகள்** | | | |
| அட்டவணைப்படுத்தப்பட்ட விமானப்பயணங்கள் | 53,895 | 44,995 | ↑ |
| சாட்டர் விமானப்பயணங்கள் | 1,953 | 1,309 | ↑ |
| செயற்பட்ட விமான நிறுவனங்களின் எண்ணிக்கை | | | |
| அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகள் | 35 | 33 | ↑ |
| சாட்டர் | 33 | 35 | ↓ |
| வான் சரக்கு | 4 | 4 | = |
| **உள்ளூர் போக்குவரத்து** | | | |
| ஏற்றிச்செல்லப்பட்ட பயணிகள் | 14,545 | 11,955 | ↑ |
| வானூர்திகளது அசைவுகள் | 5,223 | 4,070 | ↑ |
| செயற்பட்ட விமான நிறுவனங்களின் எண்ணிக்கை | 4 | 5 | ↓ |
| அட்டவணைப்படுத்தப்பட்ட விமானப்பயணங்கள் | 2 | 2 | = |
| சாட்டர் விமானப்பயணங்கள் | 2 | 3 | ↓ |

↑ அதிகரிப்பு ↓ குறைப்பு = சமன்

# குறிப்புகள்

optima
Designing Your Year!
Designed & Produced by
Optima Designs (Pvt) Ltd.
A full service design and print company.
www.optimadesigns.lk

Safe and Efficient Skies for All

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

இலக்கம் 152/1, மினுவங்கொட வீதி, கட்டுநாயக்கா, இலங்கை.
தொலைபேசி: +94 112 358 800
தொலைநகல்: +94 112 257 154
மின்னஞ்சல்: infor@caa.lk
இணையத்தளம்: www.caa.lk